

விக்டர் ஹியூகோ

ஏழை படும் பாடு



தமிழில்: சிவன்

http://www.pustaka.co.in

ஏழை படும் பாடு

Yelai Padum Paadu

Author:

சிவன்

Sivan

For more books

http://www.pustaka.co.in/home/author/sivan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

ஓர் அறிமுகம்

விக்டர் ஹியூகோ (Victor Hugo , 1802-1885) உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சுக் கவிஞர், நாவலாசிரியர், நாடகாசிரியர். இவர் பசான்கான்(Besancon) நகரில் 1802-ஆம் ஆண்டு பிப்ரவரி 29-ம் நாள் பிறந்தார். இவரது தந்தையார் பிரெஞ்சு ராணுவத் தளபதியாகப் பணியாற்றியவர்.

எனவே ராணுவம் பயணப்பட்ட இடங்களுக்கெல்லாம் தந்தையாருடன் விக்டர் ஹியூகோவும் பயணப்பட நேர்ந்தது. அதனால் இவரால் ஒழுங்காகப் பள்ளிக் கல்வியைத் தொடர முடியவில்லை. 1815-ல் ஹியூகோவின் பதினான்காம் வயதில் இவரது பெற்றோர் பரஸ்பரம் கருத்து வேறுபாட்டால் பிரிய நேர்ந்தது.

ஹியூகோ சிறு வயதிலிருந்தே நூல்கள் எழுதினார். 1819-ல் டூலுஸ் அகாடெமியிடமிருந்து (Toulous Academic) சிறந்த கவிதைத் தொகுப்புக்காக இரண்டு பரிசுகள் பெற்றார். 1822-ஆம் ஆண்டு வெளியான கவிதைத் தொகுதி ஒன்று இவரது வாழ்நாளின் கடைசி வரை இவருக்குப் பணம் வழங்கிக் கொண்டிருந்தது. அதே ஆண்டில் தாம் சிறுவயதிலிருந்து காதலித்த ஆடலே ஃபௌச்சர் (Adele Foucher) என்ற பெண்மணியை மணமுடித்தார். தொடர்ந்து எழுத்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஹியூகோவுக்கு 1828-ல் உலகக் கவிஞர்கள் மத்தியில் அங்கீகாரம் கிடைத்தது.

1827-ஆம் ஆண்டு இவீர் எழுதிய 'கிராம் வெல்' என்ற நாடகம் பிரெஞ்சு நாடக வரலாற்றில் ஒரு மைல் கல்லாகப் போற்றப்படுகிறது.

1830-ஆம் ஆண்டில் கவிதை நடையில் இவர் எழுதிய 'ஹெர்னானி' என்ற சோக நாடகம் இவரை மிகப் பெரும் நாடகாசிரியராக உயர்த்தியது. 1838-ல் வெளியான 'ராய் பிளாஸ்' என்ற நாடகம் இவரது மிகச் சிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது.

1841-ல் பிரெஞ்சு அகாடெமியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1845-ல் பிரவு பட்டம் பெற்றார். 1845-ல் மலர்ந்த பிரெஞ்சுக் குடியரசில், அரசியல் அமைப்புச் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1843-ம் ஆண்டு இவரது ஒரே மகள் தன் கணவருடன் பயணம் செய்தபோது படகு கவிழ்ந்து இறந்தார். இந்தச் சம்பவத்தால் மனமுடைந்த ஹியூகோ, அதன் பிறகு எழுத்துத் துறையிலிருந்து ஓய்வு பெற்றார்.

1851-ம் ஆண்டு லூயிஸ் நெப்போலியன் (Louis Napoleon) சர்வாதி காரியானபோது விக்டர் ஹியூகோ தமது எழுத்துப் பணியைத் தொடர்ந்தார். இந்தக் காலகட்டத்தில் தான் அவரது புகழ்பெற்ற நாவலான 'லெஸ் மிஸரபிள்ஸ்' வெளியானது. 1866-ல் வெளியான மற்றொரு நாவலான கடல் தொழிலாளர்கள் (Les Travellers de la mer) முழுக்க முழுக்கக் கடல் பரப்பிலேயே நடைபெறும் கதை.

பிரெஞ்சுக் கவிதை மற்றும் உரைநடையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியவராக விக்டர் ஹியூகோ மதிக்கப்படுகிறார்.

1870–ல் தமது தாயகமான பிரான்ஸுக்குத் திரும்பி வந்த ஹியூகோ, 1885, மே மாதம் 22–ம் நாள் பாரிஸ் நகரில் இறந்தார்.

விக்டர் ஹியூகோவின் உலகப் புகழ்பெற்ற லெஸ் மிஸரபிள்ஸ் (Les Miserebles) நாவலைச் சுருக்கி, மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட புத்தகம்தான் இந்த ஏழை படும்பாடு. பள்ளி, கல்லூரி மாணவ மாணவியருக்கும், இலக்கியத்தை நேசிக்கும் வாசகர்களுக்கும், உலக இலக்கியத்தின் மீது ஈடுபாடுள்ளவர்களுக்கும் இந்தப் புத்தகம் ஒரு நல்ல அறிமுகமாக இருக்குமென்று நம்புகிறேன்.

தோழமையுடன்,

சிவன்

ஏழை படும்பாடு

1

1815–ம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில் ஒரு நாள்.

சூரியன் மறைவதற்குச் சுமார் ஒரு மணிநேரம் இருந்தபோது, திக்னே என்னும் குக்கிராமத்துக்குச் செல்லும் பாதையில் ஒரு மனிதன் மெதுவாக நடந்து கொண்டிருந்தான். நாற்பத்தாறு முதல் நாற்பத்தெட்டு வயதுக்குள் இருக்கலாம். அந்த மனிதனுக்கு, ஆஜானு பாகுவான உடம்பு. ஆள் தைரியசாலி என்பது எப்படிப்பட்டவருக்கும் முதல் பார்வையிலேயே தெரிந்துவிடும்.

வேதனை மற்றும் கடுமையான துயரத்தின் படிவுகள் அந்த முகத்தில் தெளிவாகத் தெரிகின்றன. நிறையக் கஷ்டங்களை அனுபவித்தவன் என்பதை வாடிய அவனது முகமும் தளர்ந்த உடலும் எடுத்துக் காட்டுகின்றன. ஒரு கையில் சற்றுப் பருமனான கழி ஒன்றும் தோளில் கனமான பெரிய சாக்கு ஒன்றும் இருந்தன. மலிவான, கிழிந்த உடைகளுடன் இரும்பு ஆணிகளால் இணைக்கப்பட்ட ஷுக்களையும் அணிந்திருந்தாள்.

திக்னே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அந்த மனிதன் நடந்து கொண்டிருப்பதை ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்தனர்.

‘‘இந்த மனிதன் யார்?’’ – அவர்கள் ஒருவரோடொருவர் கேட்டுக் கொண்டார்.

‘‘இவன் எங்கிருந்து வருகிறான்? நமது ஊரில் இவனுக்கு என்ன வேலை?’’

அந்த மனிதன் தெருவின் வளைவைக் கடந்து, மேயரின் அலுவலகத்துள் நுழைவதை அவர்கள் கவனித்தனர். விரைவிலேயே அங்கிருந்து வெளியேறி, மறுபடியும் தனது பயணத்தைத் தொடர்ந்தான்…

பயணிகள் இரவு நேரத்தில் தங்கவும், உணவு அருந்தவும் வசதியாக திக்னேயில் சத்திரம் ஒன்று இருந்தது. ‘க்ரோஷ்தே கோல்பா’ என்பது அதன் பெயர். ஜாக்வின் லாபர் என்பவருக்குச் சொந்தமானது அந்தச் சத்திரம்.

முன்பின் தெரியாத நமது பயணி, புகழ்பெற்ற அந்தச் சத்திரத்தை நோக்கித்தான் சென்றான். வெளிப்புறக் கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். உட்புறம் கணப்பு அடுப்பு எரிந்து கொண்டிருந்ததால் நல்ல வெப்பமும், இதமும் தெரிந்தது. கணப்பு அடுப்பின் மேற்புறத்தில் ஏதோ ஒரு பாத்திரத்தை தொங்கவிட்டு எதையோ கொதிக்க வைத்துக் கொண்டிருந்தனர். அதிலிருந்து எழுந்த மணம் நாவில் எச்சில் ஊறவைத்தது.

நமது பயணி அந்தக் காட்சியைப் பார்த்துப் புன்னகையுடன் பெருமூச்சுவிட்டான்.

அந்த அளவுக்குப் பசியோடிருந்தான் பயணி. கதவைத் திறக்கும் சத்தம் கேட்டு, சத்திர நிர்வாகி வாசற்புறம் பார்த்தான்.

‘‘உங்களுக்கு என்ன வேண்டும்?’’ என்று பயணியைப் பார்த்துக் கேட்டான்.

‘‘சாப்பிட உணவும், படுத்துக்கொள்ள இடமும் தேவை!’’ சத்திரக்காரனிடம் பயணி சொன்னான்.

‘‘அதற்கென்ன கொடுத்தால் போகிறது?’’ சத்திரக்காரன் பதிலளித்தான். வந்திருக்கும் பயணியின் உடை மற்றும் தோற்றத்தை ஊன்றிப் பார்த்துவிட்டுத் தொடர்ந்தான்: ‘‘அதாவது உங்களிடம் அதற்குரிய பணம் இருந்தால்…’’

சத்திரக்காரனை நோக்கி, தாடிக்காரனான பயணி சொன்னான்: ‘‘என்னிடம் பணம் உள்ளது. உங்களுக்கு தேவையான பணத்தைத் தருகிறேன்.’’

சத்திர நிர்வாகிக்கு அப்போதும் திருப்தி ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவர் அந்த அறையின் மூலையில் போடப் பட்டிருந்த மேஜையை நெருங்கி, ஒரு துண்டுக் காகிதத்தில் பென்சிலால் எதையோ எழுதி, தனது உதவியாளனான சிறுவனை அழைத்து, அதை அவனிடம் கொடுத்துவிட்டுச் சொன்னார்:

“தம்பீ, இதை நமது மேயரிடம் கொடுத்து விட்டுவா!”

சிறுவன் கடிதத்தை எடுத்துக்கொண்டு சத்திரத்திலிருந்து வெளியேறினான்.

“எனக்கு எப்போது உணவு கிடைக்கும்? நான் மிகவும் பசியோடு இருக்கிறேன்!” – பயணி பெருமூச்சு விட்டபடியே கேட்டான்.

“சற்றுப் பொறுங்கள்... ஏற்பாடு செய்யலாம்.” சத்திரநிர்வாகி ஆறுதலாகப் பதிலளித்தார்.

விரைவிலேயே திரும்பி வந்த சிறுவன், மற்றொரு துண்டுக் காகிதத்தைச் சத்திரக்காரனிடம் கொடுத்தான். அந்தக் காகிதத்தைப் பிரித்துப் படித்த சத்திரநிர்வாகி, ஒரு நிமிடம் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு பயணியான அப்பாவி மனிதனை நெருங்கிப் பேசத் தொடங்கினான்:

“நீங்கள் இங்கே தங்க முடியாது!”

“நான் தங்கிக்கொள்ள அறை எதுவும் இல்லாவிட்டால், குதிரை லாயத்தில் படுத்துக்கொள்ள அனுமதித்தால்கூடப் போதும்!” பயணி கேட்டான்.

“அதற்கும் வழியில்லை. எங்களிடம் உள்ள குதிரைகளுக்கே அந்த இடம் போதாது!”

“அப்படியானால் உணவாவது தாருங்கள். சாப்பிட்ட பிறகு போய்க் கொள்கிறேன்.”– பயணி, இரக்கத்துக்குரிய குரலில் இரந்தான். “இன்றைய பொழுது விடிந்ததிலிருந்து இடைவிடாமல் நடந்துகொண்டே இருக்கிறேன். பசியும் களைப்பும் என்னைத் தளர்ச்சி அடைய வைத்திருக்கிறது. குளிர் வேறு என்னைக் கொல்லுகிறது!”

“இங்கே உங்களுக்கான உணவுப் பொருளும் கிடையாது. ஏற்கெனவே சத்திரத்திலுள்ளவர்களுக்கான உணவுதான் கச்சிதமாக உள்ளது!” சத்திரநிர்வாகி கருணையே இல்லாமல் தீர்மானமாகச் சொன்னார்.

“இருபது பேர் சாப்பிடுவதற்கான உணவு இதில் உள்ளது.” சத்திரநிர்வாகியை உற்றுப் பார்த்தபடி கோபக் குரலில் பயணி பேசத் தொடங்கினான்: “நான் வந்திருப்பது ஒரு சத்திரத்துக்கு, உண்ண உணவும், தங்குவதற்கு இடமும் தராவிட்டால் நான் இங்கிருந்து நகரப் போவதில்லை!”

சத்திரநிர்வாகி, பயணியைப் பார்த்து உரத்த குரலில் பேசத் தொடங்கினார்.

“சீ… மானம் கெட்டவனே! முதலில் நீ இங்கிருந்து வெளியேறு. உண்மையில் நீ யாரென்று எனக்குத் தெரியும். அதையும் வெளிப்படையாகவே சொல்லி விடுகிறேன். நீ ஜீன்வால்ஜின்தானே. உன்னை முதல் தடவை பார்த்தபோதே சந்தேகம் ஏற்பட்டதால்தான், மேயருக்குக் கடிதம் கொடுத்து அனுப்பினேன். இதோ பார்… அவர் எனக்கு அனுப்பியிருக்கும் பதில் கடிதம். உனக்குப் படிக்கத் தெரியுமா?” கூறியபடியே தனது கையிலிருந்த காகிதத்தை பயணிக்கு முன்னால் வீசியெறிந்தார்.

பயணி அந்தக் காகிதத்தைக் கையில் எடுத்து வாசித்தான்.

அதன்பிறகு ஒரு வார்த்தைகூடப் பேசாமல் தரையில் வைத்திருந்த சாக்குமூட்டையும், ஊன்று கோலையும் எடுத்துக்கொண்டு பயணி வாசற்புறத்தை நோக்கி நடந்தான்.

மக்கள் நடமாட்டமற்ற தெருவுக்கு வந்தவன் நடக்கத் தொடங்கினான். அவமானமும், தோல்வியும் அவனது மனத்தை வெகுவாகப் பாதித்தன. தலையை ஒரு புறமாகச் சாய்த்துத் தொங்கப் போட்டபடியே நடந்தான். பின்புறம் திரும்பிப் பார்க்காமல், முன்னால் செல்லும் நீண்ட பாதையை உற்றுப் பார்த்தவாறே நடந்த கொண்டிருந்தான்.

2

ஜீன்வால்ஜின் லட்சியமற்றவனாகத் தனது நடைபயணத்தைத் தொடர்ந்தான். பாதையின் இடது புறத்தையோ வலது புறத்தையோ அவன் திரும்பிப் பார்க்கவில்லை. கடுமையான குளிரும், களைப்பும், தாங்க முடியாத பசியையும் அவன் தாங்கிக் கொண்டிருந்ததால், தன்னுடைய பரிதாபகரமானதும், ஆதரவற்றதுமான நிலையைக் குறித்து மட்டும் அவனால் யோசிக்க முடிந்தது. தன்னுடைய பெயர் திக்னேயிலுள்ள எல்லாருக்கும் தெரிந்துவிட்டிருக்கிறது என்பது சந்தேகமற விளங்கியது.

இந்தச் சூழ்நிலையில் இனிமேல் இந்த ஊரில் உணவோ, படுத்துக்கொள்ள இடமோ கிடைக்காது. யாரும் தன்னை வரவேற்று உபசரிக்கமாட்டார்கள் என்பதும் தெளிவாகத் தெரிந்தது.

பாதையின் கடைசியில் விளக்கு வெளிச்சம் தென்பட்டது. அவசர அவசரமாக ஜீன்வால்ஜின் அந்த இடத்தை அடைந்தான். 'ஒருவேளை அந்த இடத்தில் ஒரு நேர உணவும் ஓய்வெடுக்க அறையும் கிடைக்கலாம்' என்று நினைத்தான். கதவைத் தட்டுவதற்கோ, அழைப்பதற்கோ காத்திருக்காமல் அமைதியாகக் கதவைத் திறந்துகொண்டு உட்புறம் நுழைந்தான்.

அதுவும் ஒரு சத்திரம்தான் என்பது அவனுக்குப் புரிந்தது.

"யாரது?" உள்ளிருந்து ஒரு குரல் உயர்ந்தது.

"இரவுச் சாப்பாடும், தூங்க ஓர் இடமும் தேவைப்படுகிற ஒரு மனிதன்!" ஜீன்வால்ஜின் பதிலளித்தான்.

"அப்படியா? உள்ளே வாருங்கள். உங்களுக்குத் தேவையானவை இங்கே கிடைக்கும். முதலில் கணப்பு அடுப்புக்கு அருகே வந்து உட்காருங்கள்." உட்புறத்திலிருந்து அனுமதி கிடைத்தது.

ஜீன்வால்ஜின் கணப்பு அடுப்புக்கு அருகில் இருந்த இருக்கை ஒன்றில் அமர்ந்தான். களைப்பும் பசியும் அப்போது அவனைப் பாதி உயிர் உள்ளவனாக மாற்றிவிட்டிருந்தது. ஜீன்வால்ஜின் ஒரு தடவை சுற்று முற்றும் பார்த்தான். அந்த இடத்தில் ஏராளமானவர்கள் அமர்ந்திருந்தனர்.

அவர்களில் ஒருவன் ஜீன்வால்ஜினைப் பார்த்ததும் சட்டென்று எழுந்து சத்திரக்காரனின் காதில் எதையோ முணுமுணுத்தான். சத்திரநிர்வாகி ஜீன்வால்ஜினை நெருங்கி, தோளில் தனது கையைப் பதித்தான்.

"நீ இங்கிருந்து உடனடியாகப் புறப்படுவதுதான் நல்லது." சந்தேகத்துக்கு இடமே இல்லாத வகையில் அவனது குரல் உறுதியுடன் ஒலித்தது.

"அப்படியானால் நான் யார் என்று உங்களுக்கு தெரியும் இல்லையா?"

"தெரியும்!"

"நான் இனி எங்கே போக முடியும்?"

“வேறு எங்கு வேண்டுமானாலும் போகலாம்!” தயக்கமின்றி வெளிவந்தது பதில்.

ஜீன்வால்ஜின் தனது சாக்குமூட்டை மற்றும் ஊன்று கோலுடன் அங்கிருந்து கிளம்பினான்.

மறுபடியும் அவன் லட்சியமற்றவனாகத் தனது நடை பயணத்தைத் தொடர்ந்தான். மேலும் சற்றுத் தொலைவு சென்றபோது சிறைச்சாலையொன்று தட்டுப்பட்டது. சிறைச்சாலையின் நுழைவுவாசலுக்கு முன்னால் தூணின் மேற்புறத்தில் பெரிய மணி ஒன்று கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது.

ஜீன்வால்ஜின் கயிறை இழுத்து மணியடித்தான்.

சற்று நேரத்துக்குள் சிறையின் வெளிப்புறக் கதவைத் திறந்து கொண்டு அதிகாரி ஒருவர் வெளியே வந்தார்.

“ஐயா, சிறையதிகாரி அவர்களே, சாப்பிட ஒரு கவளம் சாப்பாடும், இந்த இரவுமட்டும் தூங்குவதற்குக் கொஞ்சம் இடமும் தருகிறீர்களா?”

“இது சத்திரமா என்ன? போய் ஒரு குற்றவாளியாக மாறி போலீஸாரிடம் அகப்பட்டு இங்கு வர, உள்ளே சேர்த்துக் கொள்கிறேன். குற்றவாளிகள் மட்டும்தான் இதற்குள் சாப்பிடவும், படுத்துத் தூங்கவும் முடியும்…ம்… புறப்படு… இங்கு நிற்காதே!” சிறை அதிகாரி கேலித் தொனியில் கூறிவிட்டு, உள்ளே நுழைந்து கதவை மூடிக்கொண்டார்.

முன்புறம் தோட்டமும் மரம்செடிகளும் நிறைந்த, வாய்க்கால் அருகிலுள்ள வீடு ஒன்று தென்படுவது வரை ஜீன்வால்ஜின் தனது நடைபயணத்தைத் தொடர்ந்தான். தோட்டத்தின் ஊடாக வீட்டுக்குச் செல்லும் பாதை தெளிவாகத் தெரிந்தது. அந்த வீடும் வீட்டின் ஜன்னலிலிருந்து வெளிவரும் வெளிச்சத்தையும் ஜீன்வால்ஜினால் பார்க்க முடிந்தது.

ஜன்னலை நெருங்கி உட்புறமாக எட்டிப் பார்த்தபோது அதை ஒட்டியிருந்த அறையில் மேஜைமீது உணவு பரிமாறப்பட்டிருந்தது. அருகிலேயே கைக்குழந்தை ஒன்றை இளம்பெண் ஒருத்தி, தனது மடியில் இருத்திக் கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்தாள். அவளுக்கு அருகே இருந்த மற்றோர் இளைஞன் அவளிடம் வேடிக்கையாக எதையோ பேசிக் கொண்டிருந்தான்.

அந்த இருவரும் அன்புடன் ஒருவரை ஒருவர் பார்த்தபடி புன்னகைத்தனர்.

மகிழ்ச்சியான அந்தக் காட்சியையே பார்த்தபடி ஜீன்வால்ஜின் ஒருகணம் அப்படியே நின்று போனான். பிறகு சற்று நகர்ந்து வந்து ஜன்னல் கதவை ஒரு தடவை தட்டினான். எந்தவிதமான பதிலும் கிடைக்காததால், மறுபடி பலமாகத் தட்டினான்.

மேஜையருகில் உட்கார்ந்திருந்த இளைஞன் கையில் விளக்கு ஒன்றை எடுத்துக்கொண்டு ஜன்னல் கதவைத் திறந்தான்.

"யார் அது?" இளைஞன் கேட்டான்.

"நான் ஒரு வழிப்போக்கன். இன்று காலையிலிருந்து விடாமல் நடந்து கொண்டிருக்கிறேன்."– ஜீன்வால்ஜின் மெதுவான குரலில் பதிலளித்தான்: "நான் உங்களுக்குப் பணம் தருகிறேன். சாப்பிடக் கொஞ்சம் உணவும், படுத்துத் தூங்க ஓரிடமும் கொடுத்தால் போதும்!"

"பணம் கொடுக்கத் தயாராக இருப்பவர்களுக்கு உணவையும், உறங்குமிடத்தையும் தர நான் தயங்கவே மாட்டேன்." என்று பதிலளித்த இளைஞன் தொடர்ந்து பேசினான்: "ஆமாம் நீங்கள் ஏன் எந்தச் சத்திரத்துக்குப் போகாமல் இங்கு வந்திருக்கிறீர்கள்?"

"கண்ணில் தட்டுப்பட்ட சத்திரங்களில் எல்லாம் விசாரித்துப் பார்த்தேன். யாரும் எனக்கு உதவாமல், பதிலாக விரட்டியடிக்கவே செய்கிறார்கள்." – ஜீன்வால்ஜின் தன் தோல்வியை ஒப்புக்கொண்டவனாகப் பேசினான்.

அந்த இளைஞன், ஜீன்வால்ஜினை காலிலிருந்து தலைவரை ஒருதடவை பார்த்தான் பிறகு கடுமையான குரலில் கேட்டான்: "ஓகோ! அப்படியானால் நீதான் அந்த நபரா?"

ஜீன்வால்ஜின் எந்தவிதமான பதிலும் பேசில்லை; அதற்கான தேவையும் இருக்கவில்லை.

இளைஞன் சுவரில் மாட்டியிருந்த துப்பாக்கியைக் கையில் எடுத்தான்.

"நீங்கள் எனக்கு உணவு அளிக்காவிட்டாலும் பரவாயில்லை. தயவுசெய்து குடிக்கக் கொஞ்சம் தண்ணீராவது தருகிறீர்களா?" – ஜீன்வால்ஜின் இரக்கத்துக்குரிய வகையில் கேட்டான்.

"தண்ணீரா வேண்டும்... உனக்குத் தர வேண்டியது, இதிலிருந்து புறப்படும் ஒரு துப்பாக்கிக் குண்டுதான்."– இளைஞன் கோபத்துடன் கத்தினான். மறுவிநாடியே கதவை இழுத்து மூடித் தாழிட்டான்.

ஜீன்வால்ஜின் திரும்பவும் சாலைக்கு வந்தான். இரவின் குளுமை அதிகரித்திருந்தது. காற்று வலுவுடன் வீசத் தொடங்கியது. மேற்கொண்டு தன்னால் ஓர் அடிகூட நடக்க முடியாதென்று அவனுக்கே தெரிந்தது. தலையைத் திருப்பிப் பார்த்தான். மாதா கோயில் ஒன்றின் அருகில் தான் வந்திருப்பது தெரிந்தது. அங்கு ஒரு சிமெண்ட் பெஞ்ச் கிடந்தது.

அவன் அதில் போய் படுத்துக்கொண்டான். அப்போது கோயிலில் ஊழியம் புரிபவள் என்று தோன்றக்கூடிய வயதான பெண் ஒருத்தி அந்தப் பக்கமாக வந்தாள்.

ஒரு தடவை ஜீன்வால்ஜினை ஊன்றிக் கவனித்தாள்.

“நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?” அவள் கேட்டாள்.

“உங்களுக்குத் தெரியவில்லையா? நான் படுத்துத் தூங்கப் போகிறேன்!”– வெறுப்பும் கோபமும் கலந்தவனாக ஜீன்வால்ஜின் பதிலளித்தான்.

“இந்த சிமெண்ட பெஞ்ச்சிலா?”– அவள் வியப்பு அடைந்தவளாகக் கேட்டாள்.

“நீங்கள் ஏன் ஏதாவதொரு சத்திரத்துக்குப் போகக் கூடாது?”

“என்னிடம் பணமில்லை!”

“ஐயோ பாவம்…. அப்படியானால் யாராவது ஒருவர் நல்ல மனத்துடன் இரக்கப்பட்டு உணவும், தூங்கவும் உங்களுக்கு உதவிருக்கலாம்.”

“நான் ஏராளமான கதவுகளைத் தட்டிப் பார்த்துவிட்டேன். வெறிநாயை அடித்து விரட்டுவது போல் விரட்டத்தான் செய்கிறார்கள். யாருமே உதவ முன் வரவில்லை!”

வயதான அந்தப் பெண்மணி அவனது தோளைப் பிடித்து எழுப்ப உதவிசெய்து, எதிரில் இருந்த முச்சந்திக்கு அப்பால் இருந்த ஒரு வீட்டைச் சுட்டிக் காட்டியபடிக் கேட்டாள்: “நீங்கள் அந்த வீட்டுக்குப் போயிருந்தீர்களா?”

“இல்லை!”

“அப்படியானால் உடனே போங்கள்!”

வயதானவள் நிதானமாகக் கூறினாள்.

3

அந்தக் காலத்தில் திக்னே கிராமத்தில் ‘மான் சிஞ்சூர் மிரியன்’ என்ற பாதிரியார் ஒருவர் வசித்திருந்தார். சுற்றுப்புறத்திலுள்ள ஏழை எளியவர்களையும், உடல் ஊனமுற்றவர்களையும் ஆதரித்து, அவர்களுக்குக் கருணையுடன் உதவி செய்பவராகவும் இருந்தார் அவர்.

அன்பும் கருணையும் நிறைந்த ஒரு நல்ல மனிதர்.

தன்னிடமிருந்த சொத்துகளுடன் விலையுயர்ந்த பொருள்களை விருந்தினரை உபசரிப்பதற்காக விற்றும், பரிசு அளித்தும் அழித்துக் கொண்ட பாதிரியார் அவர். பிரமாண்டமான பங்களாவையும், அதற்குள் இருந்த மேஜை,நாற்காலிகள்,அலமாரிகள் உட்பட விலை உயர்ந்த பொருள்களையும், மருத்துவமனை கட்டுவதற்காக இலவசமாகவே வழங்கியவர். அதனால் ஏற்கெனவே மருத்துவமனையாக இயங்கி வந்த பழைய கட்டடத்தைத் தனது குடியிருப்பாக மாற்றிக்கொண்டவர். அதிலும் அவரது வாழ்க்கை மிகவும் எளிமையாகவே தொடர்ந்தது.

அவரது சகோதரி பாப்டிஸ்டின் மற்றும் வேலைக்காரப் பெண் ஒருத்தியும் அவருடன் அந்த வீட்டில் வசித்தனர். மக்லோர் என்ற பெண்மணி வீட்டை நிர்வகிப்பவள். அவளும் அவர்களுடன் தங்கியிருந்தாள். மிகவும் மலிவான உணவுப் பொருள்களைப் பயன்படுத்தி, எளிமையின் எல்லையில் நடந்து கொண்டிருந்தது அவர்களது வாழ்க்கை. கணப்பு அடுப்பைப் பற்றவைக்க விறகு வேண்டும். விறகு என்பது அப்போதைய சூழ்நிலையில் விலையுயர்ந்த ஒரு பொருளாக இருந்ததால், பெரும்பாலும் அவர்கள் குளிரில் நடுங்கியபடிதான் படுத்து உறங்கினர்.

பழம்பெருமையின் அடையாளமாக அவரிடம் இருந்தவை சில வெள்ளித் தட்டுகளும் கரண்டிகளும், இரண்டு பெரிய மெழுகுவத்திப் பீடங்களும்தான்! வீட்டுக்கு யாராவது விருந்தாளிகள் வந்தால் மட்டுமே, அவர்கள் அவற்றைப் பயன்படுத்துவது வழக்கம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் மெழுகுவத்திப் பீடங்களில் மெழுகுவத்தியை ஏற்றி, அதைச் சாப்பாட்டு மேஜையின் நடுவே வைப்பார்கள்.

அந்த வீட்டின் கதவுகள் ஒருபோதும் பூட்டப்படுவதே இல்லை. எனவே இரவு–பகல் பேதமில்லாமல் யாரும் எப்போது வேண்டுமானாலும் அந்த வீட்டுக்குள் செல்லலாம்.

பாதிரியார் இப்படிச் சொல்வதுண்டு:

“மருத்துவரின் வீட்டுக் கதவு ஒருபோதும் அடைக்கப்படக் கூடாது: அதே போல்தான் ஒரு பாதிரியாரின் வீடும்!”

ஆரம்பத்தில் தாழ்ப்பாளும் பூட்டும் இல்லாத அந்த வீட்டுக்குள் படுத்து உறங்கப் பெண்கள் மிகவும் பயந்தனர். அதை அறிந்த பாதிரியார் இப்படிச் சொன்னாராம்:

“கடவுள் நம்மைக் காப்பாற்றவில்லையென்றால், எப்படிப்பட்ட காவலும் பாதுகாப்பும் பயனளிக்காது!”

அவரது வார்த்தைகள் மற்றவர்கள் முழுமையாக நம்பியதால், அதற்கு மதிப்பளித்து ஆறுதலடைந்தனர்.

நற்குணங்கள் நிரம்பிய, அன்பு நிறைந்த அவரை ஊரார் விருந்தோம்பலில் சிறந்தவர் என்று மரியாதையுடன் அழைத்தனர். அந்தச் சுற்றுப்புறத்திலுள்ள எல்லோரும் அவரை அளவுக்கு அதிகமாகவே மதித்துப் போற்றினர்.

அந்த வீட்டின் மேல்மாடியில்தான் பெண்களின் அறைகள் இருந்தன. கீழ்த்தளத்தில் பாதிரியார் சாப்பிடப் பயன்படுத்தும் அறையும், பிரார்த்தனை அறையும், குளிர்காலத்தில் படுத்துக் கொள்வதற்காகவென்று மற்றொரு படுக்கையறையும் இருந்தன. சாதாரண நாள்களில் பொழுது விடிவதுவரையில் படிக்கவும் எழுதவும் வாசிக்கவும், தியானத்தில் ஈடுபடவும் அந்த அறையை அவர் பயன்படுத்துவது வழக்கம்.

பிரார்த்தனை அறையின் குறுக்கே தட்டிச் சுவர் வைத்து அதை இரண்டாகப் பிரித்து, விருந்தினர் யாராவது வந்தால் பயன்படுத்திக் கொள்ள ஒதுக்கி வைத்திருந்தனர்.

பாதிரியாரின் படுக்கையறையில் கட்டில் ஒன்றும், காகிதங்கள் அடுக்கி வைக்கப்பட்ட மேஜை ஒன்றும், பிரார்த்தனை செய்வதற்காக ஒரு ஸ்டூலும் இருந்தன. கட்டிலுக்குப் பின்புறம் இருந்த சுவர் அலமாரியில்தான் வெள்ளித்தட்டு மற்றும் பொருள்களை அடுக்கி வைத்திருந்தார் மிஸ் மக்லோர். சாதாரணமாக அவற்றைப் பயன்படுத்துவதில்லை. எனவே, அதன் கதவுகளை மூடவோ திறக்கவோ வேண்டியிருப்பதில்லை.

பருவகாலம் மோசமாக இல்லாத நாள்களில், பாதிரியார் மாலை நேரங்களில் உலாவச் செல்வது வழக்கம். சில சமயம் வயல் வரப்புகளின் ஊடாகவும்,

சில சமயம் ஊர் எல்லையை ஒட்டியும் உலாவுவார். அவர் நடந்து வருவதை பெண்களும் குழந்தைகளும் வீட்டு வாசல்களில் நின்றபடியே மகிழ்ச்சியுடன் கவனிப்பார்கள். பாதிரியாரும் எதிரில் தட்டுப்படும் மனிதர்களை ஆசீர்வதித்தபடி நடந்து செல்வார்.

பாதிரியார் நடந்து போகும்போது அவரைக் கவனிக்கும் மனிதர்கள் முகத்தில் மகிழ்ச்சியும் திருப்தியும், நிம்மதியும் ஒரு சேரத் தோன்றும். ஒவ்வொரு உதடுகளிலும் புன்னகை மலரும்!

வழக்கம்போல் மாலை நேர உலாவலை முடித்துக்கொண்டு பாதிரியார் தனது அறைக்குள் உட்கார்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். இரவு எட்டுமணி கடந்த பிறகும் சாப்பிட வராமல் அவர் எதையோ எழுதிக்கொண்டும் படித்துக்கொண்டும் இருந்தார். மேடம் மக்லோர் சாப்பாட்டு மேஜையின் மீது உணவுப் பொருள்களை ஒழுங்காக அடுக்கி மூடி வைத்திருந்தார்.

கடைசியில் பாதிரியார் புத்தகங்களை மூடி வைத்துவிட்டு, இரவு உணவு அருந்துவதற்காக எழுந்தார்.

மக்லோர் அந்த வேளையில் ஒருவிதப் பரபரப்புடன் காணப்பட்டாள். ஊருக்குள் யாரோ ஒரு புதுமனிதன் வந்திருப்பதாகவும், அவன் திருடனாகவோ கொலையாளியாகவோ இருக்கலாம் என்றும் ஊரார் பேசிக்கொண்டது மக்லோரின் காதுகளையும் எட்டியது. வீட்டைப் பத்திரமாகப் பூட்டி வைத்துக் கொள்ளவில்லையென்றால், ஏதாவது விபரீதம் நடக்கலாம் என்றும் பரஸ்பரம் ஊரார் பேசிக் கொண்டனர்.

ஊருக்குள் பேசியதெல்லாம் வயதான அந்தப் பெண்மணியின் மனத்தை அலைக்கழித்து, அவளை நிம்மதியிழக்கச் செய்திருந்தது.

‘‘அண்ணா, மேடம் மக்லோர் சொன்னதைக் கேட்டீர்களா?’’ பாப்டிஸ்டின், பாதிரியாரை நெருங்கி வந்து கேட்டாள்.

‘‘ஏதேதோ சொல்வதை நானும் கேட்டேன்.’’– பாதிரியார் எந்தவிதமான உணர்வுமின்றி சகோதரியிடம் பதிலளித்தார்.

‘‘அப்படியானால் நமது நிலை மிகவும் ஆபத்தானது இல்லையா?’’

மேடம் மக்லோர், ஊருக்குள் தான் கேள்விப்பட்ட செய்திகள் முழுவதையும் திரும்பவும் ஒருமுறை அப்படியே ஒப்பித்தாள்:

“ஊருக்குள் யாரோ ஒருவன் வந்திருக்கிறான். பார்வைக்கு திடகாத்திரசாலியாகவும் பராரியாகவும் தெரிகிறானாம். தோளில் ஒரு சாக்கு மூட்டையையும், கையில் ஒரு பெரிய மரக்கழியையும் எடுத்து வருகிறானாம். ஒவ்வொரு சத்திரம் மற்றும் வீடுகளிலும் நுழைந்து உணவும் உறங்க இடமும் கேட்டனாம். எல்லோரும் அவனை விரட்டியடிக்கவே செய்தனராம்.”

“ஓகோ! அப்படியா?”– பாதிரியார் வியப்புடன் கேட்டார்.

“ஆமாம். எனக்குப் பயமாக இருக்கிறது.” மக்லோர் கூறினாள்: “இன்று இரவு இங்கு என்னவெல்லாமோ நடக்கப் போகிறது. இந்த வீட்டுக் கதவுகளுக்குத் தாழ்ப்பாளோ பூட்டோ கிடையாது. நான் கொல்லனிடம் போய் அதற்கு ஏற்பாடு ஏற்பாடு செய்யட்டுமா?”

மக்லோர், பாதிரியாரின் அனுமதிக்காகக் காத்திருந்தாள். அவரோ, மிகவும் அமைதியாகவே காட்சியளித்தார்.

“உடனடியாகச் சென்று தாழ்பாள் மற்றும் பூட்டுகளை ஏற்பாடு செய்கிறேன். இல்லாவிட்டால், அந்த மனிதன் இன்று இரவு நமது வீட்டுக்குள் நுழைந்துவிடலாம். நீங்கள் யார் வந்தாலும் கண்ணை மூடிக்கொண்டு அவர்களை நம்பி நீங்கள் வரவேற்று உபசரிப்பதும் நல்ல பழக்கமல்ல.”

அதே நேரம் வெளிப்புறக்கதவை யாரோ பலமாகத் தட்டும் சத்தம் கேட்டது.

பாதிரியார் உரத்த குரலில் வாசற்புறத்தை நோக்கிக் குரல் கொடுத்தார். “வாருங்கள்!”

4

கதவைத் திறந்துகொண்டு ஒரு மனிதன் அந்த வீட்டுக்குள் நுழைந்தான். அந்த மனிதன் ஜீன்வால்ஜீனேதான்!

மேடம் மக்லோர் தலைமுதல் கால் வரை நடுங்கத் தொடங்கினாள். அவளது வாய் திறந்தது திறந்தபடியே இருந்தது. ஒரு தடவை உரத்த குரலில் அலற வேண்டுமென்று அவளுக்குத் தோன்றினாலும், அப்போது அவளால் வாயை அசைக்க முடியாமல் இருந்தது. பாதிரியாரின் சகோதரி பாப்டிஸ்டினும் பயந்தவாறே, பாதிரியாரைப் பார்த்தாள்.

அந்த இரண்டு பெண்மணிகளும் விரைவிலேயே தங்களது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு ஒரு நிலைக்கு வந்தனர். பாதிரியாரின் முகத்தோற்றம் அவர்களுக்கு ஆறுதலளிப்பதாகவே தென்பட்டது.

பாதிரியார் என்னமோ சொல்வதற்காக, வந்தவனை நோக்கி வாய் திறந்தார். ஆனால், அதற்கு முன்பாகவே வந்த மனிதன் பேசத் தொடங்கினான்:

“இங்கே பாருங்கள். என்னுடைய பெயர் ஜீன்வால்ஜின்தான். நான் ஒரு பழைய குற்றவாளி. பத்தொன்பது வருடங்களைச் சிறை வாழ்க்கையிலேயே செலவழித்தவன். நான்கு நாட்களுக்கு முன்புதான் விடுதலையாகி இருக்கிறேன். நான் ‘பொந்தார்லியர்’ நகரை அடைய வேண்டிஉள்ளது. ‘டியோலன்’ நகரிலிருந்து நடந்தே இங்கு வந்து சேர்ந்திருக்கிறேன்.

இன்று மாலையில்தான் நான் இங்கு ஊருக்கு வந்து சேர்ந்தேன். ஒரு வழி நெடுகவுள்ள சத்திரங்களுக்குப் போனேன். உணவும், உறங்க இடமும் தராமல் என்னை அங்கிருந்து விரட்டியடித்தார்கள். என்னிடம் மஞ்சள் பாஸ்போர்ட்டுதான் உள்ளது என்பது எல்லோருக்குமே தெரிந்திருக்கிறது.

வேறுவழியே இல்லாமல் நான் திரும்பவும் சிறைச்சாலைக்கே போனேன். ஏதாவது குற்றம் புரிந்து தண்டனை அடைந்தால் மட்டும் தான் அவர்கள் சிறைக்குள் இருக்க அனுமதிப்பார்களாம். வயல் வரப்பிலாவது படுத்துத் தூங்கலாம் என்று நினைத்தேன். மழை வரும் என்று தோன்றியதால் முச்சந்திக்கு அருகிலுள்ள தேவாலய வாசலிலுள்ள சிமெண்ட் பெஞ்சின் மீது படுத்தேன். படுத்துறங்க முயற்சித்தபோது ஒரு பெண்மணி எனக்கு இந்த வீட்டைச் சுட்டிக் காட்டினார். அவரது சொற்படிதான் இங்கு வந்து சேர்ந்திருக்கிறேன்.

இது எந்த இடம்? சத்திரமா? சத்திரம் என்றால் உங்களுக்குத் தர என்னிடம் தேவையான பணம் உள்ளது. நான் இத்தனை ஆண்டுகளாகச் சிறைச்சாலையில் வேலை செய்ததற்கு ஊதியமாக நூற்றியொன்பது. ஃபிராங்க்கும் பதினைந்து ஸுவும் கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய வேலை உண்ண உணவும், உறங்க இடமும் மட்டும்தான். அதற்கான பணத்தையும் நான் தரத் தயாராக இருக்கிறேன்!”

“மேடம் மக்லோர், நீங்கள் இந்த மனிதருக்கும் சேர்த்து மேஜை மீது உணவு பரிமாறுங்கள்!”– பாதிரியார் கம்பீரமான குரலில் கூறினார்.

விருந்துக்கு வந்த மனிதன் பாதிரியாரை நோக்கி நகர்ந்தவாறே பேசினான்:

“இதுவரை நான் சொன்னதெல்லாம் உங்களுக்கு விளங்கவில்லையென்று தெரிகிறது. நான் ஒரு கிரிமினல் குற்றவாளி. என்னிடம் மஞ்சள் பாஸ்போர்ட்தான் உள்ளது. இதோ...இதைப் படித்துப் பாருங்கள் ‘திருட்டுக் குற்றத்துக்காக ஐந்து வருடத்தண்டனையும் சிறையிலிருந்து தப்பிக்க முயற்சி செய்ததற்காகப் பதினான்கு வருடங்களுமாக, மொத்தம் பத்தொன்பது வருடச் சிறைத் தண்டனை அனுபவித்தவன். இந்த மனிதன் ஆபத்தானவன். எதற்கும் துணிந்தவன். எச்சரிக்கையாக இருங்கள்!’

நான் எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டேன். எல்லோரும் என்னை விரட்டவே செய்தனர். எனவே, இன்றிரவு சிறிது உணவுடன் தலைசாய்த்துப் படுக்க மாட்டுத் தொழுவமோ, எதுவோ எனக்குக் கிடைக்குமா?”

“மேடம் மக்லோர்..” பாதிரியார் திரும்பவும் அழைத்தார். “பிரார்த்தனை அறையிலுள்ள கட்டிலில் இவருக்குப் படுக்கையைத் தாயார் செய்யுங்கள்.” என்றவர் விருந்தாளியின் பக்கம் திரும்பிக் கூறினார்: “மதிப்புக்குரியவரே வாருங்கள்! நாம் உணவருந்தலாம். உணவு பரிமாறும்வரை சற்று நேரம் கணப்பு அடுப்பின் அருகே அமர்ந்து ஓய்வெடுங்கள். உணவு உண்பதற்குள் உங்களது படுக்கையும் தயாராகிவிடும்.”

ஜீன்வால்ஜின் வியப்பின் வசப்பட்டு ஊமையாகிப் போனான்!

அவனுக்கு நடப்பது எதுவுமே புரியவில்லை. அவனது முகம் நன்றி உணர்ச்சியால் நிறைந்திருந்தது. கண்களில் நீர் நிறைந்தது. தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டதுபோல் தோன்றியது. இதயத்துடிப்பு பன்மடங்கு அதிகரித்திருக்கிறது.

“நீங்கள் சொன்னதெல்லாம் உண்மையா? நான் கேட்ட வார்த்தைகள் கனவு அல்லவே?”– நடுங்கும் குரலுடன் ஜீன்வால்ஜின் திக்கித் திணறிப் பேசினான்: “நீங்கள் என்னை அடித்துத் துரத்தவில்லையா? என்னையா ‘மதிப்புக்குரியவரே’ என்று அழைத்தீர்கள்? ஒரு நாயை விரட்டுவது போல் என்னை விரட்டி அடிப்பீர்கள் என்றல்லவா எதிர்பார்த்தேன்! நான் நல்ல மெத்தை ஒன்றில் மீது படுத்துப் பத்தொன்பது வருடங்களாகின்றன. உண்மையில் நீங்கள் யார்? யாராக இருந்தாலும், நீங்கள் ஒரு நல்ல மனிதர்தான்... சொல்லுங்கள், நீங்கள் இந்தச் சத்திரத்தின் உரிமையாளரா?”

அப்போதும் பாதிரியார் கோபப்படாமல் சாந்தமாகவே காட்சியளித்தார். அவரது முகத்தில் அன்பும், இரக்கமும், சகோதர பாசமும் மட்டுமே தெரிந்தது ஜீன்வால்ஜினுக்கு.

அமைதியாகவும், கம்பீரமாகவும் பதிலளித்தார் பாதிரியார்: "இல்லை. நான் ஒரு பாதிரியார்!"

"ஓகோ... புரோகிதர்! அப்படியானால் நீங்கள் உண்மையிலேயே மிகச்சிறந்த புரோகிதர்தான். உங்களது உபசரிப்புகளுக்கெல்லாம் நான் பணம் தரவேண்டியதில்லை என்றா சொல்கிறீர்கள்?"

"ஆமாம். பணம் எதையும் நீங்கள் தர வேண்டியதில்லை! அது உங்களிடமே இருக்கட்டும். ஆமாம், உங்களிடம் இப்போது எவ்வளவு பணம் உள்ளதென்று சொன்னீர்கள்?"

"நூற்றியொன்பது ஃபிராங்க்குகளும் பதினைந்து ஸுவும்."

"இதைச் சம்பாதிக்க உங்களுக்கு எத்தனை வருடங்கள் ஆகியுள்ளன?"

"பத்தொன்பது வருடங்கள்!"

"பத்தொன்பது வருடங்களா... என்ன ஒரு கடுமை!"– பாதிரியார் மிகுந்த வருத்தத்துடன் இந்த வார்த்தைகளைக் கூறினார். பிறகு அவர் எதையோ நினைத்துக் கொண்டவராக நீண்ட பெருமூச்சு ஒன்றை வெளியிட்டார்.

5

மேடம் மக்லோர் சாப்பாட்டு மேஜையில் மற்றொருவருக்கும் உணவு பரிமாறுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டாள்.

"மேடம் மக்லோர், அந்த நாற்காலியை கணப்பு அடுப்பின் அருகில் போட்டுக் கொடுங்கள். நமது விருந்தாளி குளிரில் நடுங்குகிறார் பாருங்கள்!" என்ற பாதிரியார். ஜீன்வால்ஜின் பக்கமாகத் திரும்பியபடி கூறினார்: "மதிப்புக்குரியவரே ஆல்ப்ஸ் மலையிலிருந்து வீசும் காற்று. தாங்க முடியாத குளிராகத்தான் உள்ளது. முதலில் உங்கள் உடம்பைச் சற்றுச் சூடேற்றிக் கொள்ளுங்கள்."

ஒவ்வொரு தடவையும் பாதிரியார், மதிப்புக்குரியவரே என்றும் மிஸ்டர் என்றும் மென்மையாகவும், அன்பு நிறைந்த குரலிலும் அழைத்தபோது ஜீன்வால்ஜின் முகம் மகிழ்ச்சியால் தெளிவடைந்து மலர்ந்தது.

"மேஜை மீதுள்ள விளக்கு வெளிச்சம் போதாது!"– பாதிரியார் குறிப்பிட்டுக் கூறினார்.

மேடம் மக்லோருக்கு அதன் அர்த்தம் விளங்கியது. உடனே அவள் வெள்ளியாரான இரண்டு மெழுகுவத்திப் பீடங்களையும் எடுத்துவந்து அதில் மெழுகுவத்திகளை ஏற்றி வைத்தாள்.

“மேன்மை தங்கிய பாதிரியாரே, நீங்கள் மிகவும் நல்ல மனிதர். உங்களால் எப்படியெல்லாம் மனிதர்களிடம் அன்பு செலுத்த முடிகிறது? நீங்கள் என்னிடம் காட்டும் இந்தப் பெருந்தன்மை என்னை வியப்பு அடைய வைக்கிறது. என்னிடமும் இப்படி நடந்துகொள்ள உங்களால் எப்படி முடிகிறது?

உண்மையாகவே நான் எப்படிப்பட்டவன் என்பதை வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறேன். துரதிருஷ்டம் நிறைந்தவனும், வாழ்க்கையில் துன்பங்களை மட்டுமே அனுபவித்தவனுமான ஒரு பழைய குற்றவாளி நான். இருந்தும் என்மீது உங்களுக்குத் துளிகூட வெறுப்போ, அருவருப்போ தோன்றவில்லையே எப்படி?”

“நீங்கள் அதிகமான துன்பங்களை அனுபவித்திருக்கிறீர்கள் இல்லையா?”– பாதிரியார் கேட்டார்.

ஜீன்வால்ஜின் ஒரு நீண்ட பெருமூச்சுடன் பதில் சொல்லத் தொடங்கினான்: “உண்மைதான்! சிறையில் கொடுத்த கைதி உடையோடு காலில் பூட்டிய சங்கிலி மற்றும் பெரிய இரும்புக்குண்டுடன் பத்தொன்பது வருடங்கள்! முரட்டுத்தனமான மரப்பலகை மீது மட்டுமே படுத்து உறங்கியிருக்கிறேன் – தாங்க முடியாத வெயில், வெக்கையிலும் குளிரிலும்... சிறை அதிகாரிகளின் மிரட்டலும்.. உடல் நலமில்லாதபோதுகூட அந்த அதிகாரிகள் கருணையற்றவர்களாக என்னிடம் நடந்து கொண்டதும்... ஒவ்வொன்றையும் நான் எப்படி விவரிக்க முடியும்? அதைப்பற்றி நினைக்கும்போது, சங்கிலியால் கட்டப் பட்டிருந்தாலும் வீட்டில் வளர்க்கும் நாய்கள் எவ்வளவோ தேவலாம்.

பத்தொன்பது வருடங்கள் இதையெல்லாம் அனுபவித்த பிறகு, எனக்குக் கிடைத்துள்ள பட்டமோ இவன் ஆபத்தானவன் என்பதைப் பறைசாற்றும் மஞ்சள் பாஸ்போர்ட்!”

“சரிதான், நீங்கள் அளவுக்கு அதிகமாகவே துன்பங்களை அனுபவித்துள்ளீர்கள். பரலோகத்தில் உங்களைப் போன்ற ஒருவரது கண்ணீருக்கு, நூறு நல்ல மனிதர்கள் வழங்கும் பட்டுத் துணிகளைவிட மதிப்பு அதிகம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். சுயமே மனம்,

வருந்தித், திருந்திய மனிதர்களுக்கு அந்த உலகத்தில், ஆயுள் முழுவதும் பாதிரியாராக இருந்தவர்களைவிட அதிகமான வரவேற்பும் ஆறுதலும் கிடைக்கும். நீங்கள் சிறை வாழ்க்கையைக் குறித்து வெறுப்பும் வைராக்கியமும் கொண்டிருக்கிறீர்களானால், நான் உங்களுக்காக வருத்தப்படுகிறேன். மாறாக அமைதியையும், ஆறுதலையும், பொறுமையையும்தான் உங்களது சிறை வாழ்க்கையிலிருந்து பெற்றிருக்கிறீர்கள் என்றால், மற்ற மனிதர்களைவிட உங்களை நான் உயர்ந்த மனிதராகவே கருதுவேன்!''

மேடம் மக்லோர் இரவு உணவைப் பரிமாறியிருந்தாள். ஸூப்பும், ரொட்டியும், எண்ணெயில் பொரித்து எடுத்த இறைச்சித் துண்டுகளும், வெண்ணெயும் அடங்கிய எளிமையான விருந்து அது. பாதிரியார் வழக்கம்போல் எல்லோருக்கும் ஸூப் வழங்கினார். அதைப் பரிமாற அவர் வெள்ளிக்கரண்டியைப் பயன்படுத்தினார்.

ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அவர் சொன்னார். ''ஏதோ ஒன்று குறைவது போல தோன்றுகிறதே!''

அதைக் கேட்ட சமையற்காரப் பெண்மணி, திரும்பவும் சமையலறைக்குள் சென்று வெள்ளி ஸ்பூன்களை எடுத்து வந்து அதை இருவருக்கும் முன்பாக வைத்தாள். பாதிரியார் திருப்தி அடைந்தவராகப் புன்னகைத்தபடி கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

எல்லோரும் சாப்பிடத் தொடங்கினர்.

ஜீன்வால்ஜின் உணவை மிகவும் ஆசையுடன் வாரி வாரி உண்டான். பசியின் தீவிரம் காரணமாகச் சாப்பாட்டு மேஜையில் பின்பற்றப்படும விருந்து முறைகளை அவன் நினைவு கொண்டதாகவே தெரியவில்லை. அந்த அளவுக்கு அவனிடம் பொறுமை இல்லை. அகோரப் பசியிலிருக்கும் ஒரு விலங்கு ஆசை அடங்குமட்டும் தனது இரையை இஷ்டத்துக்கு இழுத்துப் புசிப்பது போல்தான் அவனும் நடந்துகொண்டான். சாப்பாட்டின் மீது அவனுக்கு இருந்த வெறி தீவிரமாகவே வெளிப்பட்டது.

சாப்பிட்டு முடிந்த பிறகு பாதிரியார் வெள்ளி மெழுகுவத்திப் பீடம் ஒன்றை எடுத்துத்தனது விருந்தாளியிடம் கொடுத்துவிட்டுச் சொன்னார்: ''உங்களுக்கான படுக்கை விரிக்கப்பட்டுள்ள இடத்தைக் காட்டுகிறேன் வாருங்கள்.''

அவன் பாதிரியாரைப் பின்தொடர்ந்தான். அவனுக்காக ஒதுக்கப்பட்டிருந்த படுக்கைக்குச் செல்ல பாதிரியாரின் அறை வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. போகும்போது, பாதிரியாரின் அறையிலிருந்த சுவர் அலமாரியில் சமையற்காரப் பெண்மணி அடுக்கி வைத்திருந்து வெள்ளிப் பாத்திரங்களை ஜீன்வால்ஜின் கவனிக்கவே செய்தான்.

பாதிரியார், விருந்தாளியை அவனது படுக்கைக்கு அழைத்து வந்து, மெழுகுவத்தியை அங்கிருந்த மேஜை மீது வைத்தபடி பேசினார்:

“படுத்துக் கொள்ளுங்கள்! சுககரமான தூக்கம் உங்களை ஆசீர்வதிக்கட்டும். நாளைக்குக் காலையில் நீங்கள் புறப்படுவதற்கு முன் எங்களது பசு, உங்களுக்காக ஒரு டம்ளர் பால் தரும்!”

“மிகவும் நன்றி பாதிரியாரே....மிக்க நன்றி!” தளர்ந்த குரலில் பேசிய ஜீன்வால்ஜினது குரல் சட்டென்று மாறியது. உரத்த குரலில் குரூரமாகப் பேசத் தொடங்கினான்: “நீங்கள் அளவுக்கு அதிகமாகவே என்னை நம்புகிறீர்கள். விரும்பினால் இப்போது நான் உங்களைக் கொலை செய்ய முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமில்லையா?”

அப்போதும் பாதிரியாரின் முகத்தில் எந்தவிதமான உணர்வு மாற்றமும் ஏற்படவில்லை. அவர் அமைதியான குரலிலேயே பேசத் தொடங்கினார்.

“அப்படி நடப்பதாயிருந்தால் அதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டுமென்று கடவுளுக்குத் தெரியும்!” என்றபடி தனது வலது கையை உயர்த்தி அவனை ஆசீர்வதித்தார்.

மிகவும் களைப்பு அடைந்திருந்ததால் படுக்கையில் படுத்த உடனேயே ஜீன்வால்ஜின் ஆழ்ந்த உறக்கத்தில் மயங்கினான். குறட்டையொலி பலமாகக் கேட்கத் தொடங்கியது.

6

விரைவிலேயே அந்த வீடு மொத்தமும் உறக்கத்தில் ஆழ்ந்தது.

ஜீன்வால்ஜினைப் பற்றி நீங்கள் இதுவரையில் எதையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை அல்லவா? அவனது வயது நாற்பத்தொன்பது என்பதும், பத்தொன்பது வருடங்கள் சிறையில் கிடந்து துயருற்றான் என்பதும்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ரையில் நகரிலுள்ள ஏழையான விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் ஜீன்வால்ஜின், கல்வி கற்பதற்கான வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கவில்லை. எழுத்துகளை எழுதவோ, எழுத்துக் கூட்டிப்படிக்கவோகூட அவனுக்குத் தெரியாது. அன்றாடப் பாட்டுக்கே அல்லல்படும் விவசாயிகளும், கூலி வேலைக்காரர்களும் அந்தக் காலத்தில் தங்களது குழந்தைகள் கல்வியறிவு பெற வேண்டும் என்பதைப் பற்றி யோசித்ததில்லை.

இளம்பருவத்தை அடைந்தபோது ஜீன்வால்ஜின் ஒரு விறகு வெட்டியானான். மரம் அறுக்கவும், விறகு பிளக்கவும், வேலி கட்டுவதுமான தொழில்களில் ஈடுபட்டனர். அவனது அம்மாவின் பெயர் ஜீன்மாத்யூ, அப்பாவின் பெயரும் ஜீன்வால்ஜின் என்பதுதான்.

ஜீன்வால்ஜின் இயல்பாகவே சதா யோசனையில் ஈடுபடும் இயல்பு உள்ளவன். அவன் இளைஞனாக வளர்வதற்குள்ளேயே பெற்றோர் இருவரும் இறந்து விட்டனர். அதன் பிறகு அவனுக்கு இருந்த ஒரே உறவு அவனுடைய அக்கா மட்டும்தான். அவள், தனது தம்பியைச் சொந்த மகனைப் போலவே வளர்த்தாள்.

அக்காளின் கணவர் இறந்தபோது ஜீன்வால்ஜினுக்கு ஏறத்தாழ இருபத்தைந்து வயது இருக்கலாம். அதன்பிறகு அக்காளையும் அக்காளின் குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்பை ஜீன்வால்ஜின் ஏற்றுக்கொண்டான். அதற்காக இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத்தான். இருப்பினும் ஏழு குழந்தைகளை வளர்க்க வேண்டியிருந்ததால் சகோதரியும் கடுமையாகவே உழைக்கவே நேர்ந்தது.

இருவரும் எவ்வளவு கடுமையாக உழைத்தும், ஓய்வில்லாமல் வேலை செய்தும் குடும்பத்தில் பசியும், வறுமையும் அகன்றபாடில்லை. 1795-ம் ஆண்டில் வந்த பனிக்காலம் மிகவும் பயங்கரமானதாக இருந்தது.

ஒருநாள் இரவில் அந்த வீட்டில் உள்ளவர்கள் சாப்பிட எதுவுமே இல்லை. குழந்தைகள் பசியால் துடித்தனர்.

இருவரது கையிலும் பணம் என்பது சுத்தமாகவே இல்லை. அவர்களுக்கு உதவவோ, கருணையுடன் ஒரு நேரத்துக்கான ஆகாரம் தரவோ நல்ல மனதுள்ள மனிதர் யாரும் அந்த ஊரில் இல்லை என்பதுதான் உண்மை!

எங்கெல்லாமோ அலைந்து திரிந்தும் எவரிடமெல்லாமோ கை நீட்டிப் பிச்சை கேட்டும் மன்றாடிப் புலம்பியும் எந்தவிதமான பலனும்

ஏற்படவில்லை. வெறுப்பும் வேதனையும் காட்டுத் தீயாகக்கொழுந்துவிட்டு எரியும் மனத்துடன் தான் அன்று வீடு திரும்பினான் ஜீன்வால்ஜின்.

அப்படித் திரும்பிவரும் வழியில்தான் ஒரு ரொட்டிக்கடையில், கண்ணாடி பீரோவுக்குள் ஏராளமான ரொட்டிகள் அடுக்கி வைத்திருப்பதைக் கவனித்தான். அந்தக் காட்சி ஜீன்வால்ஜினை ஒரு முழுப்பைத்தியமாகவே மாற்றிவிட்டது. அறிவும், பொறுமையும் அவனிடமிருந்து ஓடியொளிந்து கொண்டன.

பீரோவின் கண்ணாடியை உடைத்து அதற்குள்ளிருந்து ஒரு ரொட்டியை வெளியே எடுத்தான். எடுத்தவன் சட்டென்று ஓடத் தொடங்கினான். ரொட்டிக் கடைக்காரன் ஒரு கணம் நிதானித்து, நடந்ததை உணர்ந்து அலறியபடியே ஜீன்வால்ஜினைப் பின் தொடர்ந்தான். அலறலைக் கேள்விப்பட்ட பொதுமக்களும் நான்கு திசைகளிலிருந்தும் திரண்டு அவனுக்குப் பின்னால் ஓடினர்.

ஜீன்வால்ஜின் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டான்.

கடுமையான அடி உதைக்கு ஆளானதோடு, போலீஸாரிடமும் ஒப்படைக்கப்பட்டான்.

இந்தத் திருட்டுக் குற்றத்துக்காகத்தான் ஜீன்வால்ஜின் ஐந்து வருடச் சிறைத்தண்டனை அனுபவித்தான்.

அவனது கழுத்தில் வளையத்துடன் கூடிய சங்கிலி பூட்டப்பட்டு டியோன் நகருக்குக் கொண்டு போகப்பட்டான். கைதிகளுக்கு உரிய உடையணிவிக்கப்பட்டு, காலில் சங்கிலியுடன் கூடிய இரும்பு கோளம் இணைக்கப்பட்டு அவன் கப்பல் ஒன்றில் ஏற்றப்பட்டான். அத்துடன் ஜீன்வால்ஜின் என்பவன் இல்லாமலாகிப் போனான். 24601-ம் எண் குற்றவாளி என்ற முறையில்தான் சிறை அவனைப் பதியவைத்துக்கொண்டது. அதன் பிறகு அவனது அக்காளும், அவனது குழந்தைகளுக்கும் என்ன நேர்ந்தது?

யாருக்கு அது தெரியவில்லை. யாரும் அதைப் பற்றி விசாரித்ததாகவும் தெரியவில்லை. பிறருடைய துன்பங்களையும் துயரங்களை அறிந்துகொள்ளவோ, அதற்காக அனுதாபப்படவோ யாருக்கு விருப்பம் இருக்கும்?

சிறையிடப்பட்ட பிறகு நான்கு வருடங்கள் வண்டியில் பூட்டப்பட்ட காளைமாடு மாதிரி சிறையில் அயராமல் வேலை செய்தான். மிகவும் மோசமான அடிமையை விடவும் மிகக் கடுமையானதாகவும், துயரகரமாகவும் இருந்தது. அங்கு அவனது வாழ்க்கை.

மனிதத் தன்மையற்ற நடவடிக்கைகளும், கருணையே சிறிதுமற்ற தண்டனை முறைகளும், மிருகங்களால் கூடத் தாங்கிக்கொள்ள முடியாத உணவு மற்றும் படுக்கை வசதிகளும்தான் அக்காலத்தில் சிறையில் கைதிகளுக்குக் கிடைத்து வந்தன.

சிறைக் கைதியும் ஒரு மனிதன்தான் என்கிற சிந்தனையே அதிகாரப் பதவியில் இருப்பவர்களுக்குப் புரிபடவில்லை.

நான்காவது வருடக் கடைசியில் சிறையிலிருந்து தப்பித்துச் செல்ல ஜீன்வால்ஜினுக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. கப்பலில் வேலை செய்து கொண்டிருக்கும் மற்றும் சில கைதி நண்பர்களின் உதவியுடன் அவன் தப்பித்து விட்டான்.

இரண்டு நாள்கள் சுதந்திரமான மனிதனாக அலைந்து திரிந்தான். அதற்குள் சிறைக் காவலர்கள் அவனைக் கண்டு பிடித்து மீண்டும் சிறையில் அடைத்தனர்.

ஜீன்வால்ஜினின் ‘தப்பித்தல்’ முயற்சிக்காக அவன் மேலும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டான். முதல் இரண்டு நாள்கள் அவர்கள் அவனுக்கு உணவு எதுவும் தராமல் இருட்டு அறையில் பட்டினி போட்டனர். அதன்பின் சிறையிலிருந்து தப்பிக்க முயன்ற குற்றத்துக்காக மூன்றாண்டுக் காலக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

அந்தத் தண்டனையும் மௌனமாக ஏற்றுக் கொள்வதைத் தவிர அவனுக்கு வேறு வழியிருக்க்வில்லை.

பல்லைக் கடித்தபடி சிறையின் அன்றாட வாழ்க்கையைத் தொடர வேண்டியிருந்தது. ஆனால், ஒவ்வொரு விநாடியிலும் அந்தச் சிறையிலிருந்து தப்பிக்க வேண்டும் என்கிற வெறிமட்டுமே அவனை, உயிருடன் இருக்க அனுமதித்தது. அப்படியொரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து ஜீன்வால்ஜின் நாள்களைக் கடத்தினான்.

சந்தர்ப்பம் வாய்த்தபோது மீண்டும் ஒரு தடவை தப்பிக்க முயன்றான். ஆனால், அதற்கும் அதிர்ஷ்டம் கைகொடுக்கவில்லை. இம்முறையும்

உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு கைகால்களில் சங்கிலியால் பிணைக்கப்பட்டான்.

இம்முறை சற்றும் கருணையின்றி நீண்டகாலத் தண்டனைக்கு ஆளாக்கப்பட்டான். கடைசியில் வேறு வழியேதும் இல்லாததால் தண்டனைக்காலம் முடிவடையும் வரையில் சிறையிலேயே இருந்து 1815-ம் வருடம் அக்டோபர் மாதம் விடுதலையானான்.

இப்படியாக ஒரேயொரு ரொட்டியைத் திருடியதற்காக ஒரேயடியாகப் பத்தொன்பது வருடங்கள் அவன் சிறைத் தண்டனை அனுபவிக்க நேர்ந்தது!

அப்பாவியாகவும் ஒரு கோழையாகவும்தான் அவன் சிறைக்குள் நுழைந்தான். ஆனால், சிறையிலிருந்து வெளிவரும் போது கொடூரமானவனாகவும், தைரியசாலியாகவும், பயமற்ற சாகச வீரனாகவும் மாறிவிட்டிருந்தான். இந்த உலகம் அவனை ஏமாற்றி வஞ்சித்ததையும், அதன் துரோகத்தையும் அவனால் மறக்க முடியவில்லை. அவன் ஒட்டுமொத்தமாக மனிதர்களின் மீது வெறுப்பும் கோபமும் கொண்டவனாக் மாறிவிட்டிருந்தான்.

தான் ஒரு ரொட்டியைத் திருடியது தவறுதான் என்பது அவனுக்கும் தெரிந்தே இருந்தது. ஆனால், அதைக் கூட அவன் செய்ய நேர்ந்தது பசியால் வாடும் சிறு குழந்தைகளுக்காகத்தான். யோசித்துப் பார்த்தால், இந்த அளவுக்கு மிருகத்தனமாகத் தண்டிக்குமளவுக்கு அது, அவ்வளவு பெரிய குற்றமா என்ன?

ஜீன்வால்ஜினின் மனசாட்சி அதை நியாயம் என்று ஒருபோதும் ஒப்புக் கொள்ளவில்லை. விநாடிக்கு விநாடி அவனுள் இந்த மனித சமூகத்தின் மீதுள்ள ஒட்டுமொத்தக் கோபமும் வைராக்கியமும் வளர்ந்துகொண்டே வந்தன.

சிறை வாழ்க்கையின்போது அவனால் ஒரு நல்ல விஷயத்தைக் கற்றுக் கொள்ள முடிந்தது. கைதியாகக் கப்பலில் பணிபுரிந்தபோது கல்வியறிவில்லாத குற்றவாளிகளுக்குப் பாடம் சொல்லித்தரவும், அவர்களுக்கு வேதபாடத்தை உபதேசிக்கவும் பாதிரியார்கள் சிலர் வருவது வழக்கம். கல்வி கற்பதில் தீராத ஆர்வம் கொண்டிருந்ததால் ஜீன்வால்ஜின் அவர்களது உபதேசங்களைக் கவனமுடன் கேட்டான். அவர்கள் சொன்னபடியே நடந்துகொண்டான். அதன் விளைவாக, அவன்

சிறையிலிருந்து விடுதலையாகும்போது எழுதவும் படிக்கவும் நன்றாகக் கற்றுக் கொண்டிருந்தான்.

ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்வது நல்லது. ஜீன்வால்ஜின் இயல்பாகவே தைரியம் நிறைந்தவன். சிறையின் இரக்கமற்ற கடின உழைப்பு அவனைப் பன்மடங்கு வலுவுள்ளதாகவும், ஆரோக்கியவானாகவும் மாற்றியிருந்தது. சிறையிலிருந்த மற்ற எந்தக் குற்றவாளியை விடவும் அவனே மிகவும் தைரியசாலியாக இருந்தான். உண்மையில் நான்கு மனிதர்களின் பலம் அவனிடம் சேர்ந்திருந்தது.

எப்படிப்பட்ட வேலையையும் செய்வான். மிகவும் கனமுள்ள பொருள்களைச் சுமப்பான். நாள் தவறாமல் உடற்பயிற்சி செய்து தன் உடல் பலத்தை அதிகப்படுத்தியிருந்தான். இந்த உடல் வலுவும், மனிதர்களிடமான அவனது கோபமும் உண்மையிலேயே அவனை மிகவும ஆபத்தானவனாவே மாற்றிவிட்டிருந்தன.

அவனுடைய மஞ்சள் நிற பாஸ் போர்ட்டில் குறிப்பிட்டிருந்ததைப் பொய்யென்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாதுதான். உண்மையிலேயே அவன் பயப்பட வேண்டிய ஒரு மனிதன்தான்!

7

அருமையான ஒரு நீண்டஉறக்கத்துக்குப் பிறகு ஜீன்வால்ஜின் சட்டென்று திடுக்கிட்டு விழித்தான்.

அப்போது மாதா கோயிலிருந்து இரண்டு முறை மணியடித்தது.

உண்மையைச் சொன்னால், இதமாக மெத்தென்றிருந்த படுக்கைதான் அவனை ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுப்பியது. ஏறத்தாழ இருபது வருடங்களாக கருங்கல் பரப்பிலும், கரடுமுரடான மரப்பலகைகளின் மீதும் படுத்து உறங்கியே பழக்கப்பட்ட அவனால், பஞ்சு நிறைந்த மெத்தையில் அதிக நேரம் படுத்திருக்க முடியவில்லை. சாதாரணமாகவே மிகக் குறைந்த நேரமே உறங்கும் அவனுக்கு, அந்த நான்கு மணி நேர உறக்கமே அளவுக்கு அதிகமானதாக இருந்தது.

திரும்பியும் புரண்டும் எவ்வளவோ முயன்றும் அவனால் திரும்பவும் உறங்க முடியவில்லை. விழித்துக் கிடந்த ஜீன்வால்ஜினின் மனத்தில்

என்னென்னவோ சிந்தனைகள் உதித்து எழுந்தன. இதயத்துக்கு ஆறுதலளித்த சிந்தனைகள். அதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு மறுபடி உறங்க அவன் மனம் விரும்பினாலும், அதற்கு உடல் இடம் கொடுக்கவில்லை.

பாதிரியாரின் அறையில் கட்டிலுக்குப் பின்புறம் சுவர் அலமாரியில் வைத்துள்ள வெள்ளித்தட்டுகளும், வெள்ளிக் கரண்டிகள் மற்றும் ஸ்பூன்களும்தான் அவனது நிம்மதியைக் குலைத்தன. எல்லாமே சுத்தமான வெள்ளியாலானவை. அவற்றை எடுத்துக் கொண்டுபோய் விற்றால் எப்படிப் பார்த்தாலும் குறைந்த பட்சம் இருநூறு ஃபிராங்குகளாவது கிடைக்கும். பத்தொன்பது வருட காலமாக சிறையில் கடினமாக உழைத்துக் கிடைத்ததை விடப் பெரிய தொகை!

இந்தச் சிந்தனை நேரம் செல்லச் செல்ல அவனுள் வலுவடைந்து கொண்டே வந்தது.

மாதா கோயிலின் மணி மூன்று முறை அடித்தவுடன் அவன் கண்களைத் திறந்து எழுந்தான். உட்கார்ந்த நிலையிலேயே சற்று நேரம் காதைக் கூர்மையாக்கிக் கவனித்தான். எங்கும் கனமான அமைதிதான் தட்டுப்பட்டது. தன்னுடைய காலணிகளை அவிழ்த்து வைத்துவிட்டு எழுந்து ஜன்னலருகே போனான். எங்கும் காரிருள். நிசப்தமான இரவு.

பாதிரியார் படுத்திருக்கும் அறையும், அதன் உள்ளே உள்ள சுவர் அலமாரியும் அவனுக்குத் தெளிவாக ஞாபகமிருந்தது. ஓர் அகலமான பிரம்புக் கூடையில் வெள்ளிப்பாத்திரங்களை வைத்துச் சமையற்காரப் பெண்மணி அங்கே பத்திரப்படுத்துவதையும் அவன் கவனிக்கவே செய்தான். அது மட்டும்தான் அவனது கண்களுக்கு முன் தெளிவாகத்தெரிந்து கொண்டிருந்தது.

தான் படுத்திருந்த கட்டிலுக்குத் திரும்பி வந்தவன், தன்னுடைய சாக்கு மூட்டையையும் கைத்தடியையும் எடுத்துக் கொண்டான். ஒரு பூனையைப் போல் அடிமேல் அடி வைத்து ஜீன்வால்ஜின், பாதிரியாரின் அறையை நோக்கி நடந்தான்.

பக்கத்து அறைதான் அது. அந்த அறையின் கதவு பாதி திறந்தேதான் கிடந்தது. ஒரு கணம் தயங்கி நின்றவன், மெதுவாகக் கதவைக் கையால் தள்ளினான்.

‘கிர்…கிர்….கிர்…’ கதவு பயங்கரச் சத்தத்துடன் பின்புறமாக நகர்ந்தது.

அவன் ஒரு விநாடி திகைத்தான். அவனது உடல் மொத்தமும் நடுங்கியது. கண்களில் இருட்டு நுழைவது போல் தோன்றியது. காதைக் கூர்மையாக்கிக் கவனித்தான்.

ஆனால், எதுவும் நடக்கவில்லை!

அதற்குள் ஜீன்வால்ஜினின் மனம் ஓராயிரம் விஷயங்களைப் பற்றி யோசித்தது. கதவு அலறும் சத்தத்தைக் கேட்டு அந்த வீட்டிலுள்ள பெண்கள் விழித்துக் கொள்வார்கள். அவர்களது கூக்குரலைக் கேட்டுப் பாதிரியாரும் எழுந்து கொள்வார். உடனே போலீஸாரை வரவழைத்துத் தன்னை அவர்களிடம் ஒப்படைப்பார்கள்.

தான் மீண்டும் சிறையில் அடைக்கப்படுவோம். மீதமுள்ள வாழ்க்கை முழுவதையும் சிறையிலேயே கழிக்க நேரும். அதன் பிறகு ஒரு போதும் சுதந்திரமானவனாகச் சூரிய வெளிச்சத்தைக் காண முடியாமற் போகலாம்…

நிமிடங்கள் பல கடந்தும் தான் நினைத்தது போல் எதுவும் நடக்காமல் போனதால், அவனுள் இருந்த பிசாசு மறுபடி வேலை செய்யத் தொடங்கியது. அங்கிருந்த வெள்ளிப் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு முடிந்த வரையில் அங்கிருந்து அகன்றுவிட வேண்டும் என்கிற வேட்கை அவனுள் அதிவேகமாக உயரத் தொடங்கியது.

உட்புறம் கட்டிலில் படுத்திருக்கும் பாதிரியாரின் குறட்டைச் சத்தம் தெளிவாகக் கேட்டது.

மேலும் ஒரு கணம் தயங்கி நின்றவன் ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாகக் கதவை மேலும் சற்றுத் தள்ளினான். இம்முறை கதவு, எந்தவிதச் சத்தமும் எழுப்பாமல் விரியத் திறந்து கொண்டது. ஒரு தடவை எச்சரிக்கையுடன் சுற்றுமுற்றும் பார்த்தவன் அறைக்குள் நுழைந்தான்.

பாதிரியார் படுத்திருந்த கட்டிலைத் தாண்டி முன்னேறினான். ஆனால், அவரது கட்டில் பக்கமாக அவன் திரும்பிப் பார்க்கவே இல்லை.

சட்டென்று அறைக்குள் வெளிச்சம் பாய்ந்தது. ஜீன்வால்ஜின் திடுக்கிட்டான். அதுவரை மேகத்தில் மறைந்திருந்த சந்திரன் திடுமென்று வெளிப்பட்டதால் வந்த வெளிச்சம்தான் அது என்று தெரிந்ததும், நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

அந்தத் தெளிவான நிலவொளியில் பாதிரியாரின் முகத்தை அவனால் பார்க்காதிருக்க முடியவில்லை. அமைதி நிறைந்த முகத்துடன், சந்தேகத்தின் இழைகள் எதுவுமற்றுச் சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பாதிரியாரின் முகத்தில் ஒருவிதமான தெய்வீக ஒளியும், மேன்மைக் களையும் சுடர்விடுவது தெரியவே செய்தது.

ஒரு கல்தூண் மாதிரி அவன் அங்கேயே சமைந்து போனான். பாதிரியாரின் முகத்தில் தெரிந்த ஒளி அவனை அசைவற்று நிற்கச் செய்தது. என்ன செய்யலாம் என்று தெரியாமல் ஒரு கணம் தவித்தான். நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான கடுமையான போராட்டம் ஒன்று அப்போது அந்த மனிதனின் இதயத்தில் நடந்து கொண்டிருந்தது. கடவுளா, பிசாசா எதைத் தேர்ந்தெடுப்பது என்று தெரியாமல் குழம்பித் தவித்தான் அவன்.

விரைவிலேயே அதிலிருந்து மீண்டு உறுதியான ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாக, சுவர் அலமாரியை நோக்கி முன்னேறினான். வெள்ளிப்பாத்திரங்கள் உள்ள பிரம்புக்கூடை கண்ணுக்குத் தெளிவாகத் தெரிந்தது. பாய்ந்து அந்தக் கூடையை எடுத்தான். அதனால் எழுந்து ‘கலகல’ சத்தத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் அதைத் தனது சாக்குப்பைக்குள் போட்டுக்கொண்டு அறையிலிருந்து வெளியே வந்தான்.

தோட்டத்தின் பக்கமாக வந்தவன் சாக்கு மூட்டைக்குள் இருந்த பிரம்புக் கூடையை எடுத்து, செடிகளுக்கு மத்தியில் வீசி எறிந்தான். வெள்ளிப் பாத்திரங்கள் சாக்குப் பைக்குள் கலகலவென ஒலியெழுப்பின.

அதன்பின் சற்றும் தாமதிக்காமல் வெளிப்புற மதிலைக் கடந்து இருளுக்குள் ஓடி மறைந்தான்.

8

மறுநாள் விடியற்காலை வேளையில் பாதிரியார் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தார். மேடம் மக்லோர் அவசர அவசரமாக அவரை நெருங்கி வந்து மூச்சிரைத்தபடி பேசினாள்: “ஃபாதர், நாம் வெள்ளிப் பாத்திரங்களைப் பத்திரப்படுத்தி வைக்கும் இடத்தில் அந்தப் பிரம்புக் கூடையையே காணோம்!”

“உண்மையாகவா? நன்றாகத் தேடிப் பாரம்மா... அதோ கிடக்கிறதே அந்தக் கூடைதானா?” சற்றுத்தொலைவில், செடிகளுக்கு மத்தியில் கிடந்த

பொருளைச் சுட்டிக் காட்டியபடி அவர் கேட்டார்.

“ஆமாம் இதே கூடைதான்! ஆனால், இதற்குள் இருந்த வெள்ளிப் பாத்திரங்களைக் காணவில்லையே. ஒரு பொருள் மீதமில்லாமல் எல்லாவற்றையும் திருடிக் கொண்டு போயிருக்கிறார்கள்! நேற்று இரவு நம் வீட்டுக்கு விருந்து வந்த மனிதன் தான் அவற்றை எடுத்துச் சென்றிருக்கவேண்டும். அதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.” சமையற்காரப் பெண்மணி உணர்ச்சிவசப்பட்டவளாகப் பதற்றத்துடன் பேசினாள்.

பாதிரியார் ஒரு நிமிடம் அவளையே மௌனமாக உற்றுப் பார்த்தார். பிறகு எந்த விதமான உணர்வையும் வெளிப்படுத்தாமல் மௌனமாகவே பேசத் தொடங்கினார்:

“நாம் நீண்ட நாள்களாக அந்த வெள்ளிப் பத்திரங்களைக் காப்பாற்றி வந்திருக்கிறோம். இப்போது அது ஓர் ஏழைக்கு உபகாரமாரி இருக்கிறது. அந்த மனிதன் துயரம் நிறைந்தவனும், ஏமாற்றங்களை அனுபவித்தவனும், வறுமையில் வாடுபவனுமான ஓர் ஆத்மா இல்லையா?”

மேற்கொண்டு எதுவும் பேசாமல் அந்த வேலைக்காரப் பெண்மணி வீட்டுக்குள் திரும்பினாள். பாதிரியார், யோசனையிலாழ்ந்தபடியே மீண்டும் தோட்டத்தில் உலாவத் தொடங்கினார்.

காலைக் கடன்களை முடித்துக்கொண்டு அந்த வீட்டில் இருந்தவர்கள் சிற்றுண்டி அருந்துவதற்காக அமர்ந்தபோது யாரோ வாசல் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

“உள்ளே வாருங்கள்!” பாதிரியார் அப்போதும் வெள்ளை உள்ளத்துடன் வரவேற்றார்.

கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தவர்கள், முற்றிலும் எதிர்பாராதவர்களாக இருந்தனர். மூன்று போலீஸ்காரர்கள், ஒரு மனிதனின் கழுத்துப் பகுதி கோட்டைப் பிடித்து இழுத்து வந்திருந்தனர். அவனது தோளில் சாக்கு மூட்டை ஒன்றும் மறுகையில் கைத்தடி ஒன்றும் இருந்தது.

அந்த மனிதன் ஜீன்வால்ஜினேதான்!

போலீஸ்காரர்களில் ஒருவர்; பாதிரியாரை நோக்கி வணங்கியபடி பேசினார்: ஃபாதர் வணக்கம் “நாங்கள் வந்திருப்பது...”

அவர் மேற்கொண்டு பேச்சைத் தொடர்வதற்குள் பாதிரியார் எழுந்து ஜீன்வால்ஜினை நெருங்கினார். அப்போதும் அவர் முகத்தில் அமைதியும் நிதானமும் தென்படவே செய்தன.

தனது பேச்சிலும் இயல்பிலும் எந்தவிதமான மாறுபாட்டையும் காண்பிக்காமல் நெருங்கிய நண்பரிடம் பேசுவது போல் பேசத் தொடங்கினார்:

“ஆகா! நீங்கள் திரும்பவும் வந்துவிட்டீர்களா? மிகவும் மகிழ்ச்சி. நான் உங்களிடம் கொடுத்த இரண்டு மெழுகுவத்திப் பீடங்களை எடுத்துக் கொள்ளவில்லையே! ஒருவேளை அவற்றை நீங்கள் மறந்து போயிருக்கலாம் என்று தோன்றுகிறது”

ஜீன்வால்ஜின் அடைந்த வியப்புக்கும், திகைப்புக்கும் எல்லையே இல்லாதிருந்தது. அவன் பாதிரியாரின் முகத்தை ஏறிட்டபோது, அவனது இதயத்துள் நிகழ்ந்த போராட்டம் அவனது முகத்தில் தெளிவாகவே தட்டுப்பட்டது.

“ஐயா, நாங்கள் இந்த மனிதனைப் பார்த்தபோது, எங்களைப் பார்த்து ஓடத் தொடங்கினான். பிடித்து நிறுத்திச் சோதித்தபோது இவனது சாக்குப்பைக்குள் வெள்ளிப் பாத்திரங்கள் இருக்கின்றன. எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டதால் விசாரிப்பதற்காக உங்களிடம் அழைத்து வந்திருக்கிறோம்!”– போலீஸ் அதிகாரி சொன்னார்.

“இந்த வெள்ளிப் பாத்திரங்களையெல்லாம் நான்தான் உங்களுக்குக் கொடுத்தேன் என்பதை நீங்கள் இவர்களிடம் சொல்லவில்லையா? அதைச் சொல்லியிருந்தால் இவர்களது சந்தேகத்தைப் போக்கியிருக்காலாமே? வீணாக உங்களை இங்கு அழைத்து வந்து விசாரிக்க முற்பட மாட்டார்கள். சே… என்ன தவறு செய்து விட்டீர்கள்?”– பாதிரியார் சட்டென்று கூறினார்.

போலீஸ் அதிகாரியோ, ஜீன்வால்ஜினோ எதுவும் பேச முடியவில்லை.

“அப்படியானால், நாங்கள் இந்த மனிதனை வெறுமனே விட்டுவிடலாம் இல்லையா?” – போலீஸ் அதிகாரியான இன்ஸ்பெக்டர் கேட்டார்.

“கண்டிப்பாக!”– பாதிரியார் தயக்கமின்றிக் கூறினார்.

ஜீன்வால்ஜின் குன்றிப் போனான்.

“உண்மையாகவா சொல்கிறீர்கள்! நான் விடுதலை அடைந்து விட்டேனா. நான் போகலாம் என்றா சொல்கிறீர்கள்?” தன்னையும் மீறி அவனது

உதடுகளிலிருந்து வார்த்தைகள் தெறித்து விழுந்தன.

“ஆமாம்….நீ போகலாம்!”– இன்ஸ்பெக்டர் மிடுக்குடன் பதிலளித்தார்.

“அருமை நண்பரே. நீங்கள் இந்த முறையாவது மறக்காமல் இந்த மெழுகுவத்திப் பீடங்களை எடுத்துச் செல்லுங்கள்!” பாதிரியாரின் அன்பு நிறைந்த வார்த்தைகள் தெளிவாக வந்து விழுந்தன.

பிரார்த்தனை மேடையிலிருந்து மெழுகுவத்திப் பீடங்களை எடுத்த பாதிரியார், அதை ஜீன்வால்ஜிடம் ஒப்படைத்தார். அதைப் பெற்றுக் கொள்ளும்போது ஜீன்வால்ஜினின் உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்த உணர்ச்சி ஏற்பட்டது. அவனது கண்களில் நீர் நிறைந்த உதடுகள் நடுங்கின.

“இப்போது நீங்கள் மனஅமைதியுடனேயே போகலாம். மறுமுறை இங்கு நீங்கள் வர நேர்ந்தால் தோட்ட வழியாக வர வேண்டியதில்லை. உங்களுக்காக இந்தக் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும்!”

பாதிரியாரின் குரலில் அன்பும் பெருந்தன்மையும் நிறைந்திருந்தன. போலீஸ்காரர்களிடமும் சென்று வருமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

உணர்வுகளின் அதீதமான தாக்குதல்களால் மயக்கத்தில் ஆழ்ந்தவனைப் போல் காணப்பட்டான் ஜீன்வால்ஜின்.

போலீஸ்காரர்கள் அங்கிருந்து போன பிறகு ஜீன்வால்ஜினை நெருங்கிய பாதிரியார், மெதுவான குரலில் மிகவும் உறுதியாகப் பேசத் தொடங்கினார்:

“ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மேற்கொண்டு யோக்கியமான ஒரு மனிதனாக வாழ்வதற்காக மட்டுமே இந்த வெள்ளிளைப் பயன்படுத்தப் போவதாக என்னிடம் சத்தியம் செய்திருக்கிறீர்கள். அதை மட்டும் மறந்து விடாதீர்கள். நல்லவனாக வாழ்வதற்காக மட்டுமே இதைப் பயன்படுத்த வேண்டும்!”

ஜீன்வால்ஜின் ஒரு கணம் அதிர்ந்தே போனான். அப்படியொரு சத்தியம் செய்ததாக அவனுக்கு ஞாபகமே இல்லை. பாதிரியார் தொடர்ந்து பேசத் தொடங்கினார்:

“ஜீன்வால்ஜின்… என்னுடைய அருமையான சகோதரனே, இனிமேல் நீங்கள் ஒருபோதும் தீமையின் அடிமையல்ல. அதற்குப் பதில் உண்மையின் ஊழியனாக மாறியிருக்கிறீர்கள்.. நான் உங்களுடைய ஆத்மாவையே மீட்டு

எடுத்து மறுபடி உங்களிடம் வழங்கியிருக்கிறேன். சாத்தானின் கையிலிருந்து அதைப் பிடுங்கி, தெய்வத்தின் கையில் ஒப்படைத்திருக்கிறேன்.''

9

ஜீன்வால்ஜின் அதிகம் தாமதிக்காமல் விரைவிலேயே அந்த ஊரிலிருந்து புறப்பட்டான்.

பகல் நேரம் முழுவதும் அவன் லட்சியமில்லாதவனைப் போல் அலைந்து திரிந்தான். அன்று முழுவதும் அவன் எதையும் சாப்பிடவில்லையானாலும் அவனுக்குப் பசியெடுக்கவில்லை!

அன்றுவரை ஏற்படாத மனநிறைவுடனும் தெளிந்த மனத்துடனும் இருந்தான். ஒரு மாதிரியான இன்ப உணர்வில் அவனது இதயம் வெடித்துவிடுமோ என்றுகூட தோன்றியது.

சூரியன் மறையும் வேளையில் ஆள் நடமாட்டமற்ற ஓர் இடத்தில், முட்புதர்கள் நிறைந்த பகுதியில் களைத்துப் போய் அமர்ந்தான். முன்புறத்தில் வரிசை வரிசையாகப் படர்ந்து பரவிக் கிடந்த மலைமுகடுகளைத் தவிர வேறு எதுவும் அவனது கண்களுக்குத் தட்டுபடவில்லை. மேற்கொண்டு என்ன செய்து என்பதே புரியாமல் பல்வேறு சிந்தனைகளில் ஆழ்ந்து நிம்மதியற்றுத் தவித்துக் கொண்டிருந்தபோது சற்றுத் தொலைவில் யாரோ பலமாக வாய்விட்டுச் சிரிக்கும் சத்தம் கேட்டது.

அவன் தலையைத் திருப்பிச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

திடுமென்று ஒரு சிறுவன் அவனுக்கு முன்னால் வெளிப்பட்டான். அவன் விசித்திரமான முறையில் உடையணிந்திருந்தான். அவன் தோளில் குரங்கு ஒன்றும் இருந்தது. அவனுக்குப் பன்னிரண்டு வயதிருக்கலாம்.

பலவித வேடங்கள் புனைந்து வளர்ப்பு மிருகங்களைப் பயன்படுத்திக் வேடிக்கை விளையாட்டுகள் மற்றும் வித்தைகள் காட்டி உயிர் பிழைக்கும் சிறுவர்களில் அவனும் ஒருவன். பாட்டுப்பாடி, சிரித்துத் துள்ளிக் குதித்து விளையாடுவதற்கு நடுவே தனது கையிலிருந்த நாணயங்களையும் தூக்கிப் போட்டு அம்மானை ஆடவும் செய்தான்.

அப்படிப் போட்டு விளையாடிய நாணயங்களில் ஒன்று ஜீன்வால்ஜினின் காலடியில் வந்து விழுந்தது. உடனே ஜீன்வால்ஜின் ஷு அணிந்த தனது ஒரு காலை அந்த நாணயத்தின் மீது வைத்து மறைத்தான்.

ஐம்பது ஸு மதிப்புள்ள நாணயம் அது. நாணயம் உருண்டு சென்றதை அந்தச் சிறுவன் கவனித்திருந்தான். எனவே சிறுவன் ஜீன்வால்ஜினை நெருங்கிக் கேட்டான்:

“சார், என்னுடைய நாணயம்!”

“உன்பேர் என்ன?”– ஜீன்வால்ஜின் எதிர்க்கேள்வி கேட்டான்.

“கீர்வாஸ்!”

“அப்படியா, முதலில் நீ இங்கிருந்து போ!” –ஜீன்வால்ஜின் கோபத்துடன் சிறுவன் மீது எரிந்து விழுந்தான்.

“சார் என்னுடைய நாணயத்தைக் கொடுங்கள்!”– கேட்டவாறே சிறுவன் அழத்தொடங்கினான். அவனது கோட்டைப் பிடித்து இழுத்தும், நாணயத்தின் மீதுள்ள ஷுவைப் பிடித்து நகர்த்தவும் பெரும் பாடுபட்டான் சிறுவன். அத்துடன் அவனது அழுகையின் சத்தமும் அதிகரித்தது.

“யார் நீ?”– அதிசயமான ஏதோ ஒரு பொருளைப் பார்ப்பது மாதிரி, அந்தச் சிறுவனை வெறித்தபடிஈ தூக்கத்திலிருப்பவன் போலக் கேட்டான்.

“என் பெயர் கீர்வாஸ். சார் முதலில் நீங்கள் உங்கள் காலை அகற்றுங்கள். அதன் கீழே உள்ள என்னுடைய காசை எடுத்துக்கொள்கிறேன்” சிறுவனது குரல் கெஞ்சலாக இருந்தது.

ஜீன்வால்ஜின் எழுந்து நின்றான். அப்போதும் அந்த நாணயம் அவனது ஷுவின் அடியில்தான் இருந்தது. அந்தச் சிறுவனைக் கடுமையாக முறைத்தவாறு அலறினான்: “சீ....போடா முதலில் இங்கிருந்து! இல்லாவிட்டால் நீ வீணாக அடிவாங்கிச் சாவாய்!ம்... போ...”

மிரண்டு போன சிறுவன் பயத்துடன் ஜீன்வால்ஜினின் முகத்தைப் பார்த்தான். ரத்ததாகம் கொண்ட ஏதோ ஒரு மிருகத்தை – பயமேற்படுத்தும் ராட்சத வடிவத்தைப் பார்ப்பது போல் இருந்தது சிறுவனது பார்வை.

மறுவிநாடி முன்பைவிட உரத்த குரலில் அழுதபடி மிக விரைவாக அங்கிருந்து ஓடினான், அந்தச் சிறுவன். திரும்பிப் பார்க்க வேண்டும்

என்றுகூட அவன் நினைக்கவில்லையென்று தோன்றியது. அந்தச் சிறுவன் கண்களிலிருந்து மறைந்த பிறகும் கூட, அவனது கெஞ்சலும் அழுகையும் வெகு நேரம் வரையில் ஜீன்வால்ஜினின் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தது.

சூரியன் மறைந்து எங்கும் இருள் பரவியது. அன்று பகல் முழுவதும் அவன் எதையும் சாப்பிடவில்லை. இரவு நேரத்தில் ஜீன்வால்ஜினின் உடம்பு அனலாகக் கொதிப்பது போல் தோன்றியது. இதயத்தின் வெப்பம், உடம்பைவிடப் பன்மடங்கு அதிகரித்திருப்பது போல் தெரிந்தது. சிறுவன் பயந்து ஓடியபோது ஜீன்வால்ஜின் எப்படி நின்றிருந்தானோ, அதே நிலையில்தான் இன்னும் நின்று கொண்டிருந்தான்.

இரவின் குளிர்காற்று வலுவாக வீசியபோது ஜீன்வால்ஜினின் உடம்பு குளிரால் விறைப்பு அடைந்தது. தொப்பியைத் தாழ்த்தி விட்டு, கோட்டின் கை மற்றும் நெஞ்சுப் பகுதிகளைச் சரி செய்தான். அதன் பிறகு காலை விலக்கியபோது ஷூவின் அடியில் அந்த நாணயம் பளபளப்பதை அவன் கவனித்தான்.

“சே… என்ன இது!” – அவன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். குனிந்து அந்த நாணயத்தைக் கையில் எடுத்துக் கொண்டான். பின்னர் அந்த நாணயத்தின் உரிமையாளனான சிறுவனைத் தேடுவதுபோல் சுற்றுமுற்றும் பார்த்தான்.

“கீர்வாஸ்… தம்பி…கீர்வாஸ்!” ஜீன்வால்ஜின் உரத்த குரலில் அழைத்தான்.

அந்த அழைப்புக்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை.

சிறுவன் கீர்வாஸ் ஓடிய திசையிலேயே அவனும் ஓடினான். கீர்வாஸின் பெயரை உரத்த குரலில் உச்சரித்தபடியே! அவனது வாயிலிருந்து வார்த்தை எதுவும் வராதவரை ஓடிக்கொண்டே இருந்தான்.

கடைசிவரை சிறுவன் தட்டுப்படவோ, ஜீன்வால்ஜினுக்குப் பதில் குரல் கொடுக்கவோ இல்லை.

தேடிச் சென்ற ஜீன்வால்ஜின் ஒரு கட்டத்தில் களைத்துக் கீழே விழுந்தான். அப்போதுகூட அவனது உதடுகள் கீர்வாஸின் பெயரை ஒலியில்லாமல் வெறும் உச்சரிப்புடன் ஒலித்துக் கொண்டேயிருந்தது. அவனது கண்களிலிருந்து நீர் இடைவிடாமல் வடிந்துகொண்டே இருந்தது.

கடந்த இருபது வருடங்களில் அவன் அழுவது அதுதான் முதல் தடவை.

“கடவுளே… என்னைப் போன்ற துரதிருஷ்டசாலி வேறு யார் இருக்கிறார்கள்?” – வாய்விட்டு அழுது அரற்றியபடியே அவன் கதறினான்.

தனக்குத்தானே அழுது புலம்பி, சபித்து, நொந்து கொண்டிருக்கும்போது அவனது மனத்துள் ஏதோ ஒரு புதிய வெளிச்சம் விநாடிக்கு விநாடி வலுப்பெற்று வந்தது.

தன்னுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் முழுவதும் தொடர் படம்போல் அவனது கண்களுக்கு முன்பாக விரிந்தது. முதல் திருட்டும், அதைத் தொடர்ந்து தான அனுபவித்த சிறைத்தண்டனையும், அதன் விளைவாகத் தனது இதயம் கல்லாக இறுகிப் போனதும், கொடூரமான சித்ரவதைகளை அனுபவித்து ஒருவழியாக நெடுங்காலத்துக்குப் பிறகு விடுதலையானதும்…. அடைக்கலம் தந்த பாதிரியாரின் வீட்டிலேயே திரும்பவும் திருட நேர்ந்ததும், அந்தத் திருட்டிலிருந்து பாதிரியார் தன்னை போலீஸாரிடமிருந்து காப்பாற்றியதும்… ஒவ்வொன்றாக அவனது மனத்தில் மோதி எதிரொலிக்கவே செய்தன.

இதோ….இப்போதுகூட தெரிந்தோ தெரியாமலோ அந்தச் சிறு குழந்தையிடமிருந்து ஒரு நாணயம்… அதை மனமார வேண்டுமென்றே அந்தக் குழந்தையிடமிருந்து தான் திருடவில்லையா என்ன?

எல்லாம் தெளிவாகத் தெரிந்தது. ஜீன்வால்ஜினின் அறிவும், மனமும், இதயமும் இருளிலிருந்து ஒட்டுமொத்தமாக விலகி… அதற்குள் ஒளி பொருந்திய ஒரு பகுதியை அடைந்துவிட்டிருந்தன.

எவ்வளவு நேரம் அவன் அழுதவாறு அப்படியே கிடந்தான்? பிறகு அவன் என்ன செய்தான்?

யாருக்கும் அவை எதுவும் தெரியவில்லை.

ஆனால், நள்ளிரவு மூன்று மணி தாண்டிய பிறகு திக்னே நகருக்குத் திரும்பி வந்த வண்டிக்காரர் ஒருவர், பாதிரியாரின் வீட்டுவாசலில் முழந்தாளிட்டு, கூப்பிய கைகளுடன் ஜீன்வால்ஜின் பிரார்த்தனை செய்ததைப் பார்த்ததாகச் சொன்னார். அந்தச் செய்தியும் விரைவிலேயே ஊர் முழுவதும் பரவியது.

10

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரீஸ் 1817-ம் ஆண்டிலேயே மிகவும் அழகானதாக இருந்தது. மாற்றங்கள் பல நிகழ்ந்தபோதிலும் முற்றிலும் உற்சாகத்துடனும், உத்வேகம் நிரம்பியதாகவும் உல்லாசமாகவுமே தென்பட்டது. பாரீஸ் நகர வாழ்க்கையே அப்படிப்பட்டதாகத்தான் இருந்தது. மகிழ்ச்சியும் உற்சாகமும் எங்கும் நிறைந்து வழிந்தது.

இதற்கு முக்கியமான காரணம், பிரான்ஸ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மாணவ-மாணவிகள் ஏராளமாக பாரீஸுக்கு வந்து சேர்ந்ததுதான். கல்வி கற்பது என்பது மட்டுமே அந்த வருகையின் நோக்கமல்ல; வீட்டின் கட்டுப்பாடுகளுக்கும், நெறிமுறைகளுக்கும் மாறாகச் சர்வ சுதந்திரத்துடன் சுகத்தை அனுபவிப்பது என்பதும் அப்படிப்பட்ட இளைஞர்களின் நோக்கங்களில் ஒன்று. இதுதான் இளைஞர்களை பாரீஸ் நகரம் கவர்ந்ததற்கான அடிப்படைக் காரணம்.

அப்படிப்பட்ட மாணவர்கள்தான் பாஷ்வில், லிஸ்ட்ரோலியன், ஃபாமியூல், தாலமிஸ் ஆகிய நால்வரும். இவர்கள் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பர நம்பிக்கையும் அன்பும் உள்ள நெருங்கிய நண்பர்கள். அழகான நான்கு இளம்பெண்கள் முறையே ஃபேவரிட், ஸெஃபைன், தாலியா, ஃபான்டெயின் என்கிற காதலியரும் அவர்களுக்கு இருந்தனர். இந்த நான்கு பெண்களில் மூவர், தங்கள் வாழ்க்கையை உல்லாசத்துக்கு என்றே ஒதுக்கியவர்கள். அவர்களது லட்சியம் வாழ்க்கையைச் சுகமாக அனுபவிப்பது மட்டுமே. முடிந்தவரை ரசனையுடன் வாழ்க்கையை வாழ்ந்து பார்ப்பது. எனவே, வாழ்க்கையின் எப்படிப்பட்ட அனுபவங்களையும் எந்தவித எதிர்பார்ப்புமின்றி நேரிட்டனர்.

ஆனால், நாலாவது பெண்ணான ஃபான்டெயின் மற்றவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவளாக இருந்தாள். அவள், தான் சம்பந்தப்பட்ட எந்த ஒரு விஷயத்திலும் நேர்மையும், பொறுப்பையும் ஆத்மார்த்தமான ஈடுபாடும் காட்டியவள். வாழ்க்கை புனிதம் நிறைந்த ஒன்றாகவும், மதிப்பு வாய்ந்ததாகவும், பொருள் செறிவுள்ளதாகவும் அவளுக்குத் தோன்றியது. அதனாலேயே, மற்ற தோழிகளைப் போல் விருப்பப்படி நடக்கவோ, சுகபோகங்களை நாடி அலையவோ, எது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும் என்றோ அவளால் நடந்துகொள்ள முடியவில்லை.

ஃபான்டெயினின் பெற்றோர் யார் என்பது யாருக்குமே தெரியாது. அவளுக்கேகூட அது தெரியாது. மிகவும் சிறுவயதாக இருந்தபோதே அவள் தெருக்களில் அலைந்து திரிவதைப் பார்த்து யாரோ ஒருவர் பரிதாபப்பட்டு எடுத்து வளர்த்ததாகத்தான் சொல்கிறார்கள்.

மான்ட்ரியூஸர்மார் என்ற நகரில்தான் அவள் கண்டெடுக்கப்பட்டதாகவும் பேசிக்கொள்கிறார்கள்.

பத்து வயதான போது அவள் மான்ட்ரியூஸர்மார் நகரைவிட்டு வெளியேறி விவசாயி ஒருவரிடம் சேர்ந்து வேலை செய்யத் தொடங்கினாள். பதினைந்து வயதானபோது அவள் பாரீஸை அடைந்தாள். தனது வாழ்க்கையை எப்படிப்பட்டதாக அமைத்துக் கொள்வது என்று யோசிக்கத் தொடங்கினாள். இந்தச் சமயத்தில் அவள் அழகான ஓர் இளம்பெண்ணாக வளர்ந்துவிட்டிருந்தாள். அழகான, சுருண்ட தங்க நிறத் தலைமுடியும், பளபளக்கும் நீலக் கண்களும், ஒளிவிடும் முத்துப் போன்ற பற்களும் அவளது அழகை அதிகப்படுத்த உதவின.

அவள் ஏழையாக இருந்தபோதிலும் தங்க நிற முடியும் வெண்ணிறப் பற்களும்தான் அவளது பெரும் சொத்து என்று அவளைப் பார்த்த யாரும் பாராட்டவே செய்தனர். மற்ற இளம் பெண்களைப் போலவே அவளும் ஒரு தையல்காரியாகப் பணிபுரிந்தாள். எனவே, தன் வரையில் தனது அன்றாடச் செலவைக் கவனித்துக் கொள்ள அவளால் முடிந்தது.

மேற்குறிப்பிட்ட நான்கு பெண்களும், முன்னர் குறிப்பிட்ட நான்கு இளைஞர்களை விரும்பினர். அதில் ஃபான்டெயினின் அன்புதான் எல்லாவற்றிலும் சிறந்ததாகவும், உறுதி நிரம்பியதாகவும், உண்மையானதாகவும் இருந்தது. ஒரு மனைவி, தன் கணவரிடம் அன்பு செலுத்துவது போலவே அவள் தாலமிஸிடம் நடந்து கொண்டாள். ஆனால், தாலமிஸோ பருவ வயதின் வேட்கையால் அந்த இளம் பெண்ணின் அருகாமையையும், பருவத்தையும் மட்டுமே நேசித்தான். இதையெல்லாம் உணராத அவள், அவனை ஆழ்ந்த அன்புடன், உணர்வு பூர்வமாக நேசித்தாள்.

ஒருநாள் மேற்குறிப்பிட்ட நான்கு இளைஞர்களும் மதுக்கடை ஒன்றில் நுழைந்து மதுவருந்தும்போது, தாலமிஸ் நண்பர்களிடம் இப்படிச் சொன்னான்: "நாம் நமது காதலியரை அதிர்ச்சியடைய வைக்கவேண்டும். வருகிற ஞாயிற்றுக்கிழமையன்று நாம் அவர்களை உல்லாசப் பயணம் அழைத்துக் கொண்டு போகலாம். விடியற்காலை வேளையில் கோச் வண்டி

ஒன்றை வாடகைக்குப் பேசி அருகிலுள்ள ஸெயின்ட் கிளாட் மலைக்குப் போகலாம். காலை உணவை அங்கேயே வைத்துக் கொள்ளலாம். அதன் பிறகுதான் அவர்களுக்குத் திகைப்பை ஏற்படுத்த வேண்டும்!”

தங்களது காதலியரை எப்படித் திகைப்படைய வைப்பது என்பது பற்றி அவர்கள் பரஸ்பரம் நெடுநேரம் யோசித்தனர். தாலமிஸ் மற்ற நண்பர்களின் காதுகளில் ரகசியமாக எதையோ முணுமுணுத்தான். அதைக் கேட்ட எல்லோரும் உரத்த குரலில் வாய்விட்டே சிரித்தனர்.

தங்களது இச்சைகளுக்கு இணங்கக்கூடிய அந்தப் பெண்களைச் சரியாகவே ஏமாற்றப் போகிறோம் என்பதை நினைத்து அவர்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர். ஆனால், தாங்கள் எப்படிப்பட்ட கொடூரத்தைச் செய்யப் போகிறோம் என்பதை அவர்கள் அப்போது உணரவில்லை!

உல்லாசப் பயணமாக மலைப்பகுதிக்குப் போகப் போகிறோம் என்பதைக் கேள்விப்பட்ட பெண்கள் மிகவும் மகிழ்ந்தனர். தங்களுக்காக வியப்பூட்டும் பரிசு ஒன்றை அவர்கள் அங்கு வழங்கப்போகிறார்கள் என்பதும் அவர்களை உற்சாகப் படுத்தியது. அந்த நினைப்பே அவர்களது மனத்தில் சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

மிகவும் அழகான பட்டு உடைகள் அணிந்து, முகத்தையும் உடலையும் அழகுபடுத்தி, அழகான ஜோடிகளாகவே அவர்கள் தங்கள் பயணத்தை தொடர்ந்தனர். மிகவும் விரைவிலேயே அவர்கள் மலைப்பகுதியை அடைந்தனர்.

கொண்டுவந்த உணவுப் பொருள்களைச் சாப்பிட்டு, மரங்கள் படர்ந்து செறிந்த சரிவுகளில் கை கோத்தபடி இணை இணையாகத் திரிந்தனர். பாறைகளில் ஏறியிறங்கி, குதித்துக் கும்மாளமிட்டு மகிழ்ந்தனர்.

வேடிக்கையாகப் பேசினர். மனம் விட்டுச் சிரித்தனர். தங்களது பழைய நாள்களை இன்பமுடன் நினைவு கூர்ந்தனர். அவ்வப்போது ஒருவரை ஒருவர் கட்டியணைத்தும் முத்தமிட்டும் உல்லாசப் பயணத்தை தொடர்ந்தனர். பூக்களும் பழங்களும் இனிமையைத் தந்தன. இயற்கையும் அவர்களை வாழ்த்தி ஆசீர்வதித்தது.

மாலை நேரம் வரை அவர்களது அன்புப் பரிமாற்றங்களும், வேடிக்கையும் விளையாட்டும் தொடர்ந்தன. முடிவில் அவர்கள் அனைவரும் பாரீஸ் நகருக்குத் திரும்பினர். நகரின் பிரபலமான சாம் எல்லீஸ் தெருவில்

இருந்த உயர்தரமான ஓட்டலில் நுழைந்து உணவு, மற்றும் மது வகைகளைக் கொண்டு வருமாறு சர்வரிடம் கூறினர்.

ஓட்டலுக்கு வெளியே சாலையில் போகும் வாகனங்கள் மற்றும் மனிதர்களைப் பார்த்தபடி, வேடிக்கைப் பேச்சுக்களுடன் அவர்கள் மதுவையும், உணவு வகைகளையும் அருந்தினர்.

சாப்பாட்டுக்குப் பிறகு இளம்பெண்கள் நால்வரும் பரஸ்பரம் தங்களது காதலர்களிடம் நினைவுபடுத்தினர்.

“எங்களுக்கு வியப்பு ஏற்படுத்தக்கூடிய ஏதோ ஒரு பரிசை வைத்திருப்பதாகச் சொன்னீர்களே!”

இளைஞர்கள் உடனே பரஸ்பரம் தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் பார்த்து உரத்த குரலில் சிரித்துக் கொண்டனர்.

“உண்மைதான்! உங்களுக்குத் திகைப்பு ஊட்டக்கூடிய ஒரு பரிசைத்தான் நாங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறோம். சற்றுப் பொறுங்கள். அது இப்போது வந்து விடும்!”

தங்கள் தங்கள் காதலியரை அன்புடன் முத்தமிட்டபடியே அவர்கள் தெருவுக்கு வந்தனர்.

“நேரம் கடத்தாதீர்கள்!”– பெண்கள் எச்சரித்தனர்.

“அவர்கள் தரப்போகும் பரிசு எப்படிப்பட்டதாக இருக்கும்? அதுவும் திகைப்பு அடைய வைக்கும் பரிசு?”– ஒருத்தி கேட்டாள்.

“புதுமையான ஏதாவது ஒரு பொருளாக இருக்கலாம் அந்தப் பரிசு”– மற்றொரு பெண் மகிழ்ச்சியுடன் சொன்னாள்.

“ஏதாவது தங்கநகையாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.” மூன்றாவது பெண் கூறினாள்.

அந்தப் பெண்களை வீதியில் நிற்க வைத்துவிட்டுப்போன காதலர்களின், பரிசோடு கூடிய வருகையை எதிர்பார்த்துப் பெண்கள் சற்று நேரம் வரை அங்கேயே நின்றிருந்தனர்.

போனவர்கள் திரும்பவில்லை!

“அவர்கள் போய் வெகுநேரம் ஆகிறதே!” ஃபான்டெயின் எதிர்பார்ப்புடன் கூறினாள்.

படிப்படியாக எல்லோரது முகங்களிலும் ஆர்வம் அதிகரித்தது. ஃபான்டெயின் ஒரு நீண்ட பெருமூச்செறிந்தாள். நிமிடங்கள் செல்லச் செல்லப் பொறுமை அவர்களிடம் குறைந்து கொண்டே வந்தது. ஆனால், போன காதலர்கள் உண்மையாகவே திரும்பி வரவில்லை!

ஓட்டலில் அவர்களுக்குப் பரிமாறிய சர்வர் ஓர் உறையை அந்தப் பெண்களிடம் கொடுத்தான்.

உறையின் மீது ‘இதுதான் உங்களுக்கு நாங்கள் அளிக்கும் பரிசு!’ என்று எழுதியிருந்தது.

கடிதத்தைக் கொடுத்த பிறகு சர்வர் எதுவும் பேசாமல் திரும்பிப் போனான்.

அவசர அவசரமாக அவர்கள் அந்த உறையைப் பிரித்துப் படித்தனர்.

‘எங்களுக்குப் பெற்றோர் உள்ளனர்.அது உங்களுக்கும் தெரிந்த செய்திதான். நாங்கள் உடனடியாக வீடுவந்து சேர வேண்டுமென்று தகவல் வந்துள்ளது கண்டிப்புடன். அதற்கு நாங்கள் கட்டுப்பட வேண்டியது கடமை. எனவே, நாங்கள் புறப்படுகிறோம். இரண்டு வருட காலம் நீங்கள் உங்களால் முடிந்தவரை எங்களுக்கு மகிழ்ச்சியளித்தீர்கள். இப்போது நாங்கள் எங்களது சொந்த வீடுகளை நோக்கிச் செல்கிறோம். எங்கள் மீது வெறுப்போ, கோபமோ, கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறோம்.’– அதன் கீழே நால்வரும் கையொப்பம் இட்டிருந்தனர். பின்குறிப்பு என்ற பகுதியில் ‘ஓட்டலுக்குச் செலுத்த வேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டோம்’ என்றும் எழுதப்பட்டிருந்தது.

நான்கு பெண்களும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

“உண்மையிலேயே இது திகைப்பு ஊட்டும் ஒரு பரிசுதான்!” ஃபேவரிட் கூறினாள்.

பிறகு அந்த நான்கு பெண்களும் வெகுநேரம் வரை உரத்தகுரலில் சிரித்துக் கொண்டிருந்தனர்.

ஃபான்டெயின் மட்டும் வெளித்தோற்றத்துக்குச் சிரித்துக் கொண்டிருப்பது போல் தோன்றினாலும், உள்ளுக்குள் கதறிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

வீட்டுக்கு வந்த பிறகும் அவளது அழுகை ஓயவில்லை!

11

தாலமிஸ்தான். ஃபான்டெயினின் முதல் காதலன். இதுவரை அவள் வேறொரு இளைஞனை ஏறெடுத்தும் பார்த்தது இல்லை. அதனாலேயே அவளது காதல் ஆழமானதாகவும், உண்மையான அன்பு நிறைந்ததாகவும் இருந்தது.

அப்படிப்பட்ட ஒரு காதலாக அது இருந்தால்தான் அவன், தன்னையே அவனிடம் அர்ப்பணித்திருந்தாள். ஒரு மனைவி, கணவனிடம் நடந்துகொள்ளும் உண்மை விசுவாசமும் அன்பும் அதில் இருந்தது. அதுவரையில் அவனது காதலில் அவளுக்குச் சந்தேகம் ஏற்பட்டதுமில்லை.

சுருக்கமாகச் சொன்னால் அவள் இப்போது கர்ப்பம் தரித்திருந்தாள்.

தனது இதயத்தைக் கவர்ந்த – என்றென்றும் தன்னுடைய எல்லாமாகவும் இருந்த அப்படி நம்பியிருந்த காதலன் திடுதிப்பென்று தன்னைக் கைவிட்டுப் போய்விட்டான் என்ற நினைப்பையே அவளால் தாங்க முடியவில்லை. எதிர்பாராமல் ஏற்பட்ட இந்தப் பிரிவு அவளால் தாங்கமுடியாத ஒன்றாக இருந்தது.

இரவும் பகலும் அதையே நினைத்து ஓயாமல் கண்ணீர் உகுத்தாள்.

அதனால் என்ன பலன்?

எந்தவிதப் பலனுமில்லாத புலம்பலும் வருத்தமும் அவளை மேலும் பலவீனப்படுத்தவே செய்தன. கடந்த இரண்டு வருடங்களாகத் தொடர்ந்த, காதலுடனான உறவுக்கு உரித்தான பலனை அவள் அனுபவிக்கவே செய்தாள்.

அவளது காதலின் அடையாளமாக இந்த உலகத்தில் வந்து பிறந்த பெண் குழந்தையின் பெயர் கோசெட்டி!

ஃபான்டெயினுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவளைப் போலவே அவளது குழந்தையும் ஆதரிப்பார் இல்லாத தனியாளாக இருந்தது. குழந்தை பிறந்த பிறகு அன்றாடச் செலவுக்குக்கூட அவளிடம் பணம் இல்லாத நிலை உதவி செய்ய அண்டை அயலாரோ, சரியான சிகிச்சை

பெறப் பணமோ இல்லாததால் மிகவும் வேதனையுடன் பசியும் பட்டினியுமாகத் தான் நாள்களைக் கடத்தினாள் பல்லைக் கடித்தபடி!

உண்மையிலேயே அது ஒரு நரகவேதனையாகவே இருந்தது.

வேறு வழியில்லாமல் போகவே தன் முன்னாள் காதலனுக்கு நிலைமையை விளக்கி கடிதம் ஒன்றை எழுதினாள். பதிலை எதிர் பார்த்து வெகுநாள்கள் காத்திருந்தாள். எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை.

இரண்டாவதாகவும், மூன்றாவதாகவும் கடிதங்களை எழுதினாள். எந்தக் கடிதத்துக்கும் பதில் கிடைக்கவில்லை.

பாவம், அவளால் வேறு என்னதான் செய்யமுடியும்? உரிமையாகக் கேட்கவோ, ஆதரவாக ஒருவார்த்தை பேசவோகூட யாருமில்லை. உதவி என்பதையே எங்கிருந்தும் எதிர்பார்க்க முடியவில்லை.

இருப்பினும் அப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையிலும் எப்படியோ தன்னுடன் தன் குழந்தையும் இறந்து போகாதபடி பசிபட்டினிலிருந்து தப்பித்து வாழ்ந்தாள். அதற்குள் குழந்தை மூன்று வயதை எட்டியிருந்தது.

ஃபான்டெயினுக்குச் சட்டென்று ஓர் எண்ணம் தோன்றியது. தன்னுடைய பழைய கிராமமான மான்ட்ரியூஸர்மாருக்குப் போக வேண்டியதுதான். அங்கு இருப்பவர்கள் யாராவது அவளுக்கு உதவலாம். ஒருவேளை நல்லவேலை ஏதாவது தரலாம். அப்படி வேலை கிடைப்பதாக இருந்தால், அவள் தனது குழந்தையைப் பிரியவும் நேரலாம்.

அந்த நினைவே அவளது மனத்தைக் காயப்படுத்தியது. குழந்தையைப் பிரிந்து வாழ்வது என்கிற சிந்தனை அவளைப் பெருமளவு நடுங்க வைத்தது. குழந்தையின் நல்ல உடைகள் சிலவற்றை வைத்துக்கொண்டு மற்றவற்றுடன் தன்னுடைய உடைகளையும் எடுத்துச்சென்று கடைவீதியில் விற்றுவிட்டு குழந்தையுடன் சொந்த ஊருக்குக் கிளம்பினாள்.

தன்னிடமிருந்த பொருள்கள் எல்லாவற்றையும் விற்று ஒருவழியாக ஏற்கெனவே கடன்களை அடைத்து விட்டிருந்தாள்.

தாயும் மகளுமாகப் புறப்பட்ட அந்தப் பயணத்தைக் காணநேர்ந்த ஒவ்வொருவரும் பரிதாபப்படவே செய்தனர்.

மதியவேளையில் ஃபான்டெயின் மான்ட்ஃபர்ம்யூல் கிராமத்தை அடைந்தாள். அதற்குள் அவள் மிகவும் சோர்வு அடைந்திருந்தாள். குழந்தையுடன் ஒரு

குறுகிய பாதையில் நிழலில் அமர்ந்தாள். அவள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து சற்றுத் தள்ளி ஒரு வீட்டுக்கு முன்னால் பெண் குழந்தைகள் சில மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்தன.

உண்மையில் அது ஒரு சத்திரம். தெனார்டியர் என்பவருக்குச் சொந்தமானது. சிறு குழந்தைகளின் விளையாட்டும் சிரிப்பும் ஃபான்டெயினின் மனதுக்கு ஓரளவு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் ஏற்படுத்தியது. குழந்தைகள் விளையாடுவதையே பார்த்துக்கொண்டு சுற்றுப்புறத்தை மறந்துபோயிருந்த ஃபான்டெயினை நோக்கிப் பெண்மணி ஒருத்தி வந்தாள்.

“உங்களுடைய குழந்தைகள் மிகவும் கெட்டிக்காரர்கள் அம்மா!”– ஃபான்டெயின் கூறினாள்.

பதிலாகப் புன்னகைத்த அந்த பெண்மணி அதற்கு நன்றி தெரிவித்தாள். இதைத் தொடர்ந்து அந்த இரண்டு பெண்களும் தங்களைத் தாங்களே அறிமுகப்படுத்திக்கொண்டு பரஸ்பரம் பேசிக் கொள்ளத் தொடங்கினர்.

“என்னுடைய பெயர் மிசஸ் தெனார்டியர். இந்தச் சத்திரம் எங்களுடையதுதான்!”

திருமதி தெனார்டியர் சராசரிப் பெண்களைவிட உயரமானவளாக இருந்தாள். சுமார் முப்பது வயது இருக்கலாம். தோற்றத்தில் அவளிடம் பெண்மையின் இயல்புகளைவிட ஆண்மையின் இயல்புகளே அதிகமாகத் தென்பட்டன. அவள் நெஞ்சை உயர்த்தி நிமிர்ந்து நின்றால் பார்ப்பவர் எவருமே பயப்படுவார்கள் என்று தோன்றியது. ஆனால், அந்தப் பெண்மணி, ஃபான்டெயினின் அருகில் அமர்ந்து பேச ஆரம்பித்த பிறகுதான் எவ்வளவு மென்மையானவள், அன்பு நிறைந்தவள் என்பது புரிந்தது.

ஃபான்டெயின், அவளிடம் தனது கதையை விவரித்தாள்.

தன்னுடைய சுயமரியாதை மற்றும் மதிப்பைப் பாதிக்காத வகையில் ஆங்காங்கே சில மாற்றங்களுடன்தான் அவள் தனது கதையைச் சொன்னாள்.

“என்னுடைய கணவர் இறந்துவிட்டார். நான் பாரீஸ் நகரில் ஒரு தையல்காரியாக வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். குழந்தை பிறந்த பிறகு எனக்கு வேலை கிடைக்காததால் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. கடைசியாக எனது குழந்தையுடன் சொந்தக் கிராமத்தை

நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன். காலையில் நடக்க ஆரம்பித்தேன். என் குழந்தை பாவம், மிகவும் சோர்ந்து போயிருக்கிறாள்.''– என்றபடி தன் குழந்தையை நெஞ்சோடு சேர்த்து அணைத்து முத்தமிட்டாள்.

''குழந்தைகளை நன்றாக விளையாடும்படி விட்டுவிட வேண்டும். உங்கள் குழந்தையும் மற்றவர்களுடன் சேர்ந்து விளையாட்டுமே!'' திருமதி தெனார்டியர் கூறினாள்.

அவள் அதற்கு இணங்கினாள்.

கோசெட்டியும் மற்ற குழந்தைகளுடன் சேர்ந்துகொண்டு விளையாடத் தொடங்கினாள். குழந்தையின் ஆர்வம் நிறைந்த விளையாட்டைக் கவனித்த பெண்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர். மறுபடி தங்கள் பேச்சைத்தொடர்ந்தனர்.

''உங்கள் குழந்தையின் பெயர் என்ன?''

''கோசெட்டி!''

''எத்தனை வயதாகிறது?''

''மூன்று வயது!''

''கெட்டிக்காரப் பெண். மிகவும் அழகாகவும் இருக்கிறாள். என்னுடைய பெரிய குழந்தையின் வயதும் அதுதான்.''

குழந்தைகள் மூன்றும் தாங்கள் இதுவரை அறிமுகமாகாத புதியவர்கள் என்பதை மறந்து, நெடுநாள் பழகியவர்களைப்போல் ஈடுபாட்டுடனும், தயக்கமின்றியும் இயல்பாக விளையாடத் தொடங்கினர். அதைக் கவனித்த ஃபான்டெயின் சட்டென்று திருமதி தெனார்டியரின் கரங்களை அன்புடன் பற்றிக்கொண்டு கேட்டாள்.

''என்னுடைய குழந்தையையும நீங்கள் கவனித்துக் கொள்வீர்களா?'' அவளது கண்களில் நீர்த்துளிகள் உருண்டு திரண்டு வந்தன. வேதனையும், திணறலும், நிம்மதியின்மையும், ஏமாற்றமும் எல்லாம் கலந்த ஒரு கலவையாக இருந்தது. இப்போது ஃபான்டெயின் முகம். ''நான் போகின்ற இடங்களுக்கு எல்லாம் அவளையும் எடுத்துச் செல்ல முடியாது. அப்படி நடந்துகொண்டால் நான் எங்கும் வேலை செய்யவும் முடியாது. உங்களது குழந்தைகள் மகிழ்ச்சியாக விளையாடுவதைப் பார்த்தபோதே, என்னுடைய மனவேதனைகளுக் கெல்லாம் ஒரு மாற்றுவழி கிடைத்தாகவே தோன்றியது.

என்னுடைய மகளும், உங்களது குழந்தைகளின் ஒரு சகோதரியாக இங்கேயே வளர்ந்து வரட்டும். என்ன சொல்லுகிறீர்கள்?'' ஒரு கண இடைவெளிக்குப் பிறகு எதிர்பார்ப்பு நிறைந்த குரலில் கேட்டாள்: "எனக்காக, என் குழந்தையையும் கவனித்துக் கொள்வீர்கள் இல்லையா?''

"இதற்கான பதிலை நான் யோசித்துத்தான் சொல்லவேண்டும்!'' திருமதி தெனார்டியர் பதிலளித்தாள்.

"வாரம் ஒன்றுக்கு ஆறு ஃபிராங்குகள் வீதம் அவளுக்காக நான் அனுப்பித் தருகிறேனே.'' ஃபான்டெயின் கூறினாள்.

அதே சமயம் வீட்டுக்குள் இருந்து ஆண் ஒருவரின் கடுமையான குரல் கேட்டது.

"வாரம் ஒன்றுக்கு ஏழு ஃபிராங்க்குகள் வீதம் தரவேண்டும். அதில் எதுவும் குறைப்பதற்கு இல்லை. ஆறு மாதத்துக்கான தொகையைக் கண்டிப்பாக முன்பணமாகத் தரவும் வேண்டும்.

"அதாவது நாற்பத்திரண்டு ஃபிராங்க்குகள் வேண்டுமென்று சொல்கிறீர்கள், இல்லையா?'' மேடம் தெனார்டியர் கேட்டாள்.

"நீங்கள் கேட்டபடியே தருகிறேன்.'' ஃபான்டெயின் அதற்கு ஒப்புகொண்டாள்.

"அத்துடன் அத்தியாவசியச் செலவுகளுக்காகப் பதினைந்து பிராங்க்குகள் தனியாகத் தரவேண்டும்.'' உள்ளிருந்த ஆண் குரல் நினைவுபடுத்தியது.

"அதற்கும் உடன்படுகிறேன்.''

"அப்படியானால் மொத்தம் ஐம்பத்தேழு ஃபிராங்க்குகள் ஆகிவிட்டது. தெரியுமா?''– மேடம் தெனார்டியர் அவளிடம் கேட்டாள்.

"புரிந்தது. அதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. நீங்கள் குறிப்பிட்ட தொகையை நான் தருகிறேன். அதைக் கொடுத்தால்கூட என் கிராமத்துக்கு நடந்து செல்லப் போதுமான பணம் என்னிடம் இருக்கும், நான் வேலை செய்து தேவையான பணத்தைச் சம்பாதித்த பிறகு வந்து என்னுடையமகளை அழைத்துப் போகிறேன்.''

"உங்கள் குழந்தைக்கென வேறு ஏதாவது நல்ல உடைகள் வைத்திருக்கிறீர்களா?''

“இருக்கிறது. நானே என் கைப்பட மகளுக்காகவென்று சில நல்ல உடைகளைத் தைத்து வைத்திருக்கிறேன். அதைக் கையோடு கொண்டு வந்திருக்கிறேன். போகும்போது உங்களிடம் ஒப்படைக்கிறேன்!”

இப்படியாக அந்த உடன்பாடு ஒரு வடிவம் பெற்றது.

அன்றைய இரவை அந்தச் சத்திரத்திலேயே செலவழித்தாள். ஃபான்டெயின். மறுநாள் பொழுது விடிந்ததும் தேவையான ஏற்பாடுகளை செய்துவிட்டு மகளிடம் விடைபெற்றுப் புறப்பட்டாள். அப்போதும் அவளது கைவசமிருந்த பையில் குழந்தையின் உடைகள் சில இருந்தன. முடிந்த அளவு விரைவில் திரும்பிவந்து தன் மகளை அழைத்துக் கொள்ளவேண்டும் என்ற தீர்மானத்துடன் புறப்பட்டாள்.

ஃபான்டெயினைத் தாண்டிக்கொண்டு வந்த மற்றொரு பெண்மணி. சத்திரத்துக்கு வந்து இப்படிச் சொன்னாள்: “பாவம் அந்தப் பெண் தன் உயிரையே பிரிந்து வருவது மாதிரி அவ்வளவு துயரத்தோடு அழுது கொண்டே போகிறாள்!”

தெனார்டியரும், தெனார்டியரின் மனைவியும் அதைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே காட்டிக்கொள்ளவில்லை.

கணவனும் மனைவியும் தனிமையில் இருந்த ஒரு சந்தர்ப்பத்தில், கணவன் மனைவியிடம் சொன்னான்: “நீ மிகவும் கெட்டிக்காரிதான். நம் குழந்தைகளைக் காட்டியே, அந்த பெண்ணிடமிருந்து பணம் பறித்துவிட்டாயே”– மனைவியைப் பாராட்டியவாறே அவன் மேலும் கூறினாள்: “ஒரு வகையில் இப்போதுதான் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறது. இந்தப் பணத்தைக் கொண்டு நமது கடன்களையெல்லாம் அடைத்து விடலாம்.”

“ஏதோ நமது நல்லநேரம். எதிர்பாராமல் அப்படியொரு வாய்ப்பு வந்திருக்கிறது!”– திருமதி தெனார்டியர் சிரித்தபடியே பதிலளித்தாள்.

12

அன்பினாலோ, மனித நேயத்தினாலோ தெனார்டியர் தம்பதி கோசெட்டியைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. பணத்தின் மீது அவர்களுக்கு இருந்த

ஈடுபாட்டால் மட்டுமே, குழந்தை மீது அன்பு இருப்பதாகக் காட்டிக் கொண்டனர்.

தெனார்டியர் தம்பதியை ஏழை என்றோ, பணக்காரர்கள் என்றோ சொல்ல முடியாது. இந்த இரண்டு நிலைக்கும் இடைப்பட்ட நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், அதனாலேயே மேற்குறிப்பிட்ட இரண்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் மோசமான சிந்தனைகளும், குணங்களும் அவர்களிடம் அளவுக்கு அதிகமாகவே இருந்தன.

மிஸ்டர் தெனார்டியர், தான் ராணுவத்தில் பணிபுரிந்ததாகவும் அதுவும் சார்ஜெண்ட்டாக வேலை செய்ததாகவும் சொல்லிக் கொள்கிறார். அங்கிருந்து வந்த பிறகு இந்தப் பழைய கட்டடத்தை விலைக்கு வாங்கி அதை ஒரு சத்திரமாக நடத்திக் கொண்டிருக்கிறார். சாராயம் மற்றும் மது வகைகளைப் பருகுவதற்கும், குறைந்த வாடகையில் தங்குவதற்காகவும் அவ்வப்போது அந்தச் சத்திரத்துக்கு ஆள்கள் வருவதுண்டு.

சரியான முறையில் வியாபாரம் செய்யத் தெரியாததால், அவர்களைப் பொறுத்தவரை அந்தச் சத்திரம் நஷ்டத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவே இருந்தது. திருமதி தெனார்டியர் ஓரளவுக்கு எழுதப் படிக்கக் கற்றிருந்தாள். ஆனால், பெரும்பாலும் அவள் மலிவான தரம் குறைந்த புத்தகங்களை மட்டுமே வாசித்து வந்ததால், அந்தப் பெண்மணியின் இயல்பு மிகவும் மோசமானதே தவிர, அதை வாசிப்பால் உண்மையான அறிவோ நல்ல விஷயங்களோ அவளைத் தீண்டியதுகூட இல்லை.

இதனால் அந்தத் தம்பதி எப்போதும் பணத்தின் மீது ஆசை கொண்டு, அதற்காகவே அலையும் நிலையில்தான் இருந்தனர். எனவே அவர்கள் ஒருபோதும் மனநிம்மதியுடனோ, திருப்தியுடனோ இருக்க நேர்ந்ததில்லை.

ஃபான்டெயின் கொடுத்த பணத்தின் உதவியால் மிஸ்டர் தெனார்டியர் தன்னுடைய சில்லறைக் கடன்களை அடைத்தார். இருந்தும் விரைவிலேயே அவர்களுக்குப் பணத் தேவை ஏற்பட்டது. அப்போது கொஞ்சமும் கருணையின்றி, அந்த மனிதன் கோசெட்டியின் மிக நல்ல உடைகளை– விலை உயர்ந்த துணிகளை எடுத்து விற்றார்.

தாயின் முன்னால் மகளைக் கொஞ்சுவதும், சீராட்டுவதும் அவர்களது இயல்பு. ஃபான்டெயின் அங்கிருந்து வெளியேறிய பிறகு, திருமதி தெனார்டியர். கோசெட்டியைப் பராமரித்த முறையைக் கவனித்தால், எவ்வளவுதான் கடினமான இதயம் கொண்டவராக இருந்தாலும் மனம்

பொறுக்காமல் கண்ணீர் வடிக்கவே செய்வார்கள். அந்த அளவுக்குத் துளிக்கூட கருணையற்றும் மிருகத்தனமான நிலையிலும்தான் அந்தப் பெண்மணி, அந்தச் சிறு குழந்தையிடம் நடந்துகொண்டாள்.

தனது சொந்தக் குழந்தைகள் உடுத்திக் கிழிந்ததால் ஒதுக்கிய ஆடைகளைத்தான் அவள் அந்த அப்பாவிக் குழந்தைக்க கொடுத்தாள். நாய்க்கும் பூனைக்கும் கொடுப்பது மாதிரி அவர்கள் எல்லாரும் சாப்பிட்ட பிறகு மீதமிருப்பதை மட்டுமே கோசெட்டிக்குக் கொடுத்தனர். தெனார்டியரின் குடும்பம் சாப்பாட்டு மேஜையில் உணவருந்தும்போதும், பரிதாபத்துக்குரிய கோசெட்டி இடிந்து மேலும் பள்ளமாக இருந்த தரையில் உட்கார்ந்து, உடைந்த மண்பாத்திரத்தில் உணவருந்துவாள்.

அது மட்டுமின்றி எதற்கெடுத்தாலும் அந்தக் குழந்தையைத் திட்டுவதும் அடிப்பதும் திருமதி தெனார்டியரின் வழக்கம். அவளது கணவனைவிட அவள் மாறுபட்ட குணம் கொண்டவளாக இல்லாமல், இருவரும் ஒரே மாதிரியே நடந்து கொண்டனர். தங்களது பெற்றோர் கோசெட்டியிடம் எப்படி நடந்து கொண்டனரோ, அதையே அவர்களது குழந்தைகளும் பிரதிபலித்தனர். கருணையும், அன்பும் மருந்துக்குக்கூட அவர்களிடமிருந்து தென்படவில்லை.

எப்போதும் எதற்கும் குற்றம் சாட்டுவதும் குறைசொல்லித் திட்டுவதும், இரக்கமற்றுத் தண்டிப்பதாலும் பரிதாபத்துக்குரிய குழந்தை கோசெட்டி சதா கண்ணீரும் கம்பலையுமாகவே பொழுதைக் கழிக்க வேண்டியிருந்தது. தன்னுடைய ஆதரவற்ற நிலையையும், தாயாரைப் பிரிந்து வாழும் நிலையையும் அடிக்கடி நினைத்துப் பெருமூச்சுவிட்டுக் கண்ணீர் வடிப்பதைத் தவிர அவளுக்கு மாற்று வழி எதுவும் புலப்படவில்லை!

தெனார்டியர் தம்பதி திரும்பத் திரும்ப ஃபான்டெயினுக்குக் கடிதம் எழுதி மேலும் மேலும் பணம் கேட்டனர். ஆரம்பத்தில் வாரத்துக்கு ஏழு ஃபிராங்க்குகள் என்று நிர்ணயித்து, படிப்படியாக பத்து, பன்னிரண்டு... பதினைந்து என்று வளர்ந்தது. நாளுக்கு நாள் வளர்ந்து வரும் குழந்தையாக இருந்ததால் சாப்பாட்டுக்கும், இதர செலவுக்கும் அந்தத் தொகையே அவர்களுக்குப் போதவில்லையென்றும் குறிப்பிட்டனர்.

தனது மகளாவது மகிழ்ச்சியுடன் நிம்மதியாக வாழ்கிறாளே என்கிற நினைப்புடன் அந்தத்தாய், தெனார்டியரின் விருப்பப்படி, அவர்கள் கேட்ட தொகையை எப்படியாவது புரட்டி உடனுக்குடன் அனுப்பிவந்தாள்.

இந்த நிலைமையிலேயே மேற்கொண்டு சில வருடங்கள் கடந்தன. இந்தக் குறிப்பிட்ட காலம் முழுவதும் அப்பாவியாக கோசெட்டியின் வாழ்க்கை நரகவேதனை நிரம்பியதாகவே இருந்தது. ஆறு வயதை அவள் நெருங்கியபோது நிலையை மேலும் மோசமாகியது.

அந்த வீடு மற்றும் சத்திரத்தின் சிறு சிறு வேலைகள் முழுவதையும் கோசெட்டியே செய்ய நேர்ந்தது. அறைகள் எல்லாவற்றையும் பெருக்கி, தண்ணீர் சுமந்து, பாத்திரங்கள் எல்லாவற்றையும் தேய்த்துக் கவிழ்த்து வைக்கவும், கனமான பொருள்களைத் தூக்கிச் சுமக்கவும் கோசெட்டி வற்புறுத்தப்பட்டாள்.

சிவப்பு நிறத்துடன் உருண்டு திரண்டு அழகான ஒரு குழந்தையாக இருந்தாள். ஃபான்டெயின் அவளை, தெனார்டியர் தம்பதியிடம் ஒப்படைத்தபோது இருந்த அழகும், உடல் வாளிப்பும், கவர்ச்சியும் இரண்டு வருடங்களுக்குள்ளேயே ஓட்டு மொத்தமாகச் சீர்குலைந்துபோனது. எலும்பும் தோலுமாக மெலிந்து, வெளறி வெளுத்துப் போனாள். சோர்வடைந்து, நோய் பீடித்தவள் போலானாள்.

அந்த நிலையிலும் திருமதி தெனார்டியர் அந்தச் சிறுமியிடம் வேலை வாங்கக் கொஞ்சமும் தயங்கவில்லை!

ஃபான்டெயின் அந்தச் சந்தர்ப்பத்தில் தன் மகளைக் காண நேர்ந்தால், நிச்சயமாக அடையாளம் தெரிந்திருக்காது. அந்த அளவுக்கு அவளது வடிவமும் தோற்றமும் மாறியிருந்தது. கோசெட்டியின் கண்களில் மட்டும் பழைய பளபளப்பு கொஞ்சம் ஒட்டியிருந்தது.

அவளது தாய், அவளை தெனார்டியர் தம்பதியிடம் ஒப்படைத்தபோது அவளைப் பார்த்த எல்லோரும் ‘ஆகா என்ன ஒரு அழகு! எப்படிப்பட்ட சுட்டியான குழந்தை!” என்று புகழ்ந்தனர். அப்படிப்பட்ட குழந்தை இப்போது, மரணத் தறுவாயிலிருக்கும் காகத்தைப் போலிருந்தாள்.

ஃபான்டெயின் தனது மகளை தெனார்டியர் தம்பதியிடம் ஒப்படைத்த பிறகு மான்ட்ரியூஸர்மார் நகரத்தை அடைந்தாள். அந்த இடத்திலிருந்து பிரிந்து பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் ஆகியிருந்தது.

அதற்குள் அந்தப் பகுதியே ஒட்டுமொத்தமாக மாறிவிட்டிருந்தது. மான்ட்ரியூஸர்மார், ஏராளமான தொழிற்சாலைகளும், வியாபார

நிறுவனங்களும், விசாலமான சாலைகளும் நிறைந்த பெரிய நகரமாக மாறிவிட்டிருந்தது.

அந்த ஊர் வெகுகாலமாகவே கண்ணாடியாலான மணிமாலைகள் தயாரிப்பதில் புகழ் பெற்றிருந்தது. பெண்கள் தலையில் சூடும் கொண்டை ஊசிகள், செயற்கை முத்துகள் தயாரிப்பதிலும் அந்த ஊர் சிறந்து விளங்கியது.

1815–ஆம் ஆண்டில் அந்த நகரத்திலிருந்த மனிதர்கள் யாருக்கும் முன்பின் தெரியாத, ஆஜானுபாகுவான மனிதன் ஒருவன் அந்த நகரில் குடியேறினான். வந்தவன் தோளில் ஒருசாக்கு மூட்டையும், கையில் ஊன்றுகோல் ஒன்றையும் வைத்திருந்தான். எதிலே தட்டுப்பட்டவர்கள் எல்லோரும் அந்த மனிதனை வியப்புடன் வைத்த கண் வாங்காமல் பார்த்தனர்.

அந்த மனிதன், ஜீன்வால்ஜினைத் தவிர வேறு யாராக இருக்கமுடியும்?

ஜீன்வால்ஜின் முதலில் அந்த நகரத்தையும், நகரமக்களின் முக்கியத் தொழிலையும், அவர்களது வாழ்க்கை முறைகளையும் ஆராய்ந்தான். மற்றொரு முறையில் சொல்வதானால் அவற்றைத் துல்லியமாகப் புரிந்து கொண்டான். அவர்கள் மிகவும் விலை உயர்ந்த அரக்கு ஒன்றைப் பயன்படுத்தித்தான் கண்ணாடி மணிகளைத் தயாரித்தனர். ஆனால், அதைவிட மலிவான, மரத்தின் பிசினிலிருந்தும் அதே மணிகளைத் தயாரிக்க முடியும் என்பதை அவன் சுலபத்திலேயே கண்டுகொண்டான்.

அந்தக் கண்டுபிடிப்பு அந்த நகர மக்களின் வாழ்க்கையே தலைகீழாக மாற்றிவிட்டது எனலாம். இந்த முறையில் புதிய மணிமாலைகளைத் தயாரித்து வெளியூர்களுக்கு அனுப்பத் தொடங்கியதுடன், பொருளாதார ரீதியாகவே நகரம் மிகவும் செழுமையடைந்தது. இது இயல்பாகவே அந்த நகரமக்களின் அன்றாட வாழ்க்கையிலும் பிரதிபலித்தது. மகிழ்ச்சியும், திருப்தியும், நிம்மதியும் அவர்களின் வீடுகளிலும், நகரெங்கணும் அலையடிக்கவே செய்தது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்தான் அந்த நகரில் ஒரு வீட்டில் தீவிபத்து ஏற்பட்டது. யதேச்சையாக அந்த வழியாக வந்த ஜீன்வால்ஜின் நெருப்புப் பற்றிய வீட்டுக்குள் தைரியமாக நுழைந்து, அதற்குள் சிக்கி உயிரிழக்கவிருந்த இரண்டு குழந்தைகளைக் காப்பாற்றினான். அந்த இருவரும் அந்நகர போலீஸ் அதிகாரியின் குழந்தைகள்.

சாகசமும் பரபரப்பும் நிறைந்த இந்தச் சம்பவத்துக்குப் பிறகு ஜீன்வால்ஜின் அந்த நகரைச் சேர்ந்த எல்லோருக்கும் தெரிந்த மனிதனாகிவிட்டான்! மான்ட்ரியூஸர்மார் நகரில், மிஸ்டர் மடலின் என்ற பெயரில் ஜீன்வால்ஜின் பிரபலமடைந்தான்.

நான்கு வருட காலத்துக்குள் அவன் அந்த நகரின் மிகப்பெரும் பணக்காரர்களில் ஒருவனாக உயர்ந்தான். மணிமாலை தயாரிக்கும் பெரிய தொழிற்சாலையொன்றின் உரிமையாளராகியிருந்தான். கையில் ஓரளவு ஃபிராங்களுடன் வந்து சேர்ந்த மிஸ்டர் மடலின் இப்போது லட்சாதிபதிகளில் ஒருவர் என்று ஊரார் பேசிக் கொண்டனர்.

தன்னுடைய தொழிற்சாலைகளில் பணிபுரிய எப்படிப்பட்டவர்களையும் மடலின் ஏற்றுக் கொள்வது வழக்கம். தொழிலாளர்கள் நேர்மையானவர்களாக இருக்கவேண்டும் என்பது மட்டுமே மடலினின் லட்சியமாக இருந்தது. மாண்ட்ரியல் நகரிலேயே மிகச்சிறந்த முறையில் நடத்தப்பட்ட ஒரே தொழிற்சாலையும் அவனுடையதாகத்தான் இருந்தது. ஆண்களும் பெண்களுமாக ஏராளமானவர்கள் அந்தத் தொழிற் சாலையில் பணிபுரிந்தார். அந்த நகரின் பெரும்பான்மையான மக்கள் அந்தத் தொழிற்சாலையால் ஏதோ ஒரு வகையில் பயனடைந்தனர்.

ஜீன்வால்ஜின் [தற்போதைய மடலின்] அந்த நகருக்கு வந்த மூன்றாவது வருட முடிவில், அந்த நகரின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அதுவரை ‘முதலாளி மடலின்’ என்ற பெயரில் அழைக்கப்பட்ட மடலின், இப்போது ‘மேயர் மடலின்’ என்று அழைக்கப்பட்டார்.

இவ்வளவு உயர்ந்த நிலையை அடைந்த பிறகும் மடலின் மிகவும் எளிமையான வாழ்க்கையையே மேற்கொண்டார். காற்றில் அசைந்தாடிய நரைத்த தலைமுடியும், நீண்ட தாடி–மீசையும் நீண்ட ஓவர்கோட்டும், எப்போதும் கையில் வைத்துள்ள ஊன்றுகோலும் சேர்ந்துஅவரை ஒரு பாதிரியாராகவே அடையாளம் காட்டியது. எனவேதான் அவர் முதன் முதலாக நகருக்குள் வரும்போது, அவரைப் பார்த்தவர்கள் ‘ஃபாதர் மடலின்’ என்று அழைக்கத் தொடங்கினர்.

நகரின் முக்கிய நபர்களில் ஒருவராக உயர்ந்த பிறகும்கூட, தன்னுடைய எளிமையான சொந்த வாழ்க்கையில் எந்தவிதமான மாற்றமுமின்றி அப்படியே தொடர்ந்தார்.

அவரைக் கவனித்துக் கொள்ள ஒரே ஒரு வேலைக்காரன் மட்டுமே இருந்தான். மடலின் வசிப்பது ஒரு பெரிய பங்களாவாக இருப்பினும் மிகவும் எளிமையாகவும், சுத்தமாகவும் ஒதுக்கப்பட்ட அறை ஒன்றில் அடக்கமாகவே வாழ்ந்தார். அந்த ஒரு அறையிலேயே சமையல். உறக்கம் எல்லாம் நடைபெற்றன.

நகரின் பிரமுகர்களுக்கு ஒரு தடவை மடலின் விருந்தளித்தார். அப்போது அவருடைய வீட்டுக்கு வந்த பிரமுகர்களின் மனைவியர் மடலினின் வீடு வரவேற்பு அறை மற்றும், நூலக அறையைச் சுற்றிப் பார்க்க விரும்பினர்.

மடலின் அவர்களது விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார். ஆனால், அந்த மாளிகையின் இதர அறைகளைப் பார்த்த பெண்களுக்கு பெரிய அளவில் ஏமாற்றமே ஏற்பட்டது. ஒரு சாதாரணத் தொழிலாளியின் வீட்டில் இருப்பதைவிட அந்த வீட்டில் பெரிதாக எதுவும் இல்லை.

பிரார்த்தனை அறையில் சுவர் அலமாரிக்குள் இரண்டு பெரிய மெழுகுவர்த்திப் பீடங்கள் இருந்தன. முன்னொரு நாள் பாதிரியார், ஜீன்வால்ஜினுக்குக் கொடுத்த பீடங்கள்தான் அவை என்பதில் சந்தேகத்துக்கு இடமே கிடையாது.

இளமை முடிந்து முதுமையிலும் ஒரு சில வருடங்களைக் கடந்துவிட்டிருந்தார் மடலின். இருப்பினும் ஜீன்வால்ஜின் அப்போதும் எந்த ஓர் இளைஞனை விடவும் வலுமிக்கவராகவே விளங்கினார். ஓரிரு முறை பாதையோரத்தில் களைத்து விழுந்த குதிரைகளைத் தனியொரு மனிதராகவே தூக்கி நிறுத்தியிருக்கிறார். மற்றொரு சந்தர்ப்பத்தில் தன்னுடைய தொழிற்சாலையில் பெரிய தூண் ஒன்றை மாற்றிக் கொண்டிருக்கும்போது எதிர்பாராமல் தொழிலாளர்களின் கையிலிருந்து அது நழுவ.... அதற்கு நேர் கீழே வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது விழாமல் அதைத் தடுத்துக் தாங்கிப் பிடித்திருக்கிறார். அந்தச் சந்தர்ப்பத்தில் அந்த இரும்புத் தூணைத் தாங்கியதன் மூலம் எத்தனையோ தொழிலாளர்களின் உயிரை அவர் காப்பாற்றிக் கொடுத்திருக்கிறார்.

வேறொரு சந்தர்ப்பத்தில் ஜீன்வால்ஜின் சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்தார். வேகமாக வந்து கொண்டிருந்த சாரட்டு வண்டியின் சக்கரம் ஒன்று பாதையோரத்துச் சேற்றில் அமிழ்ந்தது. நான்கு மனிதர்கள் மிகவும் கஷ்டப்பட்டு முயன்றும் அதை வெளியே எடுக்க முடியவில்லை. சட்டென்று சாரட்டு வண்டியை நெருங்கிய ஜீன்வால்ஜின், தன்னந்தனி

மனிதனாக அந்தச் சக்கரத்தை சேற்றிலிருந்து உயர்த்திச் சாலைப் பக்கமாகத் தள்ளிவிட்டார். அதற்கு அவர் பயன்படுத்தியது ஒரே ஒரு பெரிய மரத்துண்டைத்தான்.

உண்மையிலேயே அந்தச் சம்பவம் அசாதாரணமான ஒன்றாகவே இருந்தது. சாதாரணமாக ஜீன்வால்ஜினின் வயதுடையவர்கள் அதுவும் தனிமனிதனாக, அதை ஒருபோதும் செய்ய முடியாது. அப்படியொரு உடல் வலிமை அந்த வயதில் எவருக்குமே சாத்தியமே இல்லை.

அந்தக் காட்சியை மிகவும் நுட்பமாகக் கவனித்துக் கொண்டிருந்தன இரு கண்கள் – தெருவின் எதிர்ப்புறத்திலிருந்து.

வெகுநாள்களாகவே ஏதோ ஒருவிதச் சந்தேகத்துடனேயே அந்தக் கண்கள், மேயர் மடலினைத் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருந்தன.

இந்த மனிதனை இதற்கு முன்பு எங்கேயோ சந்திருக்கிறோம்; ஆனால், எந்த இடத்தில் என்பது நினைவுக்கு வரவில்லை. இப்போது ஜீன்வால்ஜின் தன் உடல் வலுவை வெளிப்படுத்தியதுடன் அந்தச் சந்தேகம் முன்னிலும் அதிக வலுப்பெற்றது.

இதையெல்லாம் கவனிக்காதவராக ஜீன்வால்ஜின் தன்னுடைய பாதையில் பயணத்தைத் தொடர்ந்தார்.

13

1821-ம் ஆண்டின் ஒருநாள் விடிகாலைப் பொழுது துயரத்துடன் விடிந்தது. காலைப் பத்திரிகைகள் அந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன.

திக்னே நகரில் வசிக்கும் பியன்வென் பிஷப் (மான்சிஞ்சூர் மிரியன், பாதிரியார்) இறந்துவிட்டார் என்பதுதான் அந்தச் செய்தி.

அந்தச்செய்தி ஜீன்வால்ஜினை நடுங்கவைத்தது என்றே சொல்லலாம். தாங்க முடியாத சோகமும், மன அழுத்தமும், அந்த மனிதனை முற்றிலும் செயலற்றவனாகவும், ஊமையாகவுமே மாற்றிவிட்டன.

மறுநாள் முற்றிலும் கறுப்பு உடையில், மிகுந்த துயரத்துடன் நகரசபைக்கு வந்த மேயரிடம் எல்லோருமே இப்படிக் கேட்டார்கள்:

“சார், உங்களது உறவினரா அந்த பியன்வென் பிஷப் (பாதிரியார்)?”

“இல்லை! ஒரு காலத்தில் நான் அவருடைய ஊழியனாக இருந்தேன்!”– மேயர் பதிலளித்தார்.

அதன் பிறகு யாரும் வேறு எதுவும் கேட்கவில்லை. மேயரின் மற்றொரு இயல்பான குணம், அவருடன் தொடர்புள்ள மனிதர்களின் கவனத்தைக் கவர்ந்திருந்தது.

சாவோயா நகரிலிருந்து வரும் தொழிலாளிகளிடம் பிரத்தியேகமான பரிவு காட்டுவதுடன், அந்தப் பகுதியிலிருந்து வரும் இளைஞர்களிடம் அவர்களது பெயரைக் கேட்டுவிட்டு, பரிசாகவே அவர்களுக்கு நிறையப் பணமும் கொடுத்தது. இதை அவர் ஒரு வழக்கமாகவே பின்பற்றி வந்தார்.

தொழிற்சாலையின் புகைபோக்கிக் குழாயைச் சுத்தம் செய்யப்பெரும்பாலும் அந்த ஊர்க்காரர்கள்தான் வந்தனர். சாவோயா நகரிலிருந்துதான் வருகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டால் மடலின் அவர்களைப் பிரத்தியேகமாகக் கவனிப்பதும், வழக்கத்தைவிட அதிகமான கூலியும் அதற்கும் மேலாகப் பரிசுகளையும் கொடுப்பதால், அடிக்கடி அந்தப் பகுதியிலிருந்து இளைஞர்கள் வந்தனர். வேலை செய்தாலும், இல்லாவிட்டாலும் கூலி பெற்றுச் சென்றனர்.

இத்தகைய குறிப்பிடத்தக்க இயல்புகளும், அசாதாரணமான உடல் வலுவும் மக்கள் மத்தியிலேயே அவரைப்பற்றிப் பல்வேறு ஊடகங்கள் ஏற்படக் காரணமானது.

அப்படிச் சந்தேகப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் இன்ஸ்பெக்டர் ஜாவர்.

14

மிஸ்டர் மடலினின் கடந்த கால வரலாறு குறித்து ஜாவருக்கு ஏராளமான சந்தேகங்கள் ஏற்பட்டிருந்தன. வெகு காலத்துக்கு முன்பாக இந்த மனிதரை எங்கேயோ சந்தித்திருக்கிறோம் என்ற உறுத்தல் போலீஸ் இன்ஸ்பெக்டரான ஜாவரை அரித்துக்கொண்டே இருந்தது. தனது பழைய சந்திப்பு எந்த இடத்தில், எப்போது, எப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் என்பதெல்லாம் எவ்வளவு முயன்றும் அவரது நினைவில் எழவே இல்லை.

மாலை வேளைகளில் மடலின் காலாற உலாவப் போகும் போதும், வழியில் தென்படும் நண்பர்கள், அறிமுகமானவர்களிடம் வெகுசாதாரணமாக நின்று பேசுவதும் வழக்கம். அப்பபடிப்பட்ட வேளைகளில் தெரு போன்ற பொது இடங்களில் உத்தியோக நிமித்தமாக இன்ஸ்பெக்டர் ஜாவரும் சில வேளைகளில் தட்டுப்படுவதுண்டு. ஒரு கட்டத்துக்குப் பிறகு ஜாவர் தணிக்க முடியாத தன்னுடைய சந்தேகத்தை அகற்றும் பொருட்டு முடிந்த இடங்களிலெல்லாம் அவரைப் பின்தொடர்வது ஒரு வழக்கமாயிற்று.

ஓவர் கோட் அணிந்து, கையில் மலாக்கா பிரம்பு ஒன்றை ஏந்தி, தொப்பியைத் தாழ்த்தியபடி ஒன்றும் தெரியாதவரைப் போல் மடலினைத் தொடரும், ஜாவரின் உள்ளம் அப்போதும் ஒரே கேள்வியையே தனக்குத் தானே கேட்டுக்கொண்டிருக்கும். 'யார் இந்த மனிதர்? எங்கே சந்தித்திருக்கிறோம் இவரை?''

இன்ஸ்பெக்டர் ஜாவர் மாண்ட்ரிஸர்மாருக்கு மாற்றலாகி வந்து அதிக நாள்கள் ஆகவில்லை. திடுமென்றுதான் அந்த நகருக்கு மாற்றப்பட்டார். எனவே உடனடியாக மடலினைப் பற்றி அதிகமாக எதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

ஜாவருக்கு ஏறத்தாழ நாற்பது வயது இருக்கலாம்.

உண்மையைச் சொன்னால் ஜாவர் பிறந்ததே சிறைச் சாலைக்குள்தான். அவரது தாய், மனிதர்களின் முகம் மற்றும் கைரேகைகளைப் பார்த்து ஜோஸியம் சொல்பவர். அவரது அப்பாவோ ஒரு கிரிமினல் குற்றவாளி. எனவே இந்தச் சமூகத்தால் தான் ஒதுக்கப்பட்டவன் என்ற தாழ்வு மனப்பான்மையோடுதான் ஜாவர் வளர்ந்தார். அதை ஈடு செய்வது போல் மொத்த சமூகமும் தன்னை அங்கீகரிக்க வேண்டும். எல்லோரும் தன்னைப் பாராட்டவும் புகழவும் வேண்டும் என்கிற அளவு கடந்த ஆசை ஜாவரிடம் ஆரம்பத்திலிருந்தே மேலோங்கியிருந்தது.

மனத்தில் இப்படியொரு லட்சியத்தை வரித்துக் கொண்டதால், அதை நோக்கி முன்னேறும் முகமாக ஆரம்பத்திலிருந்தே ஜாவர் மிகவும் கடுமையாக உழைத்தார்; படிப்படியாக முன்னேறினார்.

ஒரு போலீஸ்காரராகப் பணியில் சேர்ந்து கடின உழைப்பு. கடுமையான கண்டிப்பு போன்றவற்றின் மூலம் விரைவிலேயே காவல்துறை உயரதிகாரிகளின் மதிப்பையும் அங்கீகாரத்தையும் பெற்றார். இவையே வெகு விரைவில் அவரை ஒரு இன்ஸ்பெக்டராகவும் மாற்றியது. ஒரு போலீஸ்காரர்

என்ற முறையில் அவர் அதிகமாகப் பணியாற்றியது சிறைக் கூடங்களில்தான். கண்டிப்பும், நிர்த்தாட்சண்யமான நடவடிக்கைகளும். சட்டத்தைப் பாதுகாப்பதில் சுயமாகவே மனத்தில் ஏற்பட்டிருந்த ஈடுபாடும் சிறையில் மற்றவர்களிடமும் அவரைப் பற்றி ஒருவிதமான பயத்தையே ஏற்படுத்தியிருந்தன.

தோற்றத்திலும், குணாதிசயங்களிலும் வித்தியாசமான ஒரு மனிதராக இருந்தார் ஜாவர். சற்றுப் பதிந்த சப்பையான மூக்கு, அகன்று விரிந்த மூக்குத் துவாரங்கள், இருபக்கக் கன்னங்களையும் மறைக்கும் அடர்த்தியான அகன்ற மீசை. சிரிக்கும்போது பற்களுடன் ஈறுகளும் வெளியே தெரியும். பனங்காய் போன்ற சிறிய தலைப்பகுதி கொண்ட ஜாவரின் முரட்டுத்தனமான நீண்ட தலைமுடி அடிக்கடி முகத்தில் விழுந்து மறைப்பதுண்டு.

சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்து குற்றவாளியைக் கையும் களவுமாகப் பிடிக்கும் இயல்பு உள்ளவர் ஜாவர். இது போன்ற முயற்சிகளுக்காக எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருந்தாலும் நாள்கணக்காக ஊண் உறக்கமின்றி அலைய நேர்ந்தாலும் அதையெல்லாம் சற்றும் பொருட்படுத்தாதவறும் கூட! ஒரே ஒரு தடவை அவரது கண்ணில் பட்டு விட்ட குற்றவாளியை எத்தனை வருடங்கள் ஆனாலும் சுலபத்தில் மறக்கக் கூடியவரல்ல என்பது. ஊரார் ஆள்கள் பரவலாகப் பேசிக்கொள்ளும் விஷயம்.

தேவை ஏற்படும் பட்சத்தில் சொந்தத் தாயைக்கூட நீதிமன்றத்துக்கு இழுத்துச் செல்வார் என்றும், தந்தையென்றும் பாராமல் சிறைக்குள் தள்ளவும் தயங்காத மனிதாபிமானமே இல்லாத கடமை வீரன் ஜாவர் என்றும் ஒருமித்த குரலில் கூறுகின்றனர்.

கருணை என்கிற உணர்வு மனிதர்களிடம் உள்ளதாகவே ஜாவருக்குத் தெரியாது.

இப்படிப்பட்ட ஜாவரின் கழுகுக் கண்கள்தான் எப்போதும் மேயர் மடலினைத்தொடர்ந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு அசைவையும் அவை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தன. மடலினுக்கோ இதைப் பற்றி எதுவுமே தெரியாததால், எந்த விதமான சந்தேகமும் எழவில்லை. தான் இன்ஸ்பெக்டரின் சந்தேகத்துக்கு இரையாகிக் கண்காணிக்கப்படுகிறோம் என்பதற்கு ஏதாவது ஓர் அடையாளம் தட்டுப்பட்டிருந்தால், அவர் எச்சரிக்கை அடைந்திருக்கலாம். ஆனால், அப்படியொரு வாய்ப்பு அதுவரை

ஏற்பட்டதில்லை. மாறாக அவர் ஜாவரைச் சொந்தச் சகோதரன் போலவோ, நெருங்கிய நண்பனைப் போலவேதான் மதித்து, அன்பு பாராட்டி வந்தார்.

ஜாவர் அடிபட்ட நாகத்தைப் போல் பழிவாங்கச் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தார். உறங்கும்போதுகூட மேயரின் பின்னணியை ஆராயவே அவர் மனம் விழைந்தது. கடைசியில் ஒருநாள் அவர் தனக்குத்தானே சொல்லிக் கொண்டார். “அவன் யாரென்று இப்போது எனக்குத் தெரிந்துவிட்டது!”

தன்னுடைய மனத்துக்குத் தெரிந்த உண்மையை அவர் யாரிடமும் சொல்லவில்லை. தனது சந்தேகங்கள் யாவும் சரியானதுதான் என்பது நிரூபணமாகும் வரை, அதை வேறு எவரிடமும் சொல்லக்கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வும் அவரிடம் அதிகமாகவே இருந்தது.

அதுதான் ஜாவரின் இயல்பு!

ஒருநாள் மேயர் மடலினுக்கு, ஜாவரின் நோக்கத்தையும், அவருக்குத் தன்மீதுள்ள சந்தேகத்தை உணரக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

மிஸ்டர் மடலின் கூழாங்கற்கள் பதிக்கப்பட்ட சாலை ஒன்றில் நடந்து கொண்டிருந்தார். சற்றுத் தொலைவில் ஒரு வண்டியும் அதை இழுத்து வந்த குதிரையும் விழுந்து கிடப்பதைக் கண்டார். வண்டிக்கும் சாலைக்கும் நடுவே மனிதன் ஒருவன் அகப்பட்டிருப்பதையும் கவனித்தார். கல்லில் காலிடறி விழுந்ததால் குதிரையின் கால் எலும்பு உடைந்து போயிருந்தது. எனவே குதிரை எவ்வளவோ முயன்றும் அதனால் எழுந்து நிற்க இயலவில்லை. மட்டுமின்றி வேதனையால் துடித்துக்கொண்டும் இருந்தது. தரையில் விழுந்திருந்த மனிதனின் மார்பு மீதுதான் வண்டியின் முழுபாரமும் அழுத்திக் கொண்டிருந்தது. சக்கரம் சரியாக அவன் மீது பொருந்தி அவனை எழுந்திக்க விடாதபடி அழுத்திக் கொண்டிருந்தது.

அதற்குள் விபத்தை வேடிக்கை பார்க்க மனிதக் கூட்டம் சேர்ந்துவிட்டது.

வண்டிக்குள் ஏதோ சரக்குகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

வண்டிக்குக் கீழே அகப்பட்டுக் கொண்டவன் உரத்த குரலில் “ஐயோ அம்மா” என்று அலறி வேதனையால் துடித்து, எதையெல்லாமோ பிதற்றிக் கொண்டிருந்தான். அந்தக் குரல் கேட்பவரிடம் இரக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. ஒரு சில மனிதர்கள், குடை சாய்ந்துவிட்ட

வண்டியை நிமிர்த்த என்னென்னவோ முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால், எதுவும் பலனளிக்கவில்லை!

அந்தக் காட்சியைக் கண்டவுடன் ஜாவர் வண்டியை உயர்த்துவதற்காக ஜாக்கி [பளுவை உயர்த்தும் ஒருவகை இயந்திரம்] யைக் கொண்டுவருமாறு தனது ஆள்களிடம் சொல்லியனுப்பினார். ஜாக்கி வருவதுவரையில் தாம் எதுவும் செய்வதற்கு இல்லையென்பதால் மேற்கொண்டு நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

அங்கிருந்த யாரிடமாவது ஜாக்கி உள்ளதா என்று மேயர் கேட்டார். இல்லை என்றும், கொண்டு வருவதற்காக ஆள் போயிருக்கிறது என்றும் தகவல் சொன்னார்கள். ஜாக்கி வந்து அதன்பிறகு வண்டியை உயர்த்துவதற்குள் அடியில் அகப்பட்டிருப்பவரின் உயிர் போய்விடும் என்று மடலினுக்குப் புரிந்தது.

வண்டிக்கும் சாலைக்கும் நடுவே ஓர் ஆள் நுழைவதற்குள்ள இடைவெளி இருந்தது. அதற்குள் நுழைய யாராவது தயாரா என்று மேயர் கேட்டார்.

அந்தக் கேள்விக்கு யாரும் பதிலளிக்கவில்லை. அப்படி யாராவது முன்வந்து வண்டியை உயர்த்தி, அகப்பட்டிருக்கும் மனிதனைக் காப்பாற்றினால், காப்பாற்றிவருக்குத் தன்னுடைய சார்பாக இருபது தங்க நாணயங்கள் தருவதாகக் கூறினார். அதற்கும் எந்தவிதமான எதிர்விளைவும் ஏற்படவில்லை.

அப்போது ஜாவர் கூறினார்: “இங்கு இருப்பவர்களுக்குத் தைரியமோ, மனஉறுதியோ இல்லாமல் இல்லை. ஆனால் அதற்குரிய உடல் வலு இல்லை என்பதுதான் உண்மை! என்னுடைய வாழ்க்கையில் இதுபோன்ற பளு நிறைந்த வண்டியை உயர்த்தக்கூடிய ஒரே ஒரு மனிதனைத்தான் நான் சந்தித்திருக்கிறேன். அந்த நபர் டியோலன் நகரில் சிறைப்பட்ட ஒரு குற்றவாளி!”

மேயர் மடலின் ஒருகணம் அதிர்ந்தார். அதற்குள் வண்டிக்கு அடியில் அகப்பட்டிருந்த மனிதன் தன்னுடைய மொத்த வலுவையும் ஒன்று திரட்டி உரத்த குரலில் அலறினான்.

“ஐயோ கடவுளே, இங்கு என்னைக் காப்பாற்றக் கூடியவர் யாருமில்லையா?” என் உயிர் போய்க் கொண்டிருக்கிறது!”

அவன் திரும்பத் திரும்ப அதையே சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தான்.

மடலின் ஒரு விநாடி தயங்கினார். பிறகு எதுவும் பேசாமல், முழந்தாளிட்டு வண்டியின் அடியில் நுழைந்தார்.

“ஐயோ மேயர்… மேயர் மடலின்… நீங்களும் வண்டிக்கு அடியில் அகப்பட்டு இறக்க நேரிடும். வேண்டாம்… நீங்கள் போக வேண்டாம்!”

யார் யாரெல்லாமோ உரத்த குரலில் அலறினார்.

மடலின் அந்த எச்சரிக்கை வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. அங்குலம் அங்குலமாக நகர்ந்து இடைவெளிக்குள் ஊடுருவினார். அதன் பிறகு விரைவிலேயே அவரது தோளில் வண்டிச் சக்கரம் பதிந்திருப்பதைக் கண்டனர்.

அவர் மெதுவாக உயர்ந்தார். வண்டியும் அவர் கூடவே உயர்ந்தது. சட்டென்று வண்டி தாழ்ந்தது. பாரம் அதிகம் என்றும் அதனால் மேயரால் அதை உயர்த்த முடியாது என்றும் பார்வையாளர்கள் நினைத்தனர். மூச்சை இழுத்துப் பிடித்தவாறே நடப்பதைக் கவனித்தனர்.

திரும்பவும் வண்டிச் சக்கரங்கள் உயர்ந்து தாழ்ந்தன. ஆள்களின் மத்தியிலிருந்து பயத்தை வெளிப்படுத்தும் குரல் உயர்ந்த, ஆனால், மூன்றாவது முறை வண்டிச் சக்கரங்கள் உயர்ந்த போது கூடவே மேயரும் நிமிர்ந்து எழுந்து நிற்பதைக் கண்டனர். உடனே சூழந்திருந்தவர்கள் வண்டிக்கு அடியில் அகப்பட்டிருந்த கிழவரை வெளியே இழுத்துப் போட்டனர். மடலின் கவனமாக வண்டியை நிறுத்திவிட்டு குனிந்தவாறே வெளியில் வந்தார்.

மேயரின் உடலெல்லாம் அழுக்கு ஏகத்துக்குப் படிந்திருந்தது. அவரது கோட்டு ஒன்றிரண்டு இடங்களில் கிழிந்திருந்தது. அவரைப் பார்ப்பதற்கே என்னவோ போலிருந்தார்.

விழிகளில் நிறைந்த நீருடன் பொதுமக்கள் மேயரை மனமார வாழ்த்தியதுடன், பலவாறாகப் புகழ்ந்தனர்.

“கடவுள் தான் நேரில் வந்து என்னைக் காப்பாற்றியிருக்கிறார்!”– ப்ளாச்சுலாண்ட் என்ற பெயருள்ள கிழவன் மேயரின் கால்களில் விழுந்து இருகைகளாலும் அதை இறுகப் பற்றியபடி முத்தமிட்டுச் சொன்னான்.

கிழவன் அந்த விபத்திலிருந்து உயிர் பிழைத்தான் எனினும், காலில் எலும்புகள் உடைந்ததால் ஊனமுற்றவனாகிப் போனான். வெகு

காலத்துக்குப் பிறகு பாரீஸ் நகரில் ஒரு தோட்டக் காரனாக அந்தக் கிழவனை மடலின் சந்திக்க நேர்ந்தது...

15

ஜீன்வால்ஜின், மான்ட்ரியூஸர்மார் மேயராகத் தொடர்ந்தார். இன்ஸ்பெக்டரின் சந்தேகத்துக்கு ஆளாகி, அவரது கண்காணிப்பும் தொடர்ந்த இந்தச் சூழ்நிலையில்தான் ஃபான்டெயின் வேலை தேடி அந்த ஊருக்கு வந்து சேர்ந்தாள். வெகு காலமாக அவளுக்கு அந்த ஊருடன் எந்த விதமான தொடர்பும் இல்லாமல் இருந்ததால், ஃபான்டெயினைத் தெரிந்தவர்களாக அங்கு யாருமே இருக்கவில்லை!

எங்கெங்கோ வேலை தேடி அலைந்தும், நல்ல வேலை எதுவும் அவளுக்கு கிடைக்கவில்லை. கடைசியில் அதிருஷ்டம் அவளுக்குக் கைகொடுத்தது. மிஸ்டர் மடலினுக்குச் சொந்தமான தொழிற்சாலையிலேயே வேலைக்குச் சேர்ந்தாள். சந்தேகத்துடன் தான் அங்கு வேலை கேட்டாள்.

தனக்கு முன்பாக நின்று கொண்டிருக்கும் பெண்ணை ஒரு தடவை ஊன்றிப் பார்த்துவிட்டு, பெண்கள் வேலை செய்யும் பிரிவில் அவளுக்கும் ஒரு வேலை போட்டுக் கொடுத்தார். “நீங்கள் நாளை முதல், இந்தத் தொழிற்சாலையின் பெண்கள் பிரிவில் வேலை செய்யலாம்!” மடலின் கூறினார்.

அதுவரை தையல் வேலை மட்டுமே செய்துவந்த ஃபான்டெயினுக்கு, புதிதாகக் கிடைத்த வேலையில் எந்தவிதமான அனுபவமும் கிடையாது. எனவே ஆரம்பத்தில் அவளுக்கு வழங்கப்பட்ட ஊதியமும் மிகக் குறைவாக இருந்தது. அந்த வருமானம் அவளது பசியை ஆற்றிக் கொள்ளவும். பேராசை நிறைந்த தெனார்டியர் தம்பதியருக்கு தன் மகளைப் பராமரிப்பதற்காகக் கொடுப்பதற்குமே சரியாக இருந்தது.

தனக்கு ஒரு குழந்தை இருப்பதாக அவள் யாரிடமும் சொல்லவில்லை. எனவே, அந்த ஊரில் இருக்கும் யாருக்கும் அந்த ரகசியம் தெரியவும் இல்லை. வாரந்தோறும் அனுப்ப வேண்டிய பணத்தையும், கடிதத்தையும் தவறாமல் அனுப்பி வந்தாள். சில நேரங்களில், கடிதத்தையும் தவறாமல் அனுப்பி வந்தாள். சில நேரங்களில் தனது நிலையை எண்ணி, மறைவான ஓரிடத்தில் அமர்ந்து மனம்விட்டு அழுது தீர்ப்பாள்.

இதுபோல் அவள் அழுவதை அவளுடன் பணிபுரியும் சில பெண்கள் கவனித்து விட்டனர். அவள் எதற்காக அழுகிறாள் என்று அவர்கள் தங்களுக்குள்ளேயே கேட்டுக் கொண்டனர். மாண்ட் ஃபாம்யூல் நகருக்கு அவள் அடிக்கடி கடிதமும், பணமும் அனுப்புவது தெரிந்தவுடன் அவர்களது சந்தேகம் வலுத்தது.

மற்றவர்களது அந்தரங்கங்களைத் தெரிந்துகொள்ளவும், அதன் பொருட்டு எவ்வளவு கஷ்டப்படும் விசாரணை செய்வதும் ஒருசிலரது பிறவிக்குணமல்லவா? ஃபான்டெயினுடன் பணி புரிந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அப்படிப்பட்டவர்களாகவே இருந்தனர். வெகு தந்திரமாகச் செயல்பட்டு, விரைவிலேயே அந்த ரகசியங்களைக் கண்டு பிடிக்கவும் செய்தனர்.

ஃபான்டெயினுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது என்றும் மான்ட்ஃபர்ம்யூலில் யாரிடமோ அது ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிந்தது. முதலில் இந்தச் செய்தி காதோடு காதாக வெறும் கிசுகிசுப்பாகவே பரவியது. ஆனால், விரைவிலேயே அது பரபரப்பான வடிவம் பெற்றுக் காட்டுத்தீ போல் படர்ந்தது.

ஃபான்டெயின் நெறிதவறிய ஒரு பெண் என்று குற்றம் சாட்டத் தொடங்கினர் பெண்கள்.

ஒருநாள் அவள் வேலை செய்து கொண்டிருந்த பகுதிக்கு வந்த கங்காணி, அவளிடம் வேலையை விட்டுப் போகுமாறு ஆத்திரத்துடன் சொன்னான். அவளால் முதலில் இதை நம்ப முடியவில்லை. மேற்கொண்டு வயிற்றுப்பாட்டுக்கு என்ன செய்வதென்றும் அவளுக்குப் புரியவில்லை. வாரந்தோறும் தன்னுடைய மகளைப் பராமரிப்பதற்கான தொகையையும் அனுப்பித் தரவேண்டியிருந்தது. இதற்கெல்லாம் என்ன வழி? இதையெல்லாம் வேறு எப்படிச் சமாளிப்பது?

நினைக்க நினைக்க அவளது நெஞ்சு வெடித்துவிடும்போல் தோன்றியது. இருப்பினும், பிரமாண்டமாக மோதும் விதியை நேரிட்டே ஆகவேண்டும்.

அவள் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்பட்டாள்.

கடைசியாக இரக்கத்துடன் கங்காணி தந்த ஐம்பது ஃபிராங்குகளுடன் அவள் தனது வீட்டுக்குள் அடைபட்டாள். அந்தத் தொகை அவளுக்குச்

சில நாள்கள் மட்டுமே உதவின. விரைவிலேயே அவள் மற்றொரு வேலை தேட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானாள்.

எத்தனையோ தொழிற்சாலைகளில் ஏறி இறங்கியும் வேலை கிடைப்பதாக இல்லை. அவளைப் பார்த்தவுடனே முகத்தில் அறைவது போல் வாசல் கதவை இழுத்துச் சாத்திக் கொண்டனர். இறுதியில் ராணுவத்துக்குச் சீருடை தைத்துக் கொடுக்கும் வேலையை ஏற்றுக்கொண்டாள். இரவும் பகலும் இடுங்கிய அந்த அறைக்குள் இருந்தவாறே துணிகளைத் தைத்தாள். முரட்டுத்தனமான காக்கித் துணிகளைத் தைத்ததால் ஆரம்பத்தில் அவளது கையின் தோல் உரியத் தொடங்கியது மட்டுமின்றி அதிகம் உழைத்ததால் வயதையும் மீறிச் சோர்வும் களைப்பும் அவளை ஆட்கொண்டது.

அப்படியெல்லாம் உழைத்தும்கூட வாரம் ஒன்றுக்கு அவளால் பத்து ஃபிராங்குகளை மட்டுமே சம்பாதிக்க முடிந்தது. அதில் எட்டு ஃபிராங்குகளை மகளுக்காக அனுப்பிக் கொடுக்க வேண்டியிருந்தது. எனவே வாரத்தின் பெரும்பாலான நாள்கள் அவள் பட்டினியுடன்தான் துணிகளைத் தைத்தாள்.

ஃபான்டெயினின் உடல்நிலை மிகவும் மோசமானது. நாளுக்கு நாள் அவளது கடன் தொகை அதிகரித்துக்கொண்டே வந்தது. அவளும் அந்த நிலையிலிருந்து மீள என்னவெல்லாமோ முயற்சி செய்தாள். ஒன்றுமே பலிக்கவில்லை!

அந்தச் சந்தர்ப்பத்தில்தான் தெனார்டியர் தம்பதியிடமிருந்து அவளுக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதத்தைப் படித்தவள், மணிக்கணக்கில் அப்படியே அசைவற்று உட்கார்ந்துவிட்டாள். விரல்கள் அந்தக் கடிதத்தை நெரித்துக் கசக்கியது. அவளது கண்ணீரால் கடிதம் நனைந்து ஊறியது.

கோசெட்டிக்கு உடனடியாகப் புது உடை அத்தியாவசியம் தேவை என்றும், கைவசமிருந்த பழைய உடைகள் கிழிந்துபோய் விட்டதால் புதிதாக நல்ல உடை வாங்கக் குறைந்தபட்சம் பத்து ஃபிராங்க்குகள் கூடுதலாகத் தேவையென்றும் கடிதம் தெரிவித்தது.

மாலை நேரம் வரையில் அழுதுகொண்டே இருந்த ஃபான்டெயின், ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாகச் சற்றுத் தொலைவிலிருந்த சிகையலங்காரக் கடைக்குச் சென்றாள்.

தங்க நிறமுள்ள, அழகான நீண்ட கூந்தலை கடைக்காரரிடம் அவிழ்த்துக் காட்டினாள். பின்புறத்தில் அவளது இடுப்பு வரை நீண்டு அடர்ந்து தொங்கியது அந்தக் கூந்தல்.

“என்ன விலை தருவீர்கள்?” – அவள் கேட்டாள்.

ஆசையோடு அவளது கூந்தலையே வாய் பிளந்தபடி பார்த்த கடைக்காரன் சொன்னான்: “பத்து ஃபிராங்குக்குகள்!”

ஒப்புக்கொண்டாள். அந்தத் தாய், தனது குழந்தைக்காக ஆசையுடன் தான் வளர்த்த தங்கநிற தலைமுடியைத் தியாகம் செய்தாள். சற்று நேரத்தில் அவளது முடிமொத்தமும் கத்திரிக்கப்பட்டு விட்டது.

பத்து ஃபிராங்க் விலையுள்ள ஃப்ளானல் உடை ஒன்றை வாங்கிஅவள தெனார்டியர் தம்பதியின் விலாசத்தை எழுதி அனுப்பிக் கொடுத்தாள். தன்னுடைய தலைமுடி போனாலும், ஆசை மகளின் உடம்பு குளிரால் நடுங்காமல், கதகதப்பாக இருக்குமே என்கிற திருப்தி அந்த தாயுள்ளத்தைத் திருப்திப்படுத்தியது.

ஆனால், இவ்வளவு கஷ்டப்பட்டு அவள் அனுப்பித் தந்த உடையை அவளது அன்பு மகள் கோசெட்டி அணியவேயில்லை என்பதுதான் பரிதாபம்!

திருமதி தெனார்டியரின் பெண் குழந்தைகளில் மூத்தவள் தான் அதைப் போட்டு அழகு பார்த்தாள்; அந்த உடம்மைபத்தான் அந்த உடை கதகதப்பு ஏற்றியது.

கோசெட்டி அதற்குப் பிறகும் குளிரில் நடுங்கி விறைத்தபடி சமையலறையின் ஈரநைப்பு நிறைந்த தரையில் சுருண்டு படுத்து உறங்கினாள்.

16

சில நாள்களுக்குப் பிறகு தெனார்டியர் தம்பதியிடமிருந்து ஃபான்டெயினுக்கு மற்றொரு கடிதம் வந்தது. கோசெட்டிக்கு ஜன்னிக் காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாகவும், சிகிச்சைக்குப் பணம் தேவைப்படுவதாகவும் கடிதம் குறிப்பிட்டது. உடனடியாகப் பணம் அனுப்பாவிடில் குழந்தை இறந்துவிடலாம் என்றும் எச்சரித்தது கடிதம்.

ஃபான்டெயின் குறிப்பிட்ட அந்தக் காய்ச்சல் பற்றித் தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் விசாரித்தாள். ஜன்னிக் காய்ச்சல் வந்தால், பெரும்பாலும் அந்த நோயாளி இறந்து போவதுதான் வழக்கம். நல்ல மருந்துகளும், கவனமான சிகிச்சையும் கொடுத்தால் ஒருவேளை நோயாளி பிழைக்கலாம் என்றும் அவரவர் தங்களுக்குத் தெரிந்ததைச் சொன்னார்கள்.

ஃபான்டெயின் அளவுக்கு அதிகமான பயத்துடன் நிம்மதியற்றவள் ஆனாள். தெனார்டியர் தம்பதி கேட்டபடி நாற்பது ஃபிராங்க்குகள் பணத்தை எப்படிச் சம்பாதிப்பது என்று யோசித்தாள். அவளுக்கு எந்த வழியும் புலப்படவில்லை.

அன்று மாலை நேரத்தில் அவள் கடை வீதிப்பக்கம் போனாள். ஓரிடத்தில் மனிதர்கள் கூட்டமாகக் கூடியிருந்தனர். அவளும் கூட்டத்தை நெருங்கி எட்டிப்பார்த்தாள் – என்னவென்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில், மருந்து வியாபாரி ஒருவர் வேடிக்கையாகப் பேசியபடி சுற்றியிருந்தவர்களைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தார். அந்த மருந்து வியாபாரி பல்வைத்தியரும்கூட. பல் நோயுடன் வருபவர்களது நோயைப் பரிசோதித்து பல்லைப் பிடுங்குவதோ, பல்போனவர்கள் வந்தால் புதிதாகப் பல் கட்டுவதோ அவரது வேலை.

முண்டியடித்து முன்னுக்கு வந்த ஃபான்டெயின், வியாபாரியின் உருவத்தைப் பார்க்க விரும்பினாள். அதே சமயம் வைத்தியரின் பேச்சு அவளுக்குச் சிரிப்பை ஏற்படுத்தவே சிரித்தாள். அந்தச் சிரிப்பை பல் மருத்துவரான வியாபாரி கவனித்தார். உடனே வியப்புடன் பேசத் தொடங்கினார்.

“ஆகா, எவ்வளவு அழகான பற்கள்! இதுபோன்ற பற்கள் இரண்டு கிடைத்தால் பதிலாக இரண்டு தங்க நாணயங்கள் தரத் தயாராக இருக்கிறேன்!”

ஃபான்டெயின் வெட்கம் கொண்டவளாக அங்கிருந்து ஓடி மறைந்தாள். நேராக வீட்டுக்கு வந்தவள் வெகு நேரம் யோசனையில் ஆழ்ந்தாள். அந்தச் சமயத்தில் அவளது தோழியான மார்கரெட், ஃபான்டெயினைப் பார்த்துவிட்டுப் போக வந்தாள்.

“மார்கரெட், இரண்டு தங்க நாணயங்கள் என்பது உண்மையில் எவ்வளவு மதிப்பு வாய்ந்தது?” என்று தோழியிடம் கேட்டாள் ஃபான்டெயின்.

“ஏறத்தாழ நாற்பது ஃபிராங்குகள் மதிப்பு வாய்ந்தது.”

“அப்படியானால், அது உண்மையிலேயே மதிப்புக்குரிய ஒரு தொகைதான்!”

சற்றுநேரம் மேற்கொண்டும் எதையெல்லாமோ பேசிக் கொண்டிருந்துவிட்டு மார்கரெட் விடைபெற்றாள். ஃபான்டெயின் அவசர அவசரமாகத் தனது வீட்டைப் பூட்டிக்கொண்டு, கடைவீதியில் சந்தித்த பல்வைத்தியனைத் தேடிப் புறப்பட்டாள்.

சில மணி நேரத்துக்குப் பிறகு களைப்புடனும், சோர்ந்து போன முகத்துடனும் அவள் தன்னுடைய வீட்டை அடைந்த போது அவளது மேல்வரிசைப் பற்களில் – முன்புறம் இருந்த இரண்டு காணாமல் போயிருந்தன. பதிலாக அவ்வப்போது ரத்தம் கலந்த உமிழ்நீரைத் துப்பிக் கொண்டிருந்தாள். அப்போது அவளது கைகளில் பளபளப்பான இரண்டு தங்க நாணயங்கள் மின்னின. அவள் தன்னிடமிருந்த கடைசிச் சொத்தையும் மகளுக்காகத் தியாகம் செய்து விட்டிருந்தாள்.

மேற்கொண்டு மகளுக்காகத் தியாகம் செய்ய அவளிடம் வேறு என்னதான் இருக்கிறது? அந்தப் பணத்தை அவள் தெனார்டியர் தம்பதிக்கு அனுப்பிக் கொடுத்தாள்.

உண்மையில் இது பேராசை பிடித்த தெனார்டியா தம்பதியின் வஞ்சகத் திட்டம்தான். கோசெட்டிக்கு உண்மையில் எந்தவிதமான நோயும் ஏற்பட்டிருக்கவில்லை. ஃபான்டெயினுக்குத் தன் மகளின் மீதுள்ள பாசத்தைப் பற்றித் தெரிந்து கொண்ட தெனார்டியர் தம்பதி, அவளை ஏமாற்றுவதற்காகவே போட்ட ஒரு திட்டம்தான் ஜன்னிக் காய்ச்சல் என்று எழுதப்பட்ட கடிதம்.

மாதம் ஒன்று கழிந்தது.

ஒருநாள் வேலை எதுவும் இல்லாததால் ஏதோ ஒரு தெருவில் யோசனையில் ஈடுபட்டவாறே நடந்துகொண்டிருந்தாள். தன்னுடைய துரதிருஷ்டமான வாழ்க்கையையும், சொந்தக் குழந்தையை ஒரு தடவை நேரில் சென்று சந்திக்கக்கூட முடியாத நிலையையும் குறித்துத் தன்னைத்தானே நொந்து கொண்டு, இன்னதென்று விவரிக்க முடியாத மனநிலையுடன், ஏறத்தாழப் பைத்தியம் பிடித்தவளைப் போல் நடந்துகொண்டிருந்தாள்.

அதே தெருவின் ஓரமாக அழகான ஓர் இளைஞன். வசதியான வீட்டுப் பையன் தெருவில் தனியாகச் செல்லும் பெண்களைக் கேலி செய்து

கொண்டிருந்தான். ஒரு பைத்தியக்காரியைப் போல் தன்னைக் கடந்துபோன ஃபான்டெயினை நோக்கி அவன் உரத்த குரலில் சொன்னான்:

“என்ன, மொட்டைச்சி இன்றைக்கு உன் துணைக்கு யாரும் அகப்படவில்லையா? தலை முடியும் இல்லை! பல்லும் போய்விட்டது. இனிமேல் உன்னைத்தேடி எவன் வருவான்?”

அத்துடன் நிற்காமல் தொடர்ந்து ஆபாசமான வார்த்தைகளைப் பேசி; உரத்த குரலில் சிரித்தபடி அவளைக் கேலி செய்தான்.

ஒரு சிறுத்தை மாதிரி ஃபான்டெயின் அவன் மீது சீறிப் பாய்ந்தாள். அவளது கைகள் அவனது கழுத்தை இறுகப் பற்றியது. என்ன பேசுகிறோம் என்பது புரியாமல் கண்டபடி அவனைத் திட்டினாள். தன்னுடைய கூர்மையான விரல் நகங்களால் அவனது முகத்தில் பிறாண்டினாள்.

வலி தாங்காமல் உரத்த குரலில் அவன் அவளைப் பதிலுக்குத் திட்டியவாறே அவளிடமிருந்து திமிறித் தப்பித்து ஓட முயன்றான். ஆனால், அவளது பிடி ‘உடும்புப்பிடி’போல் உறுதியாக இருந்தது.

அதற்குள் அந்த வழியாக வந்தவர்கள் கூட்டம் சேர்ந்து, அவளிடமிருந்து அவனைப் பிரித்துவிட்டுக் காப்பாற்றினர். அந்தக் கூட்டத்திலிருந்து முரடனாகத் தோற்றமளித்த ஒருவர் சட்டென்று முன்புறம் வந்து வலுவுடன் அவளது கையைப் பிடித்தான். அவரது முகத்தோற்றம் பயமேற்படுத்தக் கூடியதாக இருந்தது. அவரது குரல் ஒரு கட்டளை மாதிரி ஒலித்தது.

“உம்....நட....”

திடுக்கிட்டவளாக அவள் அந்தக் குரலுக்கு உரிய மனிதனைப் பார்த்தாள். இரத்தச் சிவப்பு நிறமான பெரிய உருண்டைக் கண்களுடனும், சப்பையான மூக்குடனும், வட்டமான முகத்துடனும் இருந்த தோற்றம் அவளை நடுங்க வைத்தது. அவரது பிடி உருக்குப்பிடி போல் உறுதி வாய்ந்ததாக இருந்தது. அந்தப் பிடியிலிருந்து அவ்வளவு சுலபத்தில் விடுபட முடியாதென்று அவளுக்குப் புரியவே செய்தது.

அவள் உடல் பயத்தால் நடுங்கியது.

“நடடி பைத்தியக்காரி, உன் பைத்தியத்தைச் சீக்கிரமாகவே குணப்படுத்துகிறேன். கொஞ்ச நாளாகவே நான் உன்னைக் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். நடடி கெட்டுப் போனவளே!”

அந்த மனிதர் அவளைப் பிடித்து இழுத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார்.

அந்தக் காட்சியின் தொடர்ச்சியை வேடிக்கை பார்க்கப் பின்னாலேயே தொடர்ந்து வந்த கூட்டத்தையும் அவர் விரட்டியடித்தார்.

ஸ்டேஷனுக்கு வந்தவர், அவளை ஓர் அறையின் மூலையில் பிடித்துத் தள்ளிவிட்டு வழக்கைப் பதிவு செய்யும் புத்தகத்தைத் திறந்தார். எழுதத் தொடங்கினார்.

ஃபான்டெயின் நீர் வழியும் கண்களுடன் நடுங்கிய உடம்புடன் மரத்துப்போன மனநிலையோடு வேதனை பொங்கும் இதயத்துடன் அவரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“ஜாவர்!” – வறண்டுபோன அவளது உதடுகள் மெதுவாக முணுமுணுத்தன.

17

ஃபான்டெயினிடம் எந்தவிதமான கேள்வியையும் கேட்காமல்தான் இன்ஸ்பெக்டர் ஜாவர் பதிவுப் புத்தகத்தில் வழக்கைப் பதிவு செய்துகொண்டிருந்தார். காரணம் தெருவில் நடந்தது எல்லாவற்றையும் அவர் நேரடியாகவே பார்த்திருந்தார். எனவே அவளிடம் எதையும் விசாரிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை. எழுதி முடித்தபிறகு, அவளைப் பார்த்தவாறே அவர் சொன்னார்.

“ஆறுமாசம் சிறைக்குள் கிட!”

திடுக்கிட்டுப் போனவள் உரத்த குரலில் புலம்பத் தொடங்கினாள். “ஐயோ எஜமான்...ஆறு மாசமா?” ஆறு மாதங்கள் நான் சிறைக்குள் இருந்தால் என் குழந்தை என்ன ஆவாளோ? அவளை யார் கவனிப்பது?”

பரிதாபத்துக்குரிய அந்தப் பெண் முழங்காலால் நடந்தபடி ஜாவரின் கால்களைப் பிடித்துக் கெஞ்சினாள்.

“இன்ஸ்பெக்டர் சார், என் மீது கொஞ்சம் கருணை காட்டுங்கள். நான் எந்தவிதமான தவறு செய்யவில்லை. அவன் என்னிடம் மிகவும் ஆபாசமாகப் பேசினான். என் மீது சேறையும், பனிக்கட்டியையும் வீசி

எறிந்தான். எனக்குக் கோபம் வந்ததால் அவன் மீது பாய்ந்தேன். என்னைக் காப்பாற்றுங்கள். என்னை மன்னித்துவிடுங்கள். என்னுடைய குழந்தையைக் காப்பாற்றுவதற்காக நான் வேலை செய்தே தீரவேண்டும்.''

அவளது கண்களிலிருந்து இடைவிடாமல் நீர் வழிந்து கொண்டே இருந்தது. ஃபான்டெயினது கைகள் ஜாவரின் கால்களை அசையவிடாமல் இறுக்கிப் பிடித்தன. அவரது உடைகளில் அவள் முத்தமிடவும் செய்தாள்.

அவளது முறையிடும் கெஞ்சுதலும், பரிதாப நிலையும், ஜாவருக்குப் பதில் வேறு யாராவது ஒரு நபர் அங்கு இருந்திருந்தால், மனமிரங்கி அவளை விடுதலை செய்ய அதுவே போதும்தான். மன்னித்துவிட்டு, சரி... போய்த்தொலை என்று சொல்லியிருப்பார்கள். ஆனால், ஜாவரை அவை எதுவும் பாதித்ததாகத் தெரியவில்லை.

அந்த மனித இதயம் வைரத்தைவிடக் கடினமானதாக இருந்தது.

''போதும்...போதும்...இதுவரை கேட்டதெல்லாம் போதும். நீ ஆறுமாதம் சிறையில் கிடக்க வேண்டியதுதான்'' இன்ஸ்பெக்டர் திட்டவட்டமாகக் கூறினார்.

போலீஸ்காரர் ஒருவர் அவளைப் பிடித்து இழுத்தபடி சிறைவாசலை நெருங்கினார். ஆனால், அதே நேரம் சிறைவாசலில் நின்று அதுவரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மனிதர் ஒருவர், திடுமென்று போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்.

''இன்ஸ்பெக்டர்... சற்றுப் பொறுங்கள்''– வந்தவர் கூறினார். அவரது குரல் உறுதியாகவும் அதிகாரம் கலந்ததாகவும் இருந்தது.

''யார் மேயர் மடலினா? மன்னிக்க வேண்டும். நடந்தது என்னவென்று...''– ஜாவர் மரியாதையுடன் சூழ்நிலையை விளக்க முயன்றார்.

''அந்தப் பெண்மணியை விடுதலை செய்யுங்கள்!''– மிஸ்டர் மடலின் கேட்டுக்கொண்டார்.

''முடியாது சார். அவள் ஓர் இளைஞனைக் கண்டபடி தாக்கியிருக்கிறாள். அவளுக்குத் தண்டனை வழங்காமல் இருக்க முடியாது.''

''நானும் நடந்தது எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். அவன்தான் இந்தப் பெண்ணை முதலில் அவமானப்படுத்தியவன். முதலில் அவளை விடுதலை செய்யுங்கள். பிறகு மற்றவற்றைப் பேசலாம்.''

“மேயர் சார், நான் என்னுடைய கடமையைச் செய்கிறேன். இவள் குறைந்தபட்சம் ஆறு மாதமாவது சிறையில் கிடக்க வேண்டும்!”

“கூடாது என்று நான் சொல்கிறேன். அவள் ஒருநாள்கூட சிறையில் இருக்கப் போவதில்லை. அதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.”

“மேயர் மடலின்!”

ஃபான்டெயின் அந்தப் பெயரைத் திரும்ப திரும்ப உச்சரித்தாள். அவளது முகம் கோபத்தால் சிவந்தது. மனம் வைராக்கியத்தால் துடித்தது. தன்னை வேலையிலிருந்து நீக்கியது இந்த மனிதன்தானே! அதனால்தானே தன்னுடைய மகளுக்குக் காலாகாலத்தில் பணம் அனுப்ப முடியாமல் இந்தப் பாடுபட்டு மூச்சுத் திணற வேண்டியிருந்தது. சற்று நேரத்துக்கு முன்னால் யாரோ ஓர் இளைஞனிடம் சண்டைபோட நேர்ந்ததும் அதனால்தானே! உண்மையைச் சொன்னால் – இந்த மனிதன்தானே தனது கஷ்டங்களுக்கெல்லாம் காரணம்! அவர் மட்டும் தன்னைத் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றாமலிருந்தால் இவ்வளவெல்லாம் நடந்திருக்குமா என்ன?

அவள் பல்லைக் கடித்தபடி சாபம் கொடுப்பவளைப் போல் மோசமான வார்த்தைகளைப் பேசிக்கொண்டு மடலின் பக்கமாக வந்தாள். இன்ஸ்பெக்டர் ஜாவர் அங்கு இருப்பதைக் கூடப் பொருட்படுத்தாமல் மடலினை நெருங்கி அவர் முகத்தில் காறித்துப்பினாள்.

ஜாவரும் போலீஸ்காரர்களும் ஒரு கணம் திடுக்கிட்டுப் போனார்கள். ஆனால், மேயர் மடலினிடம் எந்தவிதமான உணர்வு மாற்றமும் ஏற்படவில்லை. ஒரு பைத்தியக்காரியைப் போல் அவள் எதையெல்லாமோ பிதற்றிக்கொண்டே இருந்தாள். அவர் மௌனமாக அதையெல்லாம் கேட்டுக்கொண்டே இருந்தார்.

மடலின் நிதானமாகத் தனது கைக்குட்டையை எடுத்து முகத்தை அழுத்தித் துடைத்தார்.

இன்ஸ்பெக்டர் அடக்கமாட்டாத ஆத்திரத்துடன் அவளை அடிப்பதற்காகக் கையை ஓங்கினார். மேயர், அவரது கையைப் பிடித்துத் தடுத்தபடி பேசினார்:

“வேண்டாம், ஒன்றும் செய்யாமல் அவளை விட்டு விடுங்கள். இப்போதுதான் நான் என்னுடைய தவறுகளைப் புரிந்து கொண்டேன்.”

“இருக்கலாம் சார், இவளை விட்டுவிடுவது சாத்தியமானதல்ல. இவள் இப்போது எங்கள் கண் முன்னாலேயே உங்களையும் அவமானப்படுத்தியிருக்கிறாள்”– ஜாவரின் குரல் சிங்கம் ஒன்று கர்ஜிப்பது போல் முழங்கியது.

“அதற்கென்ன? அது என் தொடர்பான விஷயமில்லையா? அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் வருத்தப்பட வேண்டாம்!” மிகவும் சாதாரணமாகப் பேசினார்.

“எப்படியிருந்தாலும் நான் என்னுடைய கடமையை நிறைவேற்றியே தீரவேண்டும். என்னைத் தடுக்காதீர்கள்!” ஜாவர், ஃபான்டெயினைப் பாய்ந்து பிடிக்க முயன்றார்.

“கொஞ்சம் பொறுங்கள். நான் சொல்கிறேன். நீங்கள் அவளைத் தொடக்கூடாதென்று. முதலில் அவளை விடுதலை செய்து வெளியே அனுப்புங்கள். இது மேயரின் கட்டளை. ஞாபகமிருக்கட்டும்!”உரத்த குரலில் உறுதியாகக் கூறினார் மடலின்.

இம்முறை ஜாவர் மட்டுமின்றி ஃபான்டெயினும் ஒரு கணம் அசைவற்று மௌனமாக நின்றுவிட்டாள். அவளது வியப்புக்கு அளவே இல்லாமலிருந்தது. தான் வெறுப்புடனும் கோபத்துடனும் முகத்தில் காறி உமிழ்ந்த பிறகும் அந்த மனிதனின் பதில் நடவடிக்கை இப்படி இருக்கும் என்பதை அவள் எதிர்பார்க்கவில்லை!

அவளால் அதை நம்பவே முடியவில்லை.

இன்ஸ்பெக்டர் ஜாவர் அமைதியுடன் மேயதை ஒருகணம் உற்றுப் பார்த்துவிட்டுத் தலை தாழ்த்தியபடி வெளியேறினார்.

இந்தச் செயலால் வியப்பின் உச்சிக்கே சென்ற ஃபான்டெயின், பேச நா எழாதவளாக மேயரையும், ஜாவரையும் மாறி மாறிப் பார்த்தாள். தனது கௌரவம் மற்றும் வாழ்க்கையைப் பணயம் வைத்துக்கொண்டு அவ்வளவு நேரமும் அவர்கள் வாதாடியிருக்கிறார்கள் என்கிற உணர்வு தோன்றியவுடன் அவள் நிலைகொள்ளாமல் தவித்தாள்.

ஜாவர் வெளியே போனவுடன் மேயர் அந்தப் பெண்ணைப் பார்த்துப் பேசத் தொடங்கினார்.

“நீ சொன்னதையெல்லாம் நான் கவனித்தேன். உன்னை என்னுடைய தொழிற்சாலையிலிருந்து விலக்கிய விஷயம் இந்த நிமிடம் வரை எனக்குத் தெரியாது. நீ ஏன் இந்த விஷயத்தை உடனேயே என்னைச் சந்தித்துச் சொல்லியிருக்கக்கூடாது.? பரவாயில்லை. போனதெல்லாம் போகட்டும். மேற்கொண்டு நடக்க வேண்டியதை நான் சீர் செய்துவிடுகிறேன். நீ இனிமேல் உன் குழந்தையுடனேயே நிம்மதியாக வாழலாம். அதற்குத் தேவையான பணத்தை நானே தருகிறேன். நீ விரும்பாவிட்டால் இனிமேல் நீ வேலைகூடச் செய்ய வேண்டியதில்லை!

ஃபான்டெயின் வாயைப் பிளந்தபடி, அந்த மனிதர் பேசுவதையே கவனித்துக் கொண்டிருந்தாள் மௌனமாக.

மடலினின் வார்த்தைகள் அவளாலேயே நம்பமுடியாததாக இருந்தன. தனது மகளுடன் மகிழ்ச்சியாக வாழ்வது! ஆகா எப்படிப்பட்ட மகிழ்ச்சியான சேதி! என்ன ஒரு மனநிறைவு தோன்றுகிறது. அப்பாடா.... என்ன ஒரு நிம்மதி!

அவரைப் பார்த்து விக்கிவிக்கி அழ மட்டுமே அப்போது அவளால் முடிந்தது.

உணர்ச்சிகளால் சூழப்பட்டவளாக, மனத்தைக் கட்டுப்படுத்தும் வல்லமையை இழந்தவளாகத் தயங்கித் தயங்கி நடந்து மேயரின் இரண்டு கைகளையும் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டாள். பிறகு அந்த இரண்டு கைகளின் மீதும் தனது அதரங்களைப் பதித்தாள்.

நன்றியைத் தெரிவிப்பதற்கு அடையாளமாக அவள் அர்ப்பணித்த மனமார்ந்த முத்தங்கள்! மறுவிநாடி அவள் சுயநினைவு இழந்தவளாகத் தரையில் விழுந்தாள்.

மேயர் மடலினின் வலுவான கரங்கள் சட்டென்று இயங்கி அந்த உடல் தரையில் விழாதபடி பிடித்துக் கொண்டன.

18

மேயர் மடலின், ஃபான்டெயினை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று உள்நோயாளியாகப் படுக்க வைத்தார். அந்த மருத்துவமனையிலிருந்த கிறிஸ்தவ கன்யாஸ்திரீ நர்ஸுகளின் கனிவான உபசரிப்பு மற்றும் மருத்துவத்தின் உதவியால் அவளது கடுமையான காய்ச்சலும், வெகுகாலமாக இருந்த பிற நோய்களும் விரைவிலேயே விலகி

நலமடைந்தாள். நீண்டநாட்களுக்குப் பிறகு நிம்மதியாக உறங்கத் தொடங்கினாள்.

மறுநாள் மதியநேரத்தில்தான் அவள் கண்விழித்தாள். கண்ணைத் திறந்து பார்த்தபோது மேயர் தனது கட்டிலுக்கு அருகில் நின்று கொண்டிருப்பதுதான் முதலில் தட்டுப்பட்டது. கட்டிலுக்கு முன்பாகச் சாய்ந்து வைக்கப்பட்டிருந்த பெரிய சிலுவை வடிவத்தையே அந்த உருவம் ஆழ்ந்த சிந்தனையோடு கவனித்துக் கொண்டிருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

“நீங்கள் என்ன செய்கிறீர்கள்?”– அவள் மிருதுவான குரலில் கேட்டாள்.

“அந்தச் சிலுவையில் அறையப்பட்ட புனிதனான தேவபுத்திரனான ரத்தசாட்சியைப் பார்த்து மனமாரப் பிரார்த்தனை செய்கிறேன். உன் உடல் நிலை விரைவில் நலம் பெறவேண்டும் என்பதுதான் என் பிரார்த்தனையின் நோக்கம்! ஆமாம், இப்போது உடம்பு எப்படியிருக்கிறது?”

– கட்டிலை மிக நெருங்கி ஃபான்டெயினின் கையை மென்மையாகப் பற்றி மிருதுவாக வருடியவாறு தந்தைப் பாசத்துடன் ஈடான அன்புடன் கேட்டார் மேயர்.

“நன்றாக தேறியிருக்கிறேன். இப்போது எனக்கு எந்த நோயும் கிடையாது!”

“அளவுக்கு அதிகமாகக் கஷ்டப்பட்டிருக்கிறாய்!”– மடலின் அன்பு நிறைந்த தழுதழுத்த குரலில் கூறினார்: “இத்தனை நாளாக நாம் வாழ்ந்து வரும் நரக வேதனைகளிலிருந்து விடுபட்டு நீ சொர்க்கலோகத்தை நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறாய்!”– அவர் ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டபடியே கூறினார்.

முந்தைய நாள் இரவு ஃபான்டெயின் சுயநினைவிழந்துக் கிடந்தபோது மடலின், அவளது வாழ்க்கையின் அன்று வரையிலான நிகழ்ச்சிகளை ஆராய்வதில் ஈடுபட்டார். அவளுடைய அறையிலிருந்து கொண்டு வரப்பட்ட நாட்குறிப்பு மற்றும் கடிதங்களைப் படித்துப் பார்த்து அவளைப் பற்றிய எல்லா விவரங்களையும் முழுவதுமாகத் தெரிந்து கொண்டார் மடலின்.

உடனேயே அவர் தெனார்டியர் தம்பதிக்கு ஒரு கடிதம் எழுதினார். ஃபான்டெயின் அன்றுவரை அவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருந்த நூற்று இருபது ஃபிராங்க் பணத்தை அனுப்பிக் கொடுத்து கோசெட்டியை உடனே தன்னிடம் அனுப்பி வைக்குமாறு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

பணத்தின் மீது பேராசை கொண்ட தெனார்டியரும், அவனது மனைவியும் என்ன செய்யலாம் என்று யோசித்தனர்.

ஆகா, என்ன அதிர்ஷ்டம்! ஒன்றுமில்லாத இந்தப் பிச்சைக்காரப் பெண்ணுக்கு எங்கிருந்தோ ஒரு பணக்காரக் காவலாளி கிடைத்திருக்கிறான் என்று தோன்றுகிறது. எனவே, இந்தச் சந்தர்ப்பததை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் தேவையான பணத்தை அவனிடமிருந்து கறந்துவிடலாம். அதனால் கோசெட்டியை இப்போது அனுப்பி வைக்கக்கூடாது.

ஒரு தீர்மானத்துக்கு வந்தவர்கள் மேயர் கேட்டுக் கொண்டபடி கோசட்டியை அனுப்பி வைக்கவில்லை. அது மட்டும் இன்றி அவர்களுக்கு மருந்து மற்றும் உடைகள் வாங்கிக் கொடுத்துள்ள கணக்கின்படி மேலும் ஐந்நூறு ஃபிராங்க்குகள் இன்னும் தரவேண்டியுள்ளது என்றும் மற்றொரு கடிதம் எழுதி அனுப்பினர்.

இது உண்மையான கணக்கு அல்ல: தன்னை ஏமாற்றுகிறார்கள் என்பது மேயருக்குப் புரியவே செய்தது.

இருப்பினும், அந்தத் தொகையை அனுப்பிக் கொடுத்தார். இந்த முயற்சியும் வெற்றியடையவே அந்த வஞ்சகத் தம்பதி இதேபோல் ஒவ்வொரு முறையும் ஏதாவது தந்திரம் செய்து தங்களது தேவைக்கு ஏற்றபடி பணம் பறிக்கலாம் என்று திட்டமிட்டு மனக்கோட்டை கட்டினர்.

“சார், என் மகளை நான் எப்போது பார்ப்பேன்? அவளை எப்போது அழைத்து வருவீர்கள்?” ஃபான்டெயின், மேயதைக் காண நேரும்போதெல்லாம் துயரத்துடன் கேட்பாள்.

“அநேகமாக நாளைக்கே பார்க்கலாம்!”

அந்தப் பதிலைக் கேட்டதும் அந்த அப்பாவிப் பெண்ணின் முகம் மலர்ந்தது. அவளுள் இருந்த தாய்மை புளகாங்கிதமடைந்தது. விரைவிலேயே தனது மகளைக் காணப்போகிறோம் என்கிற நினைவில், அன்றுவரை அனுபவித்தறியாத மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்தது.

தன்னுடைய நோய்நொடிகள் எல்லாம் குணமாகி விட்டதாகவே அவள் நம்பினாள். ஆனால், உண்மை நிலை அதுவல்ல. வறுமையிலும், கடினமான உழைப்பில் இடைவிடாமல் ஈடுபட்டிருந்தாலும், நரக வேதனையான வாழ்க்கையை அனுபவித்தாலும் ஒருபோதும் குணப்படுத்த

முடியாத காசநோய் அவளைப் பீடித்திருந்தது. அந்த நோய் தனக்கு ஏற்படக்கூடும் என்று அவள் கனவில்கூட எண்ணியிருக்க மாட்டாள்! அவளது நுரையீரல் பகுதிகள் என்றோ சிதிலமடைந்து சல்லடை போல் ஆகியிருந்தன.

மருத்துவர்கள் கவனமான பரிசோதனைகளை மேற்கொண்ட பிறகே இந்த முடிவுக்கு வந்தனர்.

ஃபான்டெயினின் காசநோய், சிகிச்சை மூலம் குணப்படுத்திவிடக்கூடிய கட்டத்தைத் தாண்டி மிகவும் அபாயகரமான நிலைமையை அடைந்திருந்தது.

மேயர் மடலின், டாக்டர்களிடம் விசாரித்தபோது, அதிர்ச்சிகரமான இந்த உண்மையை அவர்கள் அவரிடம் தெரிவித்தனர்.

அதைக் கேள்விப்பட்டதும் அவர் ஒரு சில கணங்கள் அப்படியே உறைந்துபோனார். அவரது கண்கள் நீரால் நிறைந்தன. ஃபான்டெயினின் மரணம் வெகுதூரத்தில் இல்லை என்பதால், அவள் விரும்பியபடியே அவளது குழந்தையைக் கொண்டுவந்து காண்பிப்பதுதான் நல்லது என்று அவளைக் கவனித்த மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

அவர், ஃபான்டெயினிடம் சென்றபோது அவள் மிகவும் பலவீனமான குரலில் கேட்டாள்: “டாக்டர்கள் என்ன சொன்னார்கள்?”

“குறிப்பிட்டுச் சொல்லும்படியாக அதில் ஒன்றுமில்லை. உன்னுடைய குழந்தையைக் கொண்டுவந்து காட்டினால், உன் உடம்பு விரைவாகக் குணமாகலாம் என்று கூறுகிறார்கள்.”

“உண்மைதான். என் மகளைக்கண்ணாரக் கண்டால் எனது நோய் முழுமையாகக் குணமாகிவிடும். தெனார்டியர் தம்பதி என் மகளை ஏன் இன்னும் அனுப்பி வைக்காமல் இருக்கிறார்கள்?”

ஃபான்டெயினின் கைப்படவே ஒரு கடிதத்தை எழுதி வாங்கிக்கொண்டு மேயர் மடலினே அதற்காகப் புறப்பட்டார்.

ஒருநாள் விடியற்காலை வேளையில் மேயர் மடலின் தனது அலுவலக அறையில் அமர்ந்து பழைய கடிதங்கள் மற்றும் குறிப்புகளை சரிபார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவரது அலுவலகச் சிப்பந்தி ஒருவர் வந்து, அவரை அவசரமாகவும் அவசியமாகவும் பார்க்கவேண்டும் என்று காத்திருப்பதாகச் சொன்னார். அவரை உள்ளே அனுப்புமாறு மேயர் கட்டளையிட்டார்.

அடுத்த நிமிடம் மேயர் மடலினுக்கு முன்னால் வந்து நின்றவர் இன்ஸ்பெக்டர் ஜாவர்!

அன்று போலீஸ் ஸ்டேஷனில் நடந்த சம்பவங்களுக்குப் பிறகு, தனக்குத் தொல்லை தராமல் இன்ஸ்பெக்டர் ஒதுங்கியிருப்பதாகவே கருதினார் மடலின். ஏனெனில், அதற்குப் பிறகு அவர் ஜாவரைக் காணவில்லை. இப்போது அவர் தன்னைத் தேடி வந்திருப்பது எதற்காக என்று மடலின் மனத்துள் யோசித்தார்.

“வாருங்கள்...வாருங்கள்!”– வரவேற்ற மடலின் அவரிடம் ஓர் இருக்கையைச்சுட்டி காட்டி அதில் அமருமாறு கூறினார்.

எனினும், அவரது வருகைக்கு பெரிய அளவு முக்கியத்துவம் தராமல், என்ன விஷயம் என்று கேட்காமல் தான் அதுவரை செய்து கொண்டிருந்த வேலையைப் பழையபடி தொடர்ந்தார். ஜாவர் இரண்டு மூன்று தடவை தொண்டையைக் கனைத்து, தான் அங்கிருப்பதை நினைவூட்டியதுடன் மேலும் சில எட்டுகள் எடுத்து வைத்து நடந்தாரே தவிர இருக்கையில் உட்காரவில்லை.

“ம்... சொல்லுங்கள் என்ன விஷயம்? உங்களது நோக்கம்தான் என்ன மிஸ்டர் ஜாவர்?”

“சார், நீங்கள் உடனடியாக இந்தப் பதவியிலிருந்து என்னை விலக்கி அனுப்ப வேண்டும்! எந்தவித உணர்வையும் முகத்தில் காட்டாமல் இன்ஸ்பெக்டர் கேட்டார்.

“என்ன சொல்கிறீர்கள்? உங்கள் வேலையிலிருந்து விலக்கி அனுப்ப வேண்டுமா? உண்மையாகவா சொல்கிறீர்கள்?”

“உண்மைதான். ஒரு போலீஸ் அதிகாரி ஒரு நீதிபதியின் மேன்மையை உணர்ந்து மதிக்காமல் அவரை மிகவும் மோசமானமுறையில் சந்தேகப்பட்டார். ஒரு குற்றவாளியைப் போல் பின்தொடர்ந்து அவரைப்

பற்றி தகவல்களைச் சேகரிக்க முயன்ற போலீஸ்காரரைத் தண்டிப்பதுதானே நியாயம்?''

இந்தக் கதை நிகழும் காலத்தில் பிரான்ஸ் நாட்டில், குற்றவாளியை விசாரணை செய்து தண்டனையளிக்கும் அதிகாரம் நகர மேயருக்கு இருந்தது.

''ஆமாம். அதற்கு நீங்கள் ஏன் வருத்தப்பட வேண்டும்? உங்களை எதற்காக வேலையிலிருந்து விலக்க வேண்டும்?'' வியப்பு நிரம்பிய கண்களுடன் ஜாவரை தலையிலிருந்து கால் வரை பார்த்தபடி மேயர் கேட்டார்.

இன்ஸ்பெக்டர் பேசிய வார்த்தையின் பொருள் அப்போதும் அவருக்குப் புரியவில்லை.

''நான்தான் சற்று முன் குறிப்பிட்ட போலீஸ் அதிகாரி; நீங்கள்தான் அந்த நீதிபதி!''– மேயரது முகத்தின் மீது பதிந்திருந்த கண்களை அகற்றாமலேயே இன்ஸ்பெக்டர் பேசினார். ஒரு கண அமைதிக்குப் பிறகு அவரே தொடர்ந்தார்: ''சார், அன்று போலீஸ் ஸ்டேஷனில் உங்களை எதிர்த்தும் மறுத்தும் பேசியிருக்கிறேன். காரணம், நான் உங்களைச் சில வருடங்களாகத் தொடர்ந்து கொண்டிருந்தேன். நீங்கள் ஒரு பழைய குற்றவாளி என்ற நம்பிக்கையில், உங்களது கடந்த கால வாழ்க்கையைக் குறித்தெல்லாம் ரகசியமாக விசாரணை செய்திருக்கிறேன்.''

மடலின் எதுவும் பேசவில்லை. தன் மேஜை மீது இருந்த காகிதங்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.இன்ஸ்பெக்டர் அதுவரை பேசிக்கொண்டு வந்ததன் பொருள் அப்போதுதான் அவருக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங்கியது. ஜாவர் தொடர்ந்தார்:

''ஒருசில வருடங்களுக்கு முன் டியோலன் நகரில் இருக்கும்போது ஒரு குற்றவாளி, எனக்கு அறிமுகமாகியிருந்தான். நான் பொறுப்பேற்றிருந்த ஜெயிலில்தான் அவன் அடைக்கப்பட்டிருந்தான். அவனது தோற்றமும் உடல் வலுவும், ஒருபுறம் சாய்ந்தவாறு நடக்கும் நடையும் உங்களுக்கும் இருப்பதால், நீங்கள்தான் அந்தக் குற்றவாளி என்று நான் உறுதியாக நம்பினேன்!

அவனது பெயர் ஜீன்வால்ஜின், ஒரு திருட்டு வழக்குக்காகத் தண்டிக்கப்பட்டவன். நீண்டகாலத் தண்டனைக்குப் பிறகு விடுதலையாகி வெளிவந்த பின் ஒரு பாதிரியாரின் வீட்டிலிருந்து வெள்ளிப் பாத்திரங்கள்

சிலவற்றைத் திருடியிருக்கிறான். பக்கத்து ஊரைச் சேர்ந்த சிறுவன் ஒருவனிடமும் ஏமாற்றி நாணயத்தைத் திருடியிருக்கிறான். அந்த மனிதனை நான் கடந்த எட்டு வருடங்களாகத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

இதுவரை அவன் அகப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் தான் உங்களது உருவ ஒற்றுமையும், ஒரு குதிரை வண்டியையே புரட்டிப் போடும் வல்லமையும், வித்தியாசமான உங்கள் நடையும் நீங்கள்தான் ஜீன்வால்ஜின் என்று என்னை நினைக்க வைத்தது.

இப்போது என்னுடைய முட்டாள்தனத்தையும், உங்களை வீணாகச் சந்தேகப்பட்டுவிட்டேன் என்பதையும் புரிந்து கொண்டேன். எனவே நான் செய்த தவறுக்கு உரிய தண்டனையை அனுபவிக்க வேண்டியதே நியாயம்!'' உறுதியான குரலில் எந்தவிதமான தயக்கமுமின்றி நேருக்கு நேராகவே பேசினார் இன்ஸ்பெக்டர்.

மேயரின் முகம் கோபத்தால் சிவந்து யோசனையில் ஆழ்ந்திருப்பதாகத் தோன்றியது. கரகரப்பான குரலில் அவர் கேட்டார்: ‘‘அப்படியானால் அந்த ஜீன்வால்ஜின் நான் இல்லை என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரிந்துவிட்டது. இப்போது உங்கள் சந்தேகம் முழுவதும் விலகிவிட்டது இல்லையா?''

‘‘ஆமாம், அந்தக் குற்றவாளி அகப்பட்டுவிட்டான். எனவே தயவு செய்து என் தவறுக்கு உரிய தண்டனையை நீங்கள் தந்தே தீரவேண்டும். என்னிடம் ராஜினாமா செய்யச் சொல்லாமல் நீங்களே என்னை வேலையிலிருந்து அனுப்பி விடுங்கள்!'' ஜாவர் திரும்பவும் தனது கோரிக்கையை முன் வைத்தார்.

மேயர் மடலின் எந்தவிதமான பதிலையும் சொல்லவில்லை. ஆனால், அவரது கைவிரல்கள் வழியாக நடுக்கம் அவருள் புகுந்தது. அவர் கையில் பிடித்திருந்த காகிதம் அவரையும் மீறி அவரிடமிருந்து நழுவி விழுந்தது!

20

இன்ஸ்பெக்டர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்: ‘‘உண்மையில் நடந்தது என்னவென்றால், எங்கள் ஊரில் சாம்ப் மாத்யூ என்கிற அப்பாவி ஒருவர் இருந்தார். கடந்த வருடம் ஆப்பிள் பழங்களைத் திருடிய குற்றத்துக்காக அவர் கைது செய்யப்பட்டார். அவரைச்

சிறைவைத்த அறையில் பிரைவிட் என்கிற மற்றொரு குற்றவாளியும் இருந்தார். அவர் சாம்ப் மாத்யூவைப் பார்த்ததும், ‘‘யார் இது? ஜீன்வால்ஜின்தானே?’’ என்று உற்சாகமாகப் பேசத் தொடங்கினார்.

அவர்கள் இருவரும் டியோலன் நகரச் சிறைக்கூடத்தில் இருபது வருடங்களுக்கு முன் ஒன்றாக இருந்ததாக அவர் உறுதியுடன் சொன்னார்.

ஜீன்வால்ஜினும் பிரைவிட்டும் ஒரே சிறையில் இருந்தவர்கள் என்று கேள்விப்பட்டதும் அவர்கள் இருவரையும் நன்கு தெரிந்த வேறு இரண்டு குற்றவாளிகளையும் தேடிக் கண்டுபிடித்தோம். அவர்கள், தங்களுக்கு அடுத்த அறையில் இருந்ததாக பிரைவிட் ஒப்புக்கொண்டான். அவர்களை ஓரிடத்தில் குழுமச் செய்து ஜீன்வால்ஜினை (உண்மையில் அது சாம்ப் மாத்யூ என்பவன்தான். போலீஸார் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர்) அடையாளம் காட்டச் சொன்னோம். வந்தவர்களும் அவன்தான் ஜீன்வால்ஜின் என்று அடையாளம் காட்டி, அதை எங்களிடமும் உறுதியாகத் தெரிவித்தனர். மற்றவர்களும் அவன்தான் உண்மையான ஜீன்வால்ஜின் என்று எங்களுக்கு உறுதியளித்தனர்.

ஏறத்தாழ இந்தச் சந்தர்ப்பத்தில்தான் நீங்கள்தான் அந்த ஜீன்வால்ஜின் என்று சந்தேகம் கொண்டு என்னுடைய மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தேன். இப்படிச் சொன்னவுடன் பைத்தியக்காரன், என்று என்னை எல்லோரும் கேலி செய்தனர். காரணம், நீங்கள்தான் ஜீன்வால்ஜின் என்று நான் கூறிய சமயத்தில் உண்மையான ஜீன்வால்ஜின் (இங்கும் சாம்ப மாத்யூவைத்தான் குறிப்பிடுகிறார்) சிறையில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்தான். நானே நேரில் சென்றும் அவனை அடையாளம் தெரிந்துகொண்டேன்’’.

‘‘நீங்கள் இதுவரை சொன்னதெல்லாம் உண்மைதான், அதுதான் சரியான தகவல் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?’’

‘‘நிச்சயமாக! உண்மையான ஜீன்வால்ஜினை நானே நேரில் போய்ப் பார்த்ததால், எனக்கு நேர்ந்த தவறை நான் புரிந்து கொண்டேன். தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள்!’’

‘‘அது மிகவும் இரக்கத்துக்குரிய ஒரு காட்சி. அடைபட்டிருக்கும் ஜீன்வால்ஜின் என்னடாவென்றால், தன் பெயர் சாம்ப் மாத்யூதான் என்று புலம்பிக் கொண்டிருக்கிறான். தான் ஜீன்வால்ஜின் இல்லையென்று சத்தியமே செய்கிறான். நாம் என்ன செய்ய? அவனுக்கு எதிராக இத்தனை பேர் சாட்சியம் அளிக்கும்போது அவன் சொல்வதை எப்படி நம்புவது?

முன்பு செய்த குற்றங்களுக்காகவும், தற்போதைய குற்றச் சாட்டுகளுக்காகவும் அவனுக்கு ஆயுள்தண்டனை கிடைக்கலாம்!''

''அவனை விசாரித்து, தீர்ப்பு வழங்கிவிட்டார்களா என்ன?''- மேயர் கேட்டார்.

''இன்னும் அந்த அளவுக்குப் போகவில்லை!

''வழக்கின் இப்போதைய நிலை என்ன?''

''அநேகமாகப் பத்து நாள்களுக்குள் ஜீன்வால்ஜின் மீதான வழக்கை விசாரிக்கத் தொடங்குவார்கள்'' இன்ஸ்பெக்டர் தெரிவித்தார்.

''அவ்வளவு விரைவாக நடந்துவிடுமா?''

''ஒருவேளை இன்னும் சீக்கிரமாகவேகூட விசாரணை ஆரம்பமாகலாம். விசாரணையின்போது நானும் அங்கு இருக்க வேண்டும். அது கிடக்கட்டும் சார், என்னுடைய கோரிக்கைக்கு நீங்கள் இன்னும் எந்தவிதமான பதிலையும் சொல்லவில்லையே. என்னை வேலையிலிருந்து விலக்கப் போவதில்லையா?''

''சரி அதைப் பற்றி பிறகு யோசிப்போம்'' என்று உதாசீனமாகப் பதிலளித்த மேயர், ஜாவருக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

இன்ஸ்பெக்டர் அங்கிருந்து வெளியேறியவுடன் மேயர் வெகுநேரம் தனிமையில் உட்கார்ந்து நீண்ட சிந்தனையில் ஆழ்ந்தார். அவரது கண்களில் நீர் நிறைந்து வழிந்தது. இதயத்துடிப்பு மிகவும் துரிய கதியில் இயங்கியது. அடுத்தடுத்து அவரிடமிருந்து நீண்ட பெருமூச்சுக்கள் எழுந்து கொண்டிருந்தன.

21

ஜீன்வால்ஜின் என்று மற்றவர்கள் கருதுகிற சாம்ப் மாத்யூ மீதான வழக்கு விசாரணை விரைவிலேயே துவங்கியது.

நீதிமன்றத்தில் அந்த வழக்கு விசாரணையை வேடிக்கை பார்ப்பதற்காகப் பொதுமக்கள் பெரும் கூட்டமாகச் சேர்ந்து விட்டிருந்தனர். பார்வையாளர்கள் எல்லோரும் குற்றவாளிக் கூண்டில் நரைத்த தலைமுடி மற்றும் தாடிமீசையுடன் நின்றிருந்த வயதான பெரியவரையே உற்றுப் பார்த்துக்

கொண்டிருந்தனர். அரசாங்கத் தரப்பு வக்கீல், அவர் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை நீதிபதி முன்பாக எடுத்துரைத்தார்.

“இவர் பெயர் ஜீன்வால்ஜின். ஒரு பழைய குற்றவாளி. சிறையிலிருந்து தப்பிக்க முயன்று அதற்காகவும் ஏற்கெனவே தண்டிக்கப்பட்டவன். இந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பிக்கும் பொருட்டு, அவர் தன்னை ஜீன்வால்ஜின் அல்ல என்று மறுத்துக் கொண்டிருக்கிறார். வீம்புக்காகத் தன்னுடைய பெயர் சாம்ப் மாத்யூ என்று பொய் சொல்லி ஏமாற்றுகிறார்.

உண்மையில் அந்த நபர் ஜீன்வால்ஜினா, சாம்ப் மாத்யூவா என்பதை நிரூபிக்கும் பொருட்டு, அவனுடன் சிறையிலிருந்த ஏனைய மூன்று குற்றவாளிகள் சாட்சியம் அளிப்பதற்காக வந்திருந்தனர்.

சாட்சி விசாரணைகள் முடிந்தன. இரு தரப்பு வாதங்களையும் செவிமடுத்த பின்பு நீதிபதி தனது தீர்ப்பைப் படிக்க வேண்டிய தருணம். நீதிமன்றத்தில் முழுமையான அமைதி நிலவியது. எல்லோரது கண்களும் நீதிபதியையும், சாம்ப் மாத்யூவையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தன.

இன்ஸ்பெக்டர் ஜாவரும் விசாரணையைக் கவனிக்க வந்த சேர்ந்திருந்தார். அதிகமான எதிர்பார்ப்பும், பரபரப்பும் அவரிடம் தென்பட்டன.

திடுமென்று பார்வையாளர் வரிசையின் பின்னாலிருந்து ஒருவர் எழுந்து சாட்சிக் கூண்டில் நின்று கொண்டிருக்கும் குற்றவாளிகளை நோக்கி உரத்த குரலில் பேசினார்.

“பிரைவிட், செனில்டியூ, கோச்சேப்பல்...” என்று வரிசையாக அவர்களது பெயரை அழைத்தபடியே அந்த மனிதர் குற்றவாளிகளை நெருங்கினார். “உங்களுக்கு இன்னுமா என்னைத் தெரியவில்லை. மறந்துவிட்டீர்களா தோழர்களே?”– அந்த மனிதர் உணர்ச்சிப் பெருக்குடன் அவர்களது தோளைத் தொட்டபடி கேட்டார்.

எல்லோரும் வைத்த கண்வாங்காமல் வியப்புடன் அந்தக் காட்சியையே பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களால் தங்களது கண்களையே நம்ப முடியவில்லை. ஒருவேளை கனவு ஏதாவது காணுகிறோமோ என்றுகூடச் சந்தேகப்பட்டனர்.

அந்தக் குற்றவாளிகளின் பழைய நண்பராக அன்புடன் அழைத்து வெளிப்பட்டவர் வேறு யாருமல்ல, நகர மேயர் மடலின்தான்!

‘‘மிஸ்டர் மடலின்!

‘‘மேயர் மடலின்!

‘‘நமது நகரத் தந்தை மடலின்!

அங்கு கூடியிருந்த மனிதர்களின் உதடுகள் மெதுவான குரலில் மேற்கண்டவாறு பல்வேறு பெயர்களில் வியப்புடன் கூறின.

மடலின் பரபரப்பான அந்தச் சூழ்நிலையைக் கவனிக்காத மனிதரைப் போல் நேரடியாக ஜூரிகளைப் பார்த்தார். [ஜூரிகள் என்பவர் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள். வழக்கின் இறுதியில் இவர்களின் பெரும்பான்மையோரது கருத்தை ஒட்டியே தீர்ப்பு அமையும்].

‘‘மேன்மைதங்கிய நீதிபதிகளே, இதோ குற்றவாளிக் கூண்டில் நிற்கும் இந்த மனிதனை நீங்கள் விடுதலை செய்துவிடலாம். உண்மையான ஜீன்வால்ஜின் இந்த நபர் அல்ல. இவர் ஒரு நிரபராதி – குற்றமற்றவர். மதிப்புக்கு உரிய நீதிமன்றம் தயவு செய்து என்னைக் கைது செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுகிறேன். நான்தான் உண்மையான ஜீன்வால்ஜின்!’’

யாரும் எந்த வார்த்தையும் பேசவில்லை. நீதிமன்றத்தின் அந்தக்கூடம் ஒரு சவக்கிடங்கைவிட அமைதியும், அசைவும் அற்றதாக இருந்தது.

நீதிபதி பார்வையாளர் பக்கம் திரும்பிக் கேட்டார். ‘‘மிஸ்டர் மேயரை ஒருதடவை பரிசோதனை செய்து சொல்லத்தக்க டாக்டர்கள் யாராவது இங்கு இருக்கிறார்களா?’’

நீதிமன்றத்தில் குழுமியிருந்தவர்கள் தங்களையும் மீறிச் சிரித்துவிட்டார்கள்.

‘‘மதிப்புக்குரிய நீதிமன்றத்துக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்குப் பைத்தியம் எதுவும் பிடிக்கவில்லை. உண்மை எதுவென்று தெரியாமல் நீதிமன்றம் ஒரு பெரும் தவறு செய்ய இருந்தது. உண்மை என்ன என்பது எனக்கு மட்டும்தான் தெரியும். அதைத் தெரிந்துகொண்ட மற்றொருவர் சாத்தியமே வடிவமான கடவுள். அதனால்தான் நானே இங்கு வரவேண்டியதாயிற்று. தயவுசெய்து நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்.’’

மேயர் மடலின் தொடர்ந்தார்:

“கடந்த சில வருடங்களாக நான் மற்றொரு பெயரில் மறைந்து வாழ்கிறேன். ஏராளமான பணத்தைச் சம்பாதித்து, இந்த நகரின் மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இந்த நகர மக்களின் பார்வையில் நான் மதிப்புக்கு உரிய ஒருவனாகவும் நேர்மையான மனிதனாகவும் காட்சியளிக்கிறேன். ஆனால், இப்போது ஓர் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். நான்தான் உண்மையான ஜீன்வால்ஜின்! ரொட்டி ஒன்றைத் திருடிவிட்டுச் சிறைக்குப் போனதும், பாதிரியாரின் வீட்டில் வெள்ளிப் பாத்திரங்களைத் திருடியதும், சாவோயா நகரில் சிறுவன் ஒருவனிடமிருந்து நாணயத்தைத் திருடியதும் நானேதான்! அந்தக் கூண்டில் நின்று கொண்டிருக்கும் மனிதனுக்கும் இந்தக் குற்றச் சாட்டுகளுக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. உண்மையிலேயே அவரது பெயர் சாம்ப் மாத்யூ என்பதுதான். மதிப்புக்குரிய நீதிமன்றம் நான் சொல்வதை ஏற்றுக்கொண்டு அதற்குரிய தண்டனையை எனக்குத் தந்துவிட்டு, அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்” என்றவர் மறுபடியும் சாட்சியாக நின்றிருந்த குற்றவாளிகளின் பக்கம் திரும்பியபடி கேட்டார்:

“உங்களுக்கு இன்னுமா என்னை அடையாளம் தெரியவில்லை. பிரைவிட், சதுரமான கட்டங்களும் நீண்ட கோடுகளும் போட்ட உன்னுடைய கம்பளிக் கோட்டு எங்கே? எனக்கு மிகவும் பிடித்த உன்னுடைய கோட்டு அதுதான் இல்லையா?

செனில்டியா சிறைச்சாலையில் கணப்பு அடுப்பருகே உட்கார்ந்து, உன் தோளில் பொறித்திருந்த ஆயுள் கைதி என்கிற அடையாளத்தை தீயால் சுட்டு அழிக்க முயலவில்லையா? நீ அந்தத் தீப்புண் அடையாளம் இப்போதும் உன் தோளில் இருக்க வேண்டுமே, இருக்கிறதா?

கொச்சேப்பல், உன்னுடைய இடது கையில் நீ பச்சை குத்திக் கொண்டது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. 1815–ஆம் ஆண்டில் ஒருநாள் திடுமென்று குத்திக் கொண்டது அது. சரிதானே? எங்கே உன் கையைக் காட்டு பார்க்கலாம்.”

கொச்சேப்பல் தன் சட்டையின் கைப் பகுதியை மேற்புறமாகச் சுருட்டிக் காட்டினான். அப்போது அந்தப் பகுதியில் மடலின் குறிப்பிட்ட பச்சை குத்திய அடையாளம் தெளிவாகத் தெரிந்தது.

வெற்றிப் பெருமிதத்துடன் நீதிபதியையும் பிற ஜூரிகளையும் பார்த்தபடி மடலின் பேசத்தொடங்கினார்: “மரியாதைக்கு உரிய நீதிமன்றத்துக்கு நான் சொன்னதெல்லாம் உண்மை என்று இப்போது நிரூபணம் ஆகியிருக்கும்.

என்னை நம்புங்கள்! நான்தான் உண்மையான ஜீன்வால்ஜின், நீங்கள் எப்போது வேண்டுமானாலும் எனது கைகளில் விலங்கு பூட்டலாம். நான் வழக்கமாக எங்கே இருப்பேன் என்று மரியாதைக்குரிய நீதிபதி அவர்களுக்கும் தெரியும். நான் அவசரமான சில செயல்களைச் செய்து முடிக்க வேண்டியிருப்பதால் உடனடியாக இங்கிருந்து புறப்பட வேண்டும்.''

மேயர் மடலின் மேற்கொண்டு எதையும் பேசாமல் வாசலை நோக்கி நடந்தார். யாரும் அவரைத் தொடவோ, தடுக்கவோ முற்படவில்லை. அவர் தனது விருப்பப்படியே அங்கிருந்து வெளியேறினார்.

அப்பாவியும் வயதானவனுமாக சாம்ப் மாத்யூ உடனடியாக விடுதலை செய்யப்பட்டான்.

நீதிமன்றத்தில் எல்லோருக்கும் முன்பாக உண்மையை எடுத்துச் சொன்ன ஜீன்வால்ஜின் நேராகப் போனது ஃபான்டெயினிடம்தான். அவள் மிகவும் சோர்வாகவும் பலவீனமாகவும் இருந்தாள். அவளால் வாய்திறந்து பேசக்கூட முடியவில்லை. கண்களில் குழி விழுந்திருந்தது. உதடுகள் வறண்டு, உடம்பே மெலிந்து சருகுபோல் ஆகிவிட்டிருந்தது. அவள் மரணத்தை மிகவும் நெருங்கி விட்டாள் என்பது தெளிவாகத் தெரிந்தது.

அந்தக் காட்சி ஜீன்வால்ஜினை மிகவும் வருத்தம் கொள்ள வைத்தது. அவளது கட்டிலின் அருகில் இரண்டு இளம் நர்ஸீகள் மருந்து மற்றும் எலுமிச்சம் பழம் பிழிந்த நீரைக் குடிக்கக் கொடுத்து நன்றாகவே கவனித்துக் கொண்டனர்.

''என் மகள்... என் குழந்தை... அவளை என்னிடம் அழைத்து வரமாட்டீர்களா?''– ஃபான்டெயின் மிகவும் கடினமாக முயன்று அவரிடம் கேட்டாள். அவளது கண்கள் சந்தேகம், பயம், ஏமாற்றம் ஆகிய எல்லா உணர்வுகளுடனும் ஜீன்வால்ஜினின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தன.

''சொல்லுங்கள் சார். என் மகள் எங்கே? அவளை அழைத்துக் கொண்டு வரவில்லையா?''

ஒரு கண நேரம் மௌனமாக இருந்த ஜீன்வால்ஜின் இடறிய குரலில் பேசினார்: ''சற்றுப் பொறு மகளே.... உன் மகளை விரைவிலேயே அழைத்துக் கொண்டு வருகிறேன்.''

அப்போது அந்த அறைக்கு வெளியே குழந்தைகளின் பெருத்த ஆரவாரம் கேட்டது. அதிக சத்தம் எழுப்பியபடி விளையாடிக் கொண்டிருந்தனர் போலும்.

“அதோ என் கோசெட்டி, வெளியே துள்ளி விளையாடுகிறாள். அவள்தானே… அதோ தனியாகக் கேட்பது? தட்டாம்பூச்சியைப் பிடிப்பதற்காகச் செடிகளுக்குள் ஓடுகிறாள். குறும்புக்காரப் பெண்… என் செல்லம் கோசெட்டி..”

அவளது முகத்தில் மகிழ்ச்சியும் திருப்தியும் அலையடித்துக் கொண்டிருந்தது. அந்த ஒரு கணத்தில் அவள் தன்னுடைய எல்லா வேதனைகளையும் மறந்துவிட்டது போல் தெரிந்தது. எதிர்பார்ப்பு கலந்த நம்பிக்கை அவளிடம் புதியதொரு ஒளியை ஏற்படுத்தியது.

மறுகணமே அதீதமான பயத்துடன் கண்களை அகல விரித்து பயங்கரமாக அலறியபடி மேயருக்குப் பின்புறமாகப் பார்த்தாள். அவளது பார்வை நிலைகுத்தி நின்றிருந்தது.

“ஃபான்டெயின் உனக்கு என்ன ஆகிவிட்டது? ஏன் இப்படிப் பயப்படுகிறாய்?”

ஆச்சரியத்துடன் கேட்டபடி மடலின் பின்புறம் திரும்பிப் பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் ஜாவர் நின்று கொண்டிருந்தார்.

நைந்துபோன குரலில் அவளிடமிருந்து வார்த்தைகள் கோபத்துடன் வெளியேறின. தன்னைப் பிடித்துச் செல்வதற்காகத் தான் இன்ஸ்பெக்டர் வந்திருக்க வேண்டும் என்று அவள் பயந்திருக்கலாம்.

“பயப்படாதே. உன்னைப் பிடித்துச் செல்வதற்காக அவர் வரவில்லை.” மேயர் மடலின் அமைதியுடன், அவளுக்கு ஆறுதல் கூறினார். “நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்.”– ஜீன்வால்ஜின் இன்ஸ்பெக்டரிடம் கூறினார்.

“அப்படியானால் வாருங்கள் புறப்படலாம்.!”

இன்ஸ்பெக்டர் சட்டென்று பாய்ந்து மேயரது கோட்டின் மேற்புறத்தைப் பிடித்தார்.

“மேயர் சார்... மேயர் சார்... மடலின்...!” ஃபான்டெயினின் உதடுகள் மந்திரம் போல் உச்சரித்தன.

“மேயரா? யார் இவனா? இவன் இப்போது மேயர் அல்ல. போலீஸை ஏமாற்றிக் கொண்டு, தலைமறைவாக இருந்த பிடிபடாத கைதி இவன்!”– வாய்விட்டுச் சிரித்தபடி ஜாவர் உரத்த குரலில் பேசினார்.

“என் குழந்தை... அப்படியானால் என்மகள் எங்கே? அவள் இன்னும் வரவில்லையா? சிஸ்டர் இங்கு என்னதான் நடக்கிறது என்று என்னிடம் சொல்லமாட்டீங்களா?” ஃபான்டெயின் இரக்கத்துக்குரிய வகையில், தாழ்மையாகக் கேட்டாள். வார்த்தைகளின் முடிவில் இருமத் தொடங்கினாள். கட்டிலில் கிடந்து இருமியவளின் முகம் நேரம் செல்லச் செல்லப் பயங்கரமாக மாறியது. அவளது கண்கள் மேயர், ஜாவர், சிம்ப்ளிங் என்ற நர்ஸ் ஆகியோர் மீது மாறி மாறி அலை பாய்ந்து, பெரிய விக்கலுடன் ஒரு தடவை துடித்து, தலையை ஒருபுறமாகச் சரித்துத் தளர்ந்தாள். அவளது கடைவாயிலிருந்து ஒருவகையான சிவப்பு கலந்த கொழுப்பான திரவம், அவளது தலை பதிந்திருந்த தலையணையின் மீது படிந்தது. இரத்தம் கலந்த கெட்டியான உமிழ்நீர்.

ஃபான்டெயினின் உடல் அசைவற்றுப் போனது. வேதனையை மட்டுமே அனுபவித்து, அத்தனை காலமும் அந்த உடம்புக்குள்ளேயே ஒளிந்திருந்த ஆத்மா, விண்ணை நோக்கிப் பறந்துவிட்டது.

“மோசமானவனே, நீ இந்த அப்பாவிப் பெண்ணைக் கொன்றுவிட்டாய்!”– ஜீன்வால்ஜின் கோபத்துடன் கூறினார்.

அந்த அறையின் மூலையில் இருந்த ஒரு பெரிய இரும்புக் கம்பியை எடுத்து ஜாவரின் தலையை நோக்கி வீசினார் ஜீன்வால்ஜின். அடி சரியாகவே விழுந்தது!

ஜாவர் மயக்கமுற்று விழுந்தார்.

ஃபான்டெயினின் இறுதி ஊர்வலத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார் ஜீன்வால்ஜின். அவற்றை நிறைவேற்றுவதற்காக கன்னியாஸ்திரீகளிடம் ஆலோசனைகள் கூறினார். துரதிருஷ்டசாலியான அந்தப் பெண்மணியைக் குளிப்பாட்டி, ஒரு கட்டிலில் படுக்க வைத்தனர். அவளது கைகளை மார்பில் பிணைத்துக் கட்டினர். கடைசியாக அந்தப்

பெண்மணியின் கைகளைத் தனது கண்ணீரால் கழுவி விட்டுதான் அவர் அங்கிருந்து வெளியேறினார்.

இன்ஸ்பெக்டர் மயக்கம் தெளிந்து எழுந்தபோது அந்த இடத்தில் ஜீன்வால்ஜினோ, ஃபான்டெயினோ, நர்ஸுகளோ எவரும் தட்டுப்படவில்லை.

22

கண்மூடித் திறக்கும் நொடியிடைப் பொழுதில் எல்லாவற்றையும் மறந்து ஒதுக்குவதுதானே பொதுமக்களின் இயல்பு.

ஜீன்வால்ஜினின் விஷயத்திலும் பொதுமக்கள் அதிலிருந்து மாறுபட்டவர்களாக இருக்கவில்லை. இன்ஸ்பெக்டருடன் அவர் சிறைக்குள் போன அந்த நிமிடத்திலேயே, ஊரார் அவருக்கு எதிராக மாறிவிட்டனர்.

அவர் வெற்று வேஷம் போட்ட மனிதராக இருந்தார் என்றும், உண்மையிலேயே தேர்ந்த திருடனாகவும், கிரிமினல் குற்றவாளியாகவுமிருந்து ஊராரைத் திட்டமிட்டு ஏமாற்றி வந்ததாகவும் பழிக்கத் தொடங்கினர். மேலும் வாய்க்கு வந்தபடியெல்லாம் பேச ஆரம்பித்தனர். தங்களுக்காகவும், தங்களது ஊருக்காகவும் அவர் செய்த நல்ல செயல்கள் எல்லாவற்றையும் அந்த நிமிடத்துடன் மறந்தனர். மிஸ்டர் மடலின் உண்மையில் யாராக இருப்பினும், தற்சமயம் தாங்கள் அனுபவிக்கும் சுகசௌகரியங்கள், மகிழ்ச்சி, வாழ்க்கை முன்னேற்றம் போன்ற எல்லாவற்றுக்கும் காரணகர்த்தா அவர்தான் என்பதை மறந்தே போனார்கள்!

ஒரு சிலர் மட்டுமே அவர் மீது நல்ல அபிப்பிராயம் வைத்திருந்தனர். அவர்கள் அப்போதும் மடலினுக்காக வருத்தப்பட்டனர், கண்ணீர் சிந்தினர். அவர்களில் ஒருவர் அவருடைய மெய்க்காப்பாளன், மற்றொருத்தி, அவரது வீட்டில் வேலைக்காரியாக இருந்த பெண்மணி.

அந்தப் பெண்மணி அன்று இரவு – ஜீன்வால்ஜினை இன்ஸ்பெக்டர் பிடித்துக் கொண்டுபோன அன்று இரவு, தன்னுடைய அறையில் தனியாகப் படுத்துக்கொண்டு எதையெல்லாமோ யோசித்துக் கொண்டிருந்தாள். ஃபான்டெயினின் உடலைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு, அவளுக்குக் கடைசியாகப் பணிவிடை செய்த நர்ஸுகளும் அங்கு இருந்தனர்.

சட்டென்று ஜன்னல் கதவைத் திறந்துகொண்டு ஒரு கை உட்புறம் நுழைந்தது. சுவரில் தொங்கவிட்டிருந்த சாவிக் கொத்து ஒன்றை அந்தக் கை எடுத்துக்கொண்டது. அதையே பார்த்துக் கொண்டிருந்த வேலைக்கார பெண்மணி மூச்சு விடவும் மறந்து அசைவற்று கல்லாகச் சமைந்தாள். தனது எஜமானரின் கை அவளுக்கு மிகவும் நன்றாகத் தெரிந்ததாயிற்றே!

கதவின் சாவித்துவாரத்தில் சாவி நுழைத்து திருகப்படும் சத்தம் கேட்டது.

“எஜமான்…நான் உங்களை…” வேலைக்காரப் பெண்மணி வார்த்தைகளை அரைகுறையாக மென்று விழுங்கினாள்.

“இந்நேரம் நான் சிறையில் இருப்பேன் என்று நினைத்திருப்பாய் இல்லையா? ஒரு வகையில் அது சரிதான். சிறைக்கம்பிகளை அறுத்துத் தப்பித்து வந்திருக்கிறேன். நேராக என்னுடைய அறைக்குப் போகிறேன். சிஸ்டர் சிம்ப்ளிங்கை உடனே என்னைச் சந்திக்கச் சொல்!” என்றார்.

உடனே அவள் அந்த அறையிலிருந்து வெளியேறினாள். ஜீன்வால்ஜின் படிகளில் ஏறி மேல்தளத்திலிருந்த தனது அறையை அடைந்தார். அறைக்குள் நுழைந்ததும் மெழுகுவத்தியை ஏற்றி விட்டு, காகிதங்களில் எதையோ எழுதத் தொடங்கினார்.

“இது நான் ஐம்பது ஸூ நாணயத்தைப் பிடுங்கிய சிறுவனுக்கு உரியது!”– அவர் தனக்குத்தானே கூறிக்கொண்டார்.

பிறகு சுவர் அலமாரியின் கதவைத் திறந்து ஒரு பழைய கோட்டை எடுத்தார். அதற்குள் இரண்டு மெழுகுவத்திப் பீடங்கள் பத்திரமாகப் பொதிந்து வைக்கப்பட்டிருந்தன.

வாசல் கதவை யாரோ தட்டினார்கள்.

“உள்ளே வாருங்கள்!”– மடலின் அனுமதி அளித்தார்.

மறுவினாடி நர்ஸ் சிம்பிளிங் அந்த அறைக்குள் வந்தாள். அவளது கண்கள் கலங்கிச் சிவந்து, முகம் வெளிறிக் காணப்பட்டது. அவள் கையில் வைத்திருந்த மெழுகுவத்தி கூட நடுங்கியது.

தான் எழுதி வைத்திருந்த கடிதங்களை அவளிடம் நீட்டியபடி ஜீன்வால்ஜின் கூறினார்: “இதையெல்லாம் உங்கள் பாதிரியாரிடம் ஒப்படையுங்கள். இதில் நான் என்ன எழுதியிருக்கிறேன் என்பதை நீங்களும் படித்துப் பாருங்கள்.”

அந்தக் காலத்தில் எழுதியிருப்பதை வாசித்து, அதை மனத்தில் பதிய வைத்துக் கொண்டார் நர்ஸ். மடலின் அதில் எழுதியிருந்தது இதுதான்:

‘சார், இதில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை நீங்கள்தான் முறைப்படுத்திப் பாதுகாக்க வேண்டும். இறந்துபோன ஏழைப் பெண்ணின் சவ அடக்கத்துக்குச் செலவு செய்தது போக மீதமுள்ளதை இந்த ஊர்மக்களிடம் விநியோகம் செய்து விடுங்கள். அதுதான் என்னுடைய விருப்பம்!

நர்ஸ் எதையோ சொல்ல விரும்பினாள். ஆனால், வார்த்தைகள் வாயிலிருந்து வெளிப்படவில்லை.

‘‘நாளைக்கு நடைபெறப்போகும் அந்தப் பெண்ணின் இறுதி ஊர்வலச் சடங்குக்கு நீங்கள் வரமாட்டீர்களா?’’– ஒரு வகையாகத் திக்கித் திணறிக் கேட்டாள் நர்ஸ்.

‘‘இல்லை. நான் கலந்துகொள்ள முடியாது. போலீஸ் என்னைத் தேடிக் கொண்டிருப்பார்கள். நான் தலைமறைவாக இருக்க வேண்டி உள்ளது.’’

அதே சமயம் வீட்டின் வெளியே யாரோ பேசும் சத்தம் கேட்டது. கேட்டைத் திறக்காமல் காவல்காரன் யாரிடமோ உரத்த குரலில் பேசினான்:

‘‘இல்லை சார், நான் சொல்வது சத்தியம். மிஸ்டர் மடலின் வீட்டுக்குள் இல்லை. இங்கு வரவே இல்லை!

‘‘மேல்மாடி அறையில் வெளிச்சம் தெரிகிறதே?’’ கேள்வி கேட்டது ஜாவரின் குரல் என்பது மடலினுக்குப் புரியவே செய்தது.

சட்டென்று மெழுகுவத்தியை அணைத்துவிட்டு அறையின் ஒரு மூலையில் பதுங்கி நின்றார். சிம்ப்ளிங் முழந்தாளிட்டு பீடத்தின் முன்பாக நின்று பிரார்த்தனை செய்யத் தொடங்கினார். தலை தாழ்த்தியபடி!.

ஒரு சில நிமிடங்களுக்குள் கதவைத் தள்ளித் திறந்தபடி ஜாவர் அவசர அவசரமாக உள்ளே நுழைந்தார். சிஸ்டர் சிம்பிளிங்கை அவருக்கு நன்றாகவே பழக்கமிருந்தது. சிம்பிளிங் ஒருபோதும் பொய் சொல்லமாட்டாள் என்கிற நம்பிக்கை அந்த போலீஸ் அதிகாரிக்கு இருந்தது.

‘‘சிஸ்டர், இங்கு நீங்கள் மட்டும்தான் தனியாக இருக்கிறீர்களா?’’– ஜாவர் கேட்டார்.

எந்த நேரம் எது நடக்குமோ என்கிற பதைப்புக்குரிய விநாடிகளாக இருந்தன அவை. ஜீன்வால்ஜினுடைய வீட்டு வேலைக்காரியும் மூச்சைப் பிடித்தபடி நின்று கொண்டிருந்தாள். அவள் சிஸ்டரை ஓரக்கண்ணால் கவனித்தபடி இருந்தாள்.

"ஆமாம்" சிம்பிளியின் உதடுகளிலிருந்து வார்த்தைகள் தெளிவாக வந்து விழுந்தன.

"அப்படியானால் என்னை மன்னித்துவிடுங்கள். இதெல்லாம் என்னுடைய கடமை. இந்த வீட்டுக்குள் ஒரு மனிதர் நுழைந்ததைப் பார்த்தீர்களா? வேறு யாருமல்ல, சிறையிலிருந்து தப்பித்துவிட்ட ஜீன்வால்ஜின்தான் அவர். அந்த மனிதன் இங்கு வரவில்லை என்பது நிச்சயமான செய்திதானா?"

அந்த கன்னியாஸ்திரீ தனது மனசாட்சியிடம் மௌனமாகவே மன்னிப்புக் கேட்டுகொண்டு வாழ்க்கையில் முதல் தடவையாகப் பொய் சொன்னாள். ஒரு தடவை மட்டும் அல்ல; இரண்டு தடவை அந்த பொய்யை மறுபடி மறுபடி சொன்னாள்.

"மன்னித்துக் கொள்ளுங்கள்!" மன்னிப்புக் கேட்டுவிட்டு சிம்பிளிங்கை வணங்கிவிட்டு ஜாவர் விடைபெற்று வெளியேறினார்.

"என்னுடைய பரிசுத்த மாதாவே... என்னை மன்னித்து அருளுங்கள். இந்த ஒரு பொய்யைச் சொன்னதற்காக என்னுடைய மரணத்துக்குப் பிறகும் என்னைத் தண்டித்து விடாதீர்கள் தாயே!"

சிம்பிளிங் மனதுக்குள்ளேயே திரும்பத் திரும்பச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

சிஸ்டர் சிம்பிளிங்கினுடைய ஒற்றை வரி பதிலே போதுமானதாக இருந்தது இன்ஸ்பெக்டருக்கு. அவர் அதை உறுதியாக நம்பினார். எனவே, மேஜை மீது அப்போதும் அடங்காமல் ஏற்கெனவே அணைந்தும் புகைந்தும் கொண்டிருந்த மெழுகுவத்தியைக் கூட அவர் கவனிக்கவில்லை.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு பாரீஸ் நகதை நோக்கிச் செல்லும் பாதையில் காலிலிருந்து தலைவரை மூடியிருந்த கறுப்புநிற உடையுடன், மரநிழல்களை ஒட்டியே ஒரு மனிதன் விரைவாக நடந்து கொண்டிருந்தான்.

அவரைக் காப்பாற்றிய கன்னியாஸ்திரீயின் முயற்சிகள்கூட வீணானது. ஜீன்வால்ஜின் திரும்பவும் விரைவிலேயே போலீஸின் கைகளில் அகப்படவே செய்தார்.

1821–ம் ஆண்டின் கடைசிக்கட்டம் அது.

டூலோன் துறைமுகத்தில் ஒரு கப்பல் வந்து நங்கூரம் பாய்ச்சியது. அப்போதுதான் கப்பலில் யாரும் எதிர்பார்க்காத ஒரு விபத்து ஏற்பட்டது. கப்பலின் பக்கவாட்டுக் கம்பிகள் கரைப்புறம் இருந்த கொக்கியுடன் இணைக்கப்படும் வேளையில் கொடிமர உச்சியிலிருந்து கப்பல் ஊழியர் ஒருவர் பிடி நழுவிக் கடலில் விழுவதை ஏராளமானவர்கள் கவனிக்கவே செய்தனர்.

பயத்தில் திடுக்கிட்டவர்களாக அவர்கள் உரத்துக் குரல் எழுப்பவும் தவறவில்லை. யாராலும், எந்த விதமாகவும் அவனுக்கு உதவமுடியவில்லை. உயிர்ப் பயத்துடன் பாய்மரத்தின் மேலிருந்து கடலை நோக்கி விழுந்த மனிதன் அதிருஷ்டவசமாக சன்னமான கயிறு ஒன்றை எப்படியோ பற்றிக் கொண்டான். மிகவும் உயரத்தில் அந்த ஊழியன் இப்போது அந்தரத்தில் ஊஞ்சல் ஆடுவதுபோல் ஆடிக் கொண்டிருந்தான்.

அந்தக் கயிற்றிலிருந்த பிடி நழுவினால்கூட அவனுக்கு மரணம் உறுதிதான் என்பது எப்படிப்பட்டவருக்கும் ஊகிக்கக் கூடிய விஷயம்தான். அவனிருக்கும் உயரத்துக்கு, பாய்மரத்தின் குறுக்குக் கயிறுகளை மிதித்துக் கடந்து முன்னேறுவது என்பதுகூட ஆபத்தானதுதான். எனவே இந்த முறையில் அந்த ஊழியனைக் காப்பாற்றவும் யாரும் முற்படவில்லை.

திடுமென்று பார்வையாளர்கள் மத்தியிலிருந்து சிவப்பு நிற மேல்சட்டையும், பச்சைநிறத் தொப்பியும் அணிந்த ஒரு மனிதன் தைரியத்துடன் பாய்மரத்தின் குறுக்குவாட்டுக் கயிறுகளைக் கடந்து அநாயாசமாக மேற்புறம் உயர்ந்து கொண்டிருந்தான். அவனது உடையும், தொப்பியும் அவன் ஒரு கிரிமினல் குற்றவாளி என்பதையும், ஆயுள் முழுவதும் சிறையில் தண்டனை பெற விதிக்கப்பட்டவன் என்பதையும் விளக்கியது.

கடலின் மேற்புறப் பரப்பில் வீசிய காற்று அந்த மனிதனின் தலையிலிருந்த தொப்பியை அடித்துக்கொண்டு போனதும். முழுவதுமாக நரைத்த அவனது தலைமுடி எல்லோருக்கும் தெரிந்தது. அறுபத்தைந்து வயதிலிருந்து எழுபதுக்குள் அவரது வயது இருக்கலாம் என்று தோன்றியது. ஆனால்,

முப்பது வயது இளைஞனின் சாகச இயல்பும், உடல் வலுவும் அவரிடம் தென்பட்டது.

கீழ்ப்புறம் கடலலைகள் விசையுடன் வீசியடித்துக் கொண்டிருந்தன. கப்பலின் தளத்திலிருந்தவர்கள் பயம் நிறைந்த கண்களுடன் அந்த மனிதனது அசைவுகளையே கவனித்துக் கொண்டிருந்தனர். கயிறுகளைப் பிடித்து ஒரு குரங்கைப் போல் அவன் லாவகமாக மேற்புறத்தை அடைந்தான். கொடிமரத்திலிருந்து குறுக்காகக் கீழ் நோக்கிச் செல்லும் கயிற்றைப் பிடித்தபடி ஊசலாடும் கப்பல் ஊழியரின் நிலை பார்வையாளர்கள் இதயத்தைத் தடதடக்க வைத்தது. அபாயகரமான முறையில் கயிற்றில் ஊசலாடிக் கொண்டிருந்த மனிதனைப் பத்திரமாகத் தாங்கிப் பிடித்து பாய்மரக்கொடி பதித்த மேற்புறத்தட்டில் இறக்கி விட்டுவிட்டு கீழ்ப்புறக் கயிறு வழியாக இறங்க முயன்றான் வயதான அந்த சாகசவீரன்.

ஆனால், துரதிருஷ்டம் என்றே சொல்லவேண்டும். யாரும் எதிர்பார்க்காத ஒரு கணத்தில் கயிற்றைப் பிடித்திருந்த அவனது கைகள் திடுமென்று நழுவ... இருகைகளையும் அகல விரித்தபடி பயங்கரமான அலறலுடன் கடலின்மீது தலை குப்புற விழுந்தான்.

பார்வையாளர்கள் பயத்தில் உரத்த குரலில் அலறவே செய்தனர். உணர்ச்சி வசப்பட்ட ஒருசிலர் அந்தக் கிழவனைக் காப்பாற்றும் பொருட்டுக் கடலில் குதிக்கவும் செய்தனர். 'அந்த மனிதனை எப்படியாவது காப்பாற்றுங்கள்!' என்று கப்பல் தலைவன் (கேப்டன்) உத்தரவிட்டார்.

ஆனால், அந்தக் கட்டளை பயனற்றதாக முடிந்தது.

மணிக்கணக்கில் கடலுக்குள் நீந்தியபடி தேடிப்பார்த்தும், கிழவனையோ, உயிரற்ற அவனது உடலையோ யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருவேளை கடலின் விசையான அடிப்புற நீரோட்டத்தில் அகப்பட்டு அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்றே எல்லோரும் கருதினர்.

இருப்பினும் தேடுதல் பணி தொடரவே செய்தது. அன்றைய தினமே வெகுநேரம் தேடினர். தொடர்ந்து வந்த நாள்களில்கூட அவனது உடல் எங்காவது தட்டுப்படுகிறதா என்று கவனித்தனர். ஆனால், அதன்பிறகு அந்தக் கிழவனைப் பற்றி எந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை.

மறுநாள் காலை இந்தச் செய்தி மிக முக்கியத்துவத்துடன் பத்திரிகைகளில் பிரசுரமானது.

‘1823, நவம்பர் மாதம் 17-ம் தேதி-

நேற்று நமது துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்றிருந்த ஓரியன் என்கிற கப்பலிலிருந்து அபாயகரமான முறையில் இறக்கவிருந்த கப்பல் ஊழியர் ஒருவரைக் காப்பாற்றும் முயற்சியில், பழைய குற்றவாளியான ஜீன்வால்ஜின் என்பவர் ஈடுபட்டார். ஊழியரைக் காப்பாற்றிய அவர், துரதிருஷ்டவசமாகக் கடலில் தவறி விழுந்து இறந்துவிட்டார் என்றே தோன்றுகிறது. எவ்வளவோ முயன்றும் அவருடைய பிணத்தைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை. இருப்பினும் தேடுதல் பணி தொடர்கிறது.’

23

அப்போதும் கோசட்டி தெனார்டியர் தம்பதியிடம்தான் தங்கியிருந்தாள். ஜீன்வால்ஜின், ஃபான்டெயினிடம் அளித்த வாக்குறுதிப்படியே, அவளது குழந்தையை அழைத்து வரமுடியாமல் போய்விட்டதல்லவா? அதற்கிடையில் தான் சாம்ப் மாத்யூவின் விசாரணை நடந்தது. அதைத் தொடர்ந்து எதிர்பாராத சம்பவங்கள் என்னென்னவோவெல்லாம் நடந்துவிட்டன.

சரியான பராமரிப்பு அற்ற கோசெட்டி அப்போதும் குளிரால் நடுங்கியபடி மரப்பலகையின் மீது படுத்து உறங்கினாள். மற்றவர்கள் சாப்பிட்டது போக மீதமுள்ள உணவு வகைகளைச் சாப்பிட்டாள். முற்றிலுமாகக் குளிரைக் கட்டுப்படுத்த முடியாத கிழிந்த உடைகளை அணிந்துகொண்டு தான் நாள்களைக் கடத்தினாள். தெனார்டியர், தம்பதியியைப் பொறுத்தவரை அவள் வேண்டாத ஒரு சுமையாகவே இருந்தாள். கடினமான வேலைகளைச் செய்வதும், அவளது தாயாரிடமிருந்து அவள் பேரால் முடிந்த அளவுக்குப் பணத்தைக் கறக்க முடிந்ததும்தான் அவளை அங்கே உயிருடன் இருக்க அனுமளியளித்த காரணங்கள்.

1823-ம் ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்துக்கு முந்தைய நாள்தான் அந்தச் சம்பவம் நடந்தது.

இரவு வேளையில் கோசெட்டி, கணப்பு அடுப்புக்கு அருகே உட்கார்ந்துகொண்டு தெனார்டியர் தம்பதியின் குழந்தைகளுக்காக கம்பளி

நூலால் சாக்ஸ்[காலுறை] பின்னிக்கொண்டிருந்தாள். கிறிஸ்துமஸ் சமயமாக இருந்ததால் அந்தச் சத்திரத்தில் மதுவருந்தவும், சாப்பிடவும், தங்கவும் வந்த மனிதர்களின் எண்ணிக்கை சற்று அதிகமாகவே இருந்தது. திருமதி தெனார்டியரும் பம்பரமாகச் சுழன்று வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அவசரமாக சத்திரத்துக்கு உள்ளே வந்த ஒரு மனிதன், மிகவும் கோபத்துடன் திருமதி தெனார்டியரிடம் ‘‘என்னுடைய குதிரைக்கு தண்ணீர் கொடுத்தீர்களா இல்லையா?’’ என்று கேட்டான்.

ஏராளமாக மதுவருந்தி, பொழுதைக் கோலாகலமாகக் கொண்டாடச் சத்திரத்துக்கு வந்த உல்லாசப் பேர்வழிகளில் அவனும் ஒருவன். அந்தக் குடிகாரனின் அதட்டலையும் மிரட்டலையும் பார்த்த கோசெட்டி சூழ்நிலையைச் சமாளிப்பதற்காக ஒரு பொய் சொன்னாள்.

‘‘நான்தானே உங்கள் குதிரைக்கு வயிறு முட்டத் தண்ணீர் வைத்தேன்.’’

அந்த வார்த்தைகளை நம்பாதவனைப் போல் கோசெட்டியையும், திருமதி தெனார்டியரையும் மாறி மாறிப் பார்த்தான் அவன்.

‘‘நீங்கள் சொல்வதை நம்ப முடியவில்லை. உண்மையிலேயே அது தண்ணீர் குடித்திருந்தால் இதுபோல் அட்டகாசம் செய்து குரல் கொடுக்காதே!’’

‘‘அடியே, நீதானே அதற்குத் தண்ணீர் வைத்தாய்?’’– திருமதி தெனார்டியர் கோபத்தோடு கோசெட்டியிடம் கேட்டாள்.

‘‘ஆமாம் நான்தான் கொடுத்தேன் சின்னம்மா’’– திரும்பவும் அவள் தன் பொய்யைத் தொடர்ந்தாள்.

‘‘கழுதை… உடனே போய் அந்தக் குதிரைக்கு ஒரு வாளி தண்ணீர் கொடு’’– திருமதி தெனார்டியர் அலறினாள்.

‘‘குதிரைக்குக் கொடுக்க இங்கு தண்ணீர் மிச்சம் இல்லையே சின்னம்மா!’’

‘‘இல்லையென்றால், வெளியில் போய்த்தான் சுமந்து கொண்டுவந்து கொடுக்கவேண்டும். ம்….சீக்கிரமாகப் போ கழுதை!’’ வாளி ஒன்றை அவளுக்கு முன்னால் கோபமாக வீசி எறிந்துவிட்டு அதிகாரத்துடன் கட்டளையிட்டாள்.

கோசெட்டி இதைக் கேட்டுத் திடுக்கிட்டே போனாள் இருட்டு வேளையில் காட்டுவழியாக வெகுதூரம் நடந்து அருவிக்குச் சென்று தண்ணீர் எடுத்துவர அவளுக்குப் பயமாக இருந்தது. அதுவுமின்றி அதே வழியில் வாளி நிறையத் தண்ணீரை எடுத்துவருவதும் அவளால் முடியக்கூடிய காரியமாகத் தெரியவில்லை. அப்படியே தண்ணீர் எடுத்துவந்தாலும் எங்காவது வழியில் விழுந்து விடுவோம் என்று தோன்றியது.

என்ன செய்வது என்று தெரியாமல் திகைப்புடன் நடுங்கிக் கொண்டிருந்தாள் கோசெட்டி. திருமதி தெனார்டியர் அவளைத் தரதரவென்று வெளியே இழுத்துப் போய், ‘‘ம்....சீக்கிரம் போய் தண்ணீர் எடுத்துவா!’’ என்று விரட்டினாள்.

பயத்தால் ஏற்கெனவே அரண்டு போயிருந்த கோசெட்டி, மனம் வெதும்பி அழுதவாறு வாளியுடன் அருவியை நோக்கி நடந்தாள்.

தண்ணீரில்லாத வாளியைச் சுமக்கவே அவளால் முடியவில்லை. இருட்டு நேரத்தில் அந்தத் தெரு மூலையிலிருந்த வீட்டுக்குப் போகவே அவள் பயப்படுவது வழக்கம். ஒருவழியாக அந்த வீட்டை அடைந்தவள் அங்கேயே ஓரிடத்தில் உட்கார்ந்து அழத்தொடங்கினாள். திருமதி தெனார்டியர் சொன்னபடி தண்ணீர் எடுத்து, போகவில்லையென்றால் தன்னை ஒரு வழியாக்கி விடுவாள் என்பதும் கோசெட்டிக்குத் தெரியும்.

திருமதி தெனார்டியரின் கைகளில் அகப்பட்டுச் சித்ரவதை படுவதைவிட இரவு வேளைகளில் உலாவும் பிசாசுகளிடம் அகப்பட்டு உயிரை இழப்பதுதான் மேல் என்று அந்தச் சிறுபெண் மனத்துள் நினைத்துக் கொண்டாள்.

கடைசியில் எது வந்தாலும் ஏற்றுக்கொள்வது என்ற முடிவுக்கு வந்தவளாக, தன்னுடைய வலுவையெல்லாம் திரட்டிக்கொண்டு, மரக்கூட்டங்களின் ஊடாக அருவியை நோக்கி நடந்தாள். முதலில் நிதானமாக நடந்தவள். பிறகு விரைவாக ஓடத்தொடங்கினாள்.

வாய்விட்டு அழுதபடியே மரங்களைத் தாண்டினாள். மரங்களின் மீதிருந்து குரல் எழுப்பிய இரவு நேரப் பறவைகளும், காற்றில் சலசலத்து ஒலியெழுப்பிய மரக்கிளைகளும் அவளை நடுங்க வைத்தன. இவ்வளவையும் ஒருவாறாகத் தாங்கிக் கொண்டு அவள் அருவிக்கரையை அடைந்தாள்.

அதுவரை அவள் மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓடிவந்தாள். வாளியை நீருக்குள் அமிழ்த்தி நிறைத்துப் புல்பரப்பின் மீது ஏற்றி வைத்தாள். அதற்குள்ளேயே அவள் வெகுவாகச சோர்ந்து போயிருந்தாள். வாளியின் அருகிலேயே அமர்ந்து அவன் தேம்பியபடி மூச்சு வாங்கிக் கொண்டிருந்தாள்.

பிறகு எழுந்த, வாளியைச் சுமந்துகொண்டு முன்புறமாக நடக்கத் தொடங்கினாள். அவளால் அதிக தூரம் நடக்க முடியவில்லை. நாலைந்து எட்டுகள் எடுத்து வைத்ததும் மறுபடி வாளியை வைத்துவிட்டு உட்கார்ந்தாள். கைகள் நீரின் கனத்தான் மரத்துப் போயின. கால்கள் நடக்க முடியாமல் பின்னிக் கொண்டவை போல் இருந்தது. ஒவ்வொரு தடவை நடக்கும்போதும் அவளால் இரண்டு மூன்று எட்டுகள் மட்டுமே எடுத்துவைக்க முடிந்தது. நேரம் செல்லச் செல்ல அவள் உடல் மிகவும் சோர்வடைந்து கொண்டே வந்தது.

அவளது வேதனையையும் துயரத்தையும் கடவுளைத் தவிர வேறு யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை.

இனிமேல் எங்கும் நிற்க வேண்டியதில்லை. ஒரே மூச்சில் வாளியை எடுத்துக்கொண்டு சத்திரத்தில்தான் போய் நிற்க வேண்டும் என்று நினைத்தவளாக வாளியைத் தூக்கினாள். என்ன ஆச்சரியம்! வாளி இப்போது ஒரு பூவைத் தூக்குவது போல் கனமற்று உயர்ந்தது. அவள் வியப்பின் வசப்பட்டவளாக வாய் பிளந்தாள்.

பீமாகாரமான ஒரு மனிதனது வலுவான கரம் அந்த வாளியின் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த அவளது உடம்பு, தலை முதல் கால்வரை நடுங்கத் தொடங்கியது.

அந்த மனிதன் மிகவும் மிருதுவான குரலில் பேசத் தொடங்கியபோது அவளுக்கு நம்பிக்கையும் தைரியமும் திரும்பக் கிடைத்தாற்போல் இருந்தது.

24

“குழந்தை...இந்த வாளி உன்னால் சுமக்க முடியாத அளவுக்குக் கனமானதாயிற்றே”

“ஆமாம் சார்!”

“என்னிடமே விட்டுவிடு. நானே இதைச் சுமந்துகொண்டு வருகிறேன்.”

கோசெட்டி எந்தவிதமான மறுப்பும் கூறாமல் வாளியை அவரிடமே விட்டுவிட்டாள். அவர் அதைச் சுமந்தவாறே அவளுடன் நடந்துவந்தார்.

“உனக்கு என்ன வயதாகிறது குழந்தை?”

“எட்டு வயதாகிறது!”

“உன் வீட்டில் உன்னைக் கவனித்துக் கொள்ள அம்மா இல்லையா?”

“இல்லை. மற்றவர்களுக்கெல்லாம் அம்மா இருக்கிறார்கள். என் அம்மாவைப் பார்த்ததாக எனக்கு ஞாபகமே இல்லை!”

“அப்படியா, உன்பேர் என்ன?”

“கோசெட்டி!”

இந்தப் பெயரைக் கேட்டவுடன் மின்சாரத்தால் தாக்குண்டது போல் அந்த மனிதர் நடுங்கினார்.

“உன் வீடு எங்கே இருக்கிறது?”

“மான்ட் ஃபெர்ம்யூலில்!”

“இந்த இரவு வேளையில், காட்டுவழியில் வந்து உன்னைத் தண்ணீர் சுமந்துவரச் சொன்னது யார்?”

“மேடம் தெனார்டியர்!”

“அவர் என்ன செய்கிறார்?”

“சத்திரம் ஒன்றை நடத்துகிறார்!”

“அப்படியானால், இன்று இரவு நானும் அந்தச் சத்திரத்திலேயே தங்கவேண்டும். என்னை அங்கு கூட்டிக்கொண்டு போ!”

அவர் விரைவாக நடக்கத் தொடங்கினார். அவருக்கு இணையாக நடந்துசெல்ல அவள் திணறினாள். என்றாலும், அவளது சோர்வெல்லாம் அதற்குள் பஞ்சாகப் பறந்து போயிருந்தது.

“சத்திரத்தில் மேடம் தெனார்டியருக்கு உதவ வேலைக்காரர்கள் வேறு யாரும் இல்லையா?”

“இல்லை சார்... நான் மட்டும்தான்: அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் மட்டும்தான் உள்ளனர்.”

“அவர்கள் என்ன செய்கிறார்கள்?”

“பகல் முழுவதும் விளையாடுவார்கள். பிறகு சாப்பிட்டுத் தூங்கி விடுவார்கள்.”

“நீ என்ன செய்வாய்?”

“நான் வேலை செய்யவேண்டும்!”

“பகல் பொழுது முழுவதுமேவா?”

“ஆமாம் சார்!”

அதற்குள் அவர்கள் சத்திர வாசலை அடைந்துவிட்டனர். கோசெட்டி அவரது கையிலிருந்த வாளியைத் தன்னிடம் தருமாறு கேட்டாள்.

“நாம் சத்திரத்தை அடைந்துவிட்டோம். இனிமேல் அந்த வாளித் தண்ணீரை நீங்கள் சுமக்க வேண்டாம். என்னிடமே தாருங்கள். நீங்கள் சுமந்து வருவதை மேடம் தெனார்டியர் பார்த்தால்...?”

“ம்...பார்த்தால் என்ன?”

“என்னை அடித்தே கொன்றுவிடுவார்!”– அந்தச் சிறுபெண் பயத்துடன் பதிலளித்தாள்.

அவள் கதவைத் தட்டினாள். கையில் மெழுகுவத்தி ஒன்றுடன் கதவைத் திறந்த மேடம் தெனார்டியர், அவளை பார்த்துக் கோபத்துடன் கேட்டாள்: “இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய்? கண்டபடி ஊரைச்சுற்றி விளையாடிவிட்டு வருகிறாயா என்ன?”

“சின்னம்மா... இதோ மரியாதைக்கு உரிய ஒரு மனிதர் வந்திருக்கிறார். இவர் இன்று இரவு இங்கு தங்க வேண்டுமாம்!”

“உள்ளே வாருங்கள்!”– வந்தவரைப் பார்த்துக் கூறினாள் மேடம் தெனார்டியர். அவர் உள்ளே நுழைந்ததும் அவரது உடையைப் பார்த்தாள்

முகத்தைச் சுளித்துக்கொண்டு சற்றுக் கோபத்துடன் பேசினாள்: “நீங்கள் தங்குவதற்கு நான் இடம் தரமுடியாது!”

“நீங்கள், உங்களுக்கு சௌகரியம் என்று தோன்றுகிற எந்த இடத்திலும் நான் படுத்துக் கொள்கிறேன். பதிலாக உங்களது அறைக்கு வழக்கமாகத் தரும் வாடகையைத் தருகிறேன்!”

“அப்படியா, சரி நாற்பது ஸூ தரவேண்டும். அதையும் முன்கூட்டியே தரவேண்டும்!”

அவர் உடனே அவள் கேட்ட பணத்தை அவளிடம் கொடுத்தார். பிறகு உட்புறம் இருந்த மேஜைக்கு முன் அமர்ந்து கொண்டார். கோசெட்டி ஒரு பாட்டில் பீர் பானத்தையும் டம்ளரையும் கொண்டுவந்து மேஜை மீது வைத்தாள். அந்த மனிதர் அதையெல்லாம் கையால் தொடாமல் கோசெட்டியையே ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தார்.

அந்த முகத்தில் இரக்கமும், கருணையும் பெருக்கெடுத்தது போல் தோன்றியது.

மெலிந்த உடம்புடன் வெளிறிப்போய், கிழிந்த உடைகளுடன், குளிர் வேளையிலும் கைகால்களை மறைக்காமல், கணப்பு அடுப்பின் அருகே போய் உட்காரக்கூடப் பயந்தவளாக ஒரு மூலையில் அமர்ந்து நடுங்கிக் கொண்டிருந்தாள் கோசெட்டி. அவள் அந்த இடத்தில் எப்படிப் பராமரிக்கப்படுகிறாள் என்பதையும், தெனார்டியர் தம்பதி எவ்வளவு இரக்கமற்ற தன்மையுடன் அவளிடம் நடந்து கொள்கின்றனர் என்பதும் அவருக்குத் தெளிவாகவே புரிந்தது!

தெனார்டியர் தம்பதியின் குழந்தைகள் ஒரு பெரிய பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். கோசெட்டி தன் கையில் இருந்த கம்பளி நூல் மற்றும் ஊசியுடன் அந்தக் குழந்தைகளையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். கம்பளி நூலை ஊசியின் உதவியால் பின்னக்கூட முடியாமல் அவளது கைகள் நடுங்கின.

அதே சமயத்தில்தான் மேடம் தெனார்டியர் ஒரு புயல் காற்று போல் அங்கு வந்து சேர்ந்தாள். கோசெட்டியைப் பார்த்து உரத்த குரலில் அவள் அலறினாள்: “அங்கே என்னடி வேடிக்கை பார்க்கிறாய்? உனக்குக் கொடுத்த வேலையை ஒழுங்காகச் செய்யாவிட்டால் வீணாக அடிவாங்குவாய் ஞாபகமிருக்கட்டும்!”

வந்தமனிதர், தெனார்டியரின் மனைவியை அருவருப்புடன் பார்த்தார்.

“அந்தக் குழந்தையைக் கொஞ்சம் விளையாட விடுங்கள். அதுவும் ஒரு சின்னக் குழந்தையல்லவா?” அவர் கேட்டார்.

“இவளுக்குச் சோறு போட்டு வளர்ப்பது சும்மா இருப்பதற்காகவா?”

“இந்த நேரத்தில் அவள் என்ன வேலை செய்ய வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?”

“என்னுடைய குழந்தைகள் காலில் போட்டுக்கொள்ள, கம்பளிக் காலுறைகளைப் பின்னித் தரவேண்டும்!”

“காலுறைகளுக்கு என்ன விலை இருக்கும்?”

“முப்பது ஸு விலை இருக்கும்!”

“நான் ஐந்து ஃபிராங்க் பணம் தந்தால் அந்த ஊசியையும் நூலையும் எனக்குத் தருவீர்களா?”

வந்த விருந்தாளி, பேராசைக்காரியான அந்தப் பெண்மணியிடம் கேட்டார். அவள் ஒருகணம் வாயைப் பிளந்தபடி அவரையே பார்த்தாள். அவர் தனது கிழிந்த பையிலிருந்து நாணயம் ஒன்றை எடுத்து மேஜை மீது வைத்தார்.

கோசெட்டியின் கையிலிருந்து கம்பளி நூல்கண்டையும் ஊசியையும் வாங்கித் தன்னுடைய பெரிய சாக்குப்பைக்குள் போட்டுக்கொண்டார். பிறகு அவர் கூறினார்: “இனி அவள் இந்த வேலையைச் செய்யவேண்டாம். நீ போய் விளையாடம்மா குழந்தை!”

கோசெட்டி தனது இருப்பிடத்திலிருந்து எழுந்து, இரண்டு குழந்தைகளையும் நெருங்கி அவர்களிடமிருந்த பொம்மையைத் தொட்டு விளையாடத் தொடங்கினாள். உடனே அந்தக் குழந்தைகள் தங்கள் தாயை நோக்கிக் கூப்பாடு போடத் தொடங்கின: “அம்மா... அம்மா இந்தப் பிச்சைக்காரியைப் பாருங்கள் அம்மா. எங்களது பொம்மையைக் கையால் எடுத்து அழுக்காக்குகிறாள். ஏய்... தாடி... எங்கள் பொம்மையை!”

“ஏய் தரித்திரம் பிடித்த பிசாசே... அந்தப் பொம்மையை நீ தொடலாமா? உன்னை நான்..” அவள் கையை ஓங்கியபடி கோசெட்டியின் பக்கமாக விரைந்தாள். பிறகு எதையோ நினைத்துக் கொண்டவளாக வாயில் வந்ததையெல்லாம் பேசி, திட்டித் தீர்த்ததுடன் நிறுத்திக் கொண்டாள்.

பயந்துபோன கோசெட்டி பொம்மையைக் கீழே போட்டுவிட்டு ஒரு மூலைப் பக்கமாக ஒதுங்கி நின்று சிணுங்கித் தொடங்கினாள்.

இதனிடையில் வந்த விருந்தாளி அங்கிருந்து வெளியேறியதை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. ஒரு சில நிமிடங்களுக்குள் அவர் திரும்பி வந்தார். அப்போது அவரது கையில் அழகான பொம்மை ஒன்று இருந்தது.

“இந்தாம்மா குழந்தை இதை வைத்துக்கொள். உனக்காகவே வாங்கி வந்திருக்கிறேன். வைத்து விளையாடிக் கொள்!” அவர் பொம்மையை கோசெட்டியிடம் கொடுத்தார்.

வியப்பும், திகைப்பும், மகிழ்ச்சியும் ஒன்று சேர்ந்து அந்தக் குழந்தையின் முகத்தில் மலர்ந்தது. தெனார்டியர் மனைவி மற்றும் குழந்தைகள் திகைப்புடன் வாயைப் பிளந்தவாறு கோசெட்டியின் கையிலிருந்த பொம்மையையும் அவ்வளவு விரைவில் அதை வாங்கிவந்து அவளது கையில் கொடுத்த புதிய விருந்தாளியையும் மாறிமாறிப் பார்த்தனர்.

வந்திருக்கும் மனிதர் உடையாலும் தோற்றத்தாலும் தெரிவதைப் போன்று சாதாரணமான மனிதர் அல்ல என்றும், ஒரு பெரும்பணக்காரன் என்பதும் புரியவே செய்தது.

“சின்னம்மா இந்தப் பொம்மை எனக்கே எனக்குத்தானே? நான் இதை எடுத்துக்கொள்ளட்டுமா? கோசெட்டி மிகுந்த பணிவுடன், மோசமான அந்தப் பெண்மணியைப் பார்த்துக் கேட்டாள். அவளது நல்ல குணத்தைப் பார்த்த விருந்தாளியின் கண்கள் நீரால் நிறைந்தன. முகம் பூரிப்பு அடைந்தது.

“வேறு யாருக்கு? அவர் உனக்காகத்தானே அந்தப் பொம்மையை வாங்கி வந்திருக்கிறார்?” திருமதி தெனார்டியர் முகத்தைக் கடுப்பாக வைத்துக்கொண்டு பதிலளித்தாள். அவளும் அவளது குழந்தைகளும் பொறாமையால் புகைந்து குமைந்து கொண்டிருந்தனர்.

“நீ அதை வைத்துக்கொண்டு விளையாடு குழந்தை!” விருந்தாளி அவளிடம் அன்புடன் கூறினார்.

வாழ்க்கையில் முதல் தடவையாக மகிழ்ச்சி நிறைந்த மனத்துடன் கோசெட்டி அந்த பெரிய பொம்மையை எடுத்துக் கொண்டுபோய் ஒரு நாற்காலி மீது வைத்து, அதனுடன் செல்லமாகப் பேசத் தொடங்கினாள். அந்த சிறு குழந்தையின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியும் நிறைவும் அதைப் பரிசளித்தவரின் முகத்தில் திருப்தியை ஏற்படுத்தியது.

விரைவிலேயே எல்லோரும் உறங்கச் சென்றனர். தெனார்டியர் குழந்தைகள் கம்பளி உடை அணிந்து, பஞ்சு நிறைந்த மெத்தைகளில் படுத் உறங்கினர். ஆனால் கோசட்டி அந்த அறையின் மூலையில் வைக்கோலால் முடையப்பட்ட பாயின் மீது குளிரால் நடுங்கியபடியே சுருண்டு படுத்திருந்தாள். புதிய விருந்தாளி அக்கம்பக்கமெல்லாம் சுற்றிப் பார்த்தனர்.

கணப்பு அடுப்பின் அருகே தெனார்டியரின் குழந்தைகள் அணியும் பறவையின் சின்னஞ்சிறு இறகுகள் செருகிய காலணிகள் கிடந்தன. கிறிஸ்துமஸ் பரிசாக ஒவ்வொன்றினுள்ளும் திருமதி தெனார்டியர் ஒவ்வொரு வெள்ளி நாணயங்களைப் போட்டு வைத்திருந்தாள். அறையின் மற்றொரு மூலையில் கோசெட்டியின் மரத்தாலான பாதஅணி அழுக்குப் பிடித்தும், சிதைந்தும் கிடப்பதைக் கண்டார். அதில் கிறிஸ்துமஸ் பரிசாக எதையும் போட்டு வைக்கவில்லை அந்தப் பெண்மணி.

விருந்தாளி மனிதர் தனது கோட்டுப்பைக்குள் கையை விட்டு ஒரு சிறிய பொருளை அந்த மரக்காலணிக்குள் போட்டார். பளபளப்பான ஒரு தங்க நாணயம் அது!

சத்திரத்துக்கு வந்துள்ள நபர் தாம் நினைத்தது போல் பரதேசியோ, பிச்சைக்காரனோ அல்ல. ஒரு பெரிய பணக்காரன்தான். ஏதோ ஒரு காரணத்துக்காக இப்படி வேடம் போட்டு வந்திருக்கிறார் என்றும் திருமதி தெனார்டியர் நினைத்தாள். எனவே, அவள் மிகவும் பணிவுடன் விருந்தாளியை நெருங்கி வந்து கேட்டாள்.

“சார், உங்களுக்காக மேல்புற அறையில் படுக்கை போட்டிருக்கிறோம். கௌரவமான விருந்தினர்களுக்காக நாங்கள் ஒதுக்கி வைத்திருக்கிற அறை அது!”

“தேவை இல்லை. உங்களது ஆடு, மாடுகளுக்காக நீங்கள் கட்டியிருக்கும் தொழுவத்தை காட்டினால் போதும். நான் அங்கேயே படுத்துக்கொள்கிறேன்.” விருந்தாளி பதிலடி கொடுத்தார்.

பொழுது விடிந்தது.

விருந்தாளி கோசெட்டியை அருகில் அழைத்து அவளை வியப்படையச் செய்த விலை உயர்ந்த பரிசு ஒன்றை வழங்கினார். பார்வைக்கு மிகவும் அழகான, மென்மையான, உயர்தரக் கம்பளி உடைகளும், காலுறைகளும், தொப்பியும் அடங்கிய ஒரு பரிசு அது. ஏற்கெனவே கொடுத்துள்ள பெரிய

பொம்மையுடன், மனம்போல் விளையாடிக் கொள்ளுமாறும் எந்த வேலையையும் செய்யவேண்டியதில்லை என்றும் அவர் அவளிடம் சொன்னார்.

சற்று நேர இடைவெளிக்குப் பிறகு அவர் அவளிடம் அன்பான குரலில் இதமாகப் பேசத்தொடங்கினார்: “கோசெட்டி, நீ என்னுடன் வந்து விடுகிறாயா? நான் உன்னை என் வீட்டுக்கு அழைத்துப் போகிறேன். அங்கு நீ மிகவும் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருக்கலாம். இதுபோல் திட்டு, அடி, உதை வாங்கிக்கொண்டு, கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டியது இல்லை. என்னுடன் வருகிறாயா?”

புதியவரின் நிபந்தனையற்ற அன்பும் அவரது நடவடிக்கைகளும் ஏற்கெனவே கோசெட்டியிடம் நன்றியுணர்வை ஏற்படுத்தியிருந்தது. எனவே நீர் நிறைந்த கண்களுடன் வருவதாகச் சம்மதித்துத் தலையாட்டினாள்.

“ஆனால், என்னை அவர்கள் உங்களுடன் அனுப்புவார்களா சார்?”– அவள் சந்தேகத்துடன் கேட்டாள்.

“அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்.”

அவர்களது பேச்சைக் கேட்டுக்கொண்டுதான் தெனார்டியர் தம்பதி அங்கு வந்தனர். விருந்தாளி அவர்களைப் பார்த்தபடி பேசினார்: “நான் இந்தக் குழந்தையை என்னுடன் கூட்டிக்கொண்டு போகிறேன். இனிமேல் நீங்கள் இவளை வைத்துகொண்டு கஷ்டப்பட வேண்டியதில்லை!”

வந்திருப்பவர் கண்டிப்பாக அவளை அழைத்துக்கொண்டு போகப் போகிறார். எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எவ்வளவு முடியுமோ அவ்வளவு பணத்தைக் கறந்து விடுவதுதான் சரி என்றும் தீர்மானித்தனர்.

“அது எப்படி முடியும்?” எத்தனை வருடங்களாக நாங்கள் இவளுக்குச் சோறு போட்டு வளர்த்திருக்கிறோம்? எங்கள் சொந்த மகளைப் போலக் கவனித்திருக்கிறோம். எங்களால் இவளைப் பிரிந்திருக்க முடியாது!” அவர்கள் போலியாக வரவழைத்துக் கொண்ட வருத்தத்துடன் பேசினர்: “எல்லாவற்றுக்கும் மேலாக நாங்கள் இவளுக்கு எவ்வளவு பணம் செலவழித்திருக்கிறோம் தெரியுமா? சுமார் ஆயிரத்து ஐந்நூறு ஃபிராங்க்குள் செலவாகியிருக்கும்.”

“இவளால் உங்களுக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்படக்கூடாது. நான் உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். என்னைப் பற்றி உங்களுக்கு அதிகமாக எதுவும் தெரியாது. நான் நினைத்தால் இங்கிருந்து இவளை அழைத்துப் போவதை உங்களால் தடுக்க முடியாது!” என்று கூறியவாறு மூன்று பெரிய நோட்டுகளை எடுத்து மேஜைமீது வைத்தார்.

தெனார்டியர் தம்பதி எதிர்பார்த்ததைவிட மிகப்பெரிய தொகையாக இருந்தது அது. அன்று மாலை நேரத்தில் அந்த ஊரின் பிரதான சாலையில் ஏழைப் பிச்சைக்காரனைப் போன்ற தோற்றம் கொண்ட கிழவனும், உற்சாகம் நிரம்பிய சிறுமி ஒருத்தியும் கைகோத்துப் பிடித்தபடி நடந்து செல்வதை ஊரார் கவனித்தனர். அந்தச் சிறுமியின் கையில் விலையுயர்ந்த அழகான பெரிய பொம்மை ஒன்றும் இருந்தது.

அவர்கள் – சத்திரத்துக்கு வந்து சேர்ந்த வயதான பெரியவரும், கோசெட்டியும்தான்!

25

தெனார்டியர் தம்பதியின் சத்திரத்துக்கு வந்து கோசெட்டியை அழைத்துக் கொண்டுபோனது ஜீன்வால்ஜின்தான் என்பதைக் குறிப்பாகச் சொல்லவும் வேண்டுமா! அவர் இறக்கவில்லை. டியோலன் துறைமுகத்தில் கப்பலிலிருந்து கடலில் விழுந்தபிறகு நீருக்குள்ளேயே நீந்திச்சென்று சற்றுத் தொலைவில் நங்கூரமிட்டிருந்த வேறொரு கப்பலில் ஏறிக்கொண்டார் ஜீன்வால்ஜின்.

இரவில் வெகுநேரம் வரையில் யாருக்கும் தெரியாமல் கப்பலின் ஒரு மூலையில் ஒளிந்திருந்த ஜீன்வால்ஜின் நள்ளிரவுக்கு மேல் கரைக்கு நீந்திச் சென்று நேராக பாரீஸ் நகரை நோக்கிச் சென்றார்.

மான்ட்ரியூல்ஸர்மார் நகரின் மேயராக–மிஸ்டர் மடலினாக வாழ்ந்த காலத்தில் தனது சேமிப்புப் பணம் மொத்தத்தையும் லாஃபிட்டி நகரிலிருந்த ஒரு பாங்கில் போட்டுவைத்திருந்தார். சாம்ப் மாத்யூவின் வழக்கு விசாரணையின்போது உண்மையை ஒப்புக்கொண்ட பிறகு, தான் எப்படியும் பிடிபட்டு விடுவோம் என்பது புரிந்ததும், நேராக அந்த பாங்க்குக்குச் சென்ற மடலின் மொத்தப் பணத்தையும் திரும்பப் பெற்றுக்கொண்டு அதை ஒரு பெரிய இரும்புப் பெட்டியில் போட்டு வெகு தொலைவிலுள்ள காட்டுக்குள்

கொண்டுபோய்ப் புதைத்து வைத்தார். அந்த இடத்தின் அருகே அடையாளம் ஒன்றையும் போட்டு நினைவில் இருத்திக் கொண்டார்.

கப்பலிலிருந்து தப்பித்த ஜீன்வால்ஜின் நேராகப் பணத்தைப் புதைத்து வைத்திருக்கும் இடத்தை நோக்கித்தான் சென்றார். அங்கிருந்து கொஞ்சம் பணத்தை எடுத்துக்கொண்டு காட்டுவழியாகவே பயணம் செய்தார். கோசெட்டியைச் சந்தித்ததும், அவளை தெனார்டியர் தம்பதியிடமிருந்து காப்பாற்றியதும் அந்தச் சந்தர்ப்பத்தில்தான்!

அவளுக்கு விலை உயர்ந்த உடைகளையும், பொம்மையையும் வாங்கித் தரவும், தெனார்டியர் தம்பதியை வியப்பிலாழ்த்துமளவு அவர்கள் விரும்பியதைக் காட்டிலும் அதிகமான பணத்தை ஜீன்வால்ஜினால் கொடுக்க முடிந்ததும் அதனால்தான். காட்டிலிருந்து எடுத்து வரப்பட்ட ஓர மிகமிகச் சிறிய பகுதிதான் அந்தப் பணம்.

ஜீன்வால்ஜின் கோசெட்டியுடன் பாரீஸ் நகருக்கு வந்து சேர்ந்தார். குறுகலான பாதை ஒன்றில், இருபுறமும் பெரிய தோட்டங்கள் நிறைந்த ஓர் இடத்தில், ஒரு பெரிய ‘கேட்’டுக்கு அருகில் ஓய்வெடுப்பதற்காகச் சற்று நேரம் அமர்ந்தனர். கேட்டைத் தாண்டினால் போய்ச்சேருமிடம் ஒரு சிறு வீடு. மிகவும் பழையதாகி, சிதிலமடைந்து ஏறத்தாழ அழிந்து விட்ட நிலையிலிருந்த வீடு அது. அதன் ஜன்னல்களாக இருந்த மரப்பகுதிகள் பூச்சிகளால் அரிக்கப்பட்டிருந்தன. சுவர்கள் வெடித்தும் உடைந்தும் எப்போது வேண்டுமானாலும் விழுந்துவிடுவேன் என்று பயமுறுத்தின. கிழிந்த துணிகளாலான திரைச்சீலைகள் ஜன்னல் மற்றும் கதவுகளை மூடியிருந்தன.

ஜீன்வால்ஜின் கோசெட்டியை அழைத்துக்கொண்டு அந்த வீட்டை நெருங்கினார். தன்னுடைய கோட்டு பாக்கெட்டிலிருந்து ஒரு சாவியை எடுத்துக் கதவைத் திறந்தார். கோசெட்டி மௌனமாக அவரைப் பின் தொடர்ந்தாள்.

தான் எங்கிருக்கிறோம்? எதற்காக அழைத்து வரப்பட்டிருக்கிறோம்? தன்னை அழைத்து வந்திருப்பது யார் என்பது போன்ற எதையுமே அவள் யோசித்ததாகத் தெரியவில்லை. தெனார்டியர் தம்பதியிடமிருந்து விடுபட்டதும் கடுமையான அடிமை வேலைகளிலிருந்து விமோசனம் பெற்றதும் அவளுக்கு மிகப்பெரும் நிம்மதியையும் மகிழ்ச்சியையும் அளித்தன.

அன்று இரவு நன்றாக உறங்கிக் கொண்டிருந்த கோசெட்டி, சாலையில் வண்டி ஒன்று விரைந்து செல்லும் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்து எழுந்தாள். ‘இதோ வந்துவிட்டேன் சின்னம்மா!’ என்றபடி வாசலை நோக்கி நடக்கத் தொடங்கினாள். அந்த அப்பாவிப் பெண் அப்போதும் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தாள். தெனார்டியர் குடும்பத்தில் அவள் அனுபவித்த நரகவேதனைகளிலிருந்து அப்போதும் அவள் முழுமையாக விடுப்பட்டிருக்கவில்லை!

தனது கட்டிலில் பெரிய பொம்மையையும் அருகில் புன்சிரிப்புடன் நின்று கொண்டிருக்கும் ஜீன்வால்ஜினையும் பார்த்த பிறகுதான் அவளிடம் நிம்மதியின் தங்கக் கிரணங்கள் ஒளிவிடத்தொடங்கின. தான் இனிமேல் ஒருபோதும் தெனார்டியர் குடும்பத்துக்கு அடிமை வேலை செய்ய வேண்டியதில்லை என்றும், என்றென்றைக்குமாகத் தான் விடுதலை பெற்றுவிட்டோம் என்பதையும் உணர்ந்து நீண்ட பெருமூச்சு விட்டாள். நன்றி நிறைந்த விழிகளுடன் தன்னைக் காப்பாற்றிய அந்த உருவத்தைப் பார்த்துச் சிரித்தாள்.

கோசெட்டியின் முகத்தில் புதிய உற்சாகமும் மகிழ்ச்சியால் ஏற்பட்ட புத்தொளியும் கலந்து தெரிந்தன.

ஜீன்வால்ஜினைப் பொறுத்தவரை கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக மனித நேசிப்பும், குடும்ப உறவுகளும் தொலைந்துபோன விஷயமாக – எட்டாத ஒன்றாகவே இருந்தது. பாதிரியாரின் வீட்டில் நடைபெற்ற சம்பவம்தான் அவருள் மனிதத்துவத்தை முதன் முதலாக விதைத்தது எனலாம்.

ஃபான்டெயினைக் காப்பாற்றவும், அவளுக்குப் பணிவிடை செய்ய நோந்ததுமான சூழ்நிலையிலேயே குடும்ப ஈடுபாடு, மனிதர்களை நேசிப்பது என்பதெல்லாம் அவருள் எழத்தொடங்கியிருந்தன. ஒருபோதும் அந்த மனிதர் ஒரு கணவராகவோ தந்தையாகவோ இருந்திராத நிலையில் ஃபான்டெயினைத் தனது சொந்த மகளைப் போல் நினைத்துக் கொண்டதால்தான், அவளுக்குத் தேவையான உதவிகளைச் செய்தார்.

இப்போது கோசெட்டியைக் கண்டுபிடித்து அழைத்துக் கொண்டு வந்தபிறகு ஜீன்வால்ஜினின் இதயம் உண்மையான அன்பில் திளைத்து அன்பினாலேயே புடம்போடப்பட்டு, நெருப்பில் புடமிடப்பட்ட தங்கம் போல் ஜொலித்தது. முரட்டுத்தனமான, தன்னந்தனி மனிதனான அவருக்கு வாழ்க்கையின் மிகவும் மென்மையும் நுட்பமுமான பகுதிகள் படிப்படியாகத் தட்டுப்படத்

தொடங்கின. திருமணமே செய்து கொள்ளாத அந்த மனிதருக்கு இப்போதுதான் ஒரு தாத்தா ஆகிவிட்டோம் என்ற உணர்வு தோன்றி மனத்திருப்தி அளித்தது.

சுயநலமற்ற, எதிர்பார்ப்புகள் ஏதுமற்ற அந்த அன்பு அவரை ஒரு புதுமனிதனாகவே மாற்றிவிட்டது என்றால் அது மிகையில்லை!

மிகவும் பழையதாகி இற்றுப்போன அந்தக் கட்டடத்தில் சில நாள்கள் ஜீன்வால்ஜினும் கோசெட்டியும் வசித்தனர். பகல் முழுவதும் அவர் வீட்டுக்குள்ளேயே இருப்பார். மாலை நேரமானால் கோசெட்டியை அழைத்துக் கொண்டு வெளியே புறப்படுவார். தெருக்கள் சிலவற்றைத் தாண்டி நகரின் பல இடங்களுக்கும் செல்வார்கள். இருந்த உலாவல் முடிந்தபிறகு வீட்டுக்குத் திரும்பி வந்து இரவு உணவை அருந்திவிட்டுப் படுத்துக் கொள்வர். இதுவே அவர்களது வழக்கமாக இருந்தது.

நடந்து செல்லும் வழியில் ஜீன்வால்ஜினைப் பார்ப்பவர்கள், அவரை ஒரு பிச்சைக்காரன் என்று நினைத்து நாணயங்கள் சிலவற்றை அவரிடம் கொடுப்பார்கள். அப்படித் தரும் நாணயங்களை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு, தருபவர்களைப் பணிந்து வணங்கவும் செய்வார். இப்படிக் கிடைத்த நாணயங்களை அவர் தனியாகச் சேமித்து வைத்தார். ஆதரவற்ற ஏழை எளியோரைக் காணும்போது அதிலிருந்து நாணயங்களை எடுத்துக் கொடுப்பார். இது போன்ற சேமிப்பு இல்லாத சந்தர்ப்பத்தில் தனது சொந்தப் பணத்திலிருந்தும் வெள்ளி நாணயங்களை எடுத்துக் கொடுப்பார். இந்தக் காட்சியைக் காண நேரிடும் எவரும் வியப்புடனேயே அதைக் கவனிப்பது வழக்கம்.

ஜீன்வால்ஜின், கோசெட்டியுடன் வசித்த வீட்டுக்குத் தினந்தோறும் வயதான மூதாட்டி ஒருவர் வருவது வழக்கம். வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்வதும், பாத்திரங்களைக் கழுவுவதும் அவள் வேலை. அந்த மூதாட்டியின் மனத்தில் இந்த மனிதரைக் குறித்து என்னவெல்லாமோ சந்தேகங்கள் எழும்பின. இந்த மனிதர் வெளித்தோற்றத்தில் தெரிவது போல் ஏழையோ, பிச்சைக்காரனோ அல்ல என்பது அவளுக்கு சந்தேகமறத் தெரிந்தது. எப்படியும் இந்த மனிதனின் ரகசியங்களைக் கண்டுபிடித்தே தீரவேண்டுமென்று அவள் உறுதி பூண்டாள்.

ஒருநாள் அவர் தனது கோட்டைக் கழற்றி வைத்துவிட்டுக் குளிக்கப் போனார். கோசெட்டி வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போதுதான் அந்த மூதாட்டி பெருக்கிச் சுத்தம் செய்ய வந்தாள்.

வீட்டுக்குள் நுழைந்து பெருக்க ஆரம்பித்தவள், ஆணியில் மாட்டியிருந்த கோட்டைக் கையில் எடுத்துச் சோதித்தாள்.

'இதில் என்னவெல்லாமோ இருக்கிறதே!' என்று வியந்தவளாக நான்கு புறமும் பார்த்து, அருகில் யாரும் இல்லையென்பதை உறுதி செய்துகொண்டு கோட்டின் ஒவ்வொரு பகுதியையும் தீவிரமாகப் பரிசோதித்தாள்.

கோட்டின் உட்புறம் இரண்டு துணிகளுக்கு நடுவே உள்ள பகுதியில் ஏராளமான நோட்டுக் கற்றைகளை மறைத்து வைத்திருப்பதையும், உட்புறப் பைகளில் பயன்படுத்துவதற்குத் தயாரான நிலையில் போலி மீசை, தாடி போன்றவையும் இருந்தன.

'ஓகோ.... அப்படியா விஷயம்?' என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்ட மூதாட்டி எல்லாவற்றையும் பழையபடி வைத்துவிட்டு, கிழவி தனது வழக்கமான வேலைகளைத் தொடர்ந்தாள்.

உண்மையில் ஜீன்வால்ஜின் யார் என்பதை அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றாலும் ஏதோ ஒரு நோக்கத்துக்காக ஆள் மாறாட்டம் செய்து தலைமறைவாக வாழ்பவர் என்று புரிந்துகொண்டாள்.

ஜீன்வால்ஜினுக்கு இந்த உண்மை எதுவும் புரியாது. ஆனால், அவரைப் பயப்படுத்தக்கூடிய மற்றொரு மனிதரை அடிக்கடி அந்தப் பகுதியிலேயே சந்திக்க நேர்ந்தது.

அந்த மனிதர் வித்தியாசமான ஒரு நபராக இருந்தார். பிச்சைக்காரனைப் போல் தோற்றமளித்த அந்த மனிதர், ஜீன்வால்ஜினின் நிம்மதியைக் குலைக்க ஆரம்பித்தார்.

அந்த நபரைப் பார்க்கும் போதெல்லாம் ஜீன்வால்ஜினுக்கு பற்பல சந்தேகங்கள் ஏற்படத் தொடங்கின. தன்னைப் பின்தொடர்ந்து தனது ரகசியங்களைக் கண்டறிந்து கைது செய்வதற்காக அலையும் போலீஸ் இன்ஸ்பெக்டர்தான் அந்த மனிதர் என்று ஜீன்வால்ஜினின் மனம் அடித்துக் கூறியது.

அந்தப் பிச்சைக்காரர் குறிப்பிட்ட ஓரிடம் என்று இல்லாமல் பல இடங்களிலும் அமர்ந்து பிச்சை எடுப்பதை ஜீன்வால்ஜின் கவனித்திருந்தார். இரக்கத்துக்குரிய தோற்றமும், பார்வையும், வேட்கை நிரம்பிய உணர்வும் கொண்ட அந்தப் பிச்சைக் காரருக்கு, பார்வையாளர்களும் தயக்கமின்றி நாணயங்களை வழங்கவே செய்தனர்.

ஜீன்வால்ஜின்கூட ஓரிரண்டு தடவை அந்த மனிதருக்குப் பிச்சை போட்டிருக்கிறார். அப்போதெல்லாம் அந்தப் பிச்சைக் காரரை அவர் கூர்ந்து கவனிக்கத் தவறியதில்லை! எத்தனையோ வருடங்களாகத தன்னைப் பின்தொடரும் போலீஸ் அதிகாரியின் உருவ ஒற்றுமை அந்தப் பிச்சைக்காரனிடமும் தென்படுவதாக அவருக்குத் தோன்றவும் செய்திருக்கிறது. ஆமாம்... அந்த மனிதர் சந்தேகம் இல்லாமல் ஜாவராகத்தான் இருக்க வேண்டும்!

அதன் பிறகு ஜீன்வால்ஜின் மிகுந்த எச்சரிக்கையுடன் கவனமாக வீட்டைவிட்டு வெளியே வரத் தொடங்கினார். பெரும்பாலும் வெளிச்சமான பகல் பொழுதுகளில் வீட்டைவிட்டு வெளியேறுவதை முற்றிலுமாகத் தவிர்த்தார் என்றே சொல்லலாம். இரவு நேரத்தில் வெளியேறி, ஏறத்தாழ நள்ளிரவு வேளையில்தான் வீட்டுக்குத் திரும்புவார். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் கோசெட்டியைத் தனியாக விட்டுவைத்ததே கிடையாது. தன்னுடனேயே கொண்டு செல்வார். அந்தக் கிழவரும் இளமையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் கோசெட்டியும் பார்ப்பவர்களின் கவனத்தில் பதியவே செய்தனர்.

ஜீன்வால்ஜினின் கோட்டைப் பரிசோதித்த மூதாட்டிக்கு பலவிதமான சந்தேகங்கள் தோன்றின. கோசெட்டியை, அந்த மனிதர் ஏதாவது ஒரு வீட்டிலிருந்து கடத்திக்கொண்டு வந்திருப்பாரோ என்றுகூட மூதாட்டி நினைத்தாள்.

அவள் யாரிடமாவது தனக்குத் தோன்றிய சந்தேகங்களைச் சொல்லியிருப்பாளோ? பிச்சைக்காரனை, ஜாவராக நினைத்து வீணாகப் பயப்படுவது தன்னுடைய மனப்பிரமையோ என்றுகூட ஜீன்வால்ஜின் நினைத்தார்.

அன்றைய இரவில் வழக்கமான தனது உலாவலை முடித்துக் கொண்டு திரும்பி வந்தவர், யோசனையில் ஆழ்ந்தவாறே மௌனமாக உட்கார்ந்திருந்தார். கோசெட்டி களைப்பு மிகுதியால் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். அப்போதுதான் யாரோ கதவைப் பலமாகத் தட்டும் சத்தம்

கேட்டது. கதவுக்கு வெளியே சாலையில் யாரோ சிலர் பேசிக் கொள்வதும் தெளிவற்றுக் கேட்டது.

தனது வீட்டைப் பெருக்கும் மூதாட்டி மற்றும் ஜாவரின் குரல் இரண்டுமே ஜீன்வால்ஜினுக்குத் தெளிவாகவே அடையாளம் தெரிந்தது.

இருட்டு வீட்டுக்குள் ஜன்னலருகே சென்று வெளிப்புறத்தை எட்டிப்பார்த்தார். வீட்டுக்கு முன்பாகச் சில உருவங்கள் நிற்பது தெரிந்தது. அதன் பிறகு ஜீன்வால்ஜினுக்கு எந்தவிதமான சந்தேகமும் தோன்றவில்லை.

மேற்கொண்டு சற்று நேரம் தாமதித்தால்கூட தான் பிடிபட்டு விடுவோம் என்பது உறுதியாகத் தெரியவே, ஜீன்வால்ஜின் கோசெட்டியை அவசரமாகத் தட்டி எழுப்பியபடி பேசினார். "கோசெட்டி உன்னைப் பிடித்துக்கொண்டு போவதற்காக தெனார்டியரும் அவரது மனைவியும் வந்திருக்கிறார்கள். நாம் பின்புறவழியாக உடனே வெளியேறித் தப்பிக்கவேண்டும் இல்லாவிட்டால், அவர்கள் நம்மை நிச்சயமாக பிடித்துவிடுவார்கள்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் கோசெட்டி அவருடன் எந்த இடத்துக்கும் செல்லத் தயாரானாள். எப்படியாவது கொடூரமான அந்தத் தம்பதியிடமிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக இருந்தாலே போதுமென்று அவள் விரும்பினாள்.

"வா....போகலாம்"

அவர், அவளது கையைப் பிடித்துக்கொண்டு சத்தம் எழுப்பாமல் பின்புறம் நடந்து வீட்டிலிருந்து வெளியேறி இருட்டுக்குள் மறைந்தார்.

அன்றைய இரவு முழுவதும் ஜீன்வால்ஜின் கோசெட்டியின் கையைப் பிடித்துக்கொண்டு பாரீஸ் நகரின் தெருக்களில் அலைந்து திரிந்தார். தன்னைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் ஜாவரும், போலீஸ்காரர்களும் வந்து கொண்டிருக்கின்றனர் என்பது அவருக்குத் தெளிவாகவே விளங்கியது. தான் ஏதாவது ஓரிடத்தில் தவற நேர்ந்தாலும் அவர்களிடம் அகப்பட்டுவிடுவோம் என்பதும் தெரிந்தது.

மீண்டும் சிறைப்படுவதைக் குறித்து ஜீன்வால்ஜின் பயப்படவில்லை. ஆனால், தான் அகப்பட்டுக் கொண்டால் கோசெட்டி திரும்பவும் தெனார்டியரிடமோ, அல்லது அதே போன்று வேறு எவரிடமோ அகப்பட்டுக் கொள்ள நேரிடலாம். இதயமற்றவர்களின் வசம் அகப்பட்டு அவள் மீண்டும்

அடிமையாக வேலை செய்து உயிர்பிழைக்க நேரும் என்கிற பயம்தான் அவரை மிகவும் வாட்டியது.

அப்படி நடந்துவிடக் கூடாது என்று ஜீன்வால்ஜின் விரும்பினார்.

அவள் ஒருத்திக்காகத் தான் முடிந்தமட்டும் சுதந்திரமானவனாக வெளியிலேயே இருக்க வேண்டும் என்ற உணர்வு அவரை வலுவாகப் பீடித்துக் கொண்டது.

இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் அவர் போலீஸாரின் கண்களில் பட நேர்ந்தாலும், அதிருஷ்டவசமாகக் குறுகிய சந்து பொந்துகளில் புகுந்து இருட்டில் மறைந்து தப்பித்தாலும் போலீஸார் தன்னை இடைவிடாமல் தொடர்ந்து கொண்டிருப்பது புரிந்தது.

அவர்கள் இருவரும் அப்போது நடந்து கொண்டிருந்த குறுகிய பாதையின் இருபுறத்திலிருந்தும் விசில் சத்தங்கள் எழுந்தன. இருவரும் சாலையின் மையப்பகுதியை அடைந்திருந்தனர். முன்னால், பின்னால் எந்தப் பக்கம் நகர்ந்தாலும் அவர்கள் போலீஸாரிடம் அகப்படுவது உறுதி.

அவருக்கு எதிரில் உயரமான மதில் சுவர் ஒன்று இருந்தது. சுவரின் மறுபுறத்தில் விசாலமான தோட்டமும், அதன் விடுதியும் இருந்தது. போலீஸ்காரரின் காலணிகள் எழுப்பிய சத்தம் அவர்கள் நெருங்கிவருவதை உணர்த்தியது.

அந்த மதிலை எப்படித் தாண்டுவது?

மதிலை மட்டும் தாண்டிவிட்டால் எப்படியும் தப்பித்து விடலாம் என்கிற தைரியம் அவருக்கு ஏற்பட்டது. அவரது கண்கள் அருகிலிருந்த விளக்குக் கம்பத்தின் மீதும், அதிலிருந்த கயிறின் மீதும் பதிந்தது.

அக்காலத்தில் பாரீஸ் நகரின் தெருவிளக்குகளை, நட்டு வைத்திருக்கும் உயரமான இரும்புத்தூண்களின் மீது கயிறால் தான் கட்டித் தொங்கவிடுவார்கள். ஆனால், ஜீன்வால்ஜின் நின்றிருந்த இடத்திலுள்ள கம்பத்தின்மீது விளக்கு எதுவும் இல்லை.

விளக்கு எரியாமல் பழுதடைந்ததால் சீர் செய்வதற்காக எடுத்துக்கொண்டு போயிருக்கலாம்.

அடுத்த விநாடி ஜீன்வால்ஜின் அந்த இரும்புத் தூணில் ஏறி மேற்புறக் கயிறை எட்டிப்பிடித்தார். கயிற்றில் தொங்கியபடியே, கோசெட்டியிடம்

தனது கால்களை இறுகப் பிடித்துக் கொள்ளச் சொன்னார். அவளும் பிடித்துக்கொண்டாள். ஜீன்வால்ஜின் மெதுவாக உயரத்தொடங்கினார். மதிலின் மேற்பரப்பை அடைந்ததும் கோசெட்டியைப் பிடித்து சுவர்ப் பரப்பின் மீது உட்கார வைத்தார். அவ்வளவு நேரமும் ஜீன்வால்ஜின் வெறும் ஒரேயொரு கையால்தான் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தார்.

பிறகு ஜீன்வால்ஜினும் அந்த மதிலின் மீது கவிழ்ந்து படுத்தபடி முதலில் கோசெட்டியை மதிலின் உட்புறமாக இறக்கி, சுவரை ஒட்டியிருந்த புல்தரையில் நழுவவிட்டார். பிறகு தானும் புல்தரை மீது குதித்தார். இதையெல்லாம் செய்து முடிக்க ஜீன்வால்ஜினுக்கு ஒரு சில நிமிடங்கள்தான் தேவைப்பட்டன. அவர் கோசெட்டியுடன் பத்திரமாக மறுபுறத்தை அடைந்த பிறகுதான் போலீஸார் வெளிப்புறத்தில், ஜீன்வால்ஜின் நின்றிருந்த இடத்தை நெருங்கினர்.

அப்படி எந்த மனிதனையும் தாங்கள் பார்க்கவில்லையென்று எதிரும் புதிருமாக வந்த போலீஸார் பரஸ்பரம் தெரிவித்து ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தியபடி நடந்து அகன்றனர். இதெல்லாம் ஜீன்வால்ஜினுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

எப்படி இருப்பினும், போலீஸார் அதிகத் தொலைவில் இல்லை. தான் அவசரப்பட்டு மறுபடி வெளியே போனால் போலீஸாரிடம் அகப்பட்டுவிடுவோம் என்பதும் தெரிந்தது. இந்தச் சூழ்நிலையில் மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் தத்தளித்தவாறே யோசனையில் ஆழ்ந்தார்.

ஒரு சிறிய வாய்க்காலின் மறுபுறத்திலிருந்த பெரிய கட்டடத்திலிருந்து அப்போது மணியடிக்கும் சத்தம் கேட்டது. தொடர்ந்து யாரோ ஒருவர் தோட்டப்பகுதியில் நடந்து வந்தார். நிலவு வெளிச்சத்தில் அந்த உருவம் அவ்வளவு தெளிவானதாக இல்லை.

தூரத்துப் பார்வைக்கு அவர் ஒரு காவல்காரராகவோ தோட்டக்காரராகவோ இருக்கவேண்டும் மென்று தோன்றியது. ஒரு காலை நீட்டி இழுத்தபடியே அவர் நடந்து வந்தார்.

சட்டென்று அவருக்கு முன்னால் குதித்த ஜீன்வால்ஜின் கூறினார்: “நூறு ஃபிராங்கு பணம்!”

தாங்கித்தாங்கி நடந்துவந்த மனிதர் ஒரு கணம் திடுக்கிட்டே போனார். அவரது திகைப்பை உணர்ந்த ஜீன்வால்ஜினே தொடர்ந்து பேசினார்: "இந்தச் சந்தர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றுவதற்காக இருந்தால், உங்களுக்கு நூறு ஃபிராங்குகளைப் பரிசாகத் தருவேன்!"

அதுவரை மேகக்கூட்டத்துள் மறைந்திருந்த சந்திரன் அதிலிருந்து விடுபட்டு குளிர் ஒளியுடன் பிரகாசித்தது. இப்போதுதான் அந்தக் காவல்காரன் ஜீன்வால்ஜினின் உருவத்தைத் தெளிவாகக் கவனித்தான்.

"சார்...நீங்கள்...நீங்கள் மேயர் மடலின்தானே?" வியப்பின் வசப்பட்டவனாகத் திக்கித் திணறினாள் காவலாளி.

ஜீன்வால்ஜினுக்கும் அப்போதுதான் அந்தக் குரலுக்கு உரியவனை அடையாளம் தெரிந்தது.

"கடவுளே யார் இது ஃப்ளாச்சுலாண்ட்தானே?"

"ஆமாம் சார்... ஒருதடவை குதிரை வண்டிக்கு அடியிலிருந்து நீங்கள் காப்பாற்றிய அதே ஃப்ளாச்சுலாண்ட்தான்!"

"சரி. அன்று நான் உங்கள் உயிரை காப்பாற்றினேன். இன்று நீங்கள் என்னை எதிராளிகளிடமிருந்து காப்பாற்ற முடியுமா?"

"இது கன்னியாஸ்திரீகள் வசிக்கும் மடம். நான் இந்த இடத்தின் காவல்காரன்."

"எதுவாக இருந்தாலும் எனக்குக் கவலை இல்லை. இந்த இரவு நேரத்தில் இங்கு எங்காவது ஒளிந்து கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. என்னுடன் ஒரு சிறுபெண்ணும் இருக்கிறாள்."– ஜீன்வால்ஜின் பேசினார்.

"சரி. வாருங்கள்!" காவல்காரர் கூறினார்.

ஜீன்வால்ஜின் கோசெட்டியையும் அழைத்துக்கொண்டு அந்த மனிதனைப் பின்தொடர்ந்தார்.

சற்று நேரத்துக்குப் பிறகு கோசெட்டி, அந்தத் தோட்டக் காரனின் குடிசையில் இருந்த கட்டிலில், இலகுவான மெத்தையின் மீது சுகமாகப் படுத்து உறங்கத் தொடங்கினாள்.

27

கோசெட்டி உறங்கியபிறகு, இரண்டு முதியவர்களும் தங்களது வாழ்க்கை அனுபவங்களைப் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டனர்.

இரவு உணவுக்குப் பிறகு தோட்டக்காரர் ஃப்ளாச்சுலாண்ட் வழங்கிய மதுவை அருந்திவிட்டுக் கணப்பு அடுப்பின் அருகே உட்கார்ந்துகொண்டு தோட்டக்காரர் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார் ஜீன்வால்ஜின். பிறகு தன்னுடைய கதை முழுவதையும் அவனிடம் எடுத்துக் கூறி, இப்படிக் கேட்டார்: "நண்பரே இப்போது புரிகிறதா. இந்தக் குழந்தைக்காக நான் வாழ்ந்தே தீரவேண்டும் என்பது!"

மறுநாள் தோட்டக்காரனின் குடிசையின் முன்னால் இரண்டு மணிகள் கட்டித் தொங்கவிடப்பட்டன. விடுதிக்குள் வசிக்கும் கன்னியாஸ்திரீகளின் அழைப்பை எதிர்நோக்கி இரண்டு பேர் மாறி வெளிப்பட்டனர். வயது அதிகமாகிவிட்டாலும், கால் சரியில்லாததால் ஓடியபடி நடக்க முடியாததாலும் உதவிக்காக மற்றொரு நபரை தோட்டக்காரர் அமர்த்திக் கொண்டிருப்பதாக மற்றவர்கள் கருதினர்.

யாரும் அதற்கு எந்தவிதமான எதிர்ப்பும் காட்டவில்லை. கன்னியாஸ்திரீகள், ஜீன்வால்ஜினை, ஃப்ளாச்சுலாண்டின் இளைய சகோதரன் என்று நினைத்து 'சின்ன ஃப்ளாச்சுலாண்ட்டி என்று அழைக்கத் தொடங்கினர். இதுவும் நல்லதற்குத்தான் என்று நினைத்தார் ஜீன்வால்ஜின்.

சிறிய பெண்ணான கோசெட்டியை பார்த்தவுடன், கன்னியாஸ்திரீகளுக்கு அவளிடம் விவரிப்புக்கு அப்பாற்பட்டதான அன்பு தோன்றியது. அது தன்னுடைய பேத்தி என்றும், அவளுக்குத் தாய், தந்தையர் இல்லையென்றும் கூறிவைத்தார்.

அன்றே அவள் அங்கிருந்த கான்வென்ட் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டு கல்வி கற்பிக்கப்பட்டாள். பிற குழந்தைகளுடன் அவளையும் மடத்துக்குச் சொந்தமான விடுதிலேயே தங்கவைத்துக் கொண்டனர்.

கன்னியாஸ்திரீகளின் ஒவ்வொரு விஷயத்தையும், கட்டளைகளையும், முறைப்படி தவறாமல் செய்து வந்தார் ஜீன்வால்ஜின். ஆனால், அந்தக் கட்டடத்துக்கு வெளியே சென்று செயல்பட வேண்டிய எதற்கும் சின்ன

ஃப்ளாச்சுலாண்ட் வெளியே போவதில்லை. அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் ஃப்ளாச்சுலாண்டே கிளம்பி விடுவார்.

அந்த கான்வென்ட் ஜீன்வால்ஜினைப் பொறுத்தவரை, ஏகாந்தமான, அழகான ஒரு தீவாகத் தோன்றியது. அங்கு அவர் ஆறுதலுடனும் நிம்மதியாகவும் தங்க முடிந்தது. அதுவரை அவரது வாழ்க்கையில் ஏற்பட்டிராத சுகமும், மகிழ்ச்சியும் அப்போதுதான் கிடைப்பதாகத் தோன்றியது.

ஃப்ளாச்சுலாண்டுக்கு வயதாகிவிட்டதால் நாளுக்குநாள் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. எனவே, அவர் செய்ய வேண்டிய கனமான வேலைகளை ஜீன்வால்ஜின் தானாகவே வலியப்போய் செய்யத் தொடங்கினார். மரம் வெட்டுதல், விறகு பிளத்தல், கனமான பொருள்களைத் தூக்குதல், இடம் மாற்றுதல், தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சுதல், பழங்கள் பறித்தல், தண்ணீர் இறைத்தல் போன்றவை ஜீன்வால்ஜினின் பொறுப்பில் வந்தன. யார், எங்கு, என்ன கேட்டாலும் அங்கெல்லாம் ஜீன்வால்ஜின் தோன்றி அதை உடனடியாகச் செய்து கொடுப்பார். விடுதியிலிருந்தவர்களுக்கெல்லாம் அவர் மிகவும் பயனுள்ள ஒரு மனிதராக இருந்தார்.

மற்ற குழந்தைகளுக்குக் கிடைக்கும் அன்பும், உச்சரிப்பும், செல்லமும் கோசெட்டிக்கும் கிடைப்பதைப் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தார். அவளைக் கண்ணால் காண முடிந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் படித்துக் கொண்டிருந்தாலும், விளையாடினாலும் மகிழ்ச்சியுடன் இருப்பதைப் பார்த்து அவர் மகிழ்ச்சியால் பூரித்தார்.

தோட்டத்திலிருந்து பார்த்தால் கோசெட்டி படிக்கும் வகுப்பு அறையும், மற்றொரு பகுதியிலிருந்து பார்த்தால் அவள் தங்கியிருக்கும் அறையும் நன்றாகத் தெரியவே செய்தது. நேரம் கிடைத்தபோதெல்லாம் அவளையே பார்த்துக் கொண்டிருப்பது ஜீன்வால்ஜினின் மற்றொரு வேலையாயிற்று. தினமும் ஒரு மணி நேரத்தை தாத்தாவுடன் செலவழித்துக்கொள்ள கோசட்டிக்கு கன்னியாஸ்திரீகள் அனுமதி அளித்தனர்.

முன்னர் அனுபவித்த துன்பத்தையும் கொடுமைகளையும் மறந்து, அவள் ஒரு புது வாழ்க்கையை அனுபவிப்பதை நினைத்த போது தனது அன்று வரையிலான மொத்த உழைப்பும், வேதனைகளும் வீணாகவில்லை என்கிற ஆத்மதிருப்தி அவருக்கு ஏற்பட்டது.

ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல கோசெட்டி கெட்டிக் காரியாகவும், எளிமையான அழகியாகவும் வளர்வதைப் பார்க்கப் பார்க்க ஜீன்வால்ஜினின் மனம் நிறைவடைந்தது. அத்துடன் அவர்களுக்கிடையேயான அன்பும் வலுவுடனும் ஆழமாகவும் படிந்து கொண்டிருந்தன.

வேறு எந்த ஒரு தாத்தா-பேத்தி உறவைவிடவும் அவர்களது அன்பு ஆயிரம் மடங்கு வல்லமையுள்ளதாகவே இருந்தது. இந்த அன்பு வலுவுடன் வேரூன்றிப் பந்தலாகப் பரவியது.

28

இந்தக் கட்டத்தில்தான் மாரியஸ் என்ற இளைஞன் அவளுக்கு அறிமுகமானான்.

அவனும் கோசெட்டியைப் போலவே அப்பா-அம்மா இல்லாத ஒரு துரதிருஷ்டசாலியாக இருந்தான். அவனைச் சிறுவயதிலிருந்து வளர்த்து அப்போதும் பராமரித்துக் கொண்டிருந்தவர்கள் அவனது அத்தையும், தாய்வழித் தாத்தாவும்தான்.

மாரியஸ், அழகானவன். கட்டுடல் வாய்ந்தவன். நல்ல இயல்புகள் கொண்ட இளைஞன். வயது பதினெட்டு இருக்கலாம். படிப்பு ஏறத்தாழ முடிந்த மாதிரிதான். தனியாக ஆசிரியர் ஒருவரை அமர்த்தி லத்தீன், கிரேக்க மொழிகளை அவனுக்குக் கற்பித்திருந்தனர். கல்லூரிப் படிப்பையும் முடித்து விட்டிருந்தான்.

மாரியஸ் மனிதாபிமானமும் சமநோக்கும், கருணையும், இரக்கமும் கொண்டவன். இவை அவனது தந்தை வழியாக அவனுக்குக் கிடைத்த செல்வம் என்றே சொல்லலாம்.

அவனுடைய தந்தையார் தர்மசிந்தனை உள்ளவராகவும், இரக்கம் நிறைந்தவராகவும், நெப்போலியனின் பாதையைப் பின்பற்றுபவராகவும் இருந்தார். பிரான்ஸ் நாட்டில் நெப்போலியனின் ஆட்சி மற்றும் போர்கள் முடிந்து, அவரை நாடுகடத்திய சமயம் அது. பிரான்ஸில் அப்போது இரண்டு வகையான அரசியல்வாதிகள் இருந்தனர். அவர்களுக்கு இடையே போட்டியும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டமும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஒரு பிரிவினர், நெப்போலியனின் மருமகனைப் பதவிக்குக் கொண்டுவரக் கடுமையாகப் போராடினர். இன்னொரு பிரிவினரோ இரண்டாம் நெப்போலியனை விரட்டிவிட்டு, பழைய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த ஒருவரே ஆட்சிசெய்ய வேண்டும் என்று விரும்பியவர்கள். நெப்போலியன் நாடுகடத்தப்பட்ட பிறகு ராஜ குடும்பத்தை ஆதரிக்கும் பிரபுக்களும், ஜமீன்தார்களும் இணைந்து, முந்தைய மன்னரின் சகோதரரையே மன்னராக்க வேண்டுமென்று விரும்பினர். கடைசியாகக் குறிப்பிடப்பட்டவர்கள் தங்களது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டனர்.

புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், மன்னர் முறையையே முற்றிலுமாக ஒழித்துவிடும் நோக்கத்துடன், ஒரு பெரும் போராட்டத்துக்கான ஆயத்தங்களை ரகசியமாக மேற்கொண்டு வந்தனர். நெப்போலியனின் உதவியாளராகவும், நம்பிக்கைக்கு உகந்த ஊழியராகவும், இருந்தவர் மாரியஸின் தந்தையார். கொள்கைரீதியாக அவருக்கு எதிரானவர் தாத்தா. அதனாலேயே தாத்தாவும், தந்தையாரும் ஒரு போதும் மனம் இணங்கிப் போவதில்லை.

தாத்தா எப்போதுமே மன்னர் குடும்பத்தின் மீது மரியாதையும் மதிப்பும், பற்றும் உள்ளவர்.

மாரியஸ் புரட்சிகர இயக்கத்தில் நாட்டம் உள்ளவன் என்பதை அறிந்தபோது, தாத்தா அதை எதிர்க்கவும் செய்தார். புரட்சிகர இயக்கத்துடனான தொடர்பை முறித்துக்கொண்டு மன்னருக்காகவும், மன்னரின் குடும்பத்துக்காகவும் உழைத்து நல்ல பேரை வாங்க வேண்டுமென்று அவர் பேரனிடம் கூறினார். ஆனால், தாத்தாவின் இந்த வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க பேரன் தயாராக இல்லை!

நாட்டில் நடைபெறும் அநீதியையும், ஏற்றத்தாழ்வுகளையும் முற்றிலுமாக ஒழிக்கப் புரட்சியாளர்களால்தான் முடியும் என்ற நம்பிக்கையுள்ள மாரியஸ், தாத்தாவையே எதிர்த்து, அவரை ஒதுக்கி வைத்துவிட்டான்.

அதனால் கோபம் கொண்ட தாத்தா, மாரியஸை வீட்டுக்குள் நுழையவேகூடாது என்று விரட்டிவிட்டார்.

கில்லனோர்மன்ட் என்ற பெயருள்ள அந்தப் பெரியவர் பிரபுக்கள் மத்தியில் பிரபலமானவர். அவர்களிடம் மிகுந்த மதிப்பு வாய்ந்தவர். மன்னர் குடும்பத்திடம் மாறாத பற்றுக் கொண்டவரும்கூட.

தன்னுடைய லட்சியங்களை அடகு வைத்துவிட்டு சொந்த வாழ்க்கைக்காகத் தாத்தாவிடம் பணிந்துபோக மாரியஸ் தயாராக இல்லை. லட்சியப் பிடிப்பு, அந்த லட்சியத்தைக் கைக்கொண்டு செயல்படுவதில் பெருமிதம் போன்றவற்றால், தன் தந்தையைப் போலவே தானும் ஒரு லட்சிய வீரன் என்று கூறி அந்தப் பேரப்பிள்ளை இளைஞன் மாரியஸ் தனது சொந்த வீட்டிலிருந்து வெளியேறினான்.

அப்படி வெளியேறியபோது அவனிடம் ஒரு ஸூ நாணயம் கூட கைவசம் இல்லை. அவனது கையிலிருந்த கடிகாரம் மற்றும் கோட்டை விற்று பாரீஸ் நகரில் மலிவான லாட்ஜ் ஒன்றில் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்துக் குறைந்த விலையில் கிடைக்கும் உணவுப் பொருள்களை உண்டு மாரியஸ் தன்னுடைய சுதந்திரமான வாழ்க்கையைத் தொடங்கினான்.

தன்னுடைய சொந்த முயற்சியால் அவன் விரைவிலேயே புத்தகக்கடை ஒன்றில் ஓர் உதவியாளனாகச் சேர்ந்தான். அங்கிருந்து கிடைத்த மிகச்சிறிய வருமானம் அவனது எளிமையான வாழ்க்கையை நடத்தப் போதுமானதாக இருந்தது.

தன்னுடைய ஓய்வு நேரம் முழுவதையும் புரட்சிகர இயக்கத்தின் வேலைகளைச் செய்வதற்காக ஒதுக்கிவைத்தான். புரட்சிகர இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்ததாலேயே மாரியஸ் போலீஸின் கவனத்துக்குரிய நபர்களில் ஒருவனாகவும் இருந்தான். எனவே, தலைமறைவு வாழ்க்கை இப்படிப்பட்ட இளைஞர்களுக்கு தவிர்க்க முடியாத விஷயமானது. எனினும் அவர்களது போராட்ட உணர்வு குறைந்துவிட்டதென்று சொல்ல முடியாது.

வீட்டைவிட்டு வெளியேறிய பிறகு அந்த இளைஞன் தன் தாத்தாவைப் பற்றி நினைத்ததே கிடையாது! மாரியஸைப் பொறுத்தவரை அவனது தாத்தா இறந்துபோன ஒரு மனிதர்தான்.

29

வீட்டிலிருந்து கோபத்துடன் வெளியேறியிருப்பதாலும், குறைந்த சம்பளத்துக்குப் பணிபுரிய நேர்ந்ததாலும் விலை உயர்ந்த ஆடைகளையோ, ஆடம்பரமான வாழ்க்கையோ அவனால் மேற்கொள்ள முடியவில்லை. இருப்பினும், எளிமையான உடையிலும் அவனது நல்ல இயல்பு நிறைந்த வாழ்க்கை எந்தவித மாற்றமும் இன்றியே தொடர்ந்தது.

பாரீஸ் நகரின் வீதிகளில் அவன் நடந்து செல்லும்போது நூற்றுக்கணக்கான கண்கள் அவனைப் பொறாமையுடன் பார்ப்பது வழக்கம்.

பாரீஸ் நகரில் மாலை வேளைகளில் மக்கள் அதிகமாக வந்து சேருமிடம் ‘லக்ஸம்பர்க் பார்க்’. அங்கு வருவோர் பெரும்பாலும் பொழுதுபோக்காகப் பல விஷயங்கள் குறித்தும் பேசுவர். அந்தப் பூந்தோட்டத்துக்கு வந்து புல்தரையிலும் சிமெண்ட் பெஞ்ச்சுகளிலும் அமர்ந்து சுவாரசியமாகப் பேசுவதும், இயற்கை அழகை ரசிப்பதும், மாலைநேரச் சூரியனின் வண்ண வித்தைகளை வேடிக்கை பார்ப்பதும் பாரீஸ் நகரவாசிகள் பெரும் பாலோரின் அன்றாடச் செயல்களாக இருந்தன.

அந்தப் பூந்தோட்டத்துக்கு மாரியஸும் அடிக்கடி செல்வதுண்டு. ஆனால், மற்றவர்களுடன் சேர்ந்து அரட்டையடிப்பதில் ஈடுபடாமல் தனியாக உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபடுவது அவனது இயல்பு. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒரு பெஞ்ச்சில் வயதான ஒருவரும் இளம்பெண் ஒருத்தியும் இடைவிடாமல் வந்து உட்காருவது மாரியஸின் கவனத்தைக் கவர்ந்தது.

முதியவரின் தலை முற்றிலுமாக நரைத்திருந்தது. இளம் பெண்ணோ மெலிந்த உடலுடன் ஒரு கறுத்த பள்ளிச் சீருடையுடன் காட்சியளிப்பாள். அவள் ஏதோ ஒரு கான்வென்ட்டில் படிக்கும் மாணவியாக இருக்கலாம். மாரியஸ் அந்த இருவரிடமும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான் பெரியவரை ‘மிஸ்டர் லீபிளாங்க்’ என்றும் இளம்பெண்ணை ‘மிஸ் லானோயா’ என்றும் அழைத்தான். பிரெஞ்ச் மொழியில் முறையே அந்தப் பெயர்களுக்கு ‘நரைத்த தலையர்’ என்றும், ‘கறுப்புநிறப் பெண்’ என்பதும் பொருள். அவன் அப்படி அழைத்ததை அவர்கள் மறுக்கவும் இல்லை.

பெரியவரும் பெண்ணும் பரஸ்பரம் பேசியபடி பூங்காவினுள் நடைபயிலுவதை மாரியஸ் உற்சாகமற்றவனாக வேடிக்கை பார்ப்பான். அந்தப் பெண் வாய் ஓயாமல் தொணதொணவென்று பேசிக்கொண்டே இருப்பாள். பெரியவர் ‘உம்’ கொட்டியபடி அதையெல்லாம் கேட்டுக்கொண்டே இருப்பார். அவர்கள் நடந்துகொண்ட முறையை வைத்துப் பார்த்தால் பெரியவர், அந்தப் பெண்ணின் அப்பாவாக இருப்பார் என்று யூகித்தான் மாரியஸ்.

அந்தப் பெரியவர் அவனைப் பொறுத்தவரை மரியாதைக்கு உரிய ஒருவராகத் தெரிந்தார். ஆனால், பெண் அப்படியல்ல வாயாடியாகவும்,

எடுத்தெறிந்து பேசுகிறவளாகவும் தெரிந்தாள். அதனாலேயே ஆரம்பத்தில் அவளை, அவனுக்குப் பிடிக்காமல் போயிற்று.

அவர்களுடன் அறிமுகம் செய்துகொண்டு அவ்வப்போது மாரியஸ் பேசியிருக்கிறாள் என்றாலும், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவன் அந்தப் பெண்ணைத் தவிர்க்கவே செய்தான். ஆனால், அவளோ அவனைப் பார்த்தபோதெல்லாம் வெட்கமடைந்து அவனுடன் நெருங்கிப் பழகவும், பேச விரும்புவதாகவும் தோன்றியது.

அந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்பாராமல் மாரியஸ், 'லக்ஸ்ம்பர்க் பூங்கா'வுக்கு போவதை நிறுத்திக்கொள்ள நேர்ந்தது. அவன் செய்ய வேண்டியிருந்த சுறுசுறுப்பான இயக்க நிகழ்ச்சிகளால் தொடர்ந்து மாதக் கணக்கில் பூங்கா பக்கம் செல்ல அவனால் முடியவில்லை. பூங்காவுக்கு அவன் போகவில்லையென்றாலும் அந்த இருவரைக் குறித்தும் அடிக்கடி யோசித்தான். நரைத்த தலையரும், கறுத்த உடைப் பெண்ணும் அவனது நினைவிலேயே இருந்தனர்.

தனக்குப் பிடிக்காத ஒருத்தியாக இருந்தாலும் அந்த வாயாடிப் பெண்ணின் உருவம் அவன் மனத்திலிருந்து அழிக்க முடியாதபடி பதிந்துவிட்டிருந்தது.

நீண்ட நாள்களுக்குப் பிறகு அவன் பூங்காவுக்குச் செல்ல ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. பூங்காவினுள் நுழைந்ததும் வழக்கமாகப் பெரியவரும், வாயாடிப் பெண்ணும் அமர்ந்திருக்கும் இடத்தைக் கவனித்தான். அவர்களைக் காணவில்லை. ஆவலுடன் சுற்று முற்றும் தேடினான்.

மாரியஸை வியக்கவைத்த ஒரு காட்சி அங்கு தென்பட்டது. அவனது கண்கள் அதன் பிறகு அந்த இடத்திலிருந்து விலகவே இல்லை.

பெரியவர் வழக்கம் போலவே தோற்றமளித்தார். அவரிடம் எந்தவிதமான மாற்றமும் தென்படவில்லை. ஆனால், அவருக்கு அருகே அமர்ந்திருந்தது கறுப்பான பள்ளிச் சீருடை அணிந்த மெலிந்த பெண்ணல்ல.

பதிலாக பார்ப்பவர் எவரது மனத்தையும் கொள்ளை கொள்ளும் இளமை ததும்பும் ஒரு அப்சர கன்னியாக இருந்தாள். அவனால், அவள் மீது வைத்த கண்ணை அகற்ற முடியவில்லை. அவள் பதினாறாம் வயதைக் கடந்துவிட்டதை, அவளிடம் இயல்பாக எழுந்த வெட்கமும், மென்மையும் அடக்கமும் அமைதியும் அவனுக்கு எடுத்துக்காட்டின.

மாரியஸை அவர்கள் உடனடியாக அடையாளம் தெரிந்துகொண்டனர். பெரியவர் வாஞ்சையுடன் அவனை அழைத்து, அருகில் உட்காரவைத்துப் பேசினார். முன்பு வந்து கொண்டிருந்த, தனக்குப் பிடிக்காத கறுத்த பெண்ணின் மூத்த சகோதரியாக அவள் இருக்க வேண்டும் என்று நினைத்தான் மாரியஸ். ஆனால், வயதானவருடன் பேசிக் கொண்டிருந்த போதுதான் திடுக்கிடச் செய்யும் அந்த உண்மையை அவன் தெரிந்து கொள்ள நேர்ந்தது.

தான் ஒரு போதும் விரும்பாத, முற்றிலும் ஒதுக்கித் தவிர்த்த எலும்பும் தோலுமான கறுத்தபெண், இப்போது தனக்கு முன்னால் தன் மனத்துள் உணர்வுகளின் மத்தாப்பைக் கொளுத்தும் வடிவழகியாக அமர்ந்திருக்கிறாள் என்பது தெரிந்ததும் மாரியஸ் ஒரு கணம் அசைவற்றுப் போனான்!

என்ன ஒரு மாற்றம்?

இவ்வளவு குறுகிய கால அளவுக்குள் ஒரு பெண்ணுக்கு இத்தனை மாற்றங்கள் ஏற்படமுடியுமா என்ன?

தொடர்ந்து மாரியஸ் திரும்பவும் மாலை நேரத்தில் பூங்காவுக்குச் செல்லத் தொடங்கினான். இப்போது மாரியஸும் தனது உடை மற்றும் நடையிலும் நிறைய மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள ஆரம்பித்திருந்தான். புதிய ஸூட், டை, தொப்பி, பாலீஷ் செய்யப்பட்ட காலணி, தினமும் சவரம் செய்த பளபளபான முகம் என்று மாரியஸும் அலங்காரம் செய்து கொள்வதில் ஆர்வம் காட்டினான். முடிந்த அளவு அலங்காரங்களுடன் சிருங்கார உணர்வுகளுடனும்தான் அவன் பூங்காவை அடைந்தான்.

அந்த அழகியின் மனத்தைக் கவருவதுதான் மாரியஸின் நோக்கம் என்பது தெளிவாகத் தெரிந்தது.

ஒரு காலத்தில் தன்னால் முழுவதுமாக வெறுக்கப்பட்ட பெண், இப்போது தன்னுடைய இதயம் நிறைந்த கனவுக் கன்னியாக மாறிவிட்டிருக்கிறாள்! அவளிடம் ஏற்பட்ட நம்பமுடியாத மாற்றங்கள் அந்த இளைஞனிடமும் அதே அளவிலான மாற்றத்தை ஏற்படுத்தியது. மனம் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு கட்டுகளை உடைத்துக்கொண்டு திமிறிப் பாய்ந்தது. தனக்கு இப்போது ஏற்பட்டுள்ள உணர்வுகள் அவளிடம் முன்னரே இருந்ததா என்பதைத் தெரிந்துகொள்ள அவனது மனம் துடித்தது.

அதன் பின் இடைவெளியில்லாமல் தினமும் பூங்காவுக்குச் செல்லத் தொடங்கிய மாரியஸ், பெரியவருடனும் அவளிடமும் பல விஷயங்கள் குறித்து மனம்விட்டுப் பேசினான்.

அவள் வாய் திறந்தாலே வெறுத்திருந்த மாரியஸ் இன்று அவளது வாயிலிருந்து வார்த்தைகள் ஏதும் வெளிவராதா என்று காத்திருக்க தொடங்கினான். அவள் எதையாவது பேசும் போதும், மனம்விட்டுச் சிரிக்கும்போதும் அவனது மனத்தில் அது, இனம்புரியாத மகிழ்ச்சியையும் புல்லரிப்பையும் மனநிறைவையும் ஏற்படுத்தியது.

ஆனால், இப்போது அவள் பழைய வாயாடிப் பெண்ணாக இருக்கவில்லை!

மிகவும் குறைவாகவே பேசினாள். மிதமான புன்னகையைத் தவிர பழையபடி அவளிடமிருந்து உரத்தகுரலில் வாய்விட்டுச் சிரிக்கும் சிரிப்பு எழவில்லை. இந்தப் புன்னகையே இப்போது அவனை மயக்கம் கொள்ள வைத்தது. அவளிடம் ஏற்பட்ட இந்த மாற்றம் ஒரு சில சந்தர்ப்பங்களில் அவனை ஏமாற்றவே செய்தது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்தக் கொண்டனரே அன்றி, வார்த்தைகள் மிகவும் குறைவாகத்தான் பயன்பட்டன. மாரியஸிடம் அதிகம் பேசியது பெரியவர்தான். அவர்கள் பூங்காவிலிருந்து திரும்பும்போது ஒருநாள் மாரியஸ் அவர்களுக்குத் தெரியாமல் அவர்களைப் பின்தொடரவும் செய்தான்.

இப்படிச் செய்ததால் பெரியவரும் மகளும் வசிக்கும் இடத்தை அவனால் கண்டுபிடிக்க முடிந்தது.

ரூடிலெஸ் என்கிற பகுதியில் சிறிய அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து வசித்து வந்தனர் அவர்கள். தன் மனத்தைக் கவர்ந்தவள் வசிக்கும் இடத்தைத் தெரிந்துகொண்ட பிறகு பெரும்பாலான இரவுகளில் அவன் அங்கு செல்வது வழக்கமாயிற்று. சற்றுத் தொலைவில் நின்றவாறே ஜன்னல் வழியாக அவள் தட்டுப்படுகிறாளா என்று அவனது கண்கள் அலை பாய்ந்து தேடும். எப்போதாவது அவளது முகம் தட்டுப்பட்டால் அவனது மனம் திருப்தி எனும் பானத்தைப் பருகி புளகாங்கிதம் அடைந்தது.

அவர்கள் சந்தேகிக்காத விதத்தில் அந்த இளைஞன் பெரும்பாலும் தோட்டப் பகுதிக்கும் வீட்டுக்கும் அவர்களைத் தொடர்ந்து செல்வது வழக்கமாகிப்

போனது. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் எதிர்பாராதவிதமாக கோசெட்டி என்றாவது ஒருநாள் திரும்பிப் பார்த்து அவனிடம் புன்னகைத்தால் ஏதோ ஒருபெரும் சாம்ராஜ்யத்தையே வெற்றிகொண்டது போல் பெருமிதம் கொள்வான்.

தான் அவள் மீது வைத்திருப்பது போலவே, அவளும் தன் மீது அன்பு வைத்திருக்கிறாள் என்பது மாரியஸுக்குப் புரிந்தது.

அந்த ஒரு நினைவே அவனது வாழ்க்கையின் பிறவிப் பயனை அடைந்து விட்டதாகக் காட்டியது.

சட்டென்று ஒருநாள் அவனது மகிழ்ச்சியும், திருப்தியும் இனிமை நினைவுகளும் அடித்து நொறுக்கப்பட்டன!

சட்டென்று ஒருநாள் பெரியவரும் பெண்ணும் பூங்காவுக்கு வரும் வழக்கத்தை நிறுத்திவிட்டனர். அவர்கள் வருவார்கள் என்கிற எதிர்பார்ப்புடன் இரண்டு நாட்கள் வரை பூங்காவில் காத்திருந்தான். ஆனால், அவர்கள் வரவே இல்லை!

மறுநாள் பூங்காவுக்கு வந்து காத்திருக்காமல் நேராகவே அவர்களது வீட்டுக்குப் போனான். தனது இதயம் கவர்ந்தவளுக்கும் வயதான அவளது தந்தைக்கும் என்ன நேர்ந்தது என்பதைத் தெரிந்துகொள்ள அவன் மனம் துடித்தது. அவர்கள் குடியிருந்த வீட்டின் ஜன்னல் மற்றும் கதவுகள் மூடியிருந்தன. உள்ளே வெளிச்சம் எதுவும் இருப்பதற்கான அறிகுறியே தென்படவில்லை!

வெளிப்புறமிருந்த மணியை அழுத்தியபோது வேலையாள் ஒருவர் எதிரே வந்தார்.

‘‘இந்த வீட்டில் வசிக்கும் பெரியவரும் அவரது மகளும் எங்கே போயிருக்கிறார்கள்?’’ மாரியஸ் கேட்டான்.

‘‘அவர்கள் வேறு வீட்டுக்குக் குடிபெயர்ந்து விட்டார்கள்.’’

‘‘எங்கே போயிருக்கிறார்கள்? உங்களுக்கு அந்த விலாசம் தெரியுமா?’’

‘‘தெரியாது. அவர்கள் என்னிடம் அதைச் சொல்லிவிட்டுப் போகவில்லை. திடுமென்றுதான் புறப்பட்டுப் போனார்கள்’’

மாரியஸ் ஏமாற்றத்துடன் திரும்பினான். தனது இதயம் கவர்ந்த நாயகியை இனிமேல் எங்கே, எப்போது காண்பது என்று தெரியாமல் அந்த இளைஞன் துயரத்துடன் பல இரவு பகல்களைத் தள்ளினான்.

மாரியஸைப் பூங்காவில் தினமும் சந்தித்த பெரியவரும், மகளும் ஜீன்வால்ஜினும் கோசெட்டியும்தான் என்பதை கெட்டிக்காரரான நீங்கள் ஊகித்திருப்பீர்கள்.

கோசெட்டியின் பள்ளிப் படிப்பு முடிவடைந்ததும் தானும் அந்தச் சுற்றுப்புறத்திலிருந்து ஒதுங்குவதுதான் நல்லதென்று தோன்றியது ஜீன்வால்ஜினுக்கு. அதனால்தான் ஜீன்வால்ஜின் ரூடிலஸ்ட் பகுதியில் வாடகைக்கு வீடு ஒன்றை அமர்த்திக் கொண்டு வசிக்க ஆரம்பித்தார். அப்போதும் அவர் ஃப்ளாச்சுலாண்ட் ஆகத்தான் வெளி உலகுக்குத் தோற்றமளித்துக் கொண்டிருந்தார் அதனால் அந்தப் பெண், கோசெட்டி ஃப்ளாச்சுலாண்ட் ஆனாள்.

அவர்களது வாழ்க்கை எளிமையாயும் அமைதியானதாகவும் இருந்தது.

சில சந்தர்ப்பங்களில் ஜீன்வால்ஜின் சேர்ந்தாற்போல் மூன்று நான்கு நாள்கள் இருக்கமாட்டார். சில இரவுகளில் எங்கேயோ கிளம்பிப் போவார். மூன்று நான்கு நாள்கள் கழிந்த பிறகுதான் தென்படுவார். போனது மாதிரியேதான் வியப்பூட்டும் வகையில் திரும்பியும் வருவார்.

அவர் எங்கே போயிருந்தார்? எதற்காகப் போனார்? என்ன செய்தார் என்றெல்லாம் யாரும் கேள்வி கேட்டதில்லை. அவராகவும் அதையெல்லாம் யாரிடமும் சொன்னதில்லை. கோசெட்டியேகூட ஜீன்வால்ஜினிடம் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்க விரும்பியதில்லை.

பண நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பங்களில்தான் ஜீன்வால்ஜின் இப்படித் திடுமென்று மறைவதும் வெளிப்படுவதும் நடக்கும். திரும்பி வரும்போது அவரிடம் பணம் ஏராளமாக இருக்கும். நூறு ஃபிராங்க் நோட்டுகளையும், தங்க நாணயங்களையும் ஏராளமாக வைத்திருப்பார்.

அவர் ஏதோ ரகசியமான வியாபாரம் செய்வதாகவே பலரும் நினைத்தனர். கோசெட்டிக்கும் அப்படியே தோன்றியிருக்கலாம். ஆனால், ஜீன்வால்ஜின் அப்படிப் போனதெல்லாம் தன்னுடைய திரண்ட சொத்தைப் புதைத்து வைத்திருக்கும் இடத்துக்குத்தான். காட்டில் ஒரு பெரிய மரத்தின் கீழே இரும்புப் பெட்டியில் போட்டுப் பூட்டி வைத்துள்ள பணத்திலிருந்து

தேவையான பணத்தை எடுத்துக்கொண்டு மீதமுள்ளதைப் பழையபடியே போட்டுப் புதைத்து வைப்பது அவரது வழக்கம்.

கொண்டுவந்த தொகை தீர்ந்துபோனால், திரும்பவும் பணம் எடுத்து வருவதற்காக அங்கே செல்வார். இந்த ரகசியம் வேறு யாருக்கும் தெரியாது!

அவர்கள் இருவரும் வீட்டில் இருக்கும் பொழுதுகளில் ஜீன்வால்ஜின் சதா எதையாவது படித்துக்கொண்டே இருப்பார். கோசெட்டி தையல்வேலையில் ஈடுபட்டிருப்பாள். சாயங்கால நேரத்தில் உலாவச் செல்வார்கள். அப்படிப் போனபோதுதான் ‘லக்ஸம்பர்க்’ பூங்காவில் மாரியஸ் அறிமுகமானது.

முதலில் இதையெல்லாம் ஜீன்வால்ஜின் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லையென்றாலும், விரைவிலேயே மாரியஸின் நடவடிக்கைகளை அவர் புரிந்துகொள்ளவே செய்தார். தொடர்ந்து பூங்காவுக்கு வந்து வணக்கம் செய்வதும், நேரம் கால பேதமின்றிப் பேசுவதும், தங்களுக்குத் தெரியாமல் தங்களைப் பின்தொடர்வதும் என்ன நோக்கத்துக்காக என்பது அவருக்குத் தெள்ளென விளங்கியது.

அந்த இளைஞன் கோசெட்டியை மனமார விரும்புகிறான். ஒருவேளை அவளும் அவனை அப்படியே விரும்பலாம். எப்படியிருப்பினும் அவன், அவளை அவரிடமிருந்து பிரித்துக் கொண்டு போய்விடுவான். அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்து தான் கோசெட்டியை நிரந்தரமாகப் பிரிந்துவிட நேருமோ என்று பயப்படத் தொடங்கினார்.

இந்தச் சிந்தனையே ஜீன்வால்ஜினின் சப்த நாடிகளையும் சோர்வடையச் செய்தது. அவர் தன் உயிருக்கும் மேலாக எண்ணித்தான் அவளை வளர்த்து வருகிறார். லட்சியமற்ற தன்னுடைய வாழ்க்கைக்கு ஓர் உருவத்தையும் ஒழுங்கு முறையையும் ஏற்படுத்தியவள் அவள்தான். தன்னுடைய சொந்த மகளாகவோ, பேத்தியாகவோ இருந்தால்கூட தான் அவளை இந்த அளவுக்கு நேசித்திருப்போமா என்று அவருக்கே கூடச் சந்தேகமாகத்தான் இருந்தது.

இது வரையில் யாரிடமும் ஏற்படாத அளவுக்கு இவளிடம் அன்பு ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கோசெட்டி தன்னைப் பிரிந்து சென்றுவிட்டால்…

தன்னால் உயிர் வாழ முடியாது. அதன் பிறகு பிரிந்து விடுவாள் என்கிற உணர்வு நாளுக்கு நாள் ஜீன்வால்ஜினை அதிகமாகப் பயப்பட வைத்தது. அதனால்தான் திரும்பவும் அந்த இளைஞன் கோசெட்டியைப் பார்த்துவிடக்கூடாது என்பதற்காகத் தம் குடியிருப்பைச் சட்டென்று மாற்றினார்.

பாரீஸ் நகரிலேயே மற்றொரு பகுதிக்கு அவர்கள் குடி பெயர்ந்தனர். அத்துடன் லக்ஸ்ம்பர்க் பூங்காவுக்குச் செல்லும் வழக்கமும் முற்றுப்பெற்றது. தன் மனதுக்குப் பிடித்த, தன்னை மனமார நேசிக்கும் அந்த அழகான இளைஞனைச் சந்திக்க முடியவில்லையே என்ற ஏக்கம் கோசெட்டிக்கும் ஏற்படவே செய்தது.

ஆனால், இந்தத் தடை முயற்சிகளால் எல்லாம் கோசெட்டியின் மனத்திலிருந்து அந்த இளைஞனின் உருவம் அழிந்துவிடவில்லை. நாள் செல்லச் செல்ல அவளுக்குள் அவன் மீதான அன்பும், காணவேண்டும் என்கிற வேட்கையும் அதிகரித்து வந்தது என்பதுதான் உண்மை.

ஒருநாள் அந்தப் புதிய வீட்டின் முன்புறமிருந்த சிறிய தோட்டத்தில், செடிகளின் மத்தியில் காற்று வாங்கியபடி உட்கார்ந்திருந்தாள் கோசெட்டி. அப்போதும் அவள் மனம் மாரியஸைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது.

செடிகளுக்கு மத்தியிலிருந்த இருக்கை மீது அமர்ந்து கொண்டால், தோட்டத்தை ஒட்டியிருக்கும் சாலையில் வருவோர் போவோரெல்லாம் கண்ணுக்குத் தெரிவார்கள். அப்படி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது ஓரிரண்டு தடவை தன் மனத்தைக் கவர்ந்த நாயகன் அவள் இருந்த பகுதியைக் கடந்து போனதாகத் தெரிந்தது. அவன் ஒரு சில விநாடிகள் நின்று தன்னையே உற்றுப் பார்ப்பது போலவும் அவளுக்குத் தோன்றியது.

அது வெறும் மனப்பிரமையாகத்தான் இருக்கும் என்று தனக்குத்தானே ஆறுதல் சொல்லிக் கொண்டாள். உடனேயே எழுந்து கேட்டை நெருங்கி, சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளும் மனத்துணிவும் அவளுக்கு ஏற்படவில்லை.

நாள்கள் சில கடந்தன.

ஒருநாள் தூங்கி எழுந்தவள், தூக்கக் கலக்கத்துடன் தோட்டப் பகுதிக்கு வந்தாள். செடிகளுக்கு மத்தியில் வெள்ளை நிறக் காகிதம் ஒன்றின் மீது

செங்கல் துண்டு ஒன்றைப் பாரமாக வைக்கப்பட்டிருந்தது. தன் இதயம் கவர்ந்த நாயகனின் அன்புக் கடிதம்தான் அது என்பது அவளுக்குச் சட்டென்று புரிந்தது. அவளை உயிருக்கு உயிராக நேசிப்பதாகவும், திருமணம் செய்ய விரும்புவதாகவும், அந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அந்தக் கடிதம் குறிப்பிட்டது.

நீர் நிறைந்த விழிகளுடன் அவள் இனிமையான கனவுகளுக்குள் அமிழ்ந்தாள்.

தன்னைக் கவர்ந்த அந்த இளைஞன் திரும்பவும் தன்னைக் கண்டுபிடித்ததில் அவளது இதயம், அளவுக்கு அதிகமான விரைவுடன் துடித்தது. அவனது வருகையைத் தெரியப்படுத்தும் கடிதம் அவளை மெய்சிலிர்க்க வைத்தது.

அன்று மாலையில் வழக்கத்தைவிட அதிக நேரம் எடுத்துக் கொண்டு குளித்து, அழகு செய்துகொண்டாள். இதயம் நிறைந்த இனிமை நினைவுகளுடன் தோட்டத்தை அடைந்தாள். அவளது நீலநயனங்கள் காதல் வேட்கையுடன், எதிர்பார்ப்பு நிறைந்ததாக நான்குபுறமும் சுழன்றன. வெப்பம் நிறைந்த பெருமூச்சுகள் அவளது நெஞ்சிலிருந்து அடிக்கடி வெளியாகிக் கொண்டிருந்தது.

திடுமென்று தனக்குப் பின்னால் யாரோ நிற்பது போன்ற உணர்வு ஏற்படவே, திடுக்கிட்டவளாகத் தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

மாரியஸ், கோசெட்டியின் விழிகள் ஒன்றையொன்று சந்தித்தன. வெப்பமற்ற அந்தப் பார்வைப் பரிமாற்றம் அவர்களுடைய இதயத்தினுள் பூமழை பொழியச் செய்தது. உதடுகள் நடுங்கின. இதயத் துடிப்புகள் கட்டுப்பாட்டை இழந்து விட்டதாகவே தோன்றியது.

அவன் நடுங்கும் குரலில் தெளிவற்ற வார்த்தைகளுடன் பேசினான்: "அனுமதி பெறாமல் உள்ளே நுழைந்ததற்கு மன்னிக்கவும். என்னுடைய கடிதம் கிடைத்ததா?"

அவள் பதில் எதுவும் சொல்லவில்லை. பேசும் சக்தியையே அவள் இழந்து விட்டிருந்தாள். அவன் மிகவும் உணர்ச்சி வசப்பட்டவனாகத் தொடர்ந்தான்: "உன்னை லக்ஸ்ம்பர்க் பூங்காவில் பார்த்த அன்றே. என்னுடைய மனத்தை திறந்து காட்டிவிட்டேன். பிறகு தினமும் உங்கள் வீடுவரை தொடர்ந்து வந்திருக்கிறேன். என்னுடைய மனத்தை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்

வெளிப்படுத்த முயன்றேன். ஆனால், முடியவில்லை. பிறகு அங்கிருந்து நீங்கள் வேறிடத்துக்குக் குடிபெயர்ந்ததாகக் கேள்விப்பட்டேன். என்னுடைய மனம் ஒரு வகையில் மரத்தே போனது. அதன் பிறகு நேற்றைய தினம் வரை நான் உன்னைத் தேடி அலைந்து கொண்டிருந்தேன். நேற்றுதான் என் இதயராணியின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்தேன். கண்டதும் கடிதம் ஒன்றை எழுதிவைத்தேன்!

மன்னிக்க வேண்டும். நான் இப்படியெல்லாம் பேசுவது சங்கடமாக உள்ளதா? என்ன செய்ய? என்னால் என்னையே கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. சொல், என்னை மன்னிப்பாயா?''

கோசெட்டிக்கு இதுவரை அவன் பேசியதே அதிகமாகத் தோன்றியது. அவள் உணர்வுகளின் மோதல்களால் நடுங்கினாள். அவளது கண்களில் நீர் நிறைந்து முகம் சிவப்பேறி, உதடுகள் மலர்ந்தன.

‘‘கடவுளே!'' மிகவும் தாழ்ந்த குரலில் அவள் அழைத்தாள். தலையிலிருந்து கால்வரை நடுங்கிச் சுயநினைவற்றவளாகச் சட்டென்று பின்புறம் சரிந்தாள்.

தக்க சமயத்தில் மாரியஸ் கை நீட்டித் தாங்கிப் பிடித்ததால், அவளது தலை சிமெண்ட் பெஞ்சில் மோதி உடையாமல் தப்பித்தது.

நினைவு தெளிந்தபோது அவன், அவளை மிக நெருங்கி அமர்ந்திருந்தான். அவனது கைகள் அவளைத் தழுவிக் கொண்டிருந்தன. அவனது மூக்கிலிருந்து வெளிப்பட்ட வெப்பமான மூச்சுக் காற்று, அவளது கன்னப் பகுதியைத் தாக்கிக் கொண்டிருந்தது. அவள் உடல் அப்போது அவளையும் மீறி, புல்லரித்த நிலையில் இருந்தது.

அதன் பிறகு அவர்கள் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

தங்களைப் பற்றியும் தங்களது எதிர்காலத்தைப் பற்றியும்!

30

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ‘எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவில் கோசெட்டியைத் திருமணம் செய்யவேண்டும்' என்கிற உறுதியான தீர்மானத்துக்கு வந்தான் மாரியஸ். ஆனால், ஜீன்வால்ஜின் இந்தத் திருமணத்துக்குச் சம்மதிக்க மாட்டார் என்று இருவருமே நினைத்தனர்.

தனக்குக் கிடைக்கும மிகவும் குறைவான வருமானம் தன்னுடைய வாழ்க்கைக்கே போதவில்லை. இந்தச் சூழ்நிலையில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டால் அவளைத் தம்முடன் வைத்துக் காப்பாற்றுவது எப்படி? இந்த மாதிரி ஒரு சூழ்நிலையில் இருக்கும் இளைஞனுக்குத் திருமணம் செய்து வைக்க எந்த ஒரு பெண்ணின் தந்தையும் விரும்புவாரா என்ன?

இந்தக் கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததுதான். எனவே, தன்னுடைய வருமானத்துக்கு ஒரு நல்ல வழி ஏற்படாத வரையில் கோசெட்டியைத் திருமணம் செய்ய முடியாது என்பதை மாரியஸ் சுயமாகவே உணர்ந்தான்.

இந்தப் பிரச்சனையிலிருந்து விடுபட ஒரே ஒரு வழிதான் இருந்தது. தனது தாத்தாவிடம் செல்வது, அவரிடமிருந்து பொருளாதார உதவியை நாட வேண்டியதுதான். பிரச்சனை சுமுகமாக முடிந்துவிடும். தனது நோக்கம் சுலபமாக நிறைவேறிவிடும்.

மாரியஸின் தாத்தா கில்லனோர்மன்ட்டுக்கு தொண்ணூற்றோரு வயதாகிறது. மாரியஸின் அத்தையுடன் அவரது பழைய வீட்டிலேயேதான் இன்னும் வசிக்கிறார். மாரியஸ், அவர்களிடம் சண்டை போட்டு வீட்டைவிட்டு வெளியேறி நான்கு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. தான் இறந்து விடுவதற்கு முன்னால் ஒரு தடவையாவது பேரனைப் பார்க்க வேண்டுமென்று தாத்தா விரும்பினார். சமீபகாலமாக அவனைப் பார்க்கவேண்டும் என்ற உணர்வு நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வந்தது. பார்க்காமல் இருப்பது அவரது நிம்மதியைக் குலைப்பதாகவும் தோன்றியது. மற்றொரு வகையில் ராஜ குடும்பத்தினருக்கு எதிரான கொள்கை உடைய இளைஞர்களை அவருக்குப் பிடிக்கவில்லை! ராஜ குடும்பத்துக்கு எதிராக இரண்டாம் நெப்போலியனின் ஆதரவாளர்களாகச் செயல்படும் இளைஞர்கள் மத்தியிலிருந்து தன்னுடைய பேரனை வீட்டுக்கு அழைத்து வரவும் தாத்தாவின் சுய கௌரவம் இடம் தரவில்லை.

ஒருநாள் விடியற்காலை வேளையில் வேலைக்காரன் அறைக்குள் வந்து ‘மாரியஸ் வந்திருக்கிறார்’ என்ற செய்தியைத் தெரிவித்தபோது, வயதானவரின் மனத்தில் மகிழ்ச்சியும், நிம்மதியும் அலையடித்தது. இருப்பினும், அதையெல்லாம் வெளிக்காட்டிக் கொள்ளாதவராகக் கேட்டார்: “எந்த மாரியஸ்.... அவருக்கு என்ன வேண்டுமாம்?”

“எனக்கு தெரியவில்லை. மிஸ்டர் மாரியஸ் உங்களைச் சந்திக்க விரும்புவதாக உங்களிடம் சொல்லச் சொன்னார்.”

“உம்… வரச் சொல்லுங்கள்!” தாத்தா மெதுவான குரலில் வேலைக்காரனிடம் பேசினார்.

சில நிமிடங்களுக்குள் மாரியஸ், தாத்தாவின் முன்னால் வந்து நின்றான்.

நீண்ட நாள்களாகப் பார்க்காமல் இருந்த பேரனைக் கண்டதும் வயதானவரின் இதயம் மகிழ்ச்சியால் துடித்தது. கண்கள் நீரால் நிறைந்தன. சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறே நடுக்கத்துடன் தென்பட்ட தாத்தாவின் உருவத்தைப் பார்த்ததும் மாரியஸும் உணர்ச்சிவசப்பட்டான்.

பேரனைக் கட்டியணைத்து உச்சி முகர்ந்து முத்தமிட, தாத்தாவின் மனம் விரும்பியது. ஆனால், அப்படியெல்லாம் நடந்துகொள்ள அவரது உடலில் தெம்பு இல்லை. அவர்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பரஸ்பரம் பார்த்துக் கொண்டபடி தங்களது உணர்வுகளை ஒரு கட்டுக்குள் கொண்டு வர முயன்றனர்.

“ம்… எதற்காக வந்திருக்கிறாய்?” கடைசியில் தாத்தாவே கரகரப்பான குரலில் கேட்டார்.

மாரியஸ் மனம் சோர்ந்தான். இப்படிப்பட்ட ஒரு வரவேற்பை அவன் எதிர்பார்க்கவில்லை!

“தாத்தா…” அவன் எதையோ சொல்ல முற்பட்டான்.

“ம்…சொல்…என்ன சொல்ல வந்தாயோ, அதைச் சொல்!”

இளைஞன் எதுவும் பேசாமல் மௌனமாகப் பெரியவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“நீ என்னிடம் மன்னிப்புக் கேட்கத்தான் வந்திருக்கிறாய் இல்லையா?” தனது மனத்தில் எழுந்த சந்தேகத்தை பெரியவர் வாய் திறந்தே கேட்டார். ஏதோ ஒரு கோபத்தில்–வைராக்கியத்தில் வீட்டைவிட்டு வெளியேறி விட்டதற்காக மன்னிப்புக் கேட்கத்தான் பேரன் வந்திருப்பதாக கில்லனோர்மன்ட் நம்பினார். எனவேதான் மாரியஸிடம் அப்படிக் கேட்டார்.

“இல்லை தாத்தா… மாரியஸும் தன்னை மீறி வாயைத் திறந்து பதில் சொல்லிவிட்டான். தாத்தாவுக்குத் தன்மீது எவ்வளவு அன்பு இருக்கிறது என்பதும், தன்னை எவ்வளவு செல்லமாக வளர்த்தார் என்பதையும் மாரியஸ் மறந்துவிடவில்லை. எனவே, தான் திரும்பி வந்ததும் மிகவும்

மகிழ்ச்சியுடன் வரவேற்கார். தனது விருப்பங்களைக் காதாரக் கேட்டு நிறைவேற்றவும் உதவுவார் என்று எதிர்பார்த்தான்.

ஆனால், வயதானவரின் வார்த்தைகள் இளைஞனின் சுய கௌரவத்தையே பலமாகத் தாக்கியது. எனவே, அதற்குப் பதிலாக இளைஞன் பேசிய வார்த்தைகளும் தாத்தாவைக் கோபம் கொள்ள வைத்தன. போலி கௌரவம் இருவரையும் மறுபடி எதிரெதிரான இருமுனைகளுக்குத் தள்ளிவிட்டது. அவர்கள் அப்போது பரஸ்பரம் பேசிக்கொண்ட வார்த்தைகளுக்குப் பதிலாக வேறு சில நல்ல வார்த்தைகளைப் பயன்படுத்தியிருந்தால், அந்த சந்திப்பு சுமுகமானதாக முடிந்திருக்கும்.

''எனக்குக் கருணை காட்டுங்கள் தாத்தா?'' என்று தொடங்கிய மாரியஸ், தனது காதலைப் பற்றியும் தான் கோசெட்டியைத் திருமணம் செய்ய விரும்புவதையும் கில்லனோர்மன்ட்டிடம் தெரிவித்தான்.

எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கவனித்து வந்த தாத்தா கடைசியில் ஓர் எரிமலை வெடிப்பதுபோல் கேட்டார்: ''சீ...இதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறாயா? நீ எவ்வளவு சின்னப் பையன்? உன்னுடைய கல்யாணத்துக்கு இப்போது என்ன அவசரம்?''

மாரியஸ் மறுபடியும் தாத்தாவிடம் சூழ்நிலையை விளக்கத் தொடங்கினான்: ''தாத்தா, நீங்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு உதவவில்லை யென்றால், ஃப்ளாச்சுலாண்ட், தனது மகளை எனக்குத் திருமணம் செய்து வைக்கமாட்டார். கோசெட்டி இல்லாமல் நான் உயிர் வாழ்வது கடினம்!''

''இது என்ன பைத்தியக்காரத்தனம்!'' நீ அவளைத் திருமணம் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. உனக்குத் தேவையான பணத்தை நான் தருகிறேன்... நீ போய் உல்லாசமாக வாழ்க்கையை அனுபவி. இதுபோல் முட்டாள்தனமாக எதையும் பேசிக் கொண்டிருக்காதே!'' தாங்க முடியாத கோபத்துடன் கில்லனோர்மன்ட் – பேரனுக்கு உபதேசம் புரிந்தார்.

மாரியஸ் திடுக்கிட்டே போனான். இப்படியொரு பதிலை அவரிடமிருந்து அவன் எதிர்பார்க்கவே இல்லை. அவன் மனம் மிகவும் சோர்வுற்றது. அவனால் எதையும் பேச முடியவில்லை. நடுங்கும் கால்களுடன் அவன் வாசலை நோக்கி நடக்கத்தொடங்கினாள். அந்த அறையிலிருந்து வெளியேறுவதற்கு முன் ஒரு தடவை அவரைத் திரும்பிப் பார்த்துக் கடைசியாகச் சொன்னான்: ''மேற்கொண்டு எனக்கு எதுவும் தேவையில்லை. நான் போகிறேன்!''

கதவைத் திறந்து வெளியேறி, கதவை வெளிப்புறமாக மூடிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான். அவன் கதவை மூடிய சத்தம் பெரியவரின் காதில் தெளிவாக விழவே செய்தது.

சாய்வு நாற்காலியிலிருந்து அவர் எழுந்திருக்க முயன்றாலும், அவரால் முடியவில்லை. துயரம் தாங்க மாட்டாதவராக அவர் உரத்த குரலில் கதறினார்: “ஐயோ… நான் என்ன வார்த்தை பேசிவிட்டேன்! அவனைக் கூப்பிடுங்கள்… மாரியஸ்… மாரியஸை அழைத்து வாருங்கள், நான் எவ்வளவு முட்டாள்தனமாக நடந்து கொண்டேன்? இனிமேல் அவன் திரும்பியே வரமாட்டான். மாரியஸ்… அன்புப் பேரனே உடனே வா..”

பெரியவர் இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்தவாறே புலம்பினார். சட்டென்று அவரது குரல் கம்மியது. நாக்குப் புரண்டது. கண்கள் மேற்புறமாகச் செருகிக் கொண்டன. உடல் மொத்தமும் நடுங்கியது.

அவரது கண்களுக்கு முன்னால் நிரந்தரமான இருள் பரவியது – முடிவு பெறாத இரவின் காரிருள்!

தன்னுடைய ஆசைக்கிடங்கு மொத்தமும் தீப்பற்றி எரிந்ததாக அவனுக்குத் தோன்றியது.

இனிமேல், தான் எப்படி கோசெட்டியின் முன்னால் செல்வது? எதற்காகப் போகவேண்டும்?

என்ன செய்யலாம்?

அவனுக்கு ஒருவழியும் புலப்படவில்லை நிம்மதியற்ற நிலையும், உறுதியற்ற எதிர்காலமும் அவனை இறுக்கி மூச்சுத் திணற வைத்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் நெப்போலியனின் ஆதரவாளர்கள் பாரீஸ் நகரில் வலுப்பெற்று வந்தனர். ராஜ குடும்பத்தையும் அவர்களது பின்னணியிலுள்ள பிரபுக்களையும், செல்வந்தர்களையும், ஜமீன்தார்களையும், வியாபாரிகளையும் மேற்குறிப்பிட்டோர் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. நெப்போலியனின் ஆதரவாளர்கள் கிராமப்புறங்களில் மட்டுமின்றி, பாரீஸ் நகருக்கு உள்ளேயும் இது தொடர்பாக நிறைய இடங்களில் மோதல்களில் ஈடுபட்டனர். எந்த நேரமும் எங்கும் அப்படி ஒரு சண்டை ஏற்படலாம் என்ற நிலை!

மாரியஸுக்கு அந்த ஒரு வழிதான் கண்களுக்கு முன்னால் தெரிந்தது. மன்னர் மற்றும் பிரபுக்களின் ஆட்சியை எதிர்த்து நடைபெறும் போரில் தீவிரமாகப் பங்கெடுக்க வேண்டியதுதான். அதன் மூலம் தனது கவலை மற்றும் ஏமாற்றங்களை மறக்கலாம்.

அந்தப் போராட்டத்தின்போது ஒருவேளை தான் கொல்லப்பட்டால், அந்த ஒன்றினாலேயே தனது எல்லாப் பிரச்சனைகளும், துயரங்களும் தீர்ந்துவிடும்.

நேராகத் தனது இருப்பிடத்துக்கு வந்தவன், அத்தியாவசியமான சில பொருள்களை மட்டும் எடுத்துக் கொண்டான். அந்தச் சமயத்தில்தான் கோசெட்டியிடமிருந்து வந்த ஒரு கடிதத்தை தபால் சேவகன் கொண்டுவந்து கொடுத்தான். உறையைப் பிரித்து உள்ளிருந்த கடிதத்தை வாசிக்கத் தொடங்கினான் கோசெட்டி.

‘அன்புக்கு உரியவரே,

என்னுடைய தந்தையார் என்னை உங்களிடமிருந்து பிரித்து வெகுதொலைவுக்குக் கொண்டு போகப் போகிறார். இன்று இரவு நாங்கள் பாரீஸ் நகரிலுள்ள ரூடிலாஹோமில் ஏழாம் எண் அறைக்குக் குடிபோகிறோம். உயர்ந்த பட்சம் ஒருவார காலம் அங்கு தங்கிருப்போம். அதன் பிறகு நாங்கள் இங்கிலாந்து செல்கிறோம். விடைபெற்றுக் கொள்கிறோம்.

அன்பு

கோசெட்டி.

மாரியஸ், அந்தக் கடிதத்தை முத்தத்தினால் மூழ்கடித்தான். அதற்குள் அந்தக் கடிதம் அவனது கண்ணீரால் நனைந்து போயிருந்தது.

தனது பாக்கெட்டிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து உடனே எழுதத் தொடங்கினான்:

அன்புக்குரியவளே…

நமது திருமணம் நடக்காது. நான் என்னுடைய தாத்தாவிடம் போயிருந்தேன். அவர் நமது திருமணத்துக்கு ஆதரவாக இல்லை. நமது வாழ்க்கையை நடத்துவதற்குரிய வருமானமும் எனக்கு இல்லை. இருப்பினும் நான் உன்னை நேசிக்கிறேன். என்னால் உன்னை மறக்க

முடியாது. நான் புரட்சியாளர்களுடன் சேர்ந்து போராட்ட களத்துக்குப் போகிறேன். ஒருவேளை நான் களத்தில் கொல்லப்படலாம். எப்படி இருந்தாலும் இந்தக் கடிதத்தைப் போலவே எனது இதயமும் எப்போதும் உன்னுடைய உடைமைதான்.

அன்புடன்,

மாரியஸ்

தெருவில் வந்து கொண்டிருந்த சிறுவன் ஒருவனை அழைத்து, அவள் கொடுத்திருந்த விலாசத்தை விளக்கி அவனது கடிதத்தை கோசெட்டியிடம் கொடுக்குமாறு ஏற்பாடு செய்தான்.

சிறுவன் கடிதத்துடன் பறந்தான்.

கடிதத்துடன் ஒருவன் ரூடிலன்ட் விடுதியின் ஏழாம் எண்ணுள்ள அறையை நெருங்கினான். ஒரு மனிதன் அப்போதுதான் அறையிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார். ஜீன்வால்ஜின்தான் அவர்.

‘‘என்ன தம்பி, என்ன வேண்டும்?’’– பையனிடம் கேட்டார்.

‘‘எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. எது ஏழாம் நம்பர் அறை? அங்கு உள்ள மேடத்திடம் தரச்சொல்லி ஒரு கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள்!’’ அவன் மூச்சுவாங்கியபடியே பதிலளித்தான்.

‘‘அப்படியா, கடிதத்தை என்னிடம் தா; நான் கொடுத்து விடுகிறேன்!’’

‘‘மறக்காமல் கொடுத்து விடுங்கள்’’ சிறுவன் திரும்பவும் அவருக்கு நினைவூட்டிவிட்டு ஓடினான்.

ஜீன்வால்ஜின் கடிதத்துடன் அறைக்குள் திரும்பினார். கோசெட்டி அப்போது ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

நடுங்கும் கைகளுடன் அவர் கடிதத்தைப் பிரித்தார். அந்தக் கடிதத்தின் ஒவ்வோர் எழுத்தும் வெடிகுண்டுகள் போல் அவர் மீது பாய்ந்தன. ஒருவிதக் குற்றஉணர்வுடன் ஜீன்வால்ஜின் நாற்காலி ஒன்றில் அமர்ந்தார்.

‘அப்படியானால் அந்த இளைஞன் மரணத்தைத் தேடிச் செல்கிறான்; எனவே, அவன் நம்மிடமிருந்து கோசெட்டியைப் பிரிக்கப் போவதில்லை; பயப்படவும் வேண்டியதில்லை. அதற்காக எந்த முயற்சியையும் எடுக்க வேண்டியதில்லை!’

மாரியஸுக்கு என்ன நேர்ந்தது என்பதே கோசெட்டிக்குத் தெரியப் போவதில்லை.

இதுபோல் இன்னும் என்னென்னவோ யோசனைகள் அவரது மனத்துள் கடந்தன. கோசெட்டியை பற்றியும், அவளது எதிர்காலம், அவளது இன்ப வாழ்க்கை போன்ற விஷயங்கள் குறித்தும் அவரது மனசாட்சி அவரிடம் எவ்வளவோ எடுத்துக் கூறியது. இந்தச் சிந்தனைகளின் தீவிரத்தால் அவரது உடலில் வியர்வை சுரந்தது. நடுங்கத் தொடங்கினார்.

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவராகப் பட்டாள். வீரனின் உடையை அணிந்துகொண்டு அறையிலிருந்து வெளியேறினார். புரட்சிக்காரர்களும், ராணுவத்தினரும் மோதிக்கொள்ளும் இடத்தை நோக்கி விரைந்தார்.

31

அதற்குள்ளாகவே மாரியஸ் சண்டை நடந்து கொண்டிருக்கும் பகுதியை அடைந்துவிட்டிருந்தான். சண்டை கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாதையின் இருபுறமுள்ள கடடடங்களின் இடைவெளி மற்றும் குப்பைத் தொட்டிகளின் பின்னால் மறைந்தபடி புரட்சிக்காரர்கள் போரிட்டுக் கொண்டிருந்தனர். அங்கு நடந்த துப்பாக்கிச் சண்டையின் எதிரொலிகள் பாரீஸ் நகரம் முழுவதிலும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

பாதையின் பெரும்பாலான இடங்களில் புகைப்படலம் சூழ்ந்திருந்தது. வெடிகுண்டுகளும் துப்பாக்கிக் குண்டுகளும் பாய்ந்ததால் சுவர்களிலிருந்து பெயர்ந்துவிழுந்த காரையும் சுண்ணாம்பும், ஓட்டுத் துண்டுகளும், புகைப்படலமும் ஒன்று சேர்ந்து அந்தப் பகுதியையெ புகைமண்டலமாக மாற்றி விட்டிருந்தது. ஒழுங்காக மூச்சுவிடவோ, ஓர் எட்டு எடுத்து வைத்து முன்புறமாக நடக்கவோ கூட முடியாமலிருந்தது.

தன்னுடைய தோழர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை ஓரளவுக்கு ஊகித்து, அந்த இடத்தை நோக்கி, புகைப்படலத்துள் முன்னேறினான் மாரியஸ். வழியிலேயே சிலர் இறந்து கிடந்தனர். சிலர் மிக மோசமான முறையில் காயமடைந்து விழுந்து கிடந்தனர். மீதமுள்ள தோழர்கள் அப்போதும் எதிரியின் மீது குண்டுவீசியும் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டும் இருந்தனர். போராட்டம் தீவிரமாகிவிட்டிருந்தது.

மாரியஸும் துப்பாக்கியை ஏந்தியபடி நண்பர்கள் வரிசையில் சேர்ந்தான். அவனது துப்பாக்கியிலிருந்து குண்டுகள் முன்புறமாகப் பாயத்தொடங்கின. அதே சமயம் ராணுவ உடையணிந்த உருவம் ஒன்று யாரையோ தேடிக்கொண்டிருப்பதும் புரிந்தது. மிகவும் சிரமப்பட்டு ஊன்றிப் பார்த்தபோது அந்த மனிதர் தனக்கு மிகவும் பழக்கமானவர் போல் தோன்றியது.

மிஸ்டர் ஃப்ளாச்சுலாண்ட்தானே அவர்? அவனது மனம் அவனிடமே கேள்வி கேட்டது. 'அவர் இங்கு என்ன செய்கிறார்?' என்று அவனால் ஊகிக்கக்கூட முடியவில்லை.

இருப்பினும், அவன் அதிக நேரம் அதைக் குறித்து யோசிக்க வேண்டியிருக்கவில்லை. அவர், யாரிடமிருந்தோ துப்பாக்கி ஒன்றை வாங்கி, புரட்சிக்காரர்களுடன் இணைந்துகொண்டு ராணுவத்தினருக்கு எதிராக அவர்களைச் சுடத் தொடங்கினார்.

அந்தக் கூட்டத்திலிருந்த இளைஞர்கள் எல்லோரை விடவும் அவர் அதிகமான தீவிரத்துடனும் சுறுசுறுப்பாகவும் போராடினர். உண்மையைச் சொன்னால் அவரது தைரியமும், மனத்திண்மையும் இளைஞர்கள் பலரை வெட்கமுறச் செய்தன.

ஒரு சந்தர்ப்பத்தில் எதிரி அணியின் வரிசையைச் சிதறடித்து, இளைஞர்கள் அந்தப் பகுதிக்குள் ஊடுருவ உதவியது அந்த வயதான மனிதர்தான். புரட்சிக்காரர்களின் புகழ்பெற்ற தலைவன் ஒருவன் அதற்காக அவரை நெருங்கிப் பாராட்டவும் செய்தான்.

புரட்சி வீரர்கள் எதிரிகளில் அதிகமானவர்களைச் சிறைப்படுத்தவில்லை. காரணம், இப்படிப்பட்ட கைதிகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது என்பது அவர்களுக்குச் சாத்தியமான காரியம் அல்ல. சண்டை நடக்கும் எல்லைப் பகுதியில் ஒரு வீட்டில் ஒரே ஒரு மனிதனை மட்டுமே அவர்கள் காவலுக்கு நிறுத்திவைத்திருந்தனர். அப்படிக் காவலிருந்தவன் போலீஸ்காரர்களுக்காக ஒற்று வேலை செய்பவன். அந்தப் போராட்டத்தின் நடுவே ஒரு சிறிய இடைவேளை கிடைத்தபோது, புரட்சிக் கட்டத் தலைவன் நேராக அந்தக் கட்டடத்துக்கு வந்தான்.

ஜீன்வால்ஜின் தலைவனைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தார். தலைவன் பின்னாலேயே அவரும் அந்த வீட்டுக்குள் நுழைந்தார்.

அந்த வீட்டின் இருண்ட அறை ஒன்றுக்குள் ஒரு மனிதனைத் தூணில் கட்டி வைத்திருந்தனர். அந்த அரைகுறை வெளிச்சத்திலும் கட்டுண்டிருக்கிற மனிதர் யார் என்பது ஜீன்வால்ஜினுக்குத் தெளிவாகத் தெரியவே செய்தது.

இன்ஸ்பெக்டர் ஜாவர்தான் அவர்!

புரட்சிக்கூட்டத் தலைவன் பேசுவது கேட்டது:

‘‘நான் உங்களை மறக்கவே இல்லை. எங்கள் கூட்டத்தில் கடைசியாகத் திரும்பிவரும் வீரன் உங்களது முடிவை நிச்சயிப்பான்!’’

ஜீன்வால்ஜின் திரும்பவும் கட்டுண்டிருக்கும் மனிதரைக் கவனித்தார். அவரும் ஜீன்வால்ஜினை உற்றுப் பார்த்தார். இருவரது பார்வைகளும் கடுமையானதாகவே இருந்தன. வார்த்தைகளைக் காட்டிலும் கடுமையை தெரிவிக்கும் நெருப்புப் பொறி பறக்கும் பார்வைகள்.

ஜீன்வால்ஜின் புரட்சிக்கூட்டத் தலைவனை நெருங்கிக் கேட்டார்: ‘‘சற்று நேரத்துக்கு முன்னால் நீங்கள் என்னுடைய வீரதீரத்தைப் புகழ்ந்தீர்கள். நான் உங்களுக்கு உதவியதை மனிதாபிமானம் மிக்க செயல் என்று குறிப்பிட்டீர்கள். நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?’’

‘‘கண்டிப்பாக! என்ன உதவி வேண்டுமோ, கேளுங்கள்’’ தலைவனான இளைஞன் கேட்டான்.

‘‘இந்த மனிதன் என்னுடைய குலப்பகைவன்! இவனது தலையைத் துப்பாக்கிக் குண்டால் துளைத்து, மூளையை நான் சிதறடிக்க வேண்டும். இவனுடனான எனது பகையை அந்த முறையில் தீர்த்துக்கொள்ள விரும்புகிறேன். அப்போதுதான் என் மனம் ஆறுதல் அடையும்!’’

‘‘அப்படியா, மிகவும் நல்லது! இந்தாருங்கள்... இந்த போலீஸ் ஒற்றனை நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்!’’

அந்த இளைஞன், அவர்கள் இருவரையும் அங்கேயே விட்டு விட்டு அமைதியுடன் வெளியேறினான்.

ஜீன்வால்ஜின் சுற்றுமுற்றும் பார்த்தார். வேறு யாரும் அங்கு இல்லை என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு, ஜாவரின் கட்டுகளை அவிழ்த்தார்.

“நான் யாரென்று உங்களுக்குப் புரிந்திருக்க வேண்டுமே!” ஜீன்வால்ஜின், போலீஸ் அதிகாரியான ஜாவரிடம் கேட்டார்.

“நிச்சயமாகத் தெரிகிறது! இது உனக்கு உகந்த ஒரு சந்தர்ப்பம். நீ உன்னுடைய பகைக்கு என்னைப் பழிதீர்த்துக் கொள்ளலாம்.” ஜீன்வால்ஜின் முன்னர் சொன்ன வார்த்தைகளை வைத்தே பதிலடி கொடுத்தார் இன்ஸ்பெக்டர்.

அந்த போலீஸ் அதிகாரி இம்மியளவுகூடப் பயப்பட்டதாகத் தெரியவில்லை. மரணத்தை எதிர்பார்த்துச் சற்றும் பதற்றப்படாமல், அந்தப் பழைய குற்றவாளியின் முன்னால் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நின்றார்.

ஜீன்வால்ஜின் துப்பாக்கியை எடுத்து ஜாவரின் நெற்றிப் பொட்டில் வைத்து அழுத்தியபடி ஒரு நிமிடம் நின்றார். பின்னர் ஒரு புன்னகையுடன் அந்தத் துப்பாக்கியை அறையின் மையத்திலிருந்த மேஜை மீது போட்டார். பிறகு இடுப்புப் பகுதியிலிருந்து ஒரு பெரிய கத்தியை உருவினார்.

“இதுதான் உங்களது இயல்புக்குப் பொருத்தமானதாக இருக்கும். இதன் உதவியால்தான் உங்களைப் பழவாங்கப் போகிறேன்!”– கத்தியையும் மேஜை மீது வைத்தவாறே ஜீன்வால்ஜின் தொடர்ந்தார்: “மிஸ்டர் ஜாவர், உங்களைக் கொன்று பழிதீர்ப்பதற்காக நான் அந்த இளைஞனிடமிருந்து விடுவிக்கவில்லை. இப்போது விடுதலையடைந்து விட்டீர்கள். நீங்கள் இங்கிருந்து போகலாம்!”

என்ன நடந்தாலும் சட்டென்று உணர்ச்சிவசப்படாத ஜாவரின் முகம் சட்டென்று வியப்பினாலும், நம்ப முடியாமையாலும் பளபளப்பு அடைந்தது. அவரது கண்களில் ஒரே நேரத்தில் பல்வேறு உணர்வுகள் பொங்கிப் பிரவகித்தன.

“ஜீன்வால்ஜின்.... வேண்டாம் இந்த விளையாட்டு. என்னை இப்போது கொல்வதுதான் உனக்கு நல்லது. இல்லாவிட்டால் நிச்சயமாக நான் உன்னைக் கைது செய்யவே முற்படுவேன்!”– ஜாவர் கடுமையான குரலில் எச்சரிக்கை செய்தார்.

“நீங்கள் அதற்காகக் கவலைப்பட வேண்டாம் இன்ஸ்பெக்டர். நான் புரட்சி இயக்கத்தில் சேர்ந்து போராடிக் கொண்டிருக்கிறேன். ஒருவேளை இதிலேயே என் உயிர் போய் விடலாம். அப்படி எதுவும் நடக்கவில்லையானால்கூட ரூடிலாஹோமில் ஏழாம் நம்பர் அறையில் நான்

இருப்பேன். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் என்னைத் தேடி அங்கு வரலாம். ஆனால், இப்போது நீங்கள் இங்கிருந்து தப்பித்துச் செல்லுங்கள்!''

இன்ஸ்பெக்டர், தன்னைக் கொன்றுவிடுமாறு திரும்பவும் ஜீன்வால்ஜினிடம் கூறினார். ஒரு பழைய குற்றவாளியின் உதவியால் தான் தப்பிப்பது என்பது, அவருடைய கௌரவத்துக்கோ, வீரத்துக்கோ இழுக்கு என்று அவர் கருதுவதாகத் தோன்றியது.

''உம்.... புறப்படுங்கள். உங்களிடம்தான் சொல்கிறேன் சீக்கிரம் புறப்படுங்கள்!''– மிகவும் கடுமையான குரலில் பேசிய ஜீன்வால்ஜின் அந்த போலீஸ் அதிகாரியை, சிறிய வாசல் வழியாக வெளிப்புறம் தள்ளிவிட்டார். பிறகு இரண்டு தடவை தனது துப்பாக்கியின் விசையை அழுத்தி வெடிக்கச் செய்துவிட்டு, புரட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

''அவனது கதையை முடித்துவிட்டேன்!இப்போதுதான் என் மனம் ஆறுதலடைந்தது...''– ஜீன்வால்ஜின் தலைவனிடம் கூறினார்.

போராட்டம் முன்னைவிட வலுவாகத் தொடர்ந்தது. இம்முறை மன்னரின் படைகள்தான் கடுமையான தாக்குதல்களில் ஈடுபட்டனர். அவர்களை எதிர்த்து நிற்பதுடன், தங்களது ஆள்களில் காயம் பட்டவர்களைப் பத்திரமாக எடுத்துச் சென்று பாதுகாப்பான இடங்களில் சேர்த்து, சிகிச்சையளிப்பதும் புரட்சியாளர்களின் அவசரமான வேலையாக இருந்தது.

மாரியஸும் காயம்பட்ட தோழர்களைக் காப்பாற்றி, அவசரமான முதலுதவிகள் செய்து பத்திரமான இடங்களில் அவர்களைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் ஈடுபட்டிருந்தான். திடுமென்றுதான் யாரோ ஒரு மனிதன் தனக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டுவதை அவன் உணர்ந்தான்.

எனினும் தற்காப்புக்காகக்கூட அவன் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

எதிரியைத் தாக்குவதற்காகத் துப்பாக்கியை எடுக்கக்கூட நேரம் கிடைக்கவில்லை. அதற்குள் ஏதோ ஒன்று தனது தோளில் மோதியதுபோல் தோன்றியது மாரியஸுக்கு.

உச்சி முதல் உள்ளங்கால் வரை வலி பரவி வதைத்தது. தோள், கை, உடம்பு போன்ற பகுதிகளில் வழுவழுப்பான திரவம் வழியத் தொடங்கியது. கண்களுக்கு முன்னால் கடுமையான இருட்டு கனமாகப் படர்ந்தது.

வேதனையின் ஆழத்துக்குள் மாரியஸ் தன்னையும் மீறி அமிழ்ந்து கொண்டிருந்தான்.

தன்மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்துவிட்டது. விரைவிலேயே தன்னை எதிராளிகள் சிறைப்பிடித்துச் சென்று விடுவார்கள். அதைத் தொடர்ந்து தான் விரைவிலேயே கொல்லப்படுவோம் என்று அவன் மனம் எச்சரித்தது.

எப்படியிருந்தாலும் கோசெட்டியைத் திருமணம் செய்ய முடியாத ஏமாற்றத்தில் நீந்திக் கொண்டிருப்பதைவிட, இந்த மரணம் எத்தனையோ மேல் என்று அவனுக்குத் தோன்றியது. அந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவன் தலை சுற்றி, சுயநினைவிழந்து விழப் போனான்.

அதற்குள் முன்பின் தெரியாத ஏதோ ஒருவரின் வலுவான கை தன்னைத் தாங்கிப் பிடிப்பதாக மாரியஸுக்குத் தோன்றியது.

குண்டு தாக்கி அவன் கீழே விழுவதற்கு முன்பாக அவனைத் தாங்கிப் பிடித்தவர் ஜீன்வால்ஜின்தான்! எந்த நேரத்திலும் மாரியஸுக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்படலாம் என்ற நினைவுடன் அவனைவிட்டு அதிகமாக அகன்று விடாமலேயேதான் அவர் போராடிக் கொண்டிருந்தார். அவரது கண்கள் அடிக்கடி கோசெட்டியின் காதலனான அந்த இளைஞனையே கவனித்துக் கொண்டிருந்தது.

மாரியஸைக் கீழே விழாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டார் என்றாலும், அவனை எங்கு கொண்டு செல்வது என்பதில் அவரிடம் எந்தவிதமான தீர்மானமும் ஏற்படவில்லை. ரத்தம் ஒழுகிக் கொண்டிருப்பதால், இந்த நிலையில் அவனை அதிக நேரம் அங்கேயே வைத்திருப்பதும் அபாயம் என்பதையும் அவர் உணர்ந்தார்.

இரு புறங்களிலும் பெரிய பெரிய கட்டடங்கள் வரிசையாக நின்றிருந்தன. பின்புறத்தில் பாய்ந்து வரும் புரட்சிப்படையின் இளைஞர் பட்டாளம்; எதிரே மன்னரின் படைகள் பெரும் அரணாக நின்று கொண்டிருந்தது. தரையிலோ காயம்பட்டும் இறந்தும் விழுந்துகிடந்த வீரர்களின் உடல்கள். எண்ண முடியாத அளவுக்கு உடல்கள் ஒன்றின் மேல் ஒன்றாக வெவ்வேறு கோணங்களில் விழுந்துகிடந்தன!

நின்ற இடத்திலிருந்து திரும்பவே வழியில்லை. இந்த நிலைமையில் அவனை எங்கே எடுத்துச் செல்ல முடியும்? நின்ற நிலையிலேயே

அவனைச் சுமந்துகொண்டு அப்படியே பறக்க அவர் ஒன்றும் பறவை இனத்தைச் சேர்ந்தவர் அல்லவே!

திகைப்பிலும் யோசனையிலுமாக ஒரு கணம் அப்படியே அசைவற்று நின்றார். சுற்றுமுற்றும் பார்த்ததில் சற்றுத் தொலைவில் ரோட்டின் ஓரம் வட்டமாகத் தெரிந்த இரும்பு மூடியின் மீது அவரது கண்கள் பதிந்தன.

ரோட்டின் கீழ்ப்புறமாகச் சாக்கடைநீர் மற்றும் குப்பை கூளங்களை அடித்துச் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள பாதாளச் சாக்கடை அது. குப்பைகளை எடுத்துவரும் வண்டிகள் குப்பைகளை கொட்டவும், துப்புரவுத் தொழிலாளர்கள், அடைப்பு ஏதாவது ஏற்பட்டால் சரி செய்யவும், அவ்வப்போது நீர் தேங்காமல் கண்காணிக்கவும் சாலைகளின் மீதிருந்த வட்டமான இரும்பு மூடிகள் உதவின. அதில் ஒன்றுதான் ஜீன்வால்ஜினின் கவனத்தைக் கவர்ந்தது.

அதன் பிறகு ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்காமல், மாரியஸின் உடலை எடுத்துத் தன்னுடைய தோளின் மீது போட்டுக் கொண்டு நடக்க தொடங்கினார். அதற்குள் மாரியஸ் முற்றிலுமாகவே சுயநினைவை இழந்து விட்டிருந்தான்!

மிகவும் கவனமாக அந்த இரும்பு மூடியை நோக்கி நடந்தவர், தன்னுடைய வலதுகையால் அதன் மூடியைப் பிடித்து உயர்த்தினார். அதற்குள் இருந்து எழுந்த தாங்க முடியாத துர்நாற்றம் மூக்கில் கடுமையாக நுழைந்தது.

ஜீன்வால்ஜின் அதற்குள் எட்டிப் பார்த்தார். உள்ளே வெறும் இருட்டு மட்டுமே தெரிந்தது. ஒரு காலை உள்ளேவிட்டுத் துழாவிய போது காலில் இரும்பினால் ஆன ஏணியின் படிகள் தட்டுப்பட்டன.

மேற்கொண்டு தயங்காமல், மாரியஸைத் தோளில் போட்டபடியே வட்டவடிவமான துவாரத்துக்குள் இறங்கத் தொடங்கினார். ஏணியில் இரண்டு படி இறங்கியவர், ஒரு கையை உயர்த்தி, திறந்திருந்த மூடியை இழுத்து மூடினார். உள்ளே இப்போது சுத்தமான இருட்டு மட்டுமே தெரிந்தது.

கண்ணைக் குத்தினால்கூடத் தெரிந்துகொள்ள முடியாத இருட்டு. குமட்டலை ஏற்படுத்தும் துர்நாற்றமுள்ள அந்தச் சாக்கடையில் நெஞ்சளவு தண்ணீரில் இறங்கி நின்றுகொண்டு, பிரமாண்டமான இரும்புக் குழாயின்

வழுவழுப்பான வளைந்த பக்கப் பரப்பைத் தடவியபடியே ஜீன்வால்ஜின் முன்புறமாக நடக்கத் தொடங்கினார்.

முடிந்த விரைவில் எங்காவது அந்தக் குழாயிலிருந்து வெளியேறித் தப்பிக்காவிட்டால் தானும் அந்தச் சாக்கடைக்குள்ளேயே மயங்கி விழுந்து இறந்து விடுவோம் என்று ஜீன்வால்ஜின் பயந்தார்.

32

அந்தப் பெரிய இரும்புக் குழாய்க்குள் தலையை இடித்துக் கொள்ளாமல் ஜீன்வால்ஜினால் நிமிர்ந்து நிற்க முடிந்தது. இரண்டு புறமும் கைகளை நீட்டினாலும் எட்டாத அளவுக்கு இருந்தது அந்தக் குழாயின் அகலம். இருப்பினும் உட்புறம் இருட்டு நிறைந்திருந்ததால் எதையும் கண்ணால் காணவோ, புரிந்து கொள்ளவே முடியாத சூழல்.

தட்டுத் தடுமாறியபடியே சற்றுத் தூரம் சென்றபிறகு மேலும் விசாலமான பகுதியை அடைந்ததாக அவருக்குத் தோன்றியது. அந்த இடத்தில் இரும்புக் குழாய்களுக்குப் பதிலாக கான்கிரீட் சுவர்கள் இருந்தன. எனவே நீரின் உயரம் குறைந்து முழங்காலளவே இருந்தது.

தான் நின்று கொண்டிருப்பது எங்கே என்று ஜீன்வால்ஜினுக்கு அப்போது தெளிவாகவே தெரிந்தது. பாரீஸ் நகரின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வரும் சாக்கடை, மலம், குப்பை, இறந்துபோன மிருகங்களின் உடல் போன்றவையெல்லாம் அந்த வழியாக வந்துதான் கடலை அடைகின்றன.

அந்த வழியிலேயே மேலும் சற்றுத் தூரம் போனால் மாரியஸைச் சுமந்து கொண்டு இறங்கியது போல் மற்றொரு துவாரம் தட்டுப்படலாம். அந்த வழியாக மேலேறித் தப்பித்து விடலாம் என்று ஜீன்வால்ஜின் நினைத்தார். மூக்கைத் துளைக்கும் சாக்கடை நாற்றத்துக்கு மத்தியில், ஈரத்தில் மூச்சுத் திணறியபடி, இளைஞனது உடலையும் சுமந்துகொண்டு நடப்பது என்பது சுகமான ஒரு செயலாக இருக்கவில்லை.

ஒரு கையால் மாரியஸின் இடுப்பைப் பிடித்தபடி மற்றொரு கையால் சுவரைத் தடவியபடியே நடந்து கொண்டிருந்தார் ஜீன்வால்ஜின். நாற்றம் வயிற்றைப் புரட்டி, குமட்டலை ஏற்படுத்தியது. சேறு நிறைந்த நீரில் காலணிகள் ஆழந்து இறங்கியதால் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் முன்னேற

முடிந்தது. மாரியஸின் உடல்பளு, தோள்கள் மற்றும் கால்களை விரைவிலேயே சோர்வடைய அடைய வைத்தது. தாகம் வேறு தொண்டையை வறளச் செய்திருந்தது.

தன்னுடைய நோக்கத்தில் வெற்றி பெற முடியாதோ என்றுகூட ஜீன்வால்ஜின் பயந்தார். மாரியஸ் இப்போது என்ன நிலையில் இருக்கிறானோ என்பது வேறு அவரைக் கவலை கொள்ள வைத்தது. ஒரு வேளை இறந்துவிட்டானோ? அசைவற்ற அந்த உடம்பு, ஜீன்வால்ஜினின் மனத்துள் சந்தேகப் புயலைக் கிளப்பிவிட்டது.

திடுக்கிட்ட ஜீன்வால்ஜின் உடனே இளைஞனின் நாடியைப் பரிசோதித்துப் பார்த்தார், பிறகு மற்றொரு கையால் அவனது மார்புப் பகுதியை தொட்டுப் பார்த்தார். அதிர்ஷ்டம்தான்! நாடி துடிக்கிறது. இதயம் வேலை செய்கிறது. இருப்பினும் ஒருசில மணி நேரம் அந்தப் பாதாளச் சாக்கடையிலேயே இருக்க நேர்ந்தால், அந்த இளைஞனின் கதை முடிந்து விடும் என்பது உறுதி.

ஒருவேளை தானேகூட எந்த நிமிடமும் அந்தச் சாக்கடை நீரில் மயங்கி விழலாம். அப்படி ஏதாவது நடந்தால் தங்கள் இருவருடைய வாழ்வும் அங்கேயே முடிந்துவிடும். யாருக்கும் தெரியாமலேயே தங்களது உடல்கள் கால்வாயின் சாக்கடை நீருடன் அடித்துச் செல்லப்பட்டுக் கடலில் கலந்துவிடலாம். பிறகு கடல்வாழ் உயிரினங்களுக்கு உணவாகலாம்.

எப்படியாவது மாரியஸைக் காப்பாற்றி, கோசெட்டியிடம் ஒப்படைப்பதுதான் ஜீன்வால்ஜினின் ஒரே நோக்கமாக இருந்தது. அந்த முயற்சியின்போது தான் இறக்க நேர்ந்தால் கூட அதில் அவருக்கு எந்தவிதமான வருத்தமும் ஏற்படாது.

ஒருவேளை அந்த முயற்சி பலனளிக்காவிட்டால்… அதைவிட ஏமாற்றகரமான விஷயம் வேறு எதுவும் இல்லை. இறப்பதைக் காட்டிலும் அதிகமாக வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய விஷயமாக அது இருக்கும்.

இரண்டு கைகளாலும் அந்த இளைஞனின் உடம்பை மாற்றி மாற்றிப் பிடிக்கும். இரு தோள்களிலுமாக மாற்றி மாற்றிச் சுமந்தும், மற்றொரு கையால் சுவரைத் தடவிபடியும் ஜீன்வால்ஜின் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தார்.

தான் நடக்கத் தொடங்கி வெகு நேரம் ஆகிவிட்டது என்றும், விரைவிலேயே மற்றொரு மூடியைக் கண்டுபிடித்துப் போராட்ட எல்லையைக் கடந்து, ஆபத்து எதுவுமில்லாத இடத்தில் வெளியேற வேண்டுமென்றும் ஜீன்வால்ஜின் நினைத்தார்.

ஆனால், நடந்தது வேறாக இருந்தது!

ஒருகணம் ஜீன்வால்ஜின் திடுக்கிட்டார். அவரது கால்களின் ஊடாக எதுவெல்லாமோ உரசிக்கொண்டும், நகங்களால் கீறிக்கொண்டும் கீச்சுமூச்சென்று சத்தம் எழுப்பிக் கொண்டும் பாய்ந்தன. அதன் மூலம் சாக்கடை நீர் தெறிக்கவும் செய்தது.

சாக்கடையில் வரும் உணவுப் பண்டங்களின் மிச்சத்தையும், அழுகிய பொருள்களையும் சாப்பாட்டு ஏகத்துக்குக் கொழுத்துப் போயிருந்த பெருச்சாளிகள்தான் அவை.

ஜீன்வால்ஜின் முதலில் பயந்து போனார் என்றாலும் அவை, அவரைக் கடந்து போனதால் விரைவிலேயே தான் கடல்புறத்தை அடைந்து விடுவோம்; தப்பித்து விடலாம் என்றும் தோன்றியது.

ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவருக்குப் பின்னாலிருந்து ஏதோ வெளிச்சம் வருவதைக் கவனித்தார். கூடவே சில மனிதர்கள் ரகசியமான குரலில் பேசுவதும் கேட்டது. யாரோ சிலர் தனக்குப் பின்னால் வருகின்றனர் என்பது அவருக்குப் புரிந்தது.

திரும்பிப் பார்த்தார். போலீஸ்காரர்கள் பயன்படுத்தும் ‘சிக்னல்லாம்ப்’பின் வெளிச்சம்போல் தெரிந்தது. கூடவே மூன்றோ நான்கோ போலீஸ்காரர்களின் நிழலுருவங்கள் தென்பட்டன.

அந்த போலீஸ்காரர்களுடன் ஜாவரும் இருக்கிறாரா என்ன?

போராட்டத்தில் பங்கேற்ற புரட்சிக் காரர்களில் யாராவது அந்தச் சாக்கடைக் கால்வாயில் ஒளிந்திருக்கிறார்கள் என்று பொதுவாகச் சோதனை செய்ய வந்திருக்கிறார்களா? அல்லது தான் மாரியஸைச் சுமந்துகொண்டு வந்ததை ஜாவர் பார்த்து விட்டுப் பின்தொடர்கிறாரா?

தன்னை எப்படியும் பிடித்து விடுவது என்ற தீர்மானத்துடன், போலீஸ்காரர்களின் துணையோடு அவர் புறப்பட்டிருக்கிறாரா?

நொடி நேரத்துக்குள் என்னென்னவோ சிந்தனைகள், ஜீன்வால்ஜினின் மூளைப் பகுதியில் மின்னலாகக் கிளைத்து எழுந்தன. ஒருகணத்தில் சட்டென்று பயமும் திகைப்பும் அவரைச் சூழ்ந்து கொண்டன.

அவசர அவசரமாக காலடிகளை எடுத்து வைத்தபோது கால்கள் சேற்றில் ஆழமாகப் பதிவது தெரிந்தது. அத்துடன் நீர்மட்டமும் அதிகரித்துக் கொண்டுவந்தது. இப்போது நீர் அவரது இடுப்பு உயரத்துக்கு இருந்தது.

போலீஸ்காரர்கள் நான்கு புறமும் ஊன்றிக் கவனித்தவாறு, தண்ணீரில் சலசலப்பை ஏற்படுத்தியபடி முன்புறமாக நகர்ந்து கொண்டிருந்தனர். ஜீன்வால்ஜின் இன்னும் சற்றுத் தூரம் சென்ற பிறகு அது இரண்டு திசைகளில் பிரிவதைக் கவனித்தார். அவர் இடதுபுறம் திரும்பிய பாதையில் நடந்து சுவரோடு சுவராக ஒண்டி நின்று கொண்டார்.

அந்தப் பகுதி மிகவும் ஆழமுள்ள பகுதியாக இருந்தது. வருடக் கணக்கில் வந்து படிந்த அழுக்கும், குப்பைகளும் மக்கிச் சேறு போல் கொழகொழத்துக் கிடந்தது அந்தப் பகுதியில் கால்கள் அதற்குள் நன்றாக அமிழத் தொடங்கியதும் நீர்மட்டம் அவரது கழுத்துவரை உயர்ந்தது. தவளைகளும் பெருச்சாளிகளும் அவரது முகத்தைச் சுற்றி உரத்த குரலில் நீந்திக் குதித்தன.

அவை தன்னுடைய முகத்தை நகங்களால் கீறிவிடுமோ, அல்லது கடித்து விடுமோ என்கிற பயத்துடன் சாக்கடை நீரின் கடுமையான நாற்றம் வேறு தலையைக் கிறுகிறுக்க வைத்தது. சரிதான், இங்கேயே மயங்கி விழுந்து விடுவோம் என்று ஜீன்வால்ஜின் முடிவு கட்டினார். என்ன நடந்தாலும் சரி, போலீஸாரிடம் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது என்ற வைராக்கியமும் அவரிடம் வலுப்பெற்றது.

இருப்பினும், ஜீன்வால்ஜின் அடிமேல் அடிவைத்து மெதுவாக நகர்ந்தார். மாரியஸின் மூக்கிலும் வாய்ப்பகுதியிலும் சாக்கடை நீர் புகுந்து விடாமல் இருப்பதற்காக அவனது உடலை மேற்புறமாகச் சற்று உயர்த்திப் பிடித்தார். இருட்டு அந்தப் பகுதியெங்கணும் அடர்த்தியாக இருந்ததால், போலீஸ்காரர்கள் தங்களது விளக்கின் உதவியால் இவ்வளவு தொலைவிலுள்ள தங்களைக் கண்டுபிடிக்க முடியாது என்பதும் புரிந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக சேறாகக் குழம்பிக்கிடக்கும் பகுதியில் போலீஸார் சிரமப்பட்டு இவ்வளவு தூரத்துக்கு முன்னேறி வரமாட்டார்கள் என்றும் நம்பினார்.

அவர் நினைத்தது சரிதான்!

கால்வாய் இருபுறத்தில் பிரிந்ததுடன் முன்புறமாகவும் ஒரு கிளை பிரிந்து சென்றது. அந்த முச்சந்தியை அடைந்ததும் விளக்கை எல்லாத் திசையிலும் சுழற்றிச் சுழற்றிப் பார்த்துவிட்டுத் தங்களுக்குள் எதையோ பேசிக் கொண்டு வந்த வழியே அவர்கள் திரும்பத் தொடங்கினர்.

ஜீன்வால்ஜின் மிகவும் சோர்வடைந்திருந்தார். மேற்கொண்டு மாரியஸின் கனத்தை ஒருகணம் கூடத் தாங்க முடியாது என்றும் தோன்றியது. அதிர்ஷ்டவசமாக அந்தப் பகுதியில் கான்கிரீட் ‘ஸ்லாப்’ ஒன்று பெயர்ந்து பலகை மாதிரி சற்று நீட்டிக் கொண்டிருந்தது. அதன் மீது மாரியஸின் உடலைக் கிடத்தினார். சற்று நேரம் அந்த ‘ஸ்லாப்பை’ப் பிடித்தவாறே ஓய்வெடுத்தார்.

சற்றுத் தொலைவில் அலைகளின் இரைச்சலும், இரவுப் பறவைகளின் கீச்சுமூச்சுச் சத்தமும் அப்போதுதான் அவரது காதுகளில் விழுந்தன. எலிகளும் தவளைகளும் அந்தத் திசையை நோக்கிப் பாய்வதையும் கவனித்தார். சற்று நேரம் ஊன்றிப் பார்த்த பிறகு அவை கண்களுக்கு ஓரளவுக்குத் தென்படத் தொடங்கின.

வெளியே செல்லும் வழி அருகில்தான் உள்ளது என்பதைத் தெரிந்து கொண்டார்.

மாரியஸின் உடலை உயரத் தூக்கிப் பிடித்தபடி அவர் நடக்கத் தொடங்கினார். சற்று நேரத்துக்குள் நீர்மட்டம் குறைந்து, அடிப்பரப்பில் சேறும் சகதியும் இல்லாமல் உறுதியான நிலப்பகுதியும் தென்பட்டது. குளிர்ந்த காற்று வீசியது. அலைகள் பாறைகளின் மீது மோதித் திரும்பும் சத்தம் இரைச்சலாகக் கேட்டது.

ஜீன்வால்ஜின் அந்தப் பாதையின் கடைசியை நெருங்கி விட்டிருந்தார். பாதையின் முடிவில் கம்பிகள் குறுக்கும் நெடுக்குமாகத் தட்டுபட்டன. அது ஓர் இரும்புக் கதவு. துப்புரவுத் தொழிலாளர்கள், கால்வாய்க்குள் இருந்தபடி அங்கு வந்து படியும் அழுக்கு மற்றும் குப்பைகளை கடலின் பக்கமாகத் தள்ளி விடுவதற்காகப் பொருத்தப்பட்டிருந்த கதவு!

கதவு வெளிப்புறத்திலிருந்து பூட்டப்பட்டிருந்தது. கதவை ஒருதடவை நன்றாகச் சோதித்த பிறகு அந்தக் குறுக்குக் கம்பிகளை வளைத்து.

வழியேற்படுத்திய பிறகு அங்கிருந்து தப்பித்துவிடலாம் என்று ஜீன்வால்ஜின் நினைத்தார்.

ஆனால், அதன்பிறகும் அவர் முற்றிலும் எதிர்பாராத சம்பவங்கள்தான் நடந்தன.

33

தன்னுடைய முழு வலுவையும் உபயோகித்து ஜீன்வால்ஜின் வெகு நேரம் என்னென்னவோ செய்து பார்த்தார். ஆனால், எந்தவிதமான பலனுமில்லை. அந்தக் கம்பிகளில் ஒன்றைக்கூட வளைக்கவோ, உடைக்கவோ அவரால் முடியவில்லை. அப்போதுதான், அங்கிருந்து தான் நினைத்தபடி தப்பிப்பது அவ்வளவு சுலபமில்லை என்பது புரிந்தது.

“கிடைத்திருப்பதில் பாதியை எனக்குத் தருகிறாயா?” வெளிப்புறத்திலிருந்து திடுமென்று ஒரு குரல் கேட்டது. கறுப்பான மெலிந்த உருவம் ஒன்று தன்னையே கவனித்துக் கொண்டிருப்பதை அந்தக் குரலை வைத்துதான் தெரிந்து கொண்டார்.

குரல் கேட்டதும் ஜீன்வால்ஜின் ஒருகணம் திடுக்கிடவே செய்தார்.

ஒரு வேளை போலீஸ்காரராக இருப்பாரோ? அல்லது ஊர் சுற்றித் திரியும் வேலைவெட்டி இல்லாத முரடனாக இருப்பானா? அவன், ஆவல் நிறைந்த கண்களுடன் ஜீன்வால்ஜினையே உற்றுப் பார்த்தபடி கதவை மேலும் சற்று நெருங்கி நின்றான். ரகசியமான குரலில் பேசத் தொடங்கினான்:

“எனக்குப் புரிந்துவிட்டது. என் கையில் சாவி உள்ளது. உங்களுக்குக் கிடைத்திருப்பதில் பாதித் தொகையை எனக்குத் தருவதானால் நான் கதவைத் திறந்து விடுகிறேன்!”

“என்னய்யா சொல்கிறீர்!”– முன்பின் தெரியாதவனின் வார்த்தைகள் மூலம் எதையும் தெரிந்துகொள்ள முடியாததால், ஜீன்வால்ஜின் சற்றுக் கோபத்துடன் கேட்டார்.

“நீ அவனைக் கொலை செய்துவிட்டாய் இல்லையா? அவனிடம் பணம் நிறைய இருந்திருக்க வேண்டுமே. போலீஸுக்குப் பயந்துகொண்டுதானே பாதாளச் சாக்கடை வழியாக வந்து கொண்டிருக்கிறாய்? எல்லாம் தெளிவாகத் தெரிகிறது. கிடைத்ததில் பாதியைத் தருவதாக இருந்தால்...”

உடனடியாக அங்கிருந்து வெளியேறாவிட்டால், மாரியஸின் உயிரை காப்பாற்ற முடியாது என்பது ஜீன்வால்ஜினுக்குத் தெரிந்தது. அந்த எண்ணமே அவருக்குள் நடுக்கத்தை ஏற்படுத்தியது. எனவே, மறுபுறத்திலுள்ள குடிகாரனிடம் நயந்து பேசியாவது வெளியேற வேண்டியதுதான் என்று நினைத்தார்.

“சரி... சரி... சீக்கிரமாகக் கதவைத் திற.... நீ கேட்டபடியே தருகிறேன்.”– ஜீன்வால்ஜின் சுருக்கமாகப் பதிலளித்தார்.

ஒரு விதமான அசட்டுச் சிரிப்புடன் தள்ளாடியபடியே, அந்த இரும்புக் கதவின் பூட்டின் அருயே குனிந்து தனது கையிலுள்ள சாவியைப் பொருத்தித் திருகினான்.

அது உண்மையான சாவி அல்ல என்பது ஜீன்வால்ஜினுக்குத் தெரியவே செய்தது. இருப்பினும் ‘பட்’டென்று ஒருவிதச் சத்தத்துடன் கதவு திறந்து கொண்டது.

மாரியஸின் அசைவற்ற உடலைச் சுமந்தபடி ஜீன்வால்ஜின் கதவின் மறுபுறம் வந்தார்.

ஜீன்வால்ஜினிடம் எப்போதும் ஓரளவு பணம் இருப்பதுண்டு. அன்று ராணுவ உடையை அணிந்துகொண்டு அவசர அவசரமாகப் போராட்ட களத்துக்கு வந்ததால் பணம் எதையும் எடுத்துக் கொள்ளவில்லை. இருப்பினும், அதற்குள் பணம் ஏதாவது இருக்கும் என்று நினைத்தார்.

பைக்குள் கையை விட்டு, கையில் அகப்பட்டதை யெல்லாம் வெளியே எடுத்தார். சில வெள்ளி நாணயங்கள் கையில் பளபளத்தன. ஏறத்தாழப் பத்து ஃபிராங்க்குகள் இருக்கலாம்.

“என்ன பெரியவரே, இவ்வளவுதானா? இந்தச் சில்லறைக்காகத்தான் இவனைக் கொலை செய்தாயா என்ன?”– குடிகாரன் கேலித் தொனியில் கேட்டான். ஜீன்வால்ஜின் ஏதாவது ஒரு பதிலைச் சொல்லித் தன்னிடம் கொடுத்த பணத்தைப் பிடுங்கிக் கொள்வாரா என்ற பயம் ஏற்பட்டதும் சட்டென்று இருட்டில் மறைந்தான்.

மாரியஸின் உடம்பைத் தோள்மீது போட்டுக்கொண்டு கடற்கரையிலேயே நடக்கத் தொடங்கினார். நாலைந்து தப்படிகள் வைப்பதற்குள் முன்னாலிருந்து, “அவனைக் கொன்றுவிட்டாய் இல்லையா?” கன கம்பீரமாக ஒரு குரல் எழுந்தது. அந்தக் குரலும், திடகாந்திரமான

தோற்றமும் ஜீன்வால்ஜினை உண்மையில் நடுங்கவே வைத்தன. ஆனால், இந்தத் தடவை அந்தக் குரலுக்கு உரியவர் யார் என்பதில் அவருக்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்கவில்லை!

இன்ஸ்பெக்டர் ஜாவர்!

"இல்லை... இந்த மனிதர் இறக்கவில்லை!"

"யாரது... புரட்சிக்காரர்களில் ஒருவன்தானே?

"ஆமாம்!"– ஜீன்வால்ஜின் அந்த ஒரு கணத்துக்குள்ளேயே ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டிருந்தார். எனவே எந்தவிதமான பதற்றமும் இல்லாமல் பேசத் தொடங்கினார்: "இன்ஸ்பெக்டர் சார், இவனது உடம்பில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்திருக்கிறது. இவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் தோளில் சுமந்துகொண்டு பாதாளச் சாக்கடை வழியாகத் தப்பித்தேன். இதோ இந்த டயரியில் இவனைப் பற்றிய எல்லா விவரங்களும் உள்ளன!"

மாரியஸின் கோட்டுப் பையிலிருந்து ஒரு சிறிய டைரியை எடுத்து ஜாவரிடம் கொடுத்தார் ஜீன்வால்ஜின். மிகவும் சன்னமான வெளிச்சத்தில் – தெரு விளக்கின் கீழ் நின்றபடி ஜாவர் அதன் பக்கங்களைப் புரட்டினார்.

ஒருசில நிமிடங்களுக்குப் பிறகு அந்த போலீஸ் அதிகாரி சொன்னார்: "ம்... நட!"

எந்த இடத்தை நோக்கி நடக்கச் சொல்கிறார் என்பது புரியவில்லை. இருப்பினும் ஜீன்வால்ஜின் அந்த வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார்.

சற்றுத் தூரம் நடந்த பிறகு சாலையில் எதிர்ப்புறத்திலிருந்து வண்டியொன்று வருவது தெரிந்தது. இன்ஸ்பெக்டர் கையைக் காட்டி வண்டியை நிறுத்தினார்.

"வண்டியில் ஏறு!"– ஜாவர் கட்டளையிட்டார். மாரியஸின் கால்களைப் பிடித்து, அவனை வண்டிக்குள் ஏற்ற உதவவும் செய்தார். இன்ஸ்பெக்டரின் செயல்கள், ஜீன்வால்ஜினை ஏற்கெனவே வியப்படைய வைத்திருந்தன.

மாரியஸின் தாத்தா கில்லனோர்மன்ட் வசிக்கும் வீடு எங்கு உள்ளது என்பதை, மாரியஸின் டைரியிலிருந்தே ஜாவர் தெரிந்து கொண்டிருந்தார். அவரே, வண்டியோட்டியிடம் அந்த விலாசத்தைக் குறிப்பிடவும் செய்தார்.

அந்த விலாசத்தை நோக்கி வண்டி பாய்ந்தது. அரை மணி நேரப் பயணத்துக்குப் பிறகு வண்டி, ஒரு பெரிய வீட்டின் முன்பாக வந்து நின்றது.

முதலில் ஜாவர் வண்டியிலிருந்து கீழே இறங்கினார். பிறகு மாரியஸுடன் கீழே இறங்குமாறு ஜீன்வால்ஜிடம் கூறி, அதற்கு உதவவும் செய்தார்.

இளைஞனைத் தோளில் போட்டுக்கொண்டு ஜீன்வால்ஜின் முன்னால் நடக்க, ஜாவர் பின்புறமாகத் தொடர்ந்தார். வீட்டு வராந்தாவைக் கடந்தவுடன் இரண்டு வேலைக்காரர்களும், மாரியஸின் அம்மாவும் வெளியே வந்தனர்.

"இவருக்குக் காயம் பட்டிருக்கிறது. உடனடியாக டாக்டரை வரவழைத்துச் சிகிச்சை அளியுங்கள். இல்லாவிட்டால் நிலைமை ஆபத்துக்குரியதாகி விடும்!"– ஜீன்வால்ஜின் சொன்னார்.

பிறகு மாரியஸைத் தோளில் சுமந்தபடியே மிஸ்டர் கில்லனோர்மன்டின் அறையை ஒட்டியபடி மேல் மாடியில் இருந்த மற்றொரு அறைக்கு வந்தார். அங்கு மாரியஸுக்காக மெத்தை விரிக்கப்பட்ட கட்டில் ஒன்று தயாராக இருந்தது.

ஜாவர் கீழ்த்தளத்திலேயே காத்திருந்தார்.

ஒரு சில நிமிடங்களுக்குள் ஜீன்வால்ஜின் திரும்பவும் அந்த போலீஸ் அதிகாரியின் முன்னால் வந்து நின்றார். உறுதியான குரலில் பேசத் தொடங்கினலார்.

"இன்ஸ்பெக்டர் சார், ஒரே ஒரு வேண்டுகோள், நான் ஒரு தடவை, எனது வசிப்பிடம் வரை செல்லவேண்டும். என் மகள் கோசெட்டியிடம் இரண்டு வார்த்தைகள் பேசவேண்டும். அதன் பிறகு உங்கள் விருப்பப்படியே செய்துகொள்ளுங்கள். நான் உங்கள் கட்டுப் பாட்டிலேயே இருப்பேன்!"

"வாருங்கள்... வண்டியில் ஏறுங்கள்."– ஜாவரின் குரல் சற்று முரட்டுத்தனமாகவே இருந்தது.

அவர்கள் வந்த வண்டி இன்னும் அங்கேயே நின்றிருந்தது. இருவரும் அதனுள் ஏறி அமர்ந்தனர்.

இன்ஸ்பெக்டர், டிரைவரிடம் போகவேண்டிய இடத்தைச் சொன்னார்.

வண்டி புறப்பட்டு, விரைந்தது.

பயணத்தின்போது ஜாவரோ, ஜீன்வால்ஜினோ ஒரு வார்த்தைகூடப் பேசிக் கொள்ளவில்லை. இருவரும் ஏதோ தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர்.

சற்று நேரத்துக்குள் கார். ஜீன்வால்ஜின் வசிக்கும் விடுதியின் முன்பாக வந்து நின்றது.

ஜீன்வால்ஜின் வண்டியிலிருந்து கீழே இறங்கினார். இன்ஸ்பெக்டரை ஒரு தடவை பார்த்தார்.

“நீங்கள் போய் உங்கள் மகளிடம் பேசிவிட்டு வாருங்கள், நான் இங்கேயே காத்திருக்கிறேன்!”– ஜாவர் கூறினார்.

ஜீன்வால்ஜின் மறுபடியும் திகைத்தார். அப்போது இன்ஸ்பெக்டரின் குரல், மிகவும் தோழமையுடன் இருப்பதாகத் தெரிந்தது. ஜாவரின் முகத்தில் தெரிந்த உணர்வுகூட அந்த வினாடி வரை ஜீன்வால்ஜினுக்குப் பழக்கமில்லாத ஒன்றாக இருந்தது.

எதுவும் பேசாமல் ஜீன்வால்ஜின் தனது அறைக்குள் நுழைந்தார்.

இன்ஸ்பெக்டரின் முகத்தில் தெரிந்த உணர்வுகளும், அவர் பேசிய விதமும் ஜீன்வால்ஜினின் நிம்மதியைக் குலைக்கவே செய்தன. அதுவரை வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்களால் தாக்குண்டிருந்த ஜீன்வால்ஜினுக்கு, இன்ஸ்பெக்டரின் நடவடிக்கையில் ஏதோ விபரீதம் இருப்பதாகப் புலப்பட்டது.

மேல்மாடியிலிருந்து தனது அறைக்கு வந்த ஜீன்வால்ஜின், கோசெட்டியிடம் அதுவரை நடந்தது எல்லாவற்றையும் விவரமாகக் கூறினார்.

தான் ஓரிடம் வரை செல்லவேண்டியிருப்பதால், எப்போது திரும்பி வருவேன் என்று உறுதியாகச் சொல்ல முடியாது என்றும், தான் புறப்பட்டுப் போனபிறகு எங்கும் தன்னைப் பற்றி விசாரிக்க முற்படக் கூடாது என்றும் அவளிடம் கூறினார். மாரியஸின் வீட்டுக்குச் சென்று, அவனது தாத்தாவிடம் பேசுமாறும், மாரியஸை அவன் திருமணம் செய்து கொள்வதில் தனக்கு எந்த விதமான வருத்தமும் இல்லை, மகிழ்ச்சியே என்றும் தெரிவித்தார்.

அவசரஅவசரமாக எல்லாவற்றையும் அவளிடம் சொல்லிவிட்டு, அவள் எதிர்க் கேள்வி எதையும் கேட்க வாய்ப்பு அளிக்காதவராக ஜீன்வால்ஜின் படிகளில் கீழிறங்கத் தொடங்கினார்.

தரைப்பகுதிக்கு வந்த ஜீன்வால்ஜின் சிந்தனையில் ஆழ்ந்தவராக ஒருகணம் அப்படியே அசைவற்று நின்று போனார்.

அவரை அழைத்து வந்த வண்டியோ, இன்ஸ்பெக்டர் ஜாவரோ அந்த இடத்தில் இல்லை!

34

ஜீன்வால்ஜின் திரும்பவும் தன் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டதை அறிந்தபோது ஜாவருக்குள் இருந்த போலீஸ் அதிகாரியின் மனம் மிகவும் மகிழ்ச்சியடைந்தது. எவ்வளவு விரைவில் அந்தப் பழைய குற்றவாளியைப் பிடித்துச் சிறையில் அடைக்க முடியுமோ, அவ்வளவு விரைவில் அதைச் செய்துவிட வேண்டுமென்று அவரது இதயம் வெம்பியது!

ஆனால், தன்னைப் புரட்சிப் படையினரிடமிருந்து காப்பாற்றியதும், மாரியஸின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஜீன்வால்ஜின் மேற்கொண்ட சாகச முயற்சிகளும் இன்ஸ்பெக்டரின் மனத்தில் சலனங்களை ஏற்படுத்தின. முதன் முதலாக டியோலன் நகரச் சிறைச் சாலையில் அந்தக் குற்றவாளியைச் சந்திக்க நேர்ந்ததிலிருந்து இந்த நிமிடம் வரையில் ஜீன்வால்ஜினின் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டமும் ஜாவருக்குத் தெளிவாகவே தெரியும்.

எந்த ஒரு விஷயத்தையும் சட்டென்று மறக்காத ஒரு நபர் ஜாவர்.

பசியால் கதறிக் கொண்டிருந்த குழந்தைகளுக்காகத்தான் அவர் முதன் முதலாக ஒரு ரொட்டித் துண்டை திருடினார்.

அதற்காகத்தான் சட்டம் அவருக்குச் சங்கிலி பூட்டியது. அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற முயன்ற அவரை அதே சட்டம், முத்திரையிட்டு நிரந்தரக் குற்றவாளியாக்கிவிட்டது. முரடனாகவும், கடினமான இதயம் கொணட்வனாகவும் அவரை மாற்றியது சட்டமும் நீதியும் நியாய வாதங்களும்தான்!

சமூகத்தில் ஒரு குற்றவாளியைத் திருத்தி நல்லவனாக்குவதற்குப் பதில், நீதிபீடமும் சிறைச்சாலைச் சட்டங்களும் ஒரு நல்ல மனிதனை கருணையே சிறிதுமற்ற ஒரு குற்றவாளியாக மாற்றத்தான் உதவியிருக்கிறது!

அவருக்குள் அன்பினுடையதும், மனிதத்துவத்தினுடையதுமான விதைகளை ஊன்றி அவரை ஒரு புது மனிதனாக வார்த்தெடுக்க மனிதனை நேசிப்பவரும், தியாகியும், நெறி தவறாத நேர்மையாளருமான பாதிரியரால் கண்மூடித் திறப்பதற்குள் முடிந்திருக்கிறது!

அதன் பிறகு ஜீன்வால்ஜின், மிஸ்டர் மடலின் என்ற பெயரில் தொழிலதிபராகவும், நகர மேயராகவும் மாறி மேற்கொண்ட செயல்களும், சாகசங்களும் இன்ஸ்பெக்டரின் மனத்தில் வெண்திரையில் ஓடும் தொடர்படம் மாதிரி வரிசையாக உயர்ந்து வந்தன. இதோ இந்த நொடியில் இந்த வீட்டுக்கு வந்து சேருவது வரையிலான எல்லாச் சம்பவங்களையும் ஜாவர் நினைத்துப் பார்த்தார்.

ஜீன்வால்ஜினை ஒரு நீசனாகவே, வஞ்சகனாகவோ, குற்றவாளியாகவோ நினைத்துப் பார்க்க அதன் பிறகு ஜாவரால் முடியவில்லை! அந்த இன்ஸ்பெக்டரின் மனச்சாட்சி அதற்கெல்லாம் இடம் தரவில்லை. தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் ஒரு போலீஸ் அதிகாரியாகப் பணிபுரிந்து மனித சமூகத்தின் நன்மைக்காகவும், பாதுகாப்புக்காகவும் செய்துள்ள செயல்களை ஒப்பிட்டால், உண்மையில் ஜீன்வால்ஜின் செய்ததில் அது ஆயிரத்தில் ஒரு பங்குகூட இல்லை!

இந்த நிலைமையில் மனிதர்களில் நல்லவரான அந்த மனிதரை வெறும் ஒரு பழைய குற்றவாளி என்ற பெயரில் மீண்டும் சிறையில் அடைப்பது என்பது நியாயமற்ற செயலாகவும் தோன்றியது.

ஜாவரின் மனத்துள் பூகம்பமும், புயற்காற்றும், எரிமலையும் ஒரே சமயத்தில் தோன்றின. உண்மையிலேயே அது ஒரு மனப் போராட்டமாகத்தான் இருந்தது.

கடமை தவறாத ஒரு போலீஸ் அதிகாரி என்ற முறையில், அந்தப் பழைய குற்றவாளியைச் சுதந்திரமான மனிதராக விட்டு வைக்க முடியாது! சட்டமும் கடமையும் அதை அனுமதிக்காது. அதே நேரம் ஜீன்வால்ஜின் செய்திருக்கிற நல்ல செயல்களும், சுயநலமற்ற சேவைகளும், மறுபடியும் அவரைச் சிறையிட வேண்டும் என்கிற எண்ணத்தை உடைத்து நொறுக்கி

தன்னால் அதைச் செய்யமுடியாது என்கிற நிலையை உண்டாக்கியிருக்கிறது.

என்ன செய்யலாம்?

ஒருபுறம் சைத்தான்; மறுபுறம் கடல், இந்த இரண்டுக்கும் இடையில் அகப்பட்டுக் கொண்ட நிலையில்தான் அப்போது ஜாவர் இருந்தார். ஒரு வகையில் பார்த்தால், தன்னுடைய உயிரே ஜீன்வால்ஜினுக்குக் கடன்பட்டிருக்கிறது. மற்றொரு வகையில் ஒரு இன்ஸ்பெக்டர் என்ற முறையில் தன்னால் அவரைக் கைது செய்யாமலும் இருக்க முடியாது....

கைகளைப் பின்புறம் கட்டியபடி சிந்தனை வயப்பட்டவராக ஜாவர், கூழாங்கற்கள் பதித்த குறுகிய பாதையில் உலாவிக் கொண்டிருந்தார்.

ஜீன்வால்ஜின் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வருவதற்குள் காரோட்டிக்கு உரிய கட்டணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு அந்தக் குறுகிய பாதையில் தனிமையில் நடக்க அவரை உந்தித்தள்ளியது மேற்குறிப்பிட்ட சிந்தனைகள்தான்!

எவ்வளவு நேரம் நடந்து கொண்டிருந்தார் என்பது அவருக்கே தெரியாது, அதற்குள் அவர் கோட்டையின் மறுபுறம் இருந்த கடலை நோக்கிச் செல்லும் பெரிய பாலத்தை நெருங்கிவிட்டிருந்தார்.

ஜாவர் இயந்திரத்தைப் போல் அந்த கான்கிரீட் பாலத்தில் நடந்துகொண்டிருந்தார்.

மனமெனும் எரிமலையிலிருந்து உணர்வுகள் எனும் எரிமலைக் குழம்பு தீவிரமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. அப்போது ஜாவரால் எந்த ஒரு தீர்மானத்துக்கும் வர முடியவில்லை. மூச்சுத் திணறுவது போல் தோன்றியது அவருக்கு.

ஒரு வகையில் தப்பவிட முடியாத பழைய குற்றவாளி; மறுபுறம் உயிர்காத்த ஒரு மனிதன்! நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.

என்ன ஒரு துர்ப்பாக்கியமான நிலை?

ஜாவரின் மனம் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது!

அதற்குள் ஜாவர் பாலத்தின் மையத்தை அடைந்து விட்டிருந்தார்.

கீழே கடல்... ஆழமான நீர்ப்பரப்பு! கரையின் மீது அலை ஓய்வின்றி மோதிச் சத்தம் எழுப்பிக்கொண்டிருந்தது. அதன் இரைச்சல் காதைப் பிளந்தது. பாலத்தின் கைப்பிடிச் சுவரைப் பிடித்தபடி நெடுநேரம் நின்றவர் இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்.

ஜாவரின் தீர்மானங்கள் எப்போதும் உறுதியானவை; மறுபரிசீலனைக்கு உட்படாதவை!

அவர் முதலில் தனது தொப்பியையும், மேற்சட்டையையும் கழற்றிக் கடலை நோக்கி வீசி எறிந்தார். மறுவிநாடி கைப்பிடிச் சுவரின் மீது ஏறி நின்று கடலுக்குள் குதித்தார்!

மாரியஸ் நாள் கணக்கில் சுயநினைவற்றுப் படுத்திருந்தான். அந்த நிலையிலும் எதையெல்லாமோ புலம்பிக் கொண்டிருந்தான். அதில் அவ்வப்போது கோசெட்டியின் பெயரும் கேட்டது. எவ்வளவோ நாள்களின் இடைவிடாத சிகிச்சைக்குப் பிறகும், அந்த இளைஞனைப் பீடித்திருந்த காய்ச்சல் விட்டு விலகுவதாக இல்லை.

சில நாள்களுக்கு முன்பு வரையிலும் ‘எப்போது வேண்டுமானாலும் இறந்து போகலாம்’ என்று நினைத்த பெரியவர் கில்லனோர்மன்ட் திடுமென்று முழுமையாக உடல் நலம்பெற்றார். ஏதோ தெய்வீக சக்திதான் தனது பேரனை நேரம் பார்த்துத் தன்னிடம் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது என்று அந்த வயதானவர் நம்பினார். தனது நீண்ட காலப் பிரார்த்தனைக்குக் கடவுள் செவி சாய்த்து விட்டார் என்று பெரியவர் கண்ணில் தட்டுப்படுகிறவர்களிடம் எல்லாம் உற்சாகபூர்வமாகப் பேசத் தொடங்கினார்.

மருத்துவர் தினந்தோறும் காலை, மாலை இரு வேளைகளிலும் வந்து மாரியஸின் உடல் நிலையைப் பரிசோதித்து மருந்துகளை வழங்கினார். மாரியஸின் அத்தையும், முதியவர் கில்லனோர்மன்ட்டும், அந்த வீட்டிலிருந்து வேலைக்காரர்களும் மாரியஸின் படுக்கையைச் சூழ்ந்துகொண்டு மாரியஸை வெகு கவனமாகக் கவனித்துக் கொண்டனர்.

வேலைக்காரர்கள், மாரியஸின் வருகையைப் பற்றி, முதியவர் கில்லனோர்மண்ட்டிடம் தெரிவித்த செய்தி இதுதான்:

அன்று இரவு வீட்டுக்கு முன்னால் சாரட் வண்டியொன்று திடுமென்று வந்து நின்றது. அதிலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டரும், மற்றொரு பெரியவரும் இறங்கினார்கள். ஆஜானுபாகுவான அந்த மனிதர் ராணுவ

உடை அணிந்திருந்தார். அவரது உடை நனைந்து, சேரும் சகதியும் நாற்றமும் கொண்டதாக இருந்தது. மாரியஸின் உடையும் ஏறத்தாழ அதே போல்தான் இருந்தது.

இன்ஸ்பெக்டர் கீழேயே நின்றுகொண்டார். ஆஜானுபாகுவான மனிதர் மாரியஸைத் தோளில் போட்டுக்கொண்டு மேல் மாடியிலிருந்த படுக்கையறையில் படுக்கை வைத்தார். ‘உடனடியாக டாக்டரை வரவழைத்துச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யுங்கள்’ என்று சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார்.

அவர்களால் இவ்வளவுதான் சொல்ல முடிந்தது. மாரியஸை வீடுவரை கொண்டுவந்து சேர்த்தது யார் என்பது அவர்கள் யாருக்குமே தெரியவில்லை!

ஒரு நாள் மாரியஸின் மயக்கம் தெளிந்தது. காய்ச்சல் முழுவதுமாக விலகியிருந்தது. அவனுக்கு ஒவ்வொரு சம்பவமும் நினைவில் தெளிவடையத் தொடங்கியது. தான், மன்னனின் வீரர்களுடன் போராடிக் கொண்டிருந்தபோது, குண்டடிபட்டு விழுந்ததும், யாரோ ஒருவர் தன்னைத் தாங்கிப் பிடித்து, இருட்டுப் பாதையின் ஊடாக நடந்து போனதும் தெளிவில்லாமல் ஞாபகத்தில் வந்தன. ஆனால், அதன் பிறகு என்ன நடந்தது என்பது எவ்வளவு முயன்றும் அவனது நினைவுக்குத் தட்டுப்படவே இல்லை!

தீவிரமான போராட்டத்துக்கு நடுவில் தனது அன்புக்கு உகந்த கோசெட்டியின் தந்தையான ஃப்ளாச்சுலாண்ட்டின் உருவம் அந்தப் பகுதியில் அடிக்கடி தனது கண்ணில்பட்டதாகவும், இருப்பினும் அது அவர்தான் என்று உறுதியாகச் சொல்ல முடியாமலும் இருந்தது. ஆனால், இந்த வீட்டுக்கு வந்து சேர்ந்த பிறகு அவர் திரும்பவந்து தன்னைப் பற்றி விசாரிக்கவோ, குறைந்த பட்சம் பார்த்துவிட்டுக் கூடப் போகவில்லை. எனவே, தன் கண்ணுக்குத் தட்டுபட்டது வெறும் பிரமையாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைத்தான் மாரியஸ்.

மாரியஸின் நினைவு திரும்பியபிறகு ஒருநாள் பெரியவர் கில்லனோர்மன்ட், அவனது கட்டிலின் அருகில் அமர்ந்து பேசும் போது இப்படிக் குறிப்பிட்டார்: “கடவுள் நம்மைக் காப்பாற்றி விட்டார். இப்போது உன் உடல் நிலை நன்றாகத் தேறிவிட்டது! என்னுடைய பிரார்த்தனையைக் கடவுள் காது கொடுத்துக் கேட்டுவிட்டார். இனிமேல் எங்களை வேதனையில் ஆழ்த்திவிட்டு நீ எங்குமே போகக் கூடாது!’

தன்னுடைய தாத்தா பேசுவதையே கவனித்துக் கொண்டிருந்த மாரியஸ், உறுதியான குரலில் கூறினான்: ‘‘தாத்தா உங்களிடம் நான் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும்’’

‘‘நீ என்னிடம் எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசலாமே, அதற்கு என்ன தடை?’’ – பெரியவர் அன்பான குரலில் இளைஞனுக்கு உற்சாகம் கொடுத்தார்.

‘‘வேறு ஒன்றுமில்லை தாத்தா.... என்னுடைய கல்யாணம் தொடர்பான விஷயம்தான். இனிமேலாவது அதற்கு அனுமதி அளிப்பீர்களா தாத்தா?’’ எதிர்பார்ப்பு நிறைந்தவனாகக் கேட்டான்.

‘‘நீ எதைப் பற்றிக் குறிப்பிடுகிறாய் என்பது எனக்குப் புரிந்துவிட்டது. உன் விருப்பப்படியே அந்த பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள நான் முழுமனத்துடன் சம்மதிக்கிறேன். நீ யாரைத் திருமணம் செய்ய விரும்புகிறாய் என்பது எனக்குத் தெரியும். ரூடிலாஹோமில் ஏழாம் நம்பர் வீட்டிலுள்ள கோசெட்டிதானே அந்தப் பெண்? நீ சுயநினைவற்றுப் படுத்திருந்தபோது அவள்தான் உன்னருகிலேயே இருந்து கவனித்துக் கொண்டாள். இன்னும் சொல்லப்போனால் உனக்கு மருந்து கொடுத்தது, உன் நெற்றியில் ஈரத்துணியைப் போட்டு, உன்னுடைய படுக்கையை மாற்றியது என்று ஒவ்வொன்றையும் அவள்தான் செய்தாள். எனக்கு அவளை மிகவும் பிடித்துவிட்டது. என்னுடைய முழுச் சம்மதத்துடனேயே நீ அவளைத் திருமணம் செய்து கொள்ளலாம். இப்போது மகிழ்ச்சிதானே உனக்கு?’’– நீர் நிறைந்த கண்களுடன் பெரியவர் பேசினார்.

மாரியஸால் தன்னுடைய காதுகளையே நம்ப முடியவில்லை. கோசெட்டி இந்த வீட்டுக்குள், அதுவும் தனக்கு அருகிலேயே இருந்து தன்னைக் கவனித்துக் கொண்டாளா? ஆனால், தான் உடல் நலம் தேறிய பிறகு இதுவரை அவள் தன்னை வந்து சந்திக்கவில்லையே என்கிற வியப்பும், திகைப்பும் அவனைப் பீடிக்கவே செய்தன.

‘‘தாத்தா, நான் அவரை ஒரு தடவை பார்க்கவேண்டும் போலிருக்கிறது. இதுவரையில் இங்கு இருந்து கவனித்துக் கொண்டவள், இப்போது மட்டும் ஏன் வராமல் இருக்கிறாள்?’’ ஆவலும், உத்வேகமும் நிரம்பியவனாகக் கேட்டான்.

‘‘அவள் எப்படி வர முடியும், மாரியஸ்? நீ சுயநினைவற்றுப் படுத்திருந்தபோது அவள் வந்தாள். இப்போதும் அதே மாதிரி அவளால்

வரமுடியுமா என்ன? சரி, நான் அவளை வரவழைக்கிறேன். நாளைக்கே வரச் சொல்கிறேன்! இப்போது உனக்கு மகிழ்ச்சிதானே?''– சிரித்தபடியே தாத்தா, பேரனிடம் கேட்டார்.

மாரியஸின் முகத்தில் மகிழ்ச்சி, வெட்கம் ஆகியவை பூக்களாக மலர்ந்தன!

மறுநாள் மிஸ்டர் ஃப்ளாச்சுலாண்ட்டும், கோசெட்டியும், பெரியவர் கில்லனோர்மன்ட்டின் அழைப்பை ஏற்று அங்கு வந்து சேர்ந்தனர்.

கோசெட்டி மகிழ்ச்சியும், உற்சாகமும் நிரம்பியவளாக இருந்தாள். மாரியஸின் அறைக்குள் அவள் நுழைந்தவுடன் அவனது முகம் வெட்கத்தால் சிவந்தது. அன்பு நிறைந்த மனத்துடன் அவள் தனது காதலனை ஓரக்கண்ணால் பார்த்தாள். ஃப்ளாச்சுலாண்ட் விலை உயர்ந்த ஸுட் மற்றும் தொப்பி அணிந்திருந்தார். ராணுவ உடையில் மாரியஸைச் சுமந்து இந்த இடத்துக்கு கொண்டுவந்தவர் அவர்தான் என்பது யாருக்கும் தெரியவில்லை. இருப்பினும், அவரை இதற்கு முன் எங்கோ பார்த்திருப்பதாக அங்கிருந்த வேலையாள்களுக்குத் தோன்றியது.

காதலர்கள் இருவரும் பரஸ்பரம் வணக்கம் செய்து பேசிக் கொள்ளத் தொடங்கியதும், வயதான பெரியவர்கள் இருவரும் அங்கிருந்து நகர்ந்து மேற்கொண்டு செய்ய வேண்டியதைப் பற்றிப் பேசத் தொடங்கினர்.

''என்னுடைய பேரனுக்கு உங்கள் மகள் கோசெட்டியைத் திருமணம் செய்து வைப்பதில் உங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது என்று நம்புகிறேன்!'' கில்லனோர்மன்ட் கேட்டார்.

''அதுதான் என்னுடைய விருப்பமும்! அவர்கள் ஏற்கெனவே அறிமுகமாகி ஒருவரை ஒருவர் நேசிப்பவர்கள் அல்லவா? அந்த இருவரின் ஆசையையும் நிறைவேற்ற வேண்டியதல்லவா நமது கடமை. எனக்கு அதில் எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது!'' – ப்ளாச்சுலாண்ட்டும், பெரியவரின் கரங்கள் இரண்டையும் பற்றிக் கொண்டவராகப் பதிலளித்தார்.

''சரிதான், அவர்கள் இருவரும் பொருத்தமான ஜோடியாகவே தெரிகின்றனர். இது கடவுளே இணைத்து வைத்தது போல் தோன்றுகிறது.''

கில்லனோர்மன்ட், தனது குடும்பத்தின் சொத்து, மற்றும் அப்போதைய நிலைமை ஆகியவற்றைப் பற்றி விவரமாக ஃப்ளாச்சுலாண்டிடம் கூறினார்: ''நான், எக்கச்சக்கமாகச் சம்பாதித்தேன். ஆனால், தொண்ணூறு வருடங்கள் வாழ்ந்த நான், அதில் பெரும்பகுதியைச் செலவழித்துவிட்டேன்!

அதிகமாகச் செலவழிந்தது என்னுடைய உடல் நலத்துக்காகவும், வீட்டின் பொதுச் செலவுகளுக்காகவும்தான். அதனால், எனது மகளின் மகனுக்குப் பெரிய அளவில் பரிசளிக்க என்னிடம் எதுவுமில்லை. ஆனால், இப்போது என்னிடம் இருப்பதெல்லாம் என் பேரனுக்கு உரியவைதான்!''

“இப்போது எதற்காக இந்தக் கணக்கையெல்லாம் சொல்கிறீர்கள்? என்னுடைய மகளுக்குச் சீதனமாகத் தருவதற்கு என்னிடம் கொஞ்சம் பணம் உள்ளது. அன்பு மகளும், மகளின் கணவனும் கௌரவமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ அந்தப் பணமே போதுமென்று நான் கருதுகிறேன்.'' தான் கொண்டு வந்திருந்த பெட்டி ஒன்றை மேஜை மீது வைத்துத் திறந்தபடியே ஃப்ளாச்சுலாண்ட்டும் பேசினார்.

சுற்றியிருந்த எல்லாரும் அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்பதை அறியும் ஆவலில் அதையே கவனித்துக் கொண்டிருந்தனர்.

கில்லனோர்மன்ட்டும், மாரியஸும், அவனது அத்தையும் வியப்பால் அசைவற்று அப்படியே சிலைபோல் நின்றுவிட்டனர். ஃப்ளாச்சுண்ட்டும் பெட்டிக்குள்ளிருந்து நோட்டுக்கட்டுகளை ஒவ்வொன்றாக வெளியே எடுத்தார்.

“இதில் ஆறு லட்சம் ஃபிராங்க்குகள் உள்ளன. இதுதான் எனது மகளுக்காக நான் தரவிருக்கும் சீதனம். இதுதான் எனது மொத்தச் சொத்தும்!''– ப்ளாச்சுலாண்ட்டும் எந்தவித உணர்ச்சியும் இல்லாதவராகப் பதிலளித்தார்.

வந்தவர்கள் விடைபெற்றுப் போனபிறகு கில்லனோர்மன்ட், தன் மகளிடம் கூறினார்: “உன்னுடைய மகன் பொறுப்பற்றவனாகப் புரட்சிக்கூட்டத்தில் சேர்ந்து அலைந்து திரிந்து காயம்பட்டு எப்படியெல்லாம் நடந்துகொண்டாலும் உண்மையில் அவன் அதிர்ஷ்டசாலிதான். அதில் சந்தேகம் இல்லை. அவனுக்கு எப்படிப்பட்ட பணக்காரப் பெண் மனைவியாக வாய்த்திருக்கிறாள் என்று பார்!''

மாரியஸுக்கோ, கோசெட்டிக்கோ இந்தப் பணவிஷயத்தில் எந்தவிதமான ஈடுபாடும் இருக்கவில்லை. தங்களது மனப்பூர்வமான காதல் கைகூடிய மகிழ்ச்சியில் அவர்கள் இந்த உலகையே மறந்துவிட்டிருந்தனர்!

ஜீன்வால்ஜின் மான்ட்ஃபெர்யூமல் காட்டுப் பகுதியில், மரத்தின் அடியில் மறைந்து வைத்திருந்த பணம்தான் அது. கோசெட்டி திருமணம் செய்து கொள்ளப் போவதால், மீதமிருந்த பணம் மொத்தத்தையும் அவளுக்கே பரிசாகத் தருவதென்று தீர்மானித்தார். மரத்தின் அடிப்புறத்திலிருந்த பெட்டியைத் திறந்து உள்ளே இருந்த தங்க நாணயங்கள், நோட்டுக் கற்றைகள், பாதிரியார் பரிசளித்த வெள்ளியாலானா மெழுகுவர்த்திப் பீடம் போன்றவற்றையும் ஜீன்வால்ஜின் ஒரு மூட்டையாகக் கட்டி கொண்டு வந்திருந்தார்.

இன்ஸ்பெக்டர் ஜாவர் எதிர்பாராமல் இறந்து போனதால், இனிமேல் அந்தப் பொருள்கள் தனது கைவசம் இருப்பதில் எந்தவிதமான தவறும் இல்லையென்று தோன்றியது ஜீன்வால்ஜினுக்கு.

திருமணத்துக்கான எல்லா ஏற்பாடுகளும் தயாரானது. கோசெட்டியை கில்லனோர்மன்ட்டுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. வெகுகாலமாக எடுக்காமலிருந்த குடும்பத்தின் பரம்பரைச் சொத்தான நகைகள் வெளியே எடுக்கப்பட்டு, கோசெட்டியிடம் வழங்கப்பட்டன. அவற்றை அணிந்து கொள்ளுமாறு அவள் கேட்டுக் கொள்ளப்பட்டாள். அவற்றையெல்லாம் அணிந்து கொண்டபோது, அவள் ஒரு தேவ கன்னிகையைப் போல் விளங்கினாள். அவள் பேரழகி மட்டுமல்ல, எவரையும் கவரும் தன்மையும் உள்ளவள் என்பது கில்லனோர்மன்ட்டுக்குப் புரிந்ததால், அவர், அவளை மனமாரப் பாராட்டிப் புகழ்ந்தார். அவரது மகிழ்ச்சிக்கும் மனநிறைவுக்கும் எல்லையே இல்லாதிருந்தது.

தனது பேரனுக்கு மனைவியாகப் போகும் கோசெட்டியின் அழகு, நல்ல இயல்புகளை எல்லாம் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார் அந்த முதியவர்.

மாரியஸின் உடல் நலம் முழுவதுமாகக் குணமடைந்து விட்டாலும், கடந்து காலச் சம்பவங்களை கோவையாக, முழுவதுமாக நினைத்துப் பார்க்கும் அளவு அவன் மனம் திடம் பெற்றிருக்கவில்லை. குறிப்பாகச் சொல்வதானால் புரட்சிக்கூட்டத்தில் இணைந்து, மன்னரின் வீரர்களை எதிர்த்துப் போரிட்டதற்குப் பிறகு என்ன நேர்ந்தது என்பது அவனுக்குத் தெளிவாக விளங்கவில்லை. அவை ஒன்றுக்கு ஒன்று தொடர்பு அற்ற தெளிவில்லாத கனவுகளாக இருந்தன.

மாரியஸ் அதைப் பற்றி மிஸ்டர் ஃப்ளாச்சுலாண்ட்டிடம் பேசினான். ஆனால் அவரோ, அந்தச் சம்பவங்களைப் பற்றியோ, நகரின் பாதாளச் சாக்கடைகள்

பற்றியோ தனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லி நழுவிவிட்டார். எனவே, மோதல் நடந்த இடத்தில் தான் சந்தித்தது மிஸ்டர் ஃப்ளாச்சுலாண்டாக இருக்க முடியாது என்றும், தனக்கு அவ்வாறு தோன்றுவதெல்லாம் வீணான மனப்பிரமைதான் என்றும் நினைத்தான்.

இருப்பினும், ஏறத்தாழ ஃப்ளாச்சுலாண்ட் போன்ற முகம் மற்றும் உடல் அமைப்புள்ள ஒரு மனிதர்கள் தன்னைச் சுமந்து கொண்டு சாக்கடை நீருக்குள் நடந்து வந்தவர் என்பதில் அவனுக்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்கவில்லை.

இவ்வளவுக்கும் நடுவில் பிப்ரவரி மாதம் 16-ம் தேதியும் வந்தது. அன்று இரவில்தான் கோசெட்டி-மாரியஸ் திருமணம் செய்துகொள்ள நாள் குறிக்கப்பட்டிருந்தது.

திருமண நாளன்று கோசெட்டி, ஜீன்வால்ஜினைப் பார்த்த போது அவர் மிகவும் மகிழ்ச்சி நிறைந்தவராகவும், ஆனந்தக் கண்ணீர் சிந்தியபடி மௌனத்தில் ஆழ்ந்து... பேச முடியாதவராகவும் தென்பட்டார். திருமணத்துக்கு முந்தைய நாள் மாலை வேளையில் அவரது கையில் ஏற்பட்ட ஒரு சிறுகாயம்தான் அவரை அப்படி மௌனமாக மாற்றிவிட்டிருக்கிறது என்று மற்றவர்கள் நினைத்தனர்.

ஆனால், திருமணச்சடங்குகள் முடிந்தபிறகு, அவர் தங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையில் அவர் இல்லாததைக் கவனித்த மற்றவர்கள் கவலைப்படத் தொடங்கினர். ஜீன்வால்ஜின் அந்த இடத்தில் இல்லாமல் போனதில் கோசெட்டிதான் மிகவும் அதிகமாக வருத்தப்பட்டாள்.

மிஸ்டர் ஃப்ளாச்சுலாண்ட் எங்கே போனார் என்று பெரியவர் கில்லனோர்மன்ட் விசாரித்தபடியே இருந்தார். அவரது விரலில் காயம்பட்டிருப்பதால் தன்னுடைய சொந்த வீட்டுக்குத் திரும்பிப் போய்விட்டதாக வேலைக்காரன் ஒருவன் தெரிவித்தபோது கேட்டவர்கள் நம்பமுடியாமல் வியப்பு அடைந்தனர்.

உண்மையில் அங்கு நடந்ததுதான் என்ன? மகள் போல் அதுவரை தன்னிடம் வளர்ந்து வந்தவள், என்றென்றைக்குமாகத் தன்னிடமிருந்து பிரிந்து போய்விட்டாளே என்கிற விஷயம்தான் அவரை மிகுந்த மனவருத்தத்துக்குள்ளாக்கியது. அந்த வருத்தமே அவரைச் சோர்வடைய வைத்தது. உடல்நலம் சரியில்லாததால் தன்னுடைய வீட்டுக்குத் திரும்புவதாக் வேலையாள் ஒருவரிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

அங்கிருந்து புறப்பட்ட ஜீன்வால்ஜின் நேராகத் தனது இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தார்.

வீட்டுக்குள் நுழைந்தவர் அவசர அவசரமாக மெழுதுவத்தி ஒன்றை ஏற்றி மேஜை மீது வைத்தார். பிறகு கட்டிலில் உட்கார்ந்து கொண்டு பழைய டிரங்க்பெட்டி ஒன்றிலிருந்து கோசெட்டி சிறு பெண்ணாக இருந்தபோது அணிந்திருந்த உடைகள் ஒவ்வொன்றையும் எடுத்துப் பார்த்தார். அவள் தெனார்டியர் தம்பதியிடம் வளர்ந்தபோதும், அங்கிருந்து வந்தபிறகும் அணிந்த உடைகள். அவற்றை உற்றுப் பார்த்தபடியே இருந்த அவரிடம் இருந்து நீண்ட பெருமூச்சுகள் எழுந்தன. அவரது கண்கள் நிறைந்தன. உணர்வுகளின் மோதல்களால் அந்த முகம் எப்படியெல்லாமோ காட்சியளித்தது.

அந்த உடைகளை மார்புடன் சேர்த்துப் பிடித்து முத்தமிட்டபடியே பொழுது விடிவது வரையில் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தார்!

36

மறுநாள் காலையில் தனது அறையில் உட்கார்ந்து கடிதங்களுக்குப் பதில் எழுதிக் கொண்டிருந்தபோது ஜீன்வால்ஜின் சட்டென்று அந்த அறைக்குள் வந்தார்.

“நீங்களா?... வாருங்கள்... வாருங்கள் உட்காருங்கள். நேற்று நீங்கள் பாதியிலேயே போய்விட்டது சரியல்ல. நாங்கள் எவ்வளவு வருத்தப்பட்டோம் தெரியுமா?”– மாரியஸ் தன் மனத்தில் இருந்ததை வெளிப்படையாகவே தெரிவித்தான்.

“மகனே... நான் ஓர் உண்மையைச் சொல்வதற்காகத்தான் வந்திருக்கிறேன். அதை மேற்கொண்டும் மறைத்து வைத்தால் என் மனச்சாட்சியே என்னைச் சாட்டையால் அடிக்கும். அந்த குற்றவுணர்விலேயே நான் இறந்துவிடுவேன்!”

மிகவும் அமைதியாகவும் கோபம் எதுவும் இல்லாமலேயே தான் ஒரு பழைய குற்றவாளி என்பதையும், அதனாலேயே போலீஸாரின் கண்களிலிருந்து மறைந்து வாழ்வதாகவும் உண்மையை ஒப்புக்கொண்டார். அதனால்தான் திருமணத்தின் போதும் தொடர்ந்து நடைபெற்ற விருந்திலும்,

விரும்பத்தகாத சம்பவங்கள் எதுவும் நடந்து விடக்கூடாது என்பதால் கலந்து கொள்ளவில்லை என்பதையும் விளக்கினார்.

மாரியஸால் அவர் சொல்வதை நம்ப முடியவில்லை. ஆனால், தான் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமானவை என்பதை ஆதாரத்துடன் விவரித்து, அவனை நம்ப வைத்தார்.

"சரி, இதையெல்லாம் என்னிடம் நீங்கள் எதற்காகச் சொல்லவேண்டும்?"

"ஒரு வேளை நாளைக்கோ, நாளை மறுநாளோ போலீஸ் வந்து என்னைக் கைது செய்து கொண்டுபோனால், அந்தச் செய்தி உங்களுக்கு அதிர்ச்சி அளிக்கலாம். அப்படி எதுவும் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் இப்போது இதையெல்லாம் சொல்கிறேன்."

அவர்களுக்கிடையே வெகு நேரம் மௌனம் நிலவியது. அந்த நீண்ட மௌனத்தை ஒரு கட்டத்தில் உடைத்துக் கொண்டு ஜீன்வால்ஜினே பேசத் தொடங்கினார்:

"நான் எப்போதாவது வந்து என்னுடைய குழந்தையைப் பார்த்துக் கொள்வதில் உங்களுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லையே? கோசெட்டி என்னுடைய சொந்த மகள் அல்ல என்றால்கூட, அவளிடம் எனக்குள்ள அன்புதான் இன்னும் என்னை உயிருடன் விட்டு வைத்திருக்கிறது!'

"நீங்கள் எப்போது வேண்டுமானாலும் இங்கு வரலாம். தினமும் கூட வரலாம். அதில் எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது."

மாரியஸ் இடறிய குரலில் பேசினான்.

"நீங்கள் மிகவும் நல்லவர் மாரியஸ்..."

ஜீன்வால்ஜின் அங்கிருந்து விடைபெற்றுப் புறப்பட்டார்.

அதன் பிறகு ஜீன்வால்ஜின் மாலை வேளைகளில் மாரியஸின் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார். அப்படி வரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் மாரியஸோ, அவனது அத்தையோ, தாத்தாவோ ஜீன்வால்ஜினுக்கு முன்னால் தங்களை வெளிக்காட்டாமல் ஒதுங்கிக் கொள்கிறார்கள் என்ற உண்மை ஜீன்வால்ஜினுக்குப் புரியவில்லை.

கோசெட்டி மட்டும் தினமும் அவரது வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பாள். அவர் அவளுடன் அமர்ந்து எதையெல்லாமோ பேசிக் கொண்டிருப்பார். அவளும் பதிலுக்கு எதையாவது சொல்வாள். இருவரும் மனம்விட்டுச் சிரிப்பார்கள். அந்தச் சந்தர்ப்பங்கள் இருவருக்குமே ஒருவித ஆறுதல் அளிப்பதாக இருவருமே உணர்ந்தனர். ஜீன்வால்ஜினின் காயம்பட்ட மனத்துக்கு அந்தச் சந்திப்புகள் ஓர் அருமருந்தாகவே பயன்பட்டது எனலாம். அவளது பேச்சும், நெருக்கமும் அவருள் எதையோ நிறைவு செய்தது.

வாழ்க்கையில் அன்பின் நீரூற்றை அவர் கண்டுபிடித்தது அவளிடமிருந்துதான். அவளுடன் செலவழித்த குறைந்த கால அளவுகளில் மட்டுமே அவர் நிம்மதியையும், ஆறுதலையும் ஒருவிதப் பாதுகாப்பையும் உணர்ந்தார். அங்கிருந்து புறப்படும் போது மீண்டும் தோல்வி மற்றும் நிம்மதியின்மை என்ற பெரும்சுமைகளுடன்தான் வெளியேறுவார்.

ஒரு நாள் மாலை நேரம் வந்தவர் கோசெட்டியுடன் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியாமல் இரவு வளர்ந்து விட்டிருந்தது. இருவரும் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்ததால் நேரம் போனதை உணரவில்லை. நடு நடுவே மாரியஸ் பல முறை வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போனதைக்கூட அவர்கள் உணரவில்லை.

மறுநாள் மாலை நேரத்தில் ஜீன்வால்ஜின் கோசெட்டியைப் பார்க்க வந்தபோது, வழக்கமாக அந்த அறையில் போட்டு வைத்திருந்த நாற்காலி அங்கு இல்லை. வெகு நேரம் அவர் காத்திருந்த பிறகுதான் கோசெட்டி வந்தாள். அவளது முகத்தில் துயரமும், ஏமாற்றமும் படிந்திருப்பதை அவர் கவனிக்கத் தவறவில்லை.

தன்னுடைய வருகையை மாரியஸும், அவனது வீட்டாரும் விரும்பவில்லை என்பதை ஜீன்வால்ஜின் உணர்ந்தார். அதை எதிர்த்தோ, அதற்கு மாறாகவோ நடந்துகொள்ள முடியாத கோசெட்டியின் நிலையும் அவருக்கு விளங்கவே செய்தது. அன்று மிகவும் குறைவான வார்த்தைகளில் குசலம் விசாரித்துவிட்டு விரைவிலேயே புறப்பட்டார்.

அதன்பின் ஜீன்வால்ஜின் அந்த வீட்டுப் பக்கம் வரவே இல்லை.

தினமும் மாலை நேரமானதும் தன்னுடைய வீட்டிலிருந்து, கோசெட்டி வசிக்கும் வீட்டு வழியே சாலையில் நடந்து போவார். தெருவில் உள்ள மரங்களின் மறைவில் நின்றபடி அந்த வீட்டையே ஊன்றிக் கவனிப்பார்.

பால்கனிப் பகுதியிலோ, ஜன்னலுக்கு அருகிலோ எங்காவது கோசெட்டி தென்பட்டால், அதைப் பார்த்து அவரது மனம் திருப்தியுறும். இப்படித் தனது வளர்ப்பு மகளின் உருவத்தைத் தொலைவிலிருந்து பார்த்து மகிழ்ந்து, வெகுநேரம் அங்கேயே நின்றுவிட்டுப் பிறகுதான் கிளம்புவார்.

இந்த வழக்கம் வெகுநாள் தொடர்ந்தது. தான் மரக் கூட்டங்களுக்கு மத்தியில் நின்று கொண்டிருப்பதை கோசெட்டி கவனித்து விடக்கூடாது என்பதில் அவர் மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்தார்.

ஜீன்வால்ஜின் எதனால் திடீரென்று வராமல் போனார் என்பது புரியாமல் கோசெட்டி குழப்பம் அடைந்தாள். ஒரு வேளை அவருக்கு உடல் நலமில்லையோ என்ற சந்தேகத்தில் வேலைக்காரன் ஒருவனை அனுப்பிப் பார்த்துவிட்டு வரச் சொன்னாள். உடல் நலம் எதுவும் பாதிக்கவில்லை என்றும், அவசரமான வேலைகள் நிறைய இருப்பதால்தான் பார்க்க வரமுடியவில்லையென்றும் அவர் சொல்லியனுப்பிய செய்தியுடன் வேலைக்காரன் திரும்பி வந்தான்.

அத்துடன் அவள் மனநிறைவு கொள்ள நேர்ந்தது. மாரியஸோ, கில்லனோர்மன்ட்டோ, அவரது மகளோ இதைப்பற்றியெல்லாம் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

அதன்பிறகு ஜீன்வால்ஜின் மாலை நேரத்தில் வீட்டிலிருந்து வெளியேறி நடப்பதையும் நிறுத்திவிட்டார். அவரை நாள் தவறாமல் மாலை நேரத்தில் பார்த்தவர்கள், தொடர்ந்து சில நாள்களாகக் காணாததால் வியப்படைந்தனர். உண்மையில் நடக்கக்கூட முடியாமல், மிகவும் தளர்ந்து போய் தன்னுடைய இருண்ட அறைக்குள் அவர் சுருண்டு படுத்திருந்தார்.

ஜீன்வால்ஜினின் பக்கத்து வீட்டில் வசிக்கும் வயதான பெண்மணி ஒருவர், ஜீன்வால்ஜின் வீட்டுக்கு வந்து பார்த்தார். நடக்கக்கூட முடியாத நிலையில் அவர் நோய்வாய்ப்பட்டுப் படுத்திருப்பதை அவர் தெரிந்து கொண்டார்.

உடனே அவள் ஒரு டாக்டரை வரவழைத்தாள். ஜீன்வால்ஜினை நன்றாகச் சோதித்துப் பார்த்த டாக்டர் கூறினார்: “உடம்பில் இவருக்கு குறிப்பிட்டுச் சொல்லும் படியாக எந்த நோயும் கிடையாது!”

“பிறகு என்ன விஷயம் டாக்டர்? அவர் வீட்டைவிட்டே வெளியேறி நான்கு நாள்களுக்கு மேலாகிறதே?”– வயதானவள் டாக்டரிடம் கேட்டார்.

“அவரது மனத்தில் ஏதோ ஒரு வேதனை படிந்துள்ளது. அது ஒன்றுதான் அவரது நோய்!” டாக்டர் கூறினார். சற்று நேர இடைவெளிக்குப் பிறகு அவரே தொடர்ந்தார்: “ஒருவேளை இவரது அன்புக்குரிய யாரையோ சந்திக்க விரும்பும் ஆர்வமும், வேட்கையும்கூட ஒரு காரணமாக இருக்கலாம். அது முடியவில்லை என்பதால்கூட விநாடிக்கு விநாடி அவரது சோர்வு அதிகமாகிக் கொண்டிருக்கலாம்!”

“நீங்கள் அவ்வப்போது வந்து இவரைக் கவனித்துக் கொள்ள வேண்டும் டாக்டர்.”– வயதானவள் டாக்டரிடம் கேட்டுக்கொண்டார்.

“அதில் எந்தவிதமான பலனும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இவரது நோய் குணமாக வேண்டுமானால் இங்கு வரவேண்டியவர் வேறு யாரோ ஒருவர்.”

டாக்டர் விடைபெற்றுப் புறப்பட்டார்.

ஜீன்வால்ஜின் இரவு முழுவதும் உறங்காமல் கிடந்து புலம்பினார்.

“கடவுளே… நான் இனிமேல் என்னுடைய கோசெட்டியைப் பார்ப்பேனா என்று தெரியவில்லை. மரணத்தைப் பார்த்து நான் பயப்படவில்லை. ஆனால், அவளை ஒரு தடவை பார்க்காமல் இறந்துபோய் விடுவேனோ என்றுதான் பயமாக உள்ளது.” அவர் தனக்குத்தானே பேசிக்கொண்டார்.

அதே சமயம் அவர் படுத்திருந்த அறையின் கதவை யாரோ பலமாகத் தட்டும் சத்தம் கேட்டது.

ஜீன்வால்ஜினின் பக்கத்து வீட்டில் வசிக்கும் வயதான பெண்மணி ஒருவர், ஜீன்வால்ஜின் வீட்டுக்கு வந்து பார்த்தார். நடக்கக்கூட முடியாத நிலையில் அவர் நோய்வாய்ப்பட்டுப் படுத்திருப்பதை அவர் தெரிந்து கொண்டார்.

உடனே அவள் ஒரு டாக்டரை வரவழைத்தாள். ஜீன்வால்ஜினை நன்றாகச் சோதித்துப் பார்த்த டாக்டர் கூறினார்: “உடம்பில் இவருக்கு குறிப்பிட்டுச் சொல்லும் படியாக எந்த நோயும் கிடையாது!”

“பிறகு என்ன விஷயம் டாக்டர்? அவர் வீட்டைவிட்டே வெளியேறி நான்கு நாள்களுக்கு மேலாகிறதே?”– வயதானவள் டாக்டரிடம் கேட்டார்.

“அவரது மனத்தில் ஏதோ ஒரு வேதனை படிந்துள்ளது. அது ஒன்றுதான் அவரது நோய்!” டாக்டர் கூறினார். சற்று நேர இடைவெளிக்குப் பிறகு அவரே தொடர்ந்தார். “ஒருவேளை இவரது அன்புக்குரிய யாரையோ சந்திக்க

விரும்பும் ஆர்வமும், வேட்கையும்கூட ஒரு காரணமாக இருக்கலாம். அது முடியவில்லை என்பதால்கூட விநாடிக்கு விநாடி அவரது சோர்வு அதிகமாகிக் கொண்டிருக்கலாம்!''

''நீங்கள் அவ்வப்போது வந்து இவரைக் கவனித்துக் கொள்ள வேண்டும் டாக்டர்.''– வயதானவள் டாக்டரிடம் கேட்டுக் கொண்டார்.

''அதில் எந்தவிதமான பலனும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இவரது நோய் குணமாக வேண்டுமானால் இங்கு வரவேண்டியவா வேறு யாரோ ஒருவர்.''

டாக்டர் விடைபெற்றுப் புறப்பட்டார்.

ஜீன்வால்ஜின் இரவு முழுவதும் உறங்காமல் கிடந்து புலம்பினார்.

''கடவுளே.... நான் இனிமேல் என்னுடைய கோசெட்டியைப் பார்ப்பேனா என்று தெரியவில்லை. மரணத்தைப் பார்த்து நான் பயப்படவில்லை. ஆனால், அவளை ஒரு தடவை பார்க்காமல் இறந்துபோய் விடுவேனோ என்றுதான் பயமாக உள்ளது.'' அவர் தனக்குத்தானே பேசிக்கொண்டார்.

அதே சமயம் அவர் படுத்திருந்த அறையின் கதவை யாரோ பலமாகத் தட்டும் சத்தம் கேட்டது.

ஜீன்வால்ஜினை டாக்டர் வந்து சோதித்துவிட்டுப்போன அதே இரவில் சாப்பாட்டை முடித்துக்கொண்டு மாரியஸ் வீட்டின் முற்றப் பகுதிக்கு வந்தபோது, அவனைப் பார்ப்பதற்காக யாரோ வந்திருப்பதாக வேலையாள் வந்து கூறினாள்.

அவரை உள்ளே அனுப்புமாறு மாரியஸ் வேலைக்காரனிடம் பணித்தான்.

வந்தவன் ஒரு பெருங்குடிகாரன் என்பதும், தன்னுடைய சுயநலத்துக்காக எதையும் செய்யக் கூடியவன் என்பதையும் அந்த முகம் தெரியப்படுத்தியது. வந்தவன் இரக்கத்துக்குரிய குரலில் சொன்னான்: ''சார், நான் அவசரமாக ஒரு பயணம் புறப்பட வேண்டி உள்ளது. எனவே கொஞ்சம் பணம் தந்து உதவுங்கள்!''

''அதற்கு நான் ஏன் உதவவேண்டும்?''

''நீங்கள்தான் எனக்குப் பணம் தரவேண்டும்?''

''நானா, எதற்காக?''

‘‘உங்களது குடும்பம் தொடர்பான ஒரு ரகசியம் எனக்குத் தெரியும்.’’

‘‘மிரட்டிப் பணம் வாங்க வந்திருக்கிறாயா?’’

வந்தவன் எதுவும் பதிலளிக்கவில்லை.

‘‘நீ சொல்லப் போகிற ரகசியம் என்னவென்று எனக்கு நன்றாகவே தெரியும்!’’– மாரியஸ் கோபத்துடன் கூறினான். ‘‘என்னுடைய மாமனார் ஏற்கெனவே தண்டனையனுபவித்த ஒரு பழைய குற்றவாளி என்றுதானே சொல்ல வருகிறாய்?

வந்தவன் இமைக்கவும் மறந்தவனாக மாரியஸையே பார்த்துக் கொண்டிருந்தான்.

‘‘நீர் குறிப்பிடும் குற்றவாளியின் பெயர் ஜீன்வால்ஜின். அவர் பாதிரியாரின் வீட்டிலிருந்து வெள்ளிப் பாத்திரங்களைத் திருடியிருக்கிறார். மேயர் மடலினின் சொத்துக்களை அபகரித்திருக்கிறார். இன்ஸ்பெக்டர் ஜாவரைக் கொலை செய்திருக்கிறார். இதெல்லாம்தானே உன்னிடம் உள்ள ரகசியங்கள்!’’

‘‘நிறுத்துங்கள்… நிறுத்துங்கள்…’’ வந்தவன் கோபத்துடன் இடைமறித்தான்.’’ நான் சொல்ல வந்தது இதையெல்லாமில்லை. ஜீன்வால்ஜின் எதற்காக மேயர் மடலினின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும்? ஜீன்வால்ஜினிதானே மிஸ்டர் மடலின்? ஜாவரை யாரும் கொலை செய்யவில்லை. ஜாவரை, அவர் காப்பாற்றியதுதான் உண்மை. இதோ இதெல்லாம் அன்றைய செய்தித்தாள்கள். இதில் என்ன வெளியாகியிருக்கிறது என்று படித்துப் பாருங்கள்!’’

வந்தவன் தன்னுடைய பாக்கெட்டியிலிருந்து பழைய தினசரிப் பத்திரிக்கை ஒன்றிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட துண்டுகளை மாரியஸிடம் கொடுத்தான்.

முதல் துண்டு 1823–ம் வருடம் ஜூலை மாதம் 12–ம் தேதி பத்திரிக்கை. அன்று மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட நீதிமன்றச் சம்பவமும், அவரே நீதிமன்றத்தில் அதை ஒப்புக்கொண்டதையும் வெளியிட்டிருந்தது.

இரண்டாவது தினசரித் துண்டின் மீது 1832, ஜூன் 15– என்று தேதி இருந்தது. இன்ஸ்பெக்டர் ஜாவர், கடலில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டிருந்தார் என்கிற உண்மையை அது வெளியிட்டிருந்தது.

மாரியஸ் உற்சாகத்தால் துள்ளிக் குதித்தான்.

“ஆகா அவருக்கு நான் எப்படிப்பட்ட துரோகம் இழைத்து விட்டேன். அந்த அப்பாவி மனிதர் திருடனோ, கொலைகாரனோ அல்ல மனிதர்களை நேசித்த ஒரு சாகசக்காரர் அவர்!”

“நீங்கள் அப்படியெல்லாம் ஒரேயடியாக அவரைப் புகழ்ந்து விடவேண்டாம். நீங்கள் குறிப்பிட்ட இரண்டும் உண்மையாகக் கூட இருக்கலாம். உண்மையிலேயே அவர் ஒரு திருடனும், கொலைகாரனும்தான். நானே நேரடியாக எனது கண்ணால் கண்ட காட்சியைச் சொல்லுகிறேன்...”

வந்திருந்த மனிதர் மற்றொரு மர்ம முடிச்சை அவிழ்த்தான்.

“ஒரு நாள் நான் கடற்கரையில் பாதாளச் சாக்கடையின் வெளிப்புறக் கதவருகே நின்று கொண்டிருந்தேன். அப்போது ஒரு மனிதன் மற்றொரு மனிதனைத் தோளில் சுமந்தபடி சாக்கடையின் கடைசியில் உள்ள இரும்புக் கதவை உடைத்துத் திறக்க முயன்றான். யாரையோ கொலை செய்துவிட்டு, அந்த மனிதரிடமிருந்து பணத்தை அபகரித்துவிட்டு அவன் தப்பிக்க முயல்கிறான் என்று எனக்குத் தெரிந்தது. எனவே அவனிடம் திருடப்பட்ட பணம் நிறைய இருக்கலாம் என்றும், அந்த மனிதன் வெளியேற உதவி செய்தால் கொஞ்சம் பணத்தைக் கறந்துவிடலாம் என்றும் திட்டமிட்டேன்.

அந்தக் கதவைகத் திறக்கக்கூடிய போலிச் சாவி ஒன்று என்னிடம் இருந்தது. நான் கதவைத் திறந்து விடுவதற்குத் தயாராக இருக்கிறேன்; பதிலாக உனக்குக் கிடைத்திருப்பதில் பாதிப் பணத்தைத் தரவேண்டும் என்றும் நான் கூறினேன். அவனும் அதற்கு ஒப்புக் கொண்டான். அந்தச்சமயத்தில் அவனது தோளில் கிடந்திருந்த ஆள் இறந்து போயிருந்தான்.அவனது உடம்பிலிருந்து வடிந்த ரத்தம் அவனைச் சுமந்து வந்த ஜீன்வால்ஜினின் முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் படிந்திருந்தது.

அந்தச் சம்பவத்தை நீங்கள் மறுக்கவே முடியாது. அந்தப் பணத்துக்காக அவன், அந்த மனிதனைக் கொலை செய்திருக்கிறான். ஏனெனில் அவனிடமிருந்ததே அந்த கொஞ்சப் பணம்தான்!”

வந்தவன் சொல்லி முடித்ததும் உணர்ச்சியின் உச்ச கட்டத்தை அடைந்த மாரியஸ் உரத்த குரலில் மறுத்தான்: “நீ தான் திருடன், நீ இதுவரை சொன்னதெல்லாம் பொய். அந்த மனிதன் கொலைகாரன் இல்லை, துப்பாக்கிகுண்டு பாய்ந்தது மரணத்தருவாயிலிருந்த என்னைக்

காப்பாற்றுவதற்காகத்தான் அவர் அவ்வளவு சாகசங்களைப் புரிந்திருந்தார். அவரது தோளில் நீ பார்த்த இளைஞன்தான் இதோ உன் முன்பாக நின்று கொண்டிருக்கும் நான்! எப்படியிருந்தாலும் இந்த நல்ல சேதியை என்னிடம் இந்த நேரத்தில் சொன்னதற்காக நீ கேட்ட பணத்தைத் தருகிறேன்!''

மாரியஸ் பணம் உள்ள சிறிய பை ஒன்றை அவளிடம் எறிந்தான்.

வந்தவன் அதை எடுத்துக்கொண்டு மறைந்தான். அதே சமயம் மாரியஸ், கோசெட்டியை அழைத்தபடி வீட்டுக்குள் பாய்ந்தான்.

37

ஜீன்வால்ஜின் மிகுந்த கஷ்டப்பட்டு எழுந்து கதவைத் திறந்தார்.

அவரை ஆச்சரியப்பட வைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தவர்கள் மாரியஸும் கோசெட்டியும்தான்!

''கோசெட்டி...''

ஜீன்வால்ஜின் தன்னுடைய இரண்டு கைகளையும் அகல விரித்தபடி அன்பு நிறைந்த குரலில் அழைத்தார். மறுவினாடி அவள் அந்தப் பெரியவரின் கைகளுக்குள் சிறைப்பட்டிருந்தாள்.

''அப்பா... நான் வந்துவிட்டேன்!''– கண்ணீர் விட்டு அழுதபடியே திக்கித் திணறிப் பேசினாள் கோசெட்டி.

''சோசெட்டி என்னால் இதையெல்லாம் நம்பவே முடியவில்லை. நீ என்னை மன்னித்து விட்டாயா? மாரியஸ் நீங்களும் என்னை மன்னிப்பீர்கள் என்று நம்புகிறேன்!'' ஜீன்வால்ஜின், அந்த இளைஞனைப் பார்த்தபடி பேசினார்.

மாரியஸின் மௌனமும், அவனது முகத்தில் தோன்றிய உணர்வு மாற்றங்களும் எவ்வளவோ கதைகளைச் சொல்லின. எல்லா உண்மைகளையும் மாரியஸ் தெரிந்து கொண்டான் என்கிற உண்மை ஜீன்வால்ஜினுக்குப் புரிந்தது.

''நான் எப்படிப்பட்ட ஒரு பைத்தியக்காரன்? இனி ஒருபோதும் உங்களையெல்லாம் பார்க்கவே முடியாது என்று நினைத்திருந்தேன். என் அன்புக்குரிய கோசெட்டியைப் பார்க்க முடியாமல் இறக்க நேருமோ என்பதை நினைத்துதான் நான் வருந்தி அழுது கொண்டிருந்தேன்.''

“நீங்கள் என்ன வார்த்தை பேசுகிறீர்கள்? என்னுடைய உயிரைக் காப்பாற்றிய உங்களை நான் கொஞ்சமும் ஈவு இரக்கமின்றிப் புறக்கணித்திருக்கிறேன். என் உயிரைக் காப்பாற்றியது மட்டுமின்றி, நான் மிகவும் நேசித்த கோசெட்டியுடன் உங்களது மொத்தச் சொத்துக்களையும் எனக்குப் பரிசாகத் தந்த உங்களை நாள் ஒரு குற்றவாளியாகக் கருதி அவமானப்படுத்தினேன். என்னுடைய இந்தத் தவறுகளுக்கெல்லாம் நீங்கள்தான் என்னை மன்னிக்க வேண்டும். மன்னீப்பீர்களா?” மிகவும் திக்கித்திணறி வார்த்தைகள் தொண்டையை அடைக்க... மாரியஸ் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினான்.

ஜீன்வால்ஜின் அன்வு நிறைந்த சிரிப்பு ஒன்றை வெளியிட்டார்.; அந்த வறண்ட உதடுகளுக்கிடையில் மென்மையாக வெளிப்பட்டது அந்த புன்னகை!

“நாம் உடனடியாக இங்கிருந்து புறப்பட வேண்டும். நாளை நீங்கள் இந்த இடத்தில் இருக்க மாட்டீர்கள். மேற்கொண்டும் நீங்கள் தனியாக இங்கே வசிக்க நான் அனுமதிக்க முடியாது!” மாரியஸ் உறுதியான குரலில் கூறினான்.

ஜீன்வால்ஜினின் உதடுகளுக்கிடையில் குறும்பு நிறைந்த புன்னகை ஒன்று தவழ்ந்தது. அவர் உணர்வுகளைக் கடந்த ஒரு தவயோகியைப்போல் அமைதி நிறைந்த குரலில் பதிலளித்தார்.

“உண்மைதான் குழந்தைகளே! நான் நாளைக்கு இந்த இடத்தில் மட்டுமல்ல, வேறு எந்த இடத்திலும் இருக்க மாட்டேன்!”

“வேடிக்கைக்காகச் சொல்லுகிறீர்கள்?” கோசெட்டி அன்பு நிறைந்த ஏமாற்றத்துடன் கேட்டாள்.

“நாளைக்கெல்லாம் வேண்டியதில்லை. இப்போதே கொண்டு போக வேண்டியதுதான். நீங்களாக வராவிட்டால், வலுக்கட்டாயமாகத் தூக்கிக்கொண்டு போய்விடுவேன்.”– அவள் பெரியவரை நெருங்கி அவரைத் தூக்க முயன்றாள்.

பெரியவர் தள்ளாடித் தள்ளாடி நடந்து கட்டிலை நெருங்கி அதில் சாய்ந்தார். கோசெட்டி கட்டிலில் படுத்திருக்கும் அந்த உருவத்தையே கவனித்தாள். பிறகு ஜீன்வால்ஜினின் கைகளைப் பிடித்து வருடத் தொடங்கியவள் ஒரு கணம் திடுக்கிட்டாள். பதற்றத்துடன் அவரைப் பார்த்துக் கேட்டாள்:

“அப்பா… உங்கள் உடம்புக்கு என்ன? உங்கள் கைகள் ஏன் இப்படிப் பனிக்கட்டி மாதிரிச் சில்லிட்டிருக்கிறது?”

“ஓ…. அதுவா… அது உடல் நலக்குறைவினால் இல்லை. நான்… நான்…. நான் இறந்து கொண்டிருக்கிறேன்!”

கோசெட்டியும் மாரியஸும் அதிர்ந்தே போனார்கள். அவர்கள் வெளிறிய முகத்துடன் பயந்தவாறே அவரது முகத்தை ஊன்றிக் கவனித்தனர். அவர் சொல்வது பொய் அல்ல என்பது அப்போதுதான் அவர்களுக்குப் புரிந்தது.

அதே சமயம் வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

38

இம்முறை கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தவர் டாக்டர். அவர் வந்தவுடனேயே ஜீன்வால்ஜினை நெருங்கிப் பரிசோதித்தார். நாடியைப் பிடித்துப் பார்த்ததும் அவருக்கு எல்லாமே தெளிவாகப் புரிந்துவிட்டது. அந்த உடலில் சில்லிப்பு விரைந்து பரவிக்கொண்டிருந்தது. இருப்பினும் அந்தச் சந்தர்ப்பத்தில் ஜீன்வால்ஜின் மனம் நிறைவடைந்தவராகவும், மகிழ்ச்சியோடு இருப்பவராகவும் தென்பட்டார்.

“ஓகோ… அப்படியானால் இந்த விஷயம்தான் உங்களை இவ்வளவு நாள் வருத்திக் கொண்டிருந்தது அப்படித்தானே? இப்போது நீங்கள் திருப்தியடைந்து விட்டீர்கள் இல்லையா?” டாக்டர் அவரிடம் கேட்டார்.

ஜீன்வால்ஜின் மிகவும் பிரயாசைப்பட்டு உதடுகளில் ஒரு புன்னகையைப் படரவிட்டார். அவரது விழிகளில் நீர்த்துளிகள் உருண்டு திரண்டு வந்து நின்றன.

“நான் ஒரு பாதிரியாரை வரவழைக்கட்டுமா?”– டாக்டர் கேட்டார்.

“என்னுடைய பாதிரியார் இதோ இங்கே என்னுடனேயே இருக்கிறார்.”– ஜீன்வால்ஜின் சற்றுத் துடிப்புடன் பதிலளித்தார். அந்த அறையின் ஒரு மூலையைச் சுட்டிக் காட்டியபடி! விளக்கின் ஒளி விழாத அந்த இருண்ட மூலையில், தனக்கு அன்பு என்பதை என்னவென்று கற்றுத் தந்து மனிதனாக்கிய, கருணை நிறைந்த பாதிரியாரின் உருவம் உயிருடன் நின்று கொண்டிருப்பது போல் அவருக்குத் தென்பட்டது அப்போதும்!

“அன்பான தந்தையே… எனக்காக நீங்களே கடைசிப் பிரார்த்தனையை ஜெபியுங்கள். வேறு யாரும் அதற்குத் தகுதியானவர்கள் இல்லையென்று எனக்கு நன்றாகத் தெரியும்.” ஜீன்வால்ஜின் உதடுகளுக்கிடையே முணுமுணுத்தார். அந்த வார்த்தைகள் முழுமையாக முடிவடைவதற்குள் அவரது குரல் தடுமாறி நடுங்கத் தொடங்கியது.

பிரார்த்தனை பீடத்திலிருந்து சிலுவையில் அறையப்பட்ட இயேசுபிரானின் உருவம் பதிக்கப்பட்ட சிலுவையை எடுத்துத் தருமாறு சைகையால் கேட்டுக்கொண்டார்.

மாரியஸ் அப்படியே செய்தான். அப்போது அவனது கைவிரல்கள் நடுங்கின.

மார்பின் மீது சிலுவையை வைத்து இரண்டு கைகளையும் இணைத்து அதன் மீது பதித்து, அழுத்தியபடி அமைதியாகக் கிடந்தார் ஜீன்வால்ஜின். அப்போதும் பாதிரியார் பரிசாகத் தந்த, வெள்ளியாலான மெழுகுவத்திப் பீடங்கள் இரண்டும் மெழுகுவத்திகளைத் தாங்கி, பிரார்த்தனை மேடையின் மீது ஒளி சொரிந்து கொண்டிருந்தன. சற்று நேரம் அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவர், பிறகு நேரம் அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவர், பிறகு மெதுவாக முகத்தைத் திருப்பி, கணவன்–மனைவியாக வந்திருக்கும் கோசெட்டியையும், மாரியஸையும் பார்த்தார்.

“குழந்தைகளே இப்படி வாருங்கள். நான் என் பாதுகாவலனிடம் போய்க் கொண்டிருக்கிறேன். எனக்கு அருகில் வந்து உட்காருங்கள். நான் நேசிக்கவும், என்னை நேசிக்கவும் நாம் மட்டும்தான் இருக்கிறோம். நீங்கள் என் அருகில் இருக்கும்போது இந்தப் பயணத்தில் எனக்கு எந்தவிதமான பயமுமில்லை. வருத்தமுமில்லை. வேதனை இல்லை. நான் இப்போது முழுமையான திருப்தியோடு இருக்கிறேன்…

குழந்தைகளே பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நேசியுங்கள்…. மாரியஸ், எப்போதாவது ஒரு சமயம் இந்தக் கிழவனை நினைத்துக் கொள்வீர்கள் என்று கருதுகிறேன். நினைத்தால் நல்லது. நான் எதுவுமே இல்லாத ஓர் ஏழை. ஏழைகளுடன் ஆர்ப்பாட்டமின்றி எளிமையாக நான் ஓய்வு கொள்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள். எங்கே… இப்படி என் அருகில் வாருங்கள்!”

இருவரும் துயரை அடக்கியவாறு விம்மலுடன் அவரை நோக்கித் தலை குனிந்தனர்.

“அப்பா… அப்பா….”– கோசெட்டி அணை உடைந்த வெள்ளமாகக் கதறினாள்.

அதற்குள் உயர்ந்து எழும்பிய கரங்கள் வழுக்கியது போல் மார்பிலிருந்த சிலுவையின் மீதே விழுந்தன.

அந்தப் பெரியவரின் கண்கள் மேற்புறமாகச் செருகிக் கொண்டன.

கோசெட்டியும், மாரியஸும் பயங்கரமான அலறலுடன் ஜீன்வால்ஜினின் மார்பின்மீது முகம் பதித்தனர்.

வலுவான, குறும்புக்காற்று ஒன்று விசையுடன் அறையின் உட்புறம் அடித்தது. எரிந்துகொண்டிருந்த மெழுகுவத்திகள் அணைந்தன.

அந்தக் காட்சியை ஒரு மௌனசாட்சியாகப் பார்த்துக் கொண்டிருந்த டாக்டர், ஒரு நீண்ட பெருமூச்சு விட்டபடி நெஞ்சில் சிலுவை வரைந்தார்.

– முற்றும் –